ஸ்ரீ

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகளால்

சென்னைத் தொண்டமண்டலம் கலாசாலையிலமைந்த பகவத் கதா ப்ரஸங்கஸபையில் நடத்தப் பட்டுவரும் உபந்யாஸங்களைக் கேட்கப் பெற்றவர்களுக்கும் கேட்கப் பெறாதவர்களுக்கும் ஒருங்கே உபயோகப்படக்கூடிய

# பக்தாம்ருதம்

Lectures of
**P. B. Annangaracharya,**
**Conjeevaram.**

ஷை ஸபையின் அங்கத்தினர்களுள் ஒருவரான
ஸ்ரீமான் M. சக்ரவர்த்தி ஐயங்கார்
(M. D. Bros.) அவர்களால்

சென்னை ஓரியண்டல் பிரஸ்ஸில் அச்சிடுவிக்கப்பட்டது.

1947

-8--0] [தபால் செலவு தனி.

Q22:4196
N47
83265

# PREFACE

It is now over 50 years since "The Bhagawad Katha Prasanga Sabha", was established. Upanyasams and Harikathas of several Vidwans, such as, my elder brother, Brahma Sri Panchapagesa Satrigal, Pandit Lakshmanachar etc, have in the past been held in the Thondamandalam School Hall, under the auspices of this Sabha.

In July 1931, we requested Sri P. B. Annangaracharya Swamigal of Sri Kanchi to deliver some Upanyasams in our Sabha. With abounding love, he acceded to the request and first delivered 6 Upanyasams in connection with Sri Ramanuja Vaibhavam. Those that listened to them were so entranced with unbounded joy that they expressed a keen desire that the Swamigal should be requested to deliver Upanyasams under the auspices of the Sabha every Saturday and Sunday for as long a time as possible and that the necessary arrangements should be made therefor. By the grace of God, Upanyasams have been continuing from that day until to-day.

The following are the details of the Upanyasams of our Swamigal delivered in the Thondamandalam School Hall since July 1931 up to date.

| | | |
|---|---|---|
| 1. | Sri Ramanuja Vaibhavam | 6 |
| 2. | Siriya (Little) Thirumadal | 11 |
| 3. | Sri Ramayanam | 265 |
| 4. | Alavandar Sthothra Rathnam | 39 |
| 5. | Chathusloki | 5 |
| 6. | Tiruppallandu | 13 |
| 7. | Amalanathipiran | 11 |
| 8. | Kanninun Chiruthambu | 13 |
| 9. | Thirumanthrartham (Mumukshuppadi) | 42 |
| 10. | Sri Bhagawatham Dasamaskandam | 73 |
| 11. | Mahabharata Saram | 44 |
| 12. | Bhagawad Gita Saram | 37 |
| 13. | Ashtasloki | 9 |
| 14. | Bhagawad Vishayam | 409 |
| 15. | Thiruppavai (held in Margazhi of every year). | |

In addition to the above, upanyasams have been delivered on special occasions on the Vaibhavams of Theva Perumal, Thiruvengadamudaian, Sri Ranganathar, Alawandar, Kurathalwar, Bhattar, Nampillai, Desikar and Manavala Mahamunigal and Paduka Sahasram.

The first series of Sri Ramayana upanyasams was completed and pattabhishekam was celebrated in 1935. As the Bhakthas were anxious to enjoy the same over again, the Sri Ramayana Upanyasams were recommenced and are being held every Saturday for the last 1½ years. At present Aranya Kandam has been reached. On Sundays, Bhagawad Vishaya Upanyasams are being conducted and 470 Pasurams (stanzas) have so far been done.

Apart from those who regularly attend and enjoy these upanyasams, many great men from the City and also from outside often attend and partake of the enjoyment. There is a strong general opinion that it is necessary to make these upanyasams reach and benefit not only those that are outside residents but also future generations.

Although the several Granthams on which our Swamigal has delivered upanyasams in our Sabha have almost all been explanatorily dealt with by him in his various publications in Tamil, Telugu and Hindi, still, since all the matters explained in the upanyasams cannot be found in these publications and since certain matters have to be separately and fully treated, several Bhaktas and Pandits have felt that separate publications on these matters would be most welcome. The late Mahamahopadhyaya Dakshinathya Kalanidhi Swaminatha Aiyer Avergal who frequently used to attend our Swami's upanyasams gave vent to the same idea during all his visits. Sir S. Varadachariar Swamigal and Justice Patanjali Sastrigal used to do the same. It is in accordance with the above opinion that, Viseshartha Ratnanidhi, Swapadesartha Sagaram, etc., were published by our Swamigal.

I felt that Bhaktas should be provided with similar rich repasts. I have been enjoying the Swami's upanyasams for a long time without any break. During the past one year, however, owing to ill-health, I have been denied that pleasure as I have had to remain indoors resting myself on the contemplation of the Bhagawad Gunas. It is, therefore, for my personal enjoyment and that of other Bhakthas that this book called "Bhaktha Amirtham" has been prepared.

Although our Swamigal is born in and is an ardent exponent of the Sri Vaishnava Sampradayam he has absolutely no prejudice against others. In fact, the Swamigal's habit is to deliver upanyasams which would be liked and eagerly enjoyed by people of all sects. I believe that the present publication will be greatly useful in making us understand the esoteric thathvas of Sri Vaishnava Sampradayam.

Bhakthas are aware that any number of such books cannot do full justice to the Swami's upanyasams. It is to be hoped that by the Grace of God, several such books will come out in the future. Our Swamigal also should have the full span of life and glorify our Sabha for a long time. Bhagawad Bhakthi and Bhagawatha Bhakthi should increase and Dharma should get firmly established. This is my humble prayer.

T. S. NATESA SASTRIAR, (B.A., B.L.)
*Advocate.*
*Vice-President*, Madras Bhagavath Katha Prasanga Sabha.

# ஆழ்வாரருளிச்செயற் பெருமை

ப்ரபந்நஜந கூடஸ்தரான நம்மாழ்வாருடைய பெருமைக்கடலில் சில திவலைகளைப் பருகிக்களிக்க எழுகின்றோம். பொய்கையார் பூதத்தார் பேயார் திருமழிசைப்பிரான் முதலான மற்றையாழ்வார்களும் தோன்றித் திவ்யப்பிரபந்தங்களை யருளிச் செய்திருந்தாலும் ஒரு காலவிசேஷத்திலே அத்திருமொழிகளெல்லாம் உலகில் பிரசாரமற்று மறைந்தனவாக, ஸ்ரீமந்நாதமுனிகளென்னும் பேராசிரியர் ஆழ்வார்திருநகரிக் கெழுந்தருளித் திருப்புளியாழ்வாரடியிலே நியமத்துடனிருந்து கண்ணிநுண் சிறுத்தாம்பென்கிற நம்மாழ்வார் துதியைப் பன்முறை ஆவ்ருத்திசெய்து யோகதசையிலே நம்மாழ்வாரை ஸாக்ஷாத்கரிக்கப் பெற்று அவருடைய திருவாக்கிலிருந்தே நாலாயிரம் பாசுரங்களையும் அருள் செய்யப் பெற்றாரென்பது சம்பிரதாயம். இதுபற்றியே "நாதனுக்கு நாலாயிரமுரைத்தான் வாழியே" என்று நம்மாழ்வார் வாழ்த்தப்பட்டு வருகின்றார். இதுவே காரணமாகத்தான் ப்ரபந்நஜநகூடஸ்தரென்கிற விருதும் நம்மாழ்வார்க்கு நிகழ்ந்து வருகின்றது. இவரையே அவயவியாகவும் மற்றையாழ்வார்களை அவயவபூதர்களாகவும் பூருவர்கள் நிரூபித்துள்ளார்கள். அப்படியே இவருடைய திவ்யப்ரபந்தங்களையே அங்கியாகவும் மற்றையாழ்வார்களினருளிச் செயல்களை அங்கோபாங்கங்களாகவும் அறுதியிட்டுள்ளார்கள்.

இக்காலத்தில் சிலர் கூறுகிற வாதங்களை நாம் இங்கு எடுத்துக் காட்டி ஆஸ்திகர்கள் த்ருப்தியடையுமாறு ஸமாதானம் வெளியிட விரும்புகின்றோம். ஆனால், வழிப்போக்கர்களின் வாதங்களை நாம் பொருள்படுத்தவே தகாதென்றும் அவற்றுக்குச் சமாதானங்கூறுவதென்கிற வழியிலேயே நுழையலாகாதென்றும் சில பெரியார் கருதுவதுண்டு. இப்படியே நாம் உபேக்ஷித்துப் போவதனால் நம்முடைய சம்பிரதாயத்திற்கு நஷ்டமே மலிகின்றது. சிறிது ஆஸ்திக்யமுடையவர்களும் கலங்கித் தெளிவுபெறாமல் விபரீத புத்திகளைக்கொண்டு நசித்துப்போக ஏதுவாகிறது. ஆகவே இக்காலத்தவர்களின் கூற்றுக்களை அநுவதித்து நாம் சமாதானம் தெரிவிக்கவேண்டியது மிக அவசியமென்றும், இது நமது சம்பிரதாயத்திற்கு உபகாரகமென்றும் திண்ணமாக வெண்ணுகின்றோம்.

சிலருடைய வாதமென்னவென்றால், கால விசேஷங்களில் ஒவ்வொரு நாட்டிலும் பக்தர்கள் தோன்றியதுண்டு. அவர்கள் தங்களுடைய பக்தியினாலோ அல்லது தங்களுடைய பாண்டித்யத்தைக் காட்டவேண்டியோ தங்களுக்கமைந்த பாஷைகளில் பிரபந்தங்களைச் செய்திருப்பதுண்டு. தெலுங்கு கன்னடம் ஹிந்தீ குஜராதி மராடீ முதலான பலபாஷைகளிலும் பல பக்தர்களால் பலபல பிரபந்தங்கள் இயற்றப்பட்டேயுள்ளன. அவைபோலவே ஆழ்வார்களின் பிரபந்தங்களுமாம். துளஸீதாஸர், தியாகராயர், கம்பர், ராமதாஸர் என்றிப்படிச் சொல்லப்படுகிற மகான்களுக்கும் அவர்களது நூல்களுக்கும் எவ்வளவு கௌரவமுள்ளதோ அவ்வளவு கௌரவமேதான் ஆழ்வார்களுக்கும் அவர்களின் பிரபந்தங்களுக்கும் ஏற்கும். இவற்றை வேதங்களென்றும் வேதங்களிற் காட்டிலும் சிறந்தவையென்றும் கொள்வது எதற்காக? என்றிப்படிப்பட்ட வாதங்கள் இக்காலத்தவர்களால் ஆங்காங்கு அட்டகாசமாக அறையப்படுகின்றன.

எந்த விஷயத்திலும் நாஸ்திகர்களை எளிதில் த்ருப்திபடுத்த ஒருவராலுமாகாது. வேதங்கள் ப்ரமாணமென்பதை, இசைகின்றவர்கள் இசைந்து போருகின்றார்களேயல்லது இசையாதவர்கள் ஒருநாளும் இசைவதில்லை. பகவானுடைய உண்மையிலும் அவனது விபவாவதார அர்ச்சாவதாரங்களிலும் நம்பிக்கையில்லாதவர்கள் உலகமெங்கும் நிறைந்திருக்கின்றார்கள். அவர்களைத் தெளிவிக்க ஸர்வசக்தனான எம்பெருமானாலுமாகவில்லை. இயற்கையிலே ஆஸ்திகர்களாயுள்ளவர்களுக்கும் ஒரு கலக்கம் ஏற்பட்டால் அதைப்போக்க முடியுமேயல்லது "ஜ்ஞாநலவதுர்விதக்தம் ப்ரஹ்மாபி நரம் ந ரஞ்ஜயதி" என்னப் பிறந்தவர்களைத் தெளிவிக்க ஆராலுமாகாது.

ஸ்ரீவைஷ்ணவ ஸந்ததியிலேயே ஜனித்து நல்ல தெளிவுடனிருந்து சில விதண்டாவாத ச்ரவணங்களாலே கலங்கினவர்களை மாத்திரம் நாம் தெளிவு பெறுத்தவல்லோம். ஸ்ரீவைஷ்ணவகுலதிலகர்களான ஆழ்வார்கள் திவ்யப்பிரபந்தமருளிச் செய்திருப்பது

போலவே சைவர்களிலே நாயன்மார்கள் தேவாரத்திருமுறைகள் பணித்துள்ளார்களென்பது யாவருமறிந்ததே. அந்த ப்ரபந்தங்களையாவது அவற்றை இயற்றிய பக்தர்களையாவது சிவபக்தர்களான பிராமணர்கள் யாரேனும் ஆதரிக்கிறார்களாவென்று பார்க்கவேணும். அன்றியும் வேதாந்த நிர்வாஹத்திற்கு அந்தப் பிரபந்தங்களைச் சிறிதேனும் துணைகொள்ளுகிறார்களோ வென்றும் நோக்கவேணும். சிவாலயங்களில் அவற்றுக்குப் பாராயணநியதி ஏதேனும் வைத்திருக்கிறார்களோ வென்றும் ஆராயவேணும். இவை யொன்றுமில்லையென்பது எங்கும் ப்ரத்யக்ஷம். யாரோ சில சூத்ரர்கள் அத்தேவாரங்களைப் பார்ப்பதும் பாடுவதுமாயிருக்கிறார்களேயல்லது பிராமணர்கள் அவற்றில் சிறிதும் கண் செலுத்துவதில்லை. ஆகவே வேதாந்த நிர்வாஹத்திற்கு அவற்றைத் துணைகொள்ள ப்ரஸக்தியே யில்லை. ஒரு சிவாலயத்திலும் அவற்றுக்குப் பாராயண நியதி யொன்றும் காண்கின்றிலோம்.

இவ்விஷயங்களை இங்கு நாம் அவற்றின்மீது பழிப்பாக எழுதுவதாய் ஒருவரும் கருதலாகாது. உள்ள நிலைமையை உணர்த்துகின்றோமத்தனை. வ்யாஸ பராசர வால்மீகி ப்ரப்ருதிகளான மஹர்ஷிகள் இயற்றிய இதிஹாஸ புராணங்களுக்கும் தேவாலயங்களில் ஒரு சிறப்புக் கண்டிலோம். அந்த மஹர்ஷிகளில் ஒருவரையும் ஒரு ஸன்னிதியிலும் விக்ரஹ ப்ரதிஷ்டை செய்து ஆராதனோத்ஸவாதிகள் நடத்துகிற முறையையும் காண்கின்றிலோம். துளஸீராமாயணம் கம்பராமாயணம் முதலிய மற்றுள்ள பிரபந்தங்களுக்கு எவ்வளவு மதிப்பு என்பதை உலகம் நன்கறிந்தேயுள்ளது.

இனி நம் ஆழ்வார்களினருளிச் செயல்களை யெடுத்துக் கொள்வோம். இவற்றில் இன்று நேற்று நாமும் நம்போன்றவர்களும் காட்டுகின்ற ஆதரம் கிடக்கட்டும். ப்ராஹ்மண குலதிலகராய் வடமொழி வேத வேதாந்த வேதாங்கங்களில் ஆழ அவகாஹித்து ஸகல சாஸ்த்ரார்த்தங்களையும் கையிலங்கு நெல்லிக்கனியாகக் கண்டவர்களான ஸ்ரீமந்நாதமுனிகள் ஆளவந்தார் தொடக்கமான ஆசாரியர்கள், ப்ரமாதாக்களில் ஆழ்வார்களுக்கு மேலில்லையென்றும் ப்ரமாணங்களில் அருளிச் செயல்களுக்கு மேலில்லையென்றும் கொண்டிருந்த கொள்கையில் யாருக்காவது விப்ரதிபத்தியுளதோ? ஸ்ரீமந் நாதமுனிகளின் வாழ்நாள் முழுவதும் திவ்ய ப்ரபந்தங்களைப் புநருத்தாரம் செய்வதிலேயே பெரும்பாலும் சென்றற்றதென்று காண்கிறோம். ஆளவந்தார்க்கு ஸமரான ஸம்ஸ்க்ருத வித்வான்—சதுச்சாஸ்த்ரப் புலவர் * ந பூதோ ந பவிஷ்யதி யென்று உலகமெல்லாம் போற்றுகின்றது அப்படிப்பட்ட வைபவம் பொலிந்த ஆளவந்தார் த்ரிஜகத்ப்ரஸித்தமான தம்முடைய ஸ்தோத்ரரத்னத்தில் ஆழ்வார்க்கு ஒரு ச்லோகந்தான் அருளிச் செய்துள்ளார்—*மாதா பிதா யுவதய: * என்பது. இந்த ச்லோகம் அமைந்திருக்கு மமைப்பை என்சொல்ல வல்லோம். எம்பெருமானுக்குக்கூட இப்படியொரு சுலோகம் அமையவில்லையே. ஆழ்வாருடைய திருநாமத்தைச் சொல்லாமலே * ஆத்யஸ்ய ந: குலபதே: * என்கிறாரே, இது எவ்வளவு ஆச்சரியமான பக்தியின் காரியம்! நம்முடைய ஆசார்ய பரம்பரையில் *லக்ஷ்மீநாதஸமாரம்பா மென்கிறபடியே முதல் ஸ்தானத்தில் எம்பெருமான் நிற்பதனால் * ஆத்யஸ்ய ந: குலபதே: என்றது அப்பெருமானையே நோக்கியதாகுமென்று சிலர் கொள்ளவுங் கூடுமென்று சங்கித்து உடனே வகுளாபிராமம் என்றருளிச் செய்கிறார். மகிழ்மாலையணிந்த தெய்வத்தைப்பற்றி இங்கு நான் பேசுகின்றேனேயன்றித் திருத்துழாயணிந்த தெய்வத்தைப்பற்றியன்று என்றன்றோ காட்டுகின்றார். நம்மாழ்வார் திருவாய்மொழியில் * சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும், மேலாத் தாய்தந்தையும் அவரேயினியாவாரே * என்று எம்பெருமான் விஷயத்தில் காட்டின துணிபையன்றோ ஆளவந்தார் ஆழ்வார்திறத்திலே காட்டியுள்ளார். அந்த ஸ்தோத்ரரத்னத்தில் மேலே ஒவ்வொரு சுலோகமும் ஆழ்வாரருளிச் செயல்களையே யன்றோ மிகமிகத் தழுவியவதரித்துள்ளன. ஆளவந்தாருடைய காலம் இற்றைக்கு ஆயிரமாண்டுகட்கு முற்பட்டதென்பது நிர்விவாதம். அக்காலத்திலேயே யன்றோ ஆழ்வாருடையவும் அருளிச் செயல்களினுடையவும் மேன்மை ஊரும்நாடுமுலகமுமறியநின்றது. அக்காலத்திலேயே ஆழ்வார்களுக்கு ஸன்னிதிகளில் விக்ரஹ ப்ரதிஷ்டையும் நடைபெற்றிருந்ததாக நன்கு தெரிகின்றது. எங்ஙனேயென்னில். பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் "பராங்குசாத்யா: ப்ரதமே புமாம்ஸோ நிஷேதிவாம்ஸோ தச மாம் தயேரந்" என்றருளிச் செய்திருப்பது ஸ்பஷ்டம். இதனால் நம்மாழ்வார் முதலான ஆழ்வார்கள் பதின்மரும் அப்போது திருக்கோலங்கொண்டு எழுந்தருளியிருந்தமை கைகொள்கனியாகக் காண்கின்றது. பட்டர், உடையவர் காலத்தில் எழுந்தருளியிருந்தவரும் உடையவர் ஸ்தானத்தில் அபிஷிக்தருமாவர்.

பட்டருடைய திருத்தகப்பனாரும் உடையவருடைய அந்தரங்க சிஷ்யருமான கூரத்தாழ்வான் தமது பஞ்சஸ்தவத்தில் நம்மாழ்வாரைப் போற்றியிருப்பது பரமாத்புதம். *த்ரைவித்யவ்ருத்தஜந * பக்திப்ரபாவபவதத்புத * என்றுள்ள சுலோகங்களிற் காணும் பக்தி விசேஷம் வாய்கொண்டு வருணிக்கத் தக்கதோ? எம்பெருமானைப் பற்றிப் பேசிக்கொண்டு போம்போதும் ஆழ்வாருடைய நினைவேயன்றோ ஆழ்வானுக்கும் பட்டருக்கும் இடையறாது செல்லுகின்றது. அதிமாநுஷஸ்தவத்தில் எம்பெருமானுடைய திருவடிகளை வருணிக்கிற ஆழ்வான் * ஸ்ரீமத் பராங்குச முநீந்த்ர மநோநிவாஸாத் தஜ்ஜாநுராகரஸமஜ்ஜநமஞ்ஜஸாப்ய, அத்யாபி அநாரத தநுத்திந ராகயோகம் ஸ்ரீரங்கராஜ சரணம்புஜம் * என்கிறார். எம்பெருமானுடைய திருவடிகள் செந்தாமரை போலச் சிவந்திருப்பது ஏனென்றால் நம்மாழ்வாருடைய திருவுள்ளத்திலேயே நெடுங்காலம் உறைந்திருந்து அங்குள்ள அநுராகரஸத்திலே ஊறிக்கிடந்தமையாலே [அநுராகத்தைச் சிவப்பாக வருணிப்பது கவிமரபு] செம்மை பெற்றன என்கிறார். கச்சியத்திகிரித் தேவப் பெருமாளைத் துதிக்கும்போது அவரை நோக்கிக் கேட்கிறார் கூரத்தாழ்வான்—*யச்ச மூர்த்தா சடாரே: ஹஸ்த்யத்ரேர்வா கிம் அதிஸுக்தம் தேஷு பாதாப்ஜயோஸ் தே * என்று. அதாவது, தேவப்பெருமாளே! உம்முடைய திருவடிகளுக்கு நம்மாழ்வார் திருமுடிமீது வாஸம் செய்வது பாங்கா? அத்திகிரியுச்சியில் வாஸம் செய்வது பாங்கா? என்கிறார். இப்படியே பட்டரும் தம்முடைய ஸ்தவத்தில் * வடதள தேவகீஜடர வேதசிர: கமலாஸ்தந சடகோபவாக்வபுஷி ரங்கக்ருஹே சயிதம் * என்கிறார்.

இங்ஙனே ஒவ்வொரு ஆசார்யரும் ஆழ்வாரைப்பற்றி வாய்வெருவியிருக்கின்றமை பன்னியுரைக்குங்கால் பாரதமாம். வேதாந்த தேசிகரின் ஈடுபாடும் வாசாமகோசரம். அவருடைய திருவாக்குக்களில் "செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய வோதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே" என்ற பாசுரமொன்றே போதும். நஞ்சீயர் நம்பிள்ளை பெரிய வாச்சான்பிள்ளை வடக்குத் திருவீதிப்பிள்ளை பிள்ளை லோகாசாரியர் திருவாய்மொழிப் பிள்ளை மணவாளமாமுனிகள் முதலான பேராசிரியர்களின் ஈடுபாடு விவரிக்க வேண்டியதோ? ஸ்ரீவைஷ்ணவாசார்ய பரம்பரையிலே ஸேனைமுதலியார்க்கும் ஸ்ரீமந்நாதமுனிகட்கும் இடையில் நம்மாழ்வாரைச் சேர்த்து அநுஸந்தானம் பண்ணிவருகிற முறைமை இன்று நேற்றுத் தோன்றியதன்று. இதெல்லாம் கூரத்தாழ்வான் முன்னான பூருவாசாரியர்களின் திருவாக்குக்களிலேயே ஸந்தேஹ விபர்யயமற விளங்கநின்றன. அப்பரமாசார்யர்களின் காலத்திலேயே திவ்யப்ரபந்தங்களானவை தமிழ் வேதமாகவும் அர்ச்சாவதார வேதமாகவும் பாராட்டப்பெற்று திவ்யதேசங்கள் தோறும் கொண்டாடப்பட்டுவந்த விஷயம் கம்பரியற்றிய சடகோபரந்தாதியிலும் சேமம் பெற்றுளது; * அந்தமிலாமறையாயிரத் தாழ்ந்த வரும்பொருளைச் செந்தமிழாகத் திருத்திலனேல் நிலத்தேவர்களும் தந்தம் விழாவுமழகுமென்னும் * என்கிறார் கம்பர். திவ்யப்ரபந்தமவதரித்திராவிடில் ஸ்ரீவைஷ்ணவ ப்ராஹ்மணர்களின் கதி என்னாகுமோ! கோவில்களின் ஸ்திதி என்னாகுமோவென்று வயிறு பிடிக்கிறார் காண்மின்.

ஆக இவ்வளவு நிரூபணங்களினால்—வேதவேதாந்தப் புலவர்களும் சதுச்சாஸ்த்ர பாரங்கதர்களும் ப்ராஹ்மணோத்தமர்களுமான நம் பூருவாசாரியர்கள் தாமே ஒப்புமுயாவுமறக் கௌரவித்த ஆழ்வார்களைப் பற்றியும் அருளிச்செயல்களைப் பற்றியும் சிலர் எது பேசினாலென்ன? அப்பேராசிரியர்களுடைய திருவடிகளையே தஞ்சமாகக்கொண்ட நமக்கு மனம் கலங்க ப்ரஸக்தியில்லை. அந்தப் பூருவாசாரியர்களையும் சேர்த்தே நாம் ஆக்ஷேபிக்கிறோமென்றும், அவர்களும் தவறாகவே கௌரவித்துவிட்டார்களென்று சொல்லுகிறோமென்றும் கூறுவார்களைப்பற்றி நமக்குப் பணியில்லை. நமது முன்னோர்களின் வழியிலே பக்தி விச்வாஸமுள்ள ஆஸ்திகர்களுக்கு இந்த நிரூபணங்கள் அருமருந்தாகக் குறையில்லை.

ஆழ்வார்களுடைய திவ்ய ஸ்ரீ ஸூக்திகளும் அவற்றின் வியாக்கியானங்களும் இந்நிலவுலகில் அவதரிக்கவில்லையென்றால் இந்த ஸம்ஸார மண்டலம் அஸாரமேயென்று வெறுக்கத்தக்கதாகும். * தொண்டர்க்கு அமுதுண்ணச் சொல்மாலைகள் சொன்னேன் * என்று நம்மாழ்வார் தாமே அருளிச்செய்தபடி தொண்டர்க்கு மெய்யே அமுதமான ஆழ்வார்களின் ஈரச் சொற்களும் அவற்றுக்குத் தேனும் பாலுமமுதுமாய அற்புதமான வியாக்கியானங்களும் அவதரித்துள்ளமையால்தான் இவ்வுலகுக்கு * இருள் தருமாஞாலமென்ற பெயர் நீங்கிற்றென்று தெளிக.

## முதலாழ்வார்களைப் பற்றின விசேஷார்த்தம்

ஆசார்ய ஹ்ருதயத்தில் "குரு சிஷ்ய க்ரந்த விரோதங்களைப் பரமதாதிகளாலே பரிஹரியாமல் செஞ்சொற் செந்தமிழின்கவி பரவி யழைக்குமென்று அந்யோந்யம் கொண்டாடி" என்கிற சூர்ணிகையில் நம் ஆழ்வார்களுக்கு ஒரு சிறப்பு அருளிச் செய்யப் படுகிறது. அதாவது திவ்ய ப்ரபந்தங்களில் ஆழ்வார்கள் பரஸ்பரம் கொண்டாடப் பட்டிருக்கிருர்களென்பதாம்.

திருமங்கை யாழ்வார் திவ்ய தேசங்களை அநுபவித்து வருகையில் ஆங்காங்கு ஈடுபட்ட அடியவர்களைப் பற்றியும் அருளிச் செய்து வருகிருர். "தென்னன் தொண்டையர் கோன் செய்த நன்மயிலைத் திருவல்லிக்கேணி" "மன்னவன் தொண்டையர்கோன் வணங்கும் நீண்முடி மாலை வயிரமேகன் தன் வலி தன் புகழ் சூழ்ந்த கச்சி யட்ட புயகரம்" "பல்லவன் வில்லவனென்றுலகிற் பலராய்ப் பல வேந்தர் வணங்கு கழற் பல்லவன் மல்லையர்கோன் பணிந்த பரமேச்சுர விண்ணகரம்" "நந்தி பணி செய்த நகர் நந்திபுர விண்ணகரம்" 'செம்பியன் கோச்செங்கணன் சேர்ந்த கோயில் திருநறையூர்" என்றிங்ஙனே பல பாசுரங்களினுல் அந்தந்த திவ்ய தேசங்களில் தொண்டு செய்தவர்களைப் புகழ்ந்து அருளிச் செய்திருக்கக் காண்கிறேம்.

நம் ஸம்ப்ரதாயத்தில் முதலாழ்வார்களென்று கொண்டாடப்படுகின்ற பொய்கையார் பூதத்தார் பேயார் என்னும மூவர் ஓடித் திரியும் யோகிகளாய், தம்மில் ஒருவரையொருவர் அறியாமல் தனித் தனியே ஸஞ்சரித்துக் கொண்டிருந்ததாகவும், இம் மூவரையும் ஓரிடத்தில் சேர்த்து ஆட்கொள்ள எம்பெருமான் குதூஹலங் கொண்டிருந்ததாகவும், ஒரு நாள் ஸூர்யன் அஸ்தமித்த பின்பு பொய்கை யாழ்வார் கனமழையினுல் திருக்கோவலூரை யடைந்து அங்கு ம்ருகண்டு மஹர்ஷியின் திரு மாளிகையிற் சென்று அதன் இடைகழியிற் பள்ளிகொண்டிருக்க, பூதத்தாழ்வாரும் பிறகு பேயாழ்வாரும் அவ்விடத்திற்கே வந்து சேர்ந்ததாகவும் அங்கு மூவரும் அளவளாவி நிற்கையில் இவர்களை எம்பெருமான் நெருக்கிக் கலந்து பரிமாறினதாகவும் சரித்திரம் கூறப்பட்டு வருகின்றது. இதனுல் முதலாழ்வார்கட்குத் திருக்கோவலூரில் மிக்க ஈடுபாடென்பது விளங்குகின்றது. * 'அந்யோந்யம் கொண்டாடுகிற'வர்களாகச் சொல்லப்பட்ட ஆழ்வார்களுள் ஸர்வ கநிஷ்டரான திருமங்கை மன்னன் திருக்கோவலூர்க்குப் பதிகம் பாடுமிடத்து இவ்வரலாற்றினை அநுஸந்தித்திருக்கவேண்டுமே. அப்படி அநுஸந்தித்திருப்பதாகக் காணவில்லையே.

'அத்தலத்தில் இவ்வாழ்வார்கள் திருப்பணி யாதும் செய்திலாமையால் இவர்களைப் பற்றி அநுஸந்திக்க ப்ரஸக்தியில்லை யாயிற்று' என்று சில மகான்கள் ஸமாதானம் கூறுவதுண்டு. ஆனுல் கலியன் அங்ஙனே ஒரு நியதி வைத்துக்கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. திருநெடுந் தாண்டகத்தில் திருக்கோவலூரைப் பற்றிப் பேசுமிடத்து "விந்தை மேய கற்புடைய மடக் கன்னி காவல்பூண்ட ...... பூங்கோவலூர்" என்றும் பெரிய திருமொழியிலும் "வியன்கலை யெண்தோளினுள் விளங்கு ..... திருக்கோவலூர்" என்றும் துர்க்கை இத்தலத்தைக் காவல் செய்து கொண்டிருக்கு மிருப்பையும் பாடியுள்ளார்.

அன்றியும். திருநாங்கூரைப் பாடுமிடத்து "ஒண்டிறல் தென்னனேட வடவர சோட்டங்கண்ட திண்டிறலாளர் நாங்கூர்" என்கிருர். பண்டொருகால் தென் திசைத் தலைவனுன பாண்டிய ராஜன் படையெடுத்துவந்து அவ்வூரை (திருநாங்கூரை) ஆக்ரமிப்பதாகப் புகுகையில் அவ்வூரிலுள்ள அந்தணர்கள் அவனை வெருட்டி யோட்டிவிட்ட வரலாற்றை இதனுல் பாடினுர். "மாவருந் திண்படை மன்னை வென்றி கொள்வார் மன்னு நாங்கை" என்றும் ஒரு பாசுரமுள்ளது. இப் பாசுரத்தின் வியாக்கியானத்தில் பெரியவாச்சான்பிள்ளை ஒரு ஐதிஹ்ய விஷேம் காட்டுகிருர். அதாவது, "உடைய பிள்ளை யென்கிறவன் அங்குத்தை யாலயத்தைக் கவிபாட வென்றுவர, அவனை எதிரே சென்றடித்தோட்ட, பின்னை பாடப்பெருதே போனுன் என்றெருரு ப்ரஸித்தியு முண்டிறே' என்பது அவ்விடத்து வியாக்கியான ஸ்ரீ ஸூக்தி. உடையபிள்ளை யென்பது சைவசமயக் குரவர்களுள் ஒருவரான ஞான சம்பந்தருடைய மறு பெயராம்.

இத்தகைய கதைகளையும் ஆங்காங்கு அருளிச்செய்து வருகின்ற திருமங்கையாழ்வார், திருக்கோவலூரில் முக்கியமாகச் சொல்லப்படுகிற முதலாழ்வார்களின் வ்ருத்தாந்தத்தைப் பாசுரத்தில் அநுஸந்திக்கவில்லையென்றால் இஃதொரு பெருங்குறையாகுமன்றோ. அந்த வ்ருத்தாந்தம் பிற்காலத்தவர்களால் கல்பிக்கப்பட்டதென்றாவது, அது கலியன் காலத்தில் அப்ரஸித்தமாக இருந்ததென்றாவது இசையவேண்டியதாகுமே! என்று சிலர் கூறுவதுண்டு. முதலாழ்வார்களைப் பற்றித் திருமங்கையாழ்வார் வெகு அழகாகப் பாசுரமிட்டிருக்கிறபடியை நம் பூருவாசாரியர்கள் நுட்பமாகக் காட்டியருளியே போந்தார்கள் என்பதை ஈண்டு வெளியிடுகிறேன்.

பெரிய திருமொழியில் திருக்கோவலூர்ப் பதிகத்தில் நான்காவது பாசுரத்தில் "ஆங்கரும்பிக் கண்ணீர் சோர்ந் தன்புகூருமடியவர்கட்கு ஆரமுதமானானறன்னை" என்றவிடத்திற்கு ஆசார்யஹ்ருதயத்தில் காட்டியருளப்பட்ட பரமரஹஸ்யார்த்தம் இங்கு விவரிக்கலாகிறது. அதில் மூன்றும் ப்ரகரணத்தில் மேகத்திற்கு ஸ்வாபதேச மருளிச்செய்கிற "பூண்டநாள் சீர்க்கடலை யுட்கொண்டு" இத்தியாதி சூர்ணையில் "அன்புகூருமடியவர்' என்றுள்ளதை வியாக்கியானித்தருளாநின்ற மணவாள மாமுனிகள் "ஆங்கரும்பிக் கண்ணீர் சோர்ந்தன்பு கூருமடியவரான முதலாழ்வார்கள் என்றருளிச் செய்திருப்பது குறிக்கொள்ளத்தக்கது. "ஆங்கரும்பிக் கண்ணீர் சோர்ந்தன்பு கூருமடியவர்கள் என்கிற சந்தை திருமங்கையாழ்வாருடைய திருக்கோவலூர்ப்பதிகத்திலுள்ள தென்னுமிடம் மறக்கத்தக்கதன்று. அப்படிப்பட்ட அடியவர்கட்கு அமுதமாக இருந்தவன் திருக்கோவலூரெம்பெருமான் என்று துதியுள்ளது. அங்கு அடியவர்கள் என்றது முதலாழ்வார்களை யென்று நம் பூருவாசாரியர்கள் ஒருமிடறாகத் திருவுள்ளம் பற்றியிருந்தார்களென்னுமிடம் மணவாள மாமுனிகளின் வியாக்கியானத்தினால் தெற்றென விளங்குகின்றது. இந்த நிர்வாஹம் மிகுந்த உபபத்தியோடு கூடியது.

அடியவர்—அன்பு கூருமடியவர்—ஆங்கரும்பிக் கண்ணீர் சோர்ந்தன்பு கூருமடியவர் என்று வகுத்துக்கொள்ளவேணும். முந்துற 'அடியவர்' என்பது பேயாழ்வாரை. இவர் "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்ற முதற் பாசுரத்தில் எம்பெருமானுடைய திவ்ய மங்களவிக்ரஹத்தைத் தாம் காணப்பெற்றதாகப் பேசி, அந்த திவ்யமங்கள விக்ரஹத்துள் திருவடியொன்றே தமக்கு உத்தேச்யம் என்பதைத் தமது திருவந்தாதியில் ஆதி மத்ய அவஸாநங்களில் வெகு அழகாகக் காட்டினர். "இன்றே கழல் கண்டேன்" என்றார் ஆதியில். "பைம்பொன் முடியா னடியிணைக்கே பூரித் தென்னெஞ்சேபுரி" "முயன்று தொழு நெஞ்சே!...தண்ணலங்கல் மாலையான் தாள்" "கரியான் கழலே தெருள்தன்மேல் கண்டாய் தெளி" 'வாழும் வகையறிந்தேன்—எங்கள் பெருமானடி சேரப் பெற்று' என்று (நாற்பது முதலாக அறுபது ஈறான பாசுரங்களுள்) மத்யத்தில் பேசினமை காண்க. "குட்டத்துக்கோள் முதலை துஞ்சக் குறித்தெறிந்த சக்கரத்தான் தாள் முதலே நங்கட்குச் சார்வு" என்று அவஸாநத்திலும் தாளையே பேசித் தலைக்கட்டினார். ஆக இங்ஙனம் எம்பெருமானது அடியையே சிக்கெனப் பற்றினவர் என்ற காரணத்தினால் பேயாழ்வார் அடியவராகக் கூறப்பட்டார்.

'அன்பு கூருமடியவர்' என்றது பூதத்தாழ்வாரை. எங்ஙனே யென்னில், (அன்பு கூரும் என்றது அன்புமிகுந்தவர் என்றபடி.) இவ் வாழ்வார் "அன்பே தகளியா" என்று தொடங்கி "விளவின் காய் கன்றினால் வீழ்த்தவனே! என்றனளவன்றால் யானுடைய அன்பு" என்று முடிவுபாசுரத்தில் தமது அன்பு மிகுதியை வாய்விட்டுரைத்தவராதலால் அன்பு கூருமடியவராக இவரே கருதத் தகுதியுடையவராவர்.

இனி, அரும்பிக் கண்ணீர் சோருமடியவர் பொய்கையாழ்வார். எங்ஙனே யென்னில், இவ்வாழ்வார் "பழுதே பலபகலும் போயின வென்று அஞ்சியழுதேன்" என்று தம் வாக்கினாலே பேசியருளினபடி அரும்பிக் கண்ணீர் சோர்ந்திருப்பவராதலால்.

ஆக இங்ஙனம் முதலாழ்வார்கள் மூவரையும் அழகாகக் குறிப்பிட்டு இவர்கட்கு அமுதமாயிருந்தவன் அத்தலத்து நாதன் என்று கலியன் அருளிச் செய்தார்.

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனும் "அடியவர்கட்கு ஆரமுதமானான்" என்ற பாசுரத்திலேயே நோக்காக தேஹளீசஸ்துதியில் (7) "காஸார பூர்வ கவி முக்ய விமர்த ஜந்மா பண்ணு தடேக்ஷு-ஸு-பகஸ்ய ரஸோ பஹு-ஸ்தே" என்றருளிச் செய்தார், அமுதமென்று ஆழ்வாரருளிச் செய்ததைக் கரும்பு என்றார் தேசிகன். பரம போக்யதையைப் பேசினபடி.
* அடியவர்கட்கு ஆரமுதமானான் தன்னை யென்ற பாசுரத்திலேயே 'குழாவரி வண்டிசை

பாடும் பாடல் கேட்டுத் திங்கரும்பு கண் வளருங் கழனி சூழ்ந்த'' என்றதை நோக்கியே தேசிகனிங்ஙனமருளியது.

அடியவர்கட்கு என்ற ஸ்ரீஸூக்தியை ஊன்றி நோக்கினல், கலியன் இங்கு மூன்று திருநாமங்களை விவக்ஷித்திருக்கிருர் என்று நன்கு விளங்கும். அடியவன்; அடியவர், அடியவர்கள் என முப்புரியூட்டினமை காண்க.

முதலாழ்வார்களின் திருநாமங்களை ஸ்பஷ்டமாகப் பேசிப் பாசுரம் பாடியிருக்கலாகாதோ 'வென்று சிலர் சங்கிப்பர்கள். வெளிப்படையாகக் கூறுவதிற் காட்டிலும் இவ்வகையாகக் கூறுவதே ரஸவத்தரம். ஆளவந்தார் நம்மாழ்வாரைத் துதிக்கப் புகுந்த ''மாதா பிதா யுவதய:' என்கிற ச்லோகத்தில் நம்மாழ்வாரது திருநாமத்தைக் கூறிற்றிலர்; அந்த ச்லோகம் எம்பெருமான் விஷயமாகவே யிருக்கலாம் என்று கூட நினைத்தகத்தக்க நிலைமையிலுள்ளது. ஆயினும் வகுளாபிராமம் என்ற ஒரு விசேஷண ஸ்வாரஸ்யத்தினுல் மாத்திரம் 'அந்த ச்லோகம் நம்மாழ்வார் விஷயமே என்று நிர்ணயிக்கலாகிறது. இங்ஙனே நுட்பமாகக் கண்டறிய வேண்டும்படி பேசுவது வக்தாக்களின் ஆழ்ந்த அறிவையும் பக்தியின் கனத்தையும் காட்டு மென்ப. ❋ விந்தை மேய கற்புடைய மடக்கன்னியையும், பல்லவன் வில்லவன், வயிரமேகன், செங்கணுன் கோச்சோழன் முதலானவர்களையும் வாய்விட்டுப் பேசினது அந்த வ்யக்திகள் திறத்தில் விசேஷ ப்ரதிபத்தி யில்லாமை பற்றியே.

எம்பெருமானுர் ''பஞ்சாசார்யபதாச்ரித:'' என்று போற்றப்படுகிருர். அந்த ஐந்து ஆசாரியர்களுள் ஒருவரைப் பற்றியும் தமது திருவாக்கினுல் பேசியருள வில்லையே என்று சிலர் விசார முறுவதுண்டு. இவ் விஷயத்திலும் மஹான்கள் நுட்பமாகக் கண்டறிந்து கூறுவதொன்றுண்டு. எம்பெருமானுருடைய ஆசாரியர்கள் ஐவரும் ஆளவந்தாருடைய திருவடிகள். ஆளவந்தாரிடத்தில் நேரே ஒரு அர்த்தமும் ஸ்வாமி கேட்கப் பெற்றிலர்' ஆளவந்தாருடைய திருவடிகள்பக்கலிலேயாயிற்று ஒரோ அர்த்த விசேஷங்கள் கேட்டது. ஆனுலும் ஆளவந்தார் கச்சிக்கு எழுந்தருளியிருந்த காலத்தில் அவரால் ''ஆமுதல்வனிவன்'' என்று தாம்கடாக்ஷிக்கப்பெற்றமையால் அவரையே ப்தாநாசார்யராகக் கொண்டு ''யத்பதாம்போருஹத்யாந வித்வஸ்தாசேஷ கல்மஷ:, வஸ்து தாமுபயாதோஹம் யாமுநேயம் நமாமி தம் என்று அவர் விஷயமான துதியொன்றையே கீதா பாஷ்யத்தின் உபக்ரமத்தில் அருளிச் செய்தார். இதில் ஆளவந்தாருடைய துதி ஸ்பஷ்டமாயும், தமக்கு நேரே ஆசார்யர்களான ஐவருடைய துதி நுண்ணிதாகவுமுள்ளது. ஆளவந்தாரை த்யானிப்பதாகக் கூருமல் அவருடைய திருவடிகளை த்யானிப்பதாகக் கூறினர். அதை ''பதாம் போருஹ'' என்று ஐந்து எழுத்துள்ள சொல்லால் கூறினர். ஆளவந்தாருடைய ஐந்து திருவடிகளை த்யானிப்பதாக இதில் வ்யஞ்ஜனை. ஐவருள் பெரிய நம்பிகள் ப்ரதான ஆசார்யராதலாலும், வாக்ய குரு பரம்பரையில் 'ப்ராங்குசதாஸர்' என்று அவருடைய திருநாமம் ப்ரஸித்தமா யிருப்பதாலும் பகாரத்தை முன்னிட்டுப் பதாம்போருஹ என்ருர். இங்ஙனம் நுட்பமான அர்த்த விசேஷங்களை ஸம்ப்ரதாயம் வல்ல பெரியார் பகரக் கேட்டிருக்கை. ஸுவ்யக்தமாகச் சொல்லி விடுவதிற் காட்டிலும் இங்ஙனே ஆழ்பொருளாகச் சொல்வது ரஸவத்தர மென்று இவ்வழி பெரியோர்களால் கைப்பற்றப்பட்டிருப்பதால், திருமங்கையாழ்வாரும் முதலாழ்வார்களை ''ஆங்கரும்பிக் கண்ணீர் சோர்ந்தன்பு கூரு மடியவர்கள்'' என்று ஆழ்பொருளுடைய அருளிச் செயலால் குறித்தனர். இச் சொல் திருக்கோவலூர்ப் பதிகத்திலேயே அமைந்திருத்தலால் கலியனுடைய விவக்ஷிதம் நிஸ்ஸந்தேஹமாக அறியக் கிடக்கிறது.

## மதுரகவிகளின் ஞானுநுபவம்

ஸ்ரீமதுரகவிகள் ஆழ்வார் திருநகரிக்கு அருகிலுள்ள திருக்கோளூரில் திருவவதரித்தவர். வதள பூஷண பாஸ்கரோதயத்திற்கு அருணேதயம் போன்றது இவரது திருவவதாரமென்பர் பெரியோர். நம்மாழ்வாரிற் காட்டிலும் திருநக்ஷத்திரத்தில் இவர் மூதுவர் என்பது இதனுல் விளங்கும். இவர் வேத சாஸ்திரங்களை இளமையிலே பயின்று செவிக்கினிய செஞ்சொற் கவிகளைப் பாட வல்லவராய் அதனுல் மதுரகவி யென்று திருநாமம் பெற்று மெய்யுணர்வினுல் அவாவற்று மஹா விரக்தராய் விஷ்ணு பக்திவிஞ்சி யோக நிஷ்டையிலும் தேர்ந்து தீர்த்த யாத்திரை திவ்யதேச யாத்திரைகளிலே திருவுள்ளமுடைய

ராய்ப் புறப்பட்டு ஸஞ்சரிக்கலுற்று வடநாட்டுத் திருப்பதிகளைச் சேவித்துக்கொண்டு வருகையில், திருவயோத்தியிலிருந்து ஒரு நாளிரவில் திருக்கோளூ ரெம்பெருமானைத் திசை நோக்கித் தொழுவாராய்த் தெற்குத் திக்கில் கண்செலுத்திய பொழுது அப்பக்கத்திலே வானுற வளர்ந்து விளங்குகின்றதொரு திவ்யமான பேரொளியைக் கண்ணுற்று அது இன்னதென்றறியாமல் திகைத்து நின்றூர். அச்சுடர் முச்சுடரொளியினும் மிக்கு விளங்கிய தனால் வெகு வியப்புற்று, அச்சோதியையே குறியாகக் கொண்டு விரைவாக நெடுவழி கடந்து நடந்து வந்து ஆழ்வார்திருநகரியையடைந்து, அதில் அவதரித்தருளியுள்ள சடகோப முனிவரது திருமேனி விளக்கத்தைச் சேவித்து, இதுவே அத்தனை நெடுந்தூரம் பிரகாசித்ததென்று அறிந்து வியந்து, அவ்வாழ்வாரது நிலைமை முன்பு தாம் கேள்வியுற்றிருந்தபடியே அப்ராக்ருதமாயிருக்கக் கண்டு அவர்க்குக் கட்புலனும் வாய்ப்புலனும் உள்ளனவாவென்பதைச் சில உபாயங்களினால் பரிசோதிப்பவரானூர். அப்பொழுது காரிமாறப்பிரான் கண் திறந்து கடாக்ஷித்து இவர் கேட்ட கேள்விக்கு ஏற்றவிடை சொல்லியருள, அது கேட்டு மதுரகவிகள் ஆழ்வாரது ஞான வைபவத்திற்கு அதிசயித்து ஈடுபட்டு அவரையே ஆசாரியராகக் கொண்டு சரணம் புகுந்தனர்.

அவ்வாழ்வார், பக்தியின் பரீவாஹரூபமாக அருளிச் செய்த சதுர்வேத ஸாரமாகிய நான்கு திவ்ய ப்ரபந்தங்களை இம்மதுரகவிகள் தாம் பட்டோலைகொண்டு கைத்தாளமெடுத்துப் பண்ணிசையோடு அவற்றை எப்பொழுதும் பாராயணஞ்செய்து கொண்டு திருக்குருகூர்நம்பிக்கு ப்ரதாநசிஷ்யராய். பரதாழ்வானுக்கே பணிவிடைபுரிந்தொழுகின சத்ருக்நாழ்வானைப்போல் பகவத் பக்தியினும் பாகவதப்ரதிபத்தியையே பரமாநுஷ்டானமாகத் தலைக்கொண்டு அவ்வாழ்வார்விஷயமாக 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்ற திவ்ய ப்ரபந்தத்தைப் பாடி முமுக்ஷுக்களுக்கு உபகரித்தருளினர்.

பகவத் பக்தியிற் சிறந்தவர்களையே ஆழ்வார்களென்று சிறப்பித்துக் கூறுதலும், அவர்கள் அருளிய ப்ரபந்தங்களையே திவ்ய ப்ரபந்தங்கள் என்று கூறுவதும் ஸம்ப்ரதாயமாயிருக்கவும் ஸ்ரீமந்நாதமுனிகள் தொடக்கமான நம்பூருவாசாரியர்கள் இம்மதுர கவிகளை ஆழ்வார்களது கோஷ்டியில் சேர்த்து இவரருளிய கண்ணிநுண்சிறுத்தாம்பையும அருளிச்செயல்களினிடையே சேர்த்தருளினர் என்பது மணவாள மாமுனிகளின் உபதேசரத்தின மாலையில்

> "வாய்த்த திருமந்திரத்தின் மத்திமமாம் பதம்போல்
> சீர்த்த மதுரகவி செய்கலையை—ஆர்த்தபுகழ்
> ஆரியர்கள் தாங்கள் அருளிச்செயல் நடுவே
> சேர்வித்தார் தாற்பரியந் தேர்ந்து."

என்ற பாசுரத்தினால் அறியத்தக்கது. இப்பாசுரத்தின் உரையில் பிள்ளைலோகஞ்சீயர்—"இதுதான் : பயிலுஞ் சுடரொளி : நெடுமாற்கடிமை தொடக்கமானவற்றின் அர்த்தத்தை ப்ரதிபாதிக்கையாலே இதின் அர்த்த கௌரவத்தை விசாரித்து, நன்றாயிருப்பதொரு ஹாரத்தைச் சமைத்து அது ஒளிபெறும்படி ச்லாக்யமாயிருப்பதொரு நாயகக்கல்லை அதன் நடுவே பதித்தாற்போலே அருளிச் செயல்கள்தான் நிறம் பெறும்படி அவற்றின் நடுவே இத்தைச் சேர்த்தார்கள். சேர்த்த சேர்க்கையின் சாதுர்யத்தாலேயிறே முத்துமாலை தொடக்கமான ஆபரணாதிகள் நிறம்பெறுவது. அது போலேயாய்த்து இது."—என்றருளியுள்ள ஸூக்திகளும் குறிக்கொள்ளத்தக்கன.

கம்பர் தாம் ஆழ்வார் விஷயமாகச் சடகோபரந்தாதி பாடுதற்கு, இக்கண்ணிநுண் சிறுத்தாம்பை வழிகாட்டியாகக் கொண்டமையை அவர் தாமே வெளியிட்டுரைத்த

> "மன்றேபுகழுந் திருவழுந்தூர்வள்ளல் மாறனைமுன்
> சென்றே மதுரகவிப்பெருமாள் தென்தமிழ்த்தொடையில்
> ஒன்றே பதிகமுரைத் தவன்பொன்னடியுற்றுநின்றுன்
> என்றே பதிகம்பதிகமதாக இசைத்தனனே"

என்னும் பாயிரமும் இங்கு நினைக்கத் தக்கது.

ஆழ்வார்களுடைய நிஷ்டையிற் காட்டிலும் மதுரகவிகளின் நிஷ்டை மிகச் சீரியதாகப் போற்றப்படுகின்றது.

ஸ்ரீவசந பூஷணத்தில் சரம பர்வ நிஷ்டாப்ரகரணத்தில்-"உண்டபோதொரு வார்த்தையும் உண்ணாதபோதொரு வார்த்தையும் சொல்லுவார் பத்துப்பேருண்டிறே! அவர்கள் பாசுரங் கொண்டன்று இவ்வர்த்த மறுதியிடக்கடவது, அவர்களைச் சிரித்திருப்பா ரொருவருண்டிறே! அவர் பாசுரங்கொண்டு இவ்வர்த்த மறுதியிடக்கடவோம்" என்றருளிச் செய்துள்ள திவ்ய ஸூக்திகளை நோக்கினால் தத்வார்த்த நிஷ்கர்ஷ விஷயத்தில் மதுரகவிகளின் ஸ்ரீ ஸூக்தியே சீரிய சிங்காசனத்தில் அமர்ந்திருக்க உரிமையுடையதாகுமென்று நிச்சயிக்கப்படும்.

இவர் நம்மாழ்வாருடைய அருளிச் செயல்களை ஆழ்ந்து நோக்கி பகவத் பக்தியிற் காட்டிலும் பாகவத பக்தியே மிகச் சிறந்ததென்கிற தத்துவப்பொருளை உறுதியாகக் கைக்கொண்டார். ஆழ்வார் முதற்பிரபந்தமாகிய திருவிருத்தத்தில் தமக்கு நிரூபகமாக "திருமால் திருப்பேர் வல்லாரடிக்கண்ணி சூடியமாறன்" என்றருளிச்செய்து, சரமப்ரபந்தமாகிய திருவாய்மொழியின் முடிவில் "வந்தவரெதிர் கொள்ள மாமணி மண்டபத்து, அந்தமில் பேரின்பத்து அடியரோடிருந்தமை" என்று தாம் திருநாட்டிலும் பாகவத கோஷ்டியில் அந்வயிக்கப் பெற்றதையே பேருக அருளிச்செய்து தலைக்கட்டினார். இந்தச் சுவடறிந்த மதுரகவிகள் பாகவதநிஷ்டைக்குமேற்பட்ட புருஷார்த்தமில்லை யென்று துணிந்தார்.

ஸ்ரீ ராமாயண புருஷர் நால்வரில் ஒருவரான சத்ருக்நாழ்வானை இவர்க்கு ஒப்புச் சொல்வர் பெரியோர். வேதத்தின் உபப்ரும்ஹணமாக அவதரித்த ஸ்ரீ ராமாயணத்தில் ராம லக்ஷ்மண பரத சத்ருக்நர் என்கிற நால்வரும் நான்கு அர்த்தங்களை அநுஷ்டித்துக் காட்டினர். 'பெரியோர் சொல்வதைச் சிறியோர் செய்யக் கடவர்' என்கிற ஸாமாந்ய தரும முறையைப் பித்ருவாக்ய பரிபாலநமுகத்தாலே ஸ்ரீ ராமபிரான் அனுஷ்டித்துக் காட்டினார். 'சேஷபூதன் சேஷி விஷயத்தில் கைங்கரியம் பண்ணி ஸ்வரூபலாபம் பெறக்கடவன்' என்கிற விசேஷ தருமத்தை இளைய பெருமாள் அனுட்டித்தார். பரதாழ்வானும் இந்த சேஷ சேஷி முறைமையையே பரிபாலித்தவராயினும் இவர்க்கு விசேஷமுண்டு; நிர்ப்பந்தப்படுத்தி அடிமைசெய்தார் இளையபெருமாள். இவர் அங்ஙனன்றியே 'சேஷி உகந்த அடிமையே சேஷபூதனுக்கு ஆதரணீயம்' என்னுமிடத்தை அனுட்டித்துக் காட்டினார். பெருமாளைப் பிரிந்து தரித்திருக்கமாட்டாமையாகிற தன் செல்லாமையைப் பாராது, பெருமாளுடைய திருவுள்ளத்தையே பார்த்துச் சித்திரகூடத்தினின்றும் மகிழ்ச்சியுடனே மீண்டாரன்றோ இவர். அப்படிப்பட்ட பரதாழ்வானை யல்லது வேறொன்றுமறியாதே யிருக்கையாலே பகவச் சேஷத்வகாஷ்டையான பாகவத சேஷத்வத்திலூன்றினர் சத்ருக்நாழ்வான்.

சத்ருக்நர்க்கு வால்மீகி முனிவர் விசேஷணமிடும்போது நித்ய சத்ருக்ந: என்றார் பாஹ்ய சத்ருக்களை மாத்திரமேயன்றி ஆந்தரசத்ருக்களான இந்திரியங்களையும் வென்றவர் என்று அதற்குப் பொருளுரைத்த பெரியவாச்சான்பிள்ளை 'அவ்விந்த்ரிய ஜயத்தின் எல்லை எவ்வளவென்னில்? * பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம் என்ற ராமஸௌந்தர்யத்திலும் துவக்குண்ணாதொழிகை. அதாகிறது-பெருமாளைப் பற்றும்போதும் தன் உகப்பாலேயாதல் அவருடைய வைலக்ஷண்யத்தாலே யாதலன்றிக்கே தனக்கு உத்தேச்யனான பரதாழ்வான் உகந்த விஷயமென்று பற்றுகை" என்றருளிச் செய்தார். மதுரகவிகளின் நிஷ்டையும் இப்படிப்பட்டதே யென்பது "தேவுமற்றறியேன்" என்றதனாலும், "திரிதந்தாகிலும்" என்னும் பாசுரத்தினாலும் அறியலாம்.

"பகவத் பக்தியிற்காட்டிலும் பாகவதபக்தி சிறந்தது" என்று சொல்லுவதன் தத்துவம் சிறிது விவரிக்கப்படுகிறது;-ஒருவன் ஒரு வஸ்துவினிடத்தில் அன்பு வைத்தால் அவ்வன்பு அளவற்றதுமாயிருந்தால் அஃது அவ்வஸ்துவோடே நின்றுவிடாமல் அதனோடு ஸம்பந்த ஸம்பந்தம் பெற்ற வஸ்துக்களிலும் பெருகிச் செல்லுமென்பதை அனைவரும் தம் தம் அநுபவத்தாலறிவர். அப்படியே பாகவத பக்தியென்பது பகவத் பக்தியின் எல்லைநிலமாகவுண்டாமது. பகவத் பக்தியின் உறைப்பையே பாகவத பக்தி வெளிப்படுத்தும். ஸ்வாமியின் பாதுகைகளிலே நாம் ஆதரவுவைத்து அவற்றைக் கண்களிலொற்றிக் கொள்வதும் தலை மீது அணிந்து கொள்வதும் அலம்பித் தீர்த்தம் பருகுவதும் செய்கிறோம்; இதனால் நமக்கு ஸ்வாமியிடத்துள்ள பக்தி அபாரமானது என்பதேயன்றோ வெளியாகின்றது. அதுபோலவே, 'எம்பெருமானும் வேண்டா, அவன் உறையும் திருப்பதியும் வேண்டா, ஆழ்வாரும் அவருடைய அருளிச் செயல்களுமே உத்தேச்யம், என்று பேசுவதிலும் பகவத் பக்தியின் முதிர்ச்சியே விளங்கிற்றாகும்.

## திருமழிசைப்பிரான் குணநுபவம்

இவ்வாழ்வார் அருளிய திவ்வியப் பிரபந்தங்கள் இரண்டு. 1. நான்முகன் திருவந்தாதி, 2. திருச்சந்த விருத்தம். இவையிரண்டும் திவ்ய ப்ரபந்தங்களெல்லாவற்றினுள்ளும் வேதாந்த விழுப்பொருள்கள் நிரம்பித் ததும்பிய மிகச் சிறந்த அரிய பெரிய நூல்களாம். இவ்வாழ்வாருடைய காலத்தில் தேவதாந்தரபரத்துவம் கொள்ளும் மதாந்தரஸ்தர்கள் மலிந்திருந்ததனுல் அவர்களைத் திருத்தி வழிபடுத்த வேண்டுவது இவர்க்கு அவசியமாய் அமைந்தது. ஆகவே, இவர் திருவந்தாதி தொடங்கும்போதே ஸ்ரீமந்நாராயண பரத்வத்தை மிக அழுத்தமாக அருளிச் செய்கின்ருர். அது தலைக்கட்டுமிடத்தும் "இனியறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம், இனியறிந்தேன் எம்பெருமானுன்னை" என்கின்ருர். இடையிலும் பல பல பாசுரங்களினுல் தேவதாந்தரங்களின் அபூர்த்தியையும் பரமபுருஷனுடைய பூர்த்தியையுமே பேசுகின்ருர். ஆகவே, இவரது திருவந்தாதி பெரும்பாலும் பரதத்வஸ்தாபனத்தில் நோக்குடைத்தா யிருக்கும்.

இதில் முதற் பாசுரம்—"நான்முகனை நாராயணன் படைத்தான், நான்முகனும் தான்முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான்—யான் முகமாய், அந்தாதி மேலிட்டு அறிவித்தேனுழ் பொருளைச் சிந்தாமற் கொண்மினீர் தேர்ந்து" என்பதாம். இப் பாசுரத்தின் பெரியவாச்சாள் பிள்ளை வியாக்கியான அவதாரிகையில் அருளிச்செய்யப்பட்டுள்ள ஓர் அற்புதமான திவ்ய ஸூக்தி காண்மின் ;—

"ப்ரஹ்மாதிகள் ஸம்ஸாரத்தை ப்ரவர்த்திப்பிக்க ப்ரதாநரானுப்போலே தந்நிவ்ருத்திக்கு ப்ரதாநனுனேன் நானென்கிருர்" என்று. இந்த ஸ்ரீஸூக்தியின் காம்பீர்யம் வாசாமகோசரம்; இதன் கருத்தாவது—நாராயணன் நான்முகனைப் படைத்து வைத்தான்; அந்த நான்முகனும் மற்றுள்ள ஸ்ருஷ்டிகளைப் பண்ணிப் போனுன். ஆக அவ்விருவரும் இப்படி ஸம்ஸாரத்தை வளரச் செய்து வைத்தார்களே யன்றி அடியறுக்கப் பார்த்தாரல்லர்; நான் அங்ஙனன்றியே, உங்களுடைய ஸம்ஸாரம் வேரறும்படியாக ஆழ்பொருள்களை யறிவிக்க முற்படுகின்றேன் காண்மின்—என்று ஆழ்வார் அருளிச்செய்வதாகப் பெரியவாச்சான் பிள்ளை எடுத்துக் காட்டி யருளியிருப்பது பரமரஸம்.

இப்பாசுரத்தின் கருத்தையும் இங்குச் சுருக்கியுரைப்போம். காரியப்பொருள்கள் யாவும் பெயருமுருவமும் பகுத்தறியவொண்ணுதபடி தன்பக்கலிலே லயமடைந்து தானொருவனுமே காரண பூதனுய்க்கொண்டு உளனுய் நின்ற நாராயணன் "பஹு ஸ்யாம்" என்கிற தன் ஸங்கல்பத்தாலே ஸமஷ்டி பதார்த்தங்களை ஸ்ருஷ்டித்து நான்முகக் கடவுளைக் கொண்டு வ்யஷ்டி பதார்த்தங்களை ஸ்ருஷ்டிக்க வேண்டித் தனது திருநாபிக் கமலத்தில் நான்முகனைப் படைத்தருளினன். பிரமன் ஸ்ருஷ்டிகள் செய்தது வேதங்களைக்கொண்டே யாதலாலும், அந்த வேதங்கள் நால்வகைப் பட்டிருத்தலாலும், அந்நால்வகை வேதங்களையும் உச்சரிப்பதற்காகவே பிரமன் நான்கு முகங்களையுடையவனுகப் படைக்கப்பட்டனுதலாலும், இங்குப் 'பிரமனை' என்னுது நான்முகனை என்ருர்.

[நான்முகனும் தான்முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான்.] ஸ்ரீமந் நாராயணனுல் பிறப்பிக்கப்பட்ட அந்த நான்முகன்தானே தலைவனுய் நின்று ஸம்ஹாரக் கடவுளாகிய சங்கரனைப் படைத்தான். புத்திரன் விநயமற்று வழிகெட நடந்தால் அவனைத் தந்தை விலங்கிட்டு வைப்பது வழக்கம். அதுபோல, எம்பெருமானை ஆராதித்து உய்வு பெறுதற்கென்றே படைக்கப்பட்ட இவ்வுலகம் வழிகெட நடந்து அனர்த்தத்தை விளைத்துக் கொள்ளுமாகில் விலங்கிட்டு வைப்பதுபோன்ற கரண களேபர விநாசம் செய்து தீர வேண்டுவதொன்ருதலால் அதற்காகச் சங்கரனைப் படைத்தனனும். சங்கரன் என்ற சொல் (சம் கரோதீதி சங்கர:) என்ற ஸம்ஸ்க்ருத வ்யுத்பத்தியினுல் நன்மை செய்பவனெனப் பொருள்படும். மேன்மேலும் கேடுகளை விளைத்துக்கொள்ள வொண்ணுதபடி கரணகளேபரங்களை ஒடித்துவைப்பதாகிற ஸம்ஹாரம் நன்மையே யாதலால் இதுதோன்ற இங்கு 'உருத்திரனை' என்னுது 'சங்கரனை' என்ருர். ஆக விப்படி ஸ்ரீமந் நாராயணனெருவனே உத்பாதகன் என்றும், ப்ரஹ்மருத்ராதிகள் கார்யபூதர்களே என்றும் உண்மைப் பொருளுணர்ந்தால் ஸர்வசேஷியான ஸ்ரீமந்நாராயணனைத்தவிர்த்துப் பிறிதொன்றையும் பரதெய்வமாகக் கொண்டாட வழியில்லை. ஆயினும், உலகத்தவர் இவ்வுண்மைப் பொருளுணரப் பெருமையாலே நசித்துப் போகிருர்கள்; இதனை நாம் கல்வெட்டும் செப்பு வெட்டும் போலே பிரபந்தப்படுத்திப் பகர்வோமாயின் பலரும் தெளியலாகுமெனத் திருவுள்ளம் பற்றி

"இவ்வாழ் பொருளைத் திருவந்தாதிப் பிரபந்த முகத்தால் உங்கட்கு அறிவிக்கின்றேன் ஸம்ஸாரத்தின் பொல்லாங்கையும் நான் சொல்லுகிற அர்த்தங்களின் அருமை பெருமைகளையும் ஆராய்ந்து, இவை நெஞ்சில் நின்றும் நழுவி மங்கிப் போகாதபடியாக உள்ளத்தே தேக்கிக் கொள்ளுங்கள்'' என்று துடை தட்டி யுணர்த்துகிறார் பின்னடிகளில்.

இவ்வாழ்வார் ஆழ்பொருளை அறிவிக்கத் தொடங்கும்போதே 'அறிவித்தேனாழ் பொருளை' என்று இறந்த காலத்தாற் கூறினது—தம்மைக் கொண்டு அறிவிக்க விரும்பிய எம்பெருமான் ஸத்ய ஸங்கல்பனாகையாலும், எம்பெருமானுடைய பரத்துவத்தைப் பற்றிப் பாசுரங்கள் பேசித் தலைக்கட்டியே தீரும்படியான தம் உறுதியினாலும் இப்பிரபந்தம் தலைக்கட்டியாய்விட்டதாகவே நினைத்தாம். இதனைத் தமிழர், தெளிவினால் எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்ட காலவழுவமைதி என்பர்.

இப்பாசுரம் முதலிய இருநூற்றுப் பதினாறு பாசுரங்களை [இரண்டு நூலாக] உதவி யருளின இம்மஹான் தையில் மகத்தில் திருவவதரித்து நம்மை வாழ்வித்தருளினர்.

## எம்பார் குணநுபவம்

இவ்வாசிரியருடைய திருநாமம் ஸ்ரீகோவிந்த பட்டர் என்பது. உடையவர் யாதவ ப்ரகாசரிடத்தில் வேதாந்த ச்ரவணம் பண்ணும் போது இவரும் உடனிருந்து அதிகரித்தவர். எம்பெருமானுடைய மாயையினால் இவர் சில காலம் சைவசமயப் பற்றுடையராய் காளஹஸ்திக்ஷேத்ரத்தில் சிவத்விஜராயிருந்துவந்து, "தேவு மெப்பொருளும் படைக்கப் பூவில் நான்முகனைப்படைத்த, தேவனெம்பெருமானுக்கல்லால் பூவும் பூசனையும் தகுமே.'' என்ற திருவாய்மொழிப்பாசுரத்தின் அழகிய பொருளை மாதுலரான பெரிய திருமலைநம்பி உபந்யஸித்தருளக் கேட்டு அப்போதே சைவப்பற்றொழிந்து பகவத் பக்த சிகாமணியாய்த் திருமலைநம்பி திருவடிகளிலே ஆச்ரயித்துத் திருவிலச்சினையும் பெற்று, பிறகு உடையவர்க்கே அறுதியாக அர்ப்பணஞ் செய்யப்பட்டவர். திருமலைநம்பியின் பிரிவை ஆற்றகில்லாதவிவர் மீண்டும் அவர் திருமாளிகையேறச் சென்றவளவிலே "விற்ற பசுவுக்குப் புல்லிடுவாருண்டோ?'' என்று சொல்லி அவ்வாசிரியர்தம்மால் மீண்டும் உடையவர் திருவடிக்கே அனுப்பப் பட்டனராதலால் ஓராண்வழி ஆசார்ய பரம்பரையில் எம்பார் உடையவர்க்குப்பின் அடுத்த ஆசிரியராயினர்.

ஆசார்யருடைய திருநாமத்தை வஹிப்பதும் சிஷ்யலக்ஷணமாதலால் இவர் எம்பெருமானாருடைய திருநாமத்தையே வஹிக்க விரும்பினர். திருநாமத்தின் ஐக்கியம் பலரும் மயங்குதற்கு ஹேதுவாகுமேயென்றெண்ணி அத்திருநாமத்தின் ஏகதேசவிகாரமாக எம்பார் என்பது இவர்க்குத் திருநாமமாக்கப்பட்டது. இவருடைய சிஷ்யரான பட்டர், எம்பாரென்கிற இத்திருநாமத்தை 'எம், பார்' என்று இரண்டு சொற்களாகப் பிரித்துக் கொண்டு தனியனிட்டருளின அழகு அற்புதமானது.

"ராமாநுஜ பதச்சாயா கோவிந்தாஹ்வா நபாயினீ
ததாயத்தஸ்வரூபா ஸா ஜீயாத் மத்விச்ரமஸ்தலீ.''

என்பது எம்பாருடைய தனியன். நிழலானது வ்யக்தியை விட்டு நீங்காதிருத்தல்போல இவர் எம்பெருமானார்தம் இணையடியை விட்டு நீங்காதிருந்தமைபற்றி ராமாநுஜபதச்சாயா என்னப் பெற்றிருந்தார். தாபாதுரர்களுக்கு நிழல் இளைப்பாறு மிடமாயிருப்பதுபோல ஸம்ஸார தாபதப்தரான தமக்கு [பட்டர்க்கு] இவ்வாசிரியர் இளைப்பாறுமிடமாக அமைந்ததனால் 'எம், பார்' என்று பிரித்துப் பொருத்தமாகப் பொருள் கொண்ட வாற்றை 'மத்விச்ரமஸ்தலீ' என்ற சொல்லால் வெகு அழகாகக் காட்டினர்.

எம்பாருடைய ஜ்ஞாந பக்தி விரக்திகள் லோகவிலக்ஷணமாயிருக்கும். அருளிச் செயல்களிலே இவர் அருளிச் செய்யும் அர்த்த நிர்வாஹங்கள் இன்சுவையே வடிவெடுத்ததாயிருக்கும். திருவாய்மொழியில் மின்னிடை மடவார்கள் என்னும் பதிகத்தின் இரண்டாம் பாட்டின் அவதாரிகையில் ஈடு முப்பத்தாறாயிரப் படியில் இவர் விஷயமாக அருளிச் செய்துள்ள சில ஸ்ரீ ஸூக்திகளைக் காண்மின் :—

"எம்பார்தாம் பாஹ்ய விஷயங்களில் ருசியில்லாமையாலே பதார்த்த ஜ்ஞாநமின்றிக்கே யிருப்பர்; இப்படியிருக்கையாலே 'ஸ்த்ரீகளுக்கு அஸாதாரணமான சிஹ்நங்கள் எங்ஙனே யிருக்கும்படி?' என்று சிங்கப்பிரானைக் கேட்டருளினர் என்று ப்ரஸித்தமா

யிருக்கும். இப்படியிருக்கிறவர்தாம் மின்னிடைமடவார் அருளிச் செய்யப்புக்கால் 'இந்த ஸந்நியாஸி பிரட்டுப்பாடத் தொடங்கினர்' என்பராம் பிள்ளையுறங்கா வில்லிதாஸர். இவருடைய பகவத் விஷயத்திலவகாஹநமிருக்கும்படி. ஒரு க்ஷுத்ர விஷயத்திலே நாலு நாள் வாஸநை பண்ணினவர்கள் போர விதக்தராயிரா நின்றார்கள். அவ்வளவல்லவிறே ஸமஸ்த கல்யாண குணாத்மகனோடே நெடுநாள் வாஸநை பண்ணினார்க்கு இருக்கும் படி.'

'ஈச்வரன் முன்னே வந்து நின்றாலும் வா என்பாரையும் கிடையாத ஸம்ஸாரத்திலே, அவன் அல்பம் தாழ்த்தானென்னா போ என்பாரைப் பெறுவதே!' என்பர் எம்பார்.'' என்பனவாம். இங்ஙனே எம்பாருடைய ஈடுபாட்டை விளக்கும் அருளிச்செயல் வியாக்கியான ஸ்ரீ ஸூக்திகள் பலவுள்ளன. சிலவற்றை ஈண்டெடுத்துக் காட்டுவோம்;—

பெரியாழ்வார் திருமொழியில் (2—1.) * மெச்சூது சங்க மிடத்தானென்கிற அப்பூச்சிப்பதிகத்தை நம்பெருமாள் ஸந்நிதியில் 'உய்ந்த பிள்ளை' என்கிற அரையர் அபிநயிக்குமளவில் ''அத்தூதனப்பூச்சி காட்டுகின்றான் அம்மனே அப்பூச்சிகாட்டுகின்றான்'' என்றவிடத்திற்கு—கண்ணை இறுத்துவது மயிரால் முகத்தை மறைத்துக் காட்டுவது முதலாகச் செய்யும் பயங்கரமான பால சேஷ்டைகளைக் கண்ணன் செய்வதாக அபிநயித்துக் காட்டினர். உடையவர்பின்னே எழுந்தருளியிருந்த எம்பார் அந்த அபிநயரீதியைக் கண்டு திருவுள்ளத்திற் குறை கொண்டு, தம் திருக்கைகளைத் திருத்தோள்களோடு சேர்த்துக் காட்ட, அரையரும் தாம் முன்னே அபிநயித்த ரீதியை விட்டு எம்பார் காட்டியது போலவே எம்பெருமான் திருத் தோள்களில் சங்கு சக்கரங்கள் தரித்துக் கொண்டிருப்பதை அபிநயித்தார். இதனால் ஏற்படுவதாவது-தூதனைத் தன் ஸௌலப்யத்தை வெளியிட்டு 'நம்மிலே ஒருவன்' என்று இவ்வுலகத்தவர் கொள்ளும்படி யிருப்பவன், அவர்கள் அஞ்சும்படி சில காலங்களில் ஈச்வரத்வ சின்னங்களான சங்கு சக்கரம் முதலியவற்றையும் காட்டுகின்றானென்பது ஸ்வாபதேசார்த்தமாம், இது எம்பாருடைய திருவுள்ளத்தில் தோற்றின அரும் பெரும் பொருள். அரையர், முதலில் ஸாமாந்யமாகவும் பிறகு இங்ஙனே விசேஷமாகவும் அபிநயித்தபடியை கோஷ்டியில் கடாக்ஷித்த எம்பெருமானார் இது எம்பாருடைய திருத்தமாகவேயிருக்க வேணுமென்று கருதி, உடனே பின்னே திரும்பிப் பார்த்து 'எம்பாரே! நீர் இருந்திரோ?' என்றாராம்.

பெருமாள் திருமொழியில் (6—8) ''என்னை வருக வெனக் குறித்திட்டு'' என்ற பாசுரத்தின் ஈற்றடி—''இன்ன மென்கையகத்திங்கொருநாள் வருதியேல் என் சினம் தீர்வன் நானே'' என்பது. கண்ணபிரானாலே வஞ்சிக்கப்பட்ட ஒரு ஆய்ச்சி 'கண்ணா! இச்சமயம் நீ தப்பிக்கொண்டுபோனாலும் மற்றொரு சமயம் நீ என்கையில் அகப்படாமற் போகாய்: அப்போது நான் என் கோபத்தைத் தணித்துக்கொள்வேன்' என்பது இங்கு விஷயம்: உய்ந்த பிள்ளை யென்கிற அரையர், நம் பெருமாள் ஸந்நிதியில் இப் பாசுரத்தை அபிநயிக்கும்போது கையாலே அடிப்பதும் காலாலே துவைப்பதுமாய் அபிநயித்தார். மறுபடியும் கண்ணன் ஆய்ச்சிகையில் அகப்படும்போது அவனை இவள் கையாலடித்தும் காலால் துவைத்தும் தன் கோபத்தைத் தணித்துக் கொள்வதாக அரையர் அபிப்ராயப்பட்டபடி. அப்போது கோஷ்டியிலெழுந்தருளியிருந்த எம்பார். இங்ஙனே அரையர் காட்டிய அபிநயத்தைக் கடாக்ஷித்து அரையர்க்கு ரஸிக்யம் போராதென்று திருவுள்ளம் பற்றி 'அந்தோ! அப்படி அவள் செய்தாளாகில் ''மம சிரஸி மண்டநம் கோபிதா தாடநம்'' என்றிருக்கிற கண்ணபிரானுக்கு அது வருத்தமோ? அஃது அவனுக்குப் பெரும்பேறு மன்றோ; ஆகவே அதுவன்று கருத்து. கண்ணா! நீ மீண்டுமொருகால் என்பால் வந்தவாறே முகங்கொடாமல் முகத்தை மாறவைத்து என் கோபத்திற்குப் போக்கு வீடு செய்துகொள்வேன் காண்—என்பதாகவே கருத்துக் காட்டவேணுமென்று கொண்டு தாம் (எம்பார்) அவ்வாறாக முகத்தை மாறவைத்துக் காட்ட, அரையரும்கருத்தறிந்து மறுபடியும் அங்ஙனே அபிநயித்துக் காட்டினர் என்பது ப்ரஸித்தம்.

நாச்சியார் திருமொழியில் (4-11.) ''நீடு நின்ற நிறைபுகழாய்ச்சியர்'' என்றவிடத்திற்கு, ஆய்ச்சியர்க்கு நிறைபுகழாவது, கிருஷ்ணனை இன்னாள் நாலுபட்டினிகொண்டாள், இன்னாள் பத்துப்பட்டினி கொண்டாள் என்னும் புகழ்காணும்'' என்பராம் எம்பார். நம்மைப்போலே உண்டியே உடையே உகந்தோடித் திரிந்து பழுதே பலபகலும் போக்காமல் முப்போதும் பகவத் விஷய சிந்தனையேயாய்ப்போது போக்குகிறார்கள் ஆய்ச்சிகள் என்ற காரணத்தினால் அவர்கட்குப் புகழ் நிறைந்திருக்குமென்று ஸாமாந்யமாகச் சிலர் பொருள் கொள்வராம்; எம்பார் கூறும் பொருளாவது—(விவரிப்போம் கேண்மின்:) கண்ணபிரானது வரவை யமுனையாற்றங்கரையில் எதிர்பார்த்திருப்பர்கள் பல மாதர்;

இவன் இப்படிப் பலபேர்களை எதிர்பார்த்திருக்குமாறு செய்துவிட்டுத் தன்மனத்துக்கினியாளான ஒருத்தியோடே கலந்திருந்து போதுபோக்கும். அப்போது எதிர்பார்த்திருந்த மாதர்கள் இனி இவன் இங்கேற வருவானாகில் முகங்கொடுத்து ஒரு பேச்சும் பேசக்கடவோமல்லோம்' என்று ஸங்கல்பஞ் செய்துகொண்டு அளவு கடந்த ரோஷத்துடனிருப்பர்கள். பிறகு தனக்கு ஓழிந்தபோது ஒருநாள் கண்ணன் அளவிறந்த அன்பு பூண்டவன் போல ஆடிப் பாடிக்கொண்டு அவர்கள் முன்னே வந்து நிற்பன். அப்போது அவர்கள் தாங்கள் முன்பு செய்துகொண்ட ஸங்கல்பத்தின்படியே முகங்கொடாமலேயிருப்பர்கள். அப்போது கண்ணன் கண்ணீர்விட்டழுவதும் காலில் கும்பிடுவதுமாய் ஊணுமுறக்கமுமின்றியே பல நாட்களளவும் அவர்களது வீட்டைவிட்டுப் பேராதே இடைகழித் திண்ணையிலே கிடந்துபடுவன். இப்படி நாலுநாள் பட்டினி கிடந்தபிறகு ஒருத்தி மனமிரங்கி முகங்கொடுப்பள். மற்றொருத்தி அவ்வளவிலும் மறம் மாறாதே இவன் எட்டுநாள் பட்டினி கிடந்த பின்பு முகங் கொடுப்பள். மற்று மொருத்தி அவ்வளவிலும் ஊடல் தீராதே இவன் பத்துநாள் பட்டினி கிடந்தபின் முகந்தருவள். ஆக இங்ஙனே பல பல நாள் பட்டினி கிடந்தாகிலும் அவ்வாய்ச்சிகள் பக்கலிலே இவன் முகம் பெற நினைப்பது, அவர்களிடத்துள்ள தேஹ குணம் ஆத்ம குணம் முதலியவற்றாலான வைலக்ஷண்யத்தைப்பற்றவாம். இதனால் அவர்களுடைய புகழ் வீறு பெறுமாயிற்று.

இங்ஙனே இவ்வாசிரியர் ஆங்காங்குப் பரமரஸமயமான பொருள்களைப் பணிப்பது அருளிச்செயல் வியாக்கியானங்களில் அவகாஹித்துக் காணவுரியது. இவருடைய திருவடிகளிற் பழகின பெருமையினால்தான் பட்டர் விளக்கில் கொளுத்தின தீவட்டிபோலே மிகவு மொளிமல்கினர்.

## கூரத்தாழ்வான் குணாநுபவம்

இவ்வாசிரியரோடு ஒப்பிடக்கூடியவர்களும் இவர்க்கு மேம்பட்டவர்களும் முன்னுமவதரித்ததில்லை, பின்னுமவதரிக்கப் போகிறதில்லை. புருஷகுணங்க ளெல்லாவற்றினுஞ் சிறந்த ஜீவ காருண்யம் ஆசார்யபக்தி பகவத்பக்தி விரக்தி அப்ரதிமபாண்டித்யம் ஸத்கர்மாநுஷ்டாநம் முதலிய எண்ணில் பல குணங்கட்குப் பிறப்பிட மென்னவமைந்த இவ்வாசிரியரது திருக்குணங்களில் சிலவற்றை இங்கெடுத்துரைத்துகப்போம்.

இவர், தமக்கிருந்த விசேஷ ஸம்பத்துக்களை யெல்லாம் துறந்து, இராமானுசனடிக்கீழ்ப்புகுந்து வாழுங்காலத்திலே, இராமானுசன், திருக்கோட்டியூர் நம்பி திருவடிகளிற் சென்று பரமப்ரயாஸங்கள்பட்டு, சரம ச்லோக பரமரஹஸ்யார்த்தத்தை உபதேசிக்கப்பெற்று மீண்டு மடத்திற்கு எழுந்தருளினவளவிலே, ஆழ்வான் உடையவர் ஸ்ரீபாதத்திலே தெண்டனிட்டுநிற்க, உடையவரும் 'வாராய் ஆழ்வான்! சரமச்லோக பரமரஹஸ்யார்த்தத்தை நம்பிகள் எனக்கு உபதேசித்தருளி, இவ்வர்த்த விசேஷத்தை ஒருவர்க்கும் செவிப்படாதபடி பேணிக் கொண்டிருக்குமாறு நியமித்தருளினபோது, பரமபாகவத சிகாமணியான ஆழ்வானுக்கு மாத்திரம் அடியேன் இதனை வெளியிடாதிருக்க முடியாதே' என்று நான் விண்ணப்பஞ் செய்ய, 'ஆழ்வானுக்கு இவ்வர்த்தம் கேட்க அதிகாரமுண்டேயாகிலும் பல்வகையாலும் அவருடைய அத்யவஸாயத்தைப் பரீக்ஷித்தறிந்து ஓராண்டு சுச்ரூஷை கொண்டு சொல்லும் என்று நியமித்தருளினார் என்று ஆழ்வானை நோக்கி அருளிச் செய்ய, அது கேட்ட ஆழ்வானும் * மின்னின் நிலையில மன்னுயிராக்கைகள் * என்ற பாசுரத்தைத் திருவுள்ளம்பற்றி ஒரு ஸம்வத்ஸரம் இவ்வுடலுக்கு நிலையுண்டோ இல்லையோ வென்று வியாகுலப்பட்டு ஆலோசித்து, அவ்வர்த்த விசேஷத்தைப் பெற்றாலல்லது தரித்திருக்க முடியாத பேராசையாலே ஆசார்யனது திருமாளிகை வாசலிலே ஒரு மாஸம் பட்டினி கிடக்கை ஸம்வத்ஸர சுச்ரூஷையோடொக்கும்' என்று சாஸ்த்ர முண்டென்றறிந்து அங்ஙனமே மாஸோபவாஸம் கிடந்து அவ்வர்த்தத்தைப் பெற்றார் என்று ப்ரஸித்தம்.

திருவரங்கத்தமுதனார், உடையவர் நியமனப்படி ஆழ்வான் திருவடிகளில் அந்தரங்கராய்க் காலக்ஷேபஞ் செய்து வருகிற நாளிலே அவருடைய தாயார் ஆசாரியன் திருவடியடைய, தசாஹம் கடந்த பின்பு ஏகாஹத்திற்கு நிமந்த்ரணஸ்வாமியாக ஒருவரை நியமித்தருளவேணும் என்று உடையவர் திருவடிகளிலே விண்ணப்பஞ் செய்ய, உடையவரும், ஆழ்வானை நோக்கி :நீர் போம்' என்ன, ஆழ்வானும் சிறிதும் முகம் கன்றாமல் அப்படியே எழுந்தருள, அமுதனாரும் 'ஆசாரியர் இங்ஙனே எழுந்தருளப் பெறுவதே!'' என்று தாழ்ந்து தரைப்பட்டு ஸேவித்து ஏகாஹச்ராத்தத்திலே அமுது செய்வித்தார். நம்பெருமாள்

ஸந்நிதித் திறவுகோல் அமுதனாருடைய ஆதீநத்திலிருந்தபடியால் அதை உடையவர் உபாய மாகக் கைப்பற்ற விரும்பியே ஆழ்வானை ஏகாஹத்தில் புஜிக்க நியமித்தார். ஸகலம் ஸம்பூர்ணம் சொல்லும் ஸமயத்தில் ஆழ்வான் கோயில் திறவுகோலை நல்விரகாலே ஸ்வீகரித் தருளி, அதைக் கொணர்ந்து, உடையவர் திருவடிவாரத்திலே ஸமர்ப்பிக்கலானார். பின்பு ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம் என்று கடல்சூழ்ந்த மண்ணுலகமுற்றும் போற் றும்படி எம்பெருமானார், நம்பெருமாள் ஸந்நிதிக் கைங்கரியங்களைப் பரிஷ்கரித்தருளினார் என்று ப்ரஸித்தம்.

எம்பெருமானார் ப்ரஹ்ம ஸூத்ரத்துக்கு ஸ்ரீ பாஷ்யம் செய்தருளி, ஆளவந்தார் திருவுள்ளக் குறையை நீக்கக் கருதி, அதற்காக போதாயநவ்ருத்திக்ரந்தத்தைக் கடா க்ஷிக்கத் திருவுள்ளமாய் அந்த ஸ்ரீ கோசம் காச்மீர மண்டலத்தில் சாரதா பீடத்திலுள்ள தென்றுணர்ந்து ஆழ்வானுடன் அங்கேற எழுந்தருளினவளவில், ஆழ்வான் அந்த வ்ருத்தி க்ரந்தத்தை வெகு விரைவில் முழுதும் கடாக்ஷித்து ஹ்ருதயத்திலே தரித்துக் கொண்டார். பிறகு கோயில் வந்து சேர்ந்து, உடையவர், ஆழ்வாரை உசாத் துணையாகக் கொண்டு ஸ்ரீ பாஷ்ய மருளிச்செய்து தலைக்கட்டினார். உடையவர் அருளிச் செய்த திவ்ய க்ரந்தங்க ளெல்லாம் ஆழ்வான் பட்டோலை கொண்டவை என்று பெரியோர் கூறுவர். ஸ்ரீ பாஷ்யத் தில் "இதி ஸ்ரீ பகவத்ராமாநுஜவிரசிதே சாரீரக மீமாம்ஸா பாஷ்யே'' இத்யாதி வாக்கி யங்களை ஸ்ரீ பாஷ்யத்தோடொப்பப் பெரியார் அநுஸந்தித்துவருவது ஆழ்வான் ஸ்ரீ ஸூக்தி யென்றேயாம்.

எம்பெருமானார்கோஷ்டியில் உபய வேதாந்த க்ரந்த காலக்ஷேபம் நடவாநிற்க, 'ஆத்மாவுக்கு ஜ்ஞாத்ருத்வ சேஷத்வங்களில் எது அந்தரங்க நிரூபகம்?' என்று ப்ரஸ்தாவம் நிகழ, எம்பெருமானார் ஸர்வஜ்ஞராய் எழுந்தருளி யிருக்கச் செய்தேயும் இதன் நிஷ்கர் ஷத்தை ஆசார்ய முகேந வெளியிடுவிக்க வேணுமென்று திருவுள்ளம்பற்றி ஆழ்வானைத் திருக்கோட்டியூர்நம்பி பக்கல் அனுப்ப, ஆழ்வானும், நம்பி பக்கல் விடை கொண்டு ஆறு மாஸம் காத்திருந்து ஜ்ஞாத்ருத்வத்திற் காட்டில் சேஷத்வமே அந்தரங்க நிரூபகமென்னும் மஹார்த்தத்தைப் பெற்றுவந்தார். இங்ஙனே இப்பேராசிரியரின் மஹா வைபவங்கள் விரிப்பிற் பெருகும்.

## திருக்கச்சிநம்பியாறுவார்த்தை

''கிமப்யத்ரா பிஜாயந்தே யோகிநஸ் ஸர்வ யோநிஷு. ப்ரத்யக்ஷிதாத்மநாதாநாம் நைஷாம் சிந்த்யம் குலா திகம்'' என்று நம் ஆசிரியர்கள் உதாஹரித்தருளியுள்ள பிரமாணத்தின்படி, திருக்கச்சி நம்பிகள் திருவவதரித்த வருணம் எது? என்கிற விசாரத்தில் நாம் வாய் வைப்பது அநபேக்ஷிதம். எக்குலத்தினும் சிறந்ததான தொண்டக்குலமே இவர்தாம் அவதரித்த நற்குலமாகும்.

இவர், ஆளவந்தார்திருவடிகளில் ஆச்ரயித்து, ஸாமாந்ய விசேஷ சாஸ்த்ரங்க ளனைத்தையும் அதிகரித்துப் பரம விலக்ஷணராயினர். அர்ச்சாவதார எம்பெருமானுக்குத் திருவாலவட்டத் திருத்தொண்டு செய்வதில் இவர்க்கு இயற்கையான அபிநிவேச முண்டா யது. திருவரங்கம் பெரியகோயிலில் அழகிய மணவாளனுக்கு அந்தத் திருத்தொண்டைச் செய்யப் புகுந்தார். அப்போது பெரிய பெருமாள் "*தெண்ணீர்ப் பொன்னி திரைக்கையா லடிவருடப் பள்ளி கொள்ளும் நமக்குத் தாபம் இல்லாமையால் இங்கு உமது திருத் தொண்டு அபேக்ஷிதமாக இல்லையே'' என்றருளிச் செய்ய, அங்கு நின்றும் திருவேங்கடமலை யேறப் போந்து, அங்கே திருவேங்கட முடையானுக்கு அந்தத் திருத்தொண்டைச் செய்யப் புகுந்தார். அப்பெருமானும் "குளிரருவி வேங்கடத்தில் குளிர நிற்கும் நமக்கும் இந்தத் திருத்தொண்டு அபேக்ஷிதமாக இல்லையே; * அயமேத வேள்வியில் அவதரித்த அத்திகிரி யருளாளப் பெருமாளுக்கு இது அபேக்ஷிதமாயிருக்கக்கூடும்; அங்கேறச் சென்று தொண்டு செய்து வாழ்வீராக'' என்று நியமிக்க, அங்கு நின்றும் ஸ்ரீ ஹஸ்திசைல சிகரோஜ்ஜ்வல பாரிஜாதனை பேரருளாளனுடைய திருவடி வாரத்திலே விடை கொண்டு திருவாலவட்ட மும் கையுமாய் ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி அத்தாணிச்சேவகம் செய்து கொண் டிருந்தனர்.

இவருடைய ஜ்ஞாநாநுஷ்டாந ஸம்பத்ஸம்ருத்தியையும் பக்திவிரக்திகளின் விலக்ஷண பரிபாகத்தையும் கண்டு வியந்த எம்பெருமானார், தாம் இவரது திருவடிகளில்

ஆச்ரயித்து உய்வுபெற வேணுமென்று பாரித்து, இவரை எவ்வளவோ அநுவர்த்தித்தும் மநோரதஸித்தி பெற்றிலர். ஒருநாள் "போனகஞ் செய்த சேடம் தருவரேல் புனிதமன்றே" என்ற தொண்டரடிப் பொடியாழ்வார் பாசுரத்தின்படி நம்பிகள் பக்கலில் திருப்போனக சேடம் பெற வேணுமென்று பாரித்தும், எம்பெருமானுர்க்கு அதுதானும் ஸித்தித்ததில்லையாக, பேரருளாளப் பெருமாள் அர்ச்சாவதாரஸமாதியைக் கடந்து நம்பிகளோடே ஸல்லாபம் செய்தருளுகிறபடியை யறிந்த அவ்வெம்பெருமானுர், தமக்கு சாஸ்த்ரார்த்தங்களிலே சில ஸந்தேஹங்கள் இருப்பதாகவும், அவற்றின் பரிஹாரத்தைத் தேவப் பெருமாள் மூலமாகப்பெற நினைத்திருப்பதாகவும் நம்பிகள்பாடே விஜ்ஞாபிக்க, நம்பிகளும், அன்றிரவு தேவப்பெருமாளுடனே வார்த்தையாடுமளவில் எம்பெருமானுர்க்கு ஸந்தேஹ பரிஹாரமாகப் பெற்று வெளியிட்டவை ஆறுவார்த்தைகள் என்று ஸுப்ரஸித்தமாயிருக்கும்.

"செப்புகின்ற பரதத்வம் யானே யென்னச் செப்புதிவே
றெப்பிலாதாய்! தரிசனமும் பேதமென்றேயுரைத்திடுக
தப்பிலாத வுபாயமதும் ப்ரபத்தியென்றே சாற்றிடுக
அப்ப புகல்கவிவையன்றி நினைவும் வேண்டா அந்திமத்தில்.
இந்தச் சரீரவவதானந் தன்னிலிசையும் மோக்கமது
அந்தமில்லாக் குணத்தினனுக் காசாரியனும் பெரியநம்பி
சிந்தையுள்ளே இவையெல்லாந் தெளிந்து நோக்கி யிளையாழ்வான்
முந்த நினைந்தானிவையிவையே மொழிந்து வருக போ யென்முன்."

என்று அவற்றைப் பாசுரமாக்கிப் பெரியோர் வழங்குவர்.

இந்த ஆறுவார்த்தைகளின் ஸாரப்பொருளை யீண்டு ஸம்க்ஷேபமாக வுணர்த்துவோம்;

## 1. அஹமேவ பரம் தத்வம்.

ஸ்ரீமந்நாராயணனே பரதத்வமென்பது முதல்வார்த்தை. எது ஜகத்காரண வஸ்துவோ அதுவே உபாஸ்யமென்றும் அதுவே முழுமுதற்கடவுள் என்றும் உபநிஷத்துக்களின் கொள்கையாகும். எது ஜகத்காரணவஸ்துவென்று ஆராயப் புகுமளவில், சாந்தோக்யோபநிஷத்தில் "ஸதேவ ஸோம்ய! இதமக்ர ஆஸீத் ஏகமேவ அத்விதீயம்" என்று ஸத் என்ற சப்தத்தாலே மூலப்பொருள் ஓதப்பட்டது. அதனுல் ஒரு நிஷ்கர்ஷம் பிறக்க வழியில்லை. மற்றும் உபநிஷத்துக்களை ஆராயுமிடத்தில் வாஜஸநேயகத்தில் "ப்ரஹ்மவா இதம் ஏகமேவ அக்ரஆஸீத்" என்று ஓதப்பட்டது. முற்காட்டிய உபநிஷத்தில் மூலப்பொருள் ஸத் சப்தத்தாலே கூறப்பட்டது; இதில் ப்ரஹ்ம சப்தத்தாலே கூறப்பட்டது. அந்த வஸ்து மிகவும் பெரிது என்று இதனுல் ஏற்பட்டது. இன்னமும் உபநிஷத்துக்களை ஆராயுமளவில் ஐதரேயத்தில் "ஆத்மாவா அயமேக ஏவாக்ரஆஸீத் என்றுளது. இதனுல், அந்த மூலப்பொருள் அறிவுடையது என்று மாத்திரம் ஏற்பட்டது. இந்திரன் சந்திரன் ஸூர்யன் யமன் வாயு வருணன் குபேரன் சிவன் பிரமன் என்று சொல்லப்படுகின்ற ஆத்மவர்க்கங்களில் ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஸ்ருஜ்யத்வமே சாஸ்த்ரங்களிற் கூறப்பட்டிருத்தல் குறிக்கொள்ளத் தக்கது. ஒரு ஸர்வேச்வரனுடைய ஆஜ்ஞைக்கு அஞ்சி நடப்பாருமாய், அவனை ஆராதித்துப் பதவிகள் பெற்றாருமாய், சாஸ்த்ரங்களின் அநுவர்த்தந-அதிவர்த்தநங்களாலே புண்யபாபங்களைப் பெற்று அவ்வவற்றின் பயனுகிய சுகதுக்கங்களை அநுபவிப்பாருமாய், ஓரளவுபட்ட ஐச்வர்யங்களை யுடையவர்களாகச் சொல்லப்படுகையாலே அஸ்மதாதிகளைப்போன்ற, அல்லது நம்மைக் காட்டிலும் சிறிது மேம்பட்டவர்களாகவுள்ள தேவர்கள் ஜகத்காரணபூதர்களாயிருக்கத் தகுதியுடையரல்லர். * "ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேசாந:" இத்யாதியாகவுள்ள மஹோபநிஷத்வாக்யத்தில் நாராயணனே மூலப்பொருளென்று ஸுஸ்பஷ்டமாக ஓதப்பட்டுளது. முந்துற உதாஹரிக்கப்பட்டுள்ள ச்ருதிவாக்யங்களில் ஸத் ப்ரஹ்ம, ஆத்ம பதங்களால் விவக்ஷிக்கப்பட்ட வஸ்து நாராயணனேயாக வடுக்கும். ஏன்? ஸர்வ சாகாப்ரத்யயந்யாயத்தாலே காரண வாக்யங்களெல்லாவற்றுக்கும் ஏகவிஷயத்வம் வேண்டுகையாலே "பசுமாலபேத" என்று நாற்கால் விலங்குகளையெல்லாம் சொல்லக்கடவதான [ஸாமாந்யமான] பசுசப்தம் "சாகோ வா மந்த்ரவர்ணாத் என்கிற ஸூத்ரத்தின்படி ஆடாகிற பசு விசேஷத்திலே பர்யவஸிக்குமாபோலே ஸத் ப்ரஹ்ம ஆத்ம பதங்கள் நாராயணனுகிறவிசேஷத்திலே பர்யவஸித்துநிற்கும். இந்தத் தெளிவைத் தேவப்பெருமாள் அஹமேவ பரம் தத்வம் என்ற முதல்வார்த்தையினுல் உண்டாக்கியருளினர்.

## 2. தர்சநம் பேத ஏவ ச.

இது நம் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு அந்தரங்கமானதொரு வார்த்தையாகும். உபநிஷத்துக்களில் "நேஹ நாநாஸ்தி கிஞ்சந' "ஸர்வம் கலு இதம் ப்ரஹ்ம" இத்யாதிகளான வாக்கியங்கள் ப்ரஹ்மமொன்றே யுள்ளதென்றும் வேறு எந்தப் பொருளுமில்லையென்றும் தெரிவிக்கின்றன. "க்ஷரம் ப்ரதாநம் அம்ருதா க்ஷரம் ஹர: க்ஷராத்மாநாவீசதே தேவ ஏக:" 'த்வா ஸுபர்ணா ஸயுஜா' இத்யாதிகளான உபநிஷத் வாக்யங்களோவென்னில் சித்து அசித்து ஈச்வரன் என்ற மூன்று தத்வங்களும் உள்ளனவென்று தெரிவிக்கின்றன. ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள், முந்துறக் காட்டிய அபேத ச்ருதிவாக்யங்களையே முக்கியமாகக் கொண்டு அத்வைதக்கொள்கையை ப்ரவசனம் செய்தார்கள். அவர்களுடைய கொள்கையின்படி உண்மையில் ஒரு தத்துவமே உள்ளதென்றும் சேதந-அசேதந-ஈச்வரர்களென்று தத்வத்ரயம் கிடையாதென்றும் தேறுகிறது. அது தவறு என்று காட்டுவது இந்த வார்த்தை. சேதநாசேதநங்கள் ஈச்வரனுக்கு சரீரங்களாகையாலே உலகத்தில் சரீர சரீரிகளை ஒற்றுமை நயத்தினுற் கூறும் வழக்கில் அபேத ச்ருதிகள் அவதரித்தனவேயல்லது உண்மையில் தனியே மூன்று தத்துவங்கள் இல்லையென்று மறுக்க வந்தவையல்ல. சரீராத்மபாவத்தாலே அபேதம் நிர்வஹிக்கப்படுகிறது. ஸம்ஸார தசையோடு முக்தி தசையோடு வாசியற எங்கும் பாரமார்த்திகமாகவே ஜீவ பரபேதம் உண்டு என்று இதனுல் விளக்கிற்றுயிற்று.

## 3. உபாயேஷு ப்ரபத்திஸ் ஸ்யாத்.

பகவத்கீதை முதலிய சாஸ்திரங்களில் கர்மயோகம், ஜ்ஞாநயோகம், பக்தியோகம் ப்ரபத்தியோகம் எனப் பல உபாயங்கள் எம்பெருமானைப் பெறுதற்கு வழியாக வகுக்கப்பட்டுள்ளன. ப்ரபத்திதவிரமற்ற உபாயங்கள் ஆகிஞ்சந்யமும் அநந்யகதித்வமுமே வடிவாகவுள்ள ஸ்ரீ வைஷ்ணவாதிகாரிக்கு ஸ்வரூபவிருத்தங்களாகையாலே ஸ்வரூபஜ்ஞர்களான அதிகாரிகள் அவ்வுபாயங்களை அனுட்டிக்கத்தகுதியுடையாரல்லர்; "ப்ராபகாந்தர பரித்யாகத்துக்கு அஜ்ஞாந அசக்திகளன்று, ஸ்வரூப விரோதமே ப்ரதாநஹேது" என்று ஸ்ரீவசநபூஷணத்தில் பிள்ளையுலகாசிரியர் அருளிச்செய்தபடிக்கும், "பத்தி முதலாமவற்றில் பதியெனக்குக் கூடாமல், எத்திசையு முழன்றோடியிளைத்து விழுங்காகம்போல், முத்திதரும் நகரேழில் முக்கியமாங் கச்சிதன்னில், அத்திகிரியருளாளற்கு அடைக்கல நான் புகுந்தேனே" என்று தேசிகன் பணித்தபடிக்கும் சரணாகதியே ஸ்வரூபோசிதமான உபாயமென்பது இந்த வார்த்தையின் கருத்து. முமுக்ஷுப்படியில் சரமச்லோகப்ரகரணத்தின் உபக்ரமத்தில் "இதிலே சில உபாய விசேஷங்களை யுபதேசிக்க' என்று தொடங்கி அருளிச்செய்துள்ள சூர்ணையும் இங்கு நோக்கத்தக்கது.

## 4. அந்திமஸ்ம்ருதி வர்ஜநம்.

ப்ரபந்நாதிகாரிகள் சரீரவியோக மடையுங்காலத்தில் "மடிவழிவந்து நீர்ப்புலன் சோர வாயிலட்டிய கஞ்சியும் மீண்டே; கடைவழிவாரக்கண்ட மடைப்பக் கண்ணுறக்கமதாவது" இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே மனமொழி மெய்களாகிய கரணத்ரயமும் சிதிலமாய் எம்பெருமானை நினைக்கவும் முடியாதபடியிருந்து அப்படியே பிராணவியோகமாய்விட்டால் அன்னவர்களுக்கு ஸத்கதி கிடையாதோ? என்று சங்கிக்கவேண்டா; வராஹசரமச்லோகத்தின்படிக்கும் 'எய்ப் பென்னைவந்து நலியும்போது அங்கேதும் நானுன்னை நினைக்கமாட்டேன், அப்போதைக் கிப்போதே சொல்லிவைத்தேன் அரங்கத்தரவணைப் பள்ளியானே" என்ற அருளிச் செயலின்படிக்கும், யோக்யகாலங்களில் மனோவாக்காயங்களை நல்வழிப்படுத்தின மஹான்களுக்கு சரீராவஸாநகாலத்தில் நல்லஸ்மரணமில்லையாயினும் குற்றமில்லை யென்பது இந்த வார்த்தையின் கருத்து. "அந்திம ஸ்ம்ருதிவர்ஜநம்" என்றிருப்பதால் அந்திம காலத்தில் ஸ்மரணம் இருக்கவே கூடாதென்று நிஷேதிப்பதாகச் சிலர் பொருள் கொள்ளக்கூடும். அது தவறு அந்திம காலத்தில் நல்ல ஸ்மரணமில்லையாயின் அதனுல் ஸத்கதிக்கு ஹாநியுண்டாகுமோவென்று கவலைப்பட வேண்டாவென்பது மாத்திரமே இங்கு விவக்ஷிதம்.

## 5. தேஹாவஸாநே முக்திஸ் ஸ்யாத்.

செய்த பாபங்கள் அநுபவிக்கப்பட்டுக் கழிந்தாலல்லது மோக்ஷம் பெற வழியில்லை. பாபங்களோ எத்தனை ஜன்மமெடுத்து அநுபவித்தாலும் இன்னமும் மேன்

மேலும் அவை வளரும்படியாகவுள்ளதேயன்றிக் கழியும்படியாக இல்லையே. "வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப் போய பிழையும புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்' என்கிறபடியே வித்யா மாஹாத்ம்யத்தினால் பாபங்கள் கழிவதாகக் கொண்டால் உடனே மோக்ஷம் கிடைத்துத் தீரவேணுமே; அப்படி கிடைப்பதாகத் தெரியவில்லையே யென்று தோன்றும் சங்கைக்குப் பரிஹாரம் இந்த வார்த்தையினால் கிடைக்கிறது. பாபங்கள் ப்ராரப்தமென்றும் ஸஞ்சிதமென்றும் இருவகைப்படும்; பலன் கொடுக்கத் தொடங்கின பாவங்கள் ப்ராரப்தமெனப்படும். அங்ஙனல்லாதவை ஸஞ்சிதமெனப்படும். வித்யா மாஹாத்மியத்தினால் ப்ராரப்த கருமங்கள் தொலையும். ப்ரபந்நாதிகாரிகளுக்கு ஸஞ்சித கர்மாநுபவத்தை இந்த தேஹத்தளவோடே செய்வித்து முடித்து மறுபடியும் தேஹ ஸம்பந்த முண்டாகாதபடி எம்பெருமான் செய்தருள்வனாதலால் "மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்' என்கிறபடியே இந்த தேஹத்தின் அவஸானத்திலே மோக்ஷம் திண்ணம் என்பது இந்த வார்த்தையின் கருத்து. ஆர்த்த ப்ரபந்நனென்றும் த்ருப்த ப்ரபந்நனென்றும் ப்ரபந்நன் இருவகைப்படுவன். வர்த்தமாந தேஹத்தை ஒரு படி பொறுத்திருக்கவல்லவன் த்ருப்த ப்ரபந்நன். இதையும் பொறுத்திருக்க முடியாதபடி ஆர்த்தி கனத்திருக்குமவன் ஆர்த்த ப்ரபந்நன். அன்னவனுடைய ஆர்த்தி மிகுதியை யறிந்தவாறே எம்பெருமான் அப்போதே முக்தியளிப்ப னென்பதும் இங்கு அறியத்தக்கது.

### 6. பூர்ணாசார்ய ஸமாச்ரய:

எம்பெருமானார் தாம் எவரை ஆசார்யராகப் பற்றுவதென்று விசார முற்றிருந்த படியாலே அதற்குப் பரிஹாரம் இந்த ஆறுவது வார்த்தையினாலாகிறது, ஆளவந்தாருடைய சிஷ்யர்களில் தலைவரான பெரிய நம்பியை ஆச்ரயிக்கும்படி இதனால் நியமனமாயிற்றென்று அறிவது. "பஞ்சாசார்ய பதாச்ரித:' என்றபடி ஸ்வாமி ராமாநுசன் ஐந்து ஆசார்யர்களை ஆச்ரயித்தவராயினும், ஸ்ரீவசன பூஷணத்தில் "நேரே ஆசார்யனென்பது ஸம்ஸார நிவர்த்தகமான பெரிய திருமந்த்ரத்தை யுபதேசித்தவனை" என்றருளிச் செய்திருக்கையாலே அப்படிப்பட்ட ஆசார்யர் இவர்க்குப் பெரிய நம்பியே யாவர்.

ஆக இவ்வாறு வார்த்தைகளையும் எம்பெருமானார் திருக்கச்சி நம்பிகள் மூலமாக லபிக்கப் பெற்று க்ருதார்த்தரானார்.

## பட்டர்குணாநுபவம்

நமது ஸம்ப்ரதாயத்தில் எம்பெருமானாருடைய பதவியிலே அபிஷிக்தராய் அவரினும் விஞ்சிய ஞான வைபவத்தையுடையரான பட்டர் என்னும் ஆசிரியருடைய வைபவக் கடலில் சில சிறு திவலைகளை ஈண்டு அனுபவிக்க விழிகின்றோம்.

இவ்வாசிரியர் கூரத்தாழ்வானுடைய திருக்குமாரர் என்றும் ஸ்ரீ ரங்கநாதனுடைய திருக் குமாரர் என்றும் வழங்கப்படுவர். ஆழ்வான் க்ருஹஸ்தாச்ரமத்தில் எழுதத்ருளி யிருக்கச் செய்தேயும் "விஹித விஷய நிவ்ருத்தி தன்னேற்றம்'' என்று ஸ்ரீ வசநபூஷணத்தி லருளிச் செய்த கணக்கிலே விரக்தாக்ரேஸரராக எழுந்தருளி யிருந்தவர். இவர் தமது செல்வத்தை முற்றும் துறந்து எம்பெருமானார் திருவடிகளில் ஆச்ரயித்ததுமுதல் நாடோறும் உபாதாந காலத்திலே ஸ்ரீ ரங்கத்தில் சில திருமாளிகைகளில் உஞ்சவ்ருத்தி செய்து, அதுகொண்டு குடும்ப காரியத்தை நிர்வஹித்துக் கொண்டு ஒவ்வொருநாளும் கிடைக்கிற உணவுப் பொருள்களில் மறுநாளைக்கென்று சிறிதும் சேஷப்படுத்தி வைத்துக்கொள்ளாமல் அன்றன்றைக்கு தேஹயாத்திரை நடத்தியருளுகையில் ஒருநாள் விடாப் பெருமழை பொழிந்ததனால் வெளியே போய் உபாதாநம் செய்துவரக் கூடாமல் போக, அதனால் அன்றைக்கு வெறும் தீர்த்தத்தையே உட்கொண்டு அருளிச்செயலநுஸந்தாநமே தாரகமாகக் கொண்டு வேறு உணவின்றியே யிருந்திட, அன்றிரவு பெரிய பெருமாள் அமுது செய்தருளுகிறபோது உண்டான திருச்சின்ன வொலிகேட்ட வளவில் இவரது தேவியாரான ஆண்டாள் பெருமாளைக் குறித்து, 'உம்முடைய அடியவர் பட்டினி யிருக்க நீர் குலாவிக் குலாவி அமுது செய்தருளுகிறீரோ?' என்று நினைப்பிட்ட வளவிலே ஸர்வஜ்ஞனான ஸ்ரீ ரங்கநாதன் அந்த ஆண்டாள் நினைப்பைத் திருவுள்ளம்பற்றி உடனே தேவஸ்தாந கார்யநிர்வாஹகரான உத்தம நம்பிக்கு அர்ச்சக முகேந கட்டளையிட்டு அப்பொழுதுதாம் அமுது செய்த அக்கார வடிசிலை ஸகல பரிஜந பரிவாரங்களுடன் அவரைக் கொண்டு ஆழ்வான் திருமாளிகைக்கு அனுப்பியருள, ஆழ்வானும் இதனை யறிந்து பதறி யெழுந்து

எதிர்கொண்டு மஹாப்ரஸாதமென்று அதில் தமக்கும் தமது தேவிக்குமாக இரண்டு திரளைகளை யெடுத்துக் கொண்டு உத்தம நம்பியை அனுப்பிவிட்டு பக்தவத்ஸலனான பகவானுடைய வரம்புகடந்த கருணைத்திறத்தை வியந்து அந்த அடிசிலில் ஒரு பகுதியைத் தாம் அமுது செய்து மற்றதைத் தேவியாருக்குக் கொடுத்தருள, முன்பு தசரத சக்ரவர்த்திக்குப் புத்ரகாமேஷ்டியிற் கிடைத்த பாயஸத்தின் கூறுகளே ஸ்ரீராம லக்ஷ்மண பரத சத்ருக்நர்களின் திருவவதாரத்துக்குக் காரணமானதுபோல இப்பொழுது இவர்க்கும் இத்திரளைகளிரண்டுமே இரண்டு திருக் குமாரர்கள் திருவவதரிப்பதற்கு ஹேதுவாயின. முறையே இவர்களின் திருநாமம் ஸ்ரீ பராசர பட்டர், ஸ்ரீ வேதவ்யாஸ பட்டர் என்பனவாம்.

பராசர பட்டர் என்று திருநாமமாயினும் நமது ஸம்ப்ரதாய க்ரந்தங்களிலெங்கும் பட்டர் என்றே இவ்வாசிரியர் வழங்கப்படுவர். பட்டர் என்னும் வடசொல் வேத சாஸ்திரங்களை நன்கு கற்றுணர்ந்த வித்வானையும் ஸ்தோத்ரஞ் செய்யும் தொழிலுடையவனையும் சொல்லும். ["பட்டாரக"] என்னுஞ் சொல்லும் இத்திறத்ததே. 'விளையும் பயிர் முளையிலே தெரியும்.' என்னுமா போலே சிசுவாயிருந்த தன்மையிலேயே இவருடைய திறமையை நன்குணர்ந்த எம்பெருமானர் இவர்க்குப் பொருத்தமாக பட்டர் என்று திருநாமஞ் சாத்தினதும், அத்திருநாமத்திற்கு மிகப் பொருத்தமாகவே இவரும் ஸர்வஜ்ஞராய் விளங்கிப் புகழ் பெற்றதும் எம்பெருமானுடைய ஸத்ய ஸங்கல்பத்வத்தை ஸத்யமாக்கின போலும்.

இங்ஙனமே நாமகரணம் செய்தருள்வதற்காக உடையவர் எம்பாருடன் ஆழ்வான் திருமாளிகைக் கெழுந்தருளி குழந்தைகளை எடுத்துக் கொண்டு வாரும் என்று எம்பார்க்கு நியமிக்க அவர் அங்ஙனமே ப்ரபந்நகுலக் கொழுந்தான அக்குழந்தைகளை எடுத்துக் கொண்டு வரும்போது த்ருஷ்டி தோஷாதிகள் தங்காதபடி ரக்ஷையாக த்வய மென்னும் மந்த்ர ரத்நத்தை அநுஸந்தித்து வாழ்த்திக் கொண்டே வந்து குழந்தைகளை எம்பெருமானர்க்குக் காட்டினர்; அவர் மிக்க களிப்புடனே ஆனந்தக் கண்ணீர் துளிக்கத் தம் திருக்கண்களாற் குளிரக் கடாக்ஷிக்கும்போது அத் தெய்விக சிசுக்களின் தேஜோ விசேஷத்தைக் கண்டு வியப்புக் கொண்டு எம்பாரே! இக்குழந்தைகளிடம் த்வயம் பரிமளிக்கின்றதே, இங்ஙனம் ஆகுமாறு என் செய்தீர்?' என்று வினவ, எம்பார் 'குழந்தைகட்குக் காப்பாக த்வயாநுஸந்தாநம் செய்து கொண்டு வந்தேன்' என்ன; உடையவர் அப்படி எம்பார் காப்பிட்டதற்கு உகந்து அவரைப் பார்த்து 'இக்குழந்தைகள் உய்யும் வகையை நாடிச் செய்தற்கு முற்பட்டீராதலால் இவர்கட்கு நீரே ஆசார்யராகக் கடவீர்" என்று நியமித்தருளினரென்றும், அப்படியே அத்திருக் குமாரர்கட்கு எம்பாரே ஆசார்ய க்ருத்யங்கள் செய்தருளினரென்றும், இது பற்றியே, எம்பெருமானர் எம்பார் பட்டர் நஞ்சீயர் என்றிப்படி ஆசார்ய பரம்பரை வருகிற தென்றும் ப்ரஸித்தமாயிருக்கும். இங்ஙனே யிருக்கச் செய்தேயும் ஆழ்வானும் பட்டர்க்கு ஆசார்யராயினர். அது எங்ஙனே யெனில்; ஆழ்வான் திருக்குமாரர்கட்குத் திருவாய்மொழிப் பொருள் கற்பித்து வரும்போது "எண் பெருக்கந்நலத் தொண் பொருளீறில, வண்புகழ் நாரணன், திண்கழல் சேரே,' என்கிற பாசுரத்தளவிலே வந்தவாறே, அது திருமந்த்ரார்த்தத்தை விவரிக்கிற பாசுரமாகையினாலும், மந்த்ரார்த்தம் ஆசார்யரிடத்திலேயே கேட்டறியவேண்டியதாதலாலும் அதனை அவர்கட்குச் சொல்லாது நிறுத்தி 'இதனை உங்கள் ஆசாரியர் பக்கலிலே கேட்டுக்கொள்ளுங்கள்' என்று சொல்ல, அதனை விரைவில் அறிந்துகொள்ள வேணுமென்கிற அவாவினால் உடனே அவர்கள் எழுந்து தம் ஆசாரியரான எம்பார் எழுந்தருளியிருக்குமிடத்தைக் குறித்துப் போகப் புக்கவளவில் ஆழ்வான் "மின்னின் நிலையில மன்னுயிராக்கைகள் என்கிறபடியே யாக்கைநிலையாமையைத் திருவுள்ளம் பற்றி அவர்களையழைத்து 'இன்னபோது இன்னாரிருப்பார் இன்னார் போவாரென்று தெரியாது, ஆதலால் இருந்து கேளுங்கள்' என்று, திருமந்திரத்தைச் சொல்லி அப்பாசுரத்தின் பொருளையும் விவரித்து 'இப்பாசுரத்தைத் திருமந்திரத்தின் அர்த்தமாக நினைத்திருங்கள்' என்று பணித்தருளினமையால் திருக்குமாரர்க்கு ஆழ்வரனும் ஒரு ஆசார்யராக அமைந்தருளினர் என்று ஸம்பிரதாயம்வல்ல பெரியோர் கூறுவர். பட்டர் ஸஹஸ்ரநாம பாஷ்யம் அருளிச்செய்யும்போது ஆசார்யவந்தநம் செய்கிற முதல் ச்லோகத்தில் "வந்தே கோவிந்ததாதௌ—எம்பாரையும் திருத்தகப்பனாரையும் தொழுகின்றேன்" என்றருளிச் செய்தது உபயஸம்பந்தமும் தமக்கு உண்டானதுபற்றியேயாம். ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்திலும் இரண்டு ஆசிரியர்க்கும் இரண்டு ச்லோகங்களைத் துதியாக இட்டருளினர்.

பட்டரை இளங்குழந்தைப் பருவத்திலேயே ஸ்ரீரங்கநாதன் தனது புத்திரனாக அங்கீகரித்துத் தன்னுடைய ஸந்நிதியிலே திருமணத்தூணினருகே தொட்டிலிடுவித்து

ஸ்ரீ ரங்கநாச்சியாரும் தானுமாகச் சீராட்டிவளர்க்க, அங்ஙனம் வளர்கிற அக் குழந்தை தவழ்ந்து சென்று, பெருமாள் அமுதுசெய்வதற்குத் திருமுன்பே கொணர்ந்து ஸமர்ப்பிக்கப் படுகிற அடிசிலைக் கைகளால் அள்ளியளைந்து துழாவ, பெருமாள் அதுகண்டு உகந்தருளி, "அமிழ்தினும் ஆற்றவினிதே தம்மக்கள், சிறுகையளாவிய கூழ்" (குறள்) என்றபடி இந்த இன்னடிசிலை மிகவும் பிரியமாக அங்கீகரித்தருள்வராம். இப்படி ரங்கநாதன் தம்மை அபிமானித்துப் புத்ரஸ்வீகாரம் செய்தருளப் பெற்ற பாக்கியமுடைமையால் பட்டர் ஸ்ரீரங்கநாத புத்ரர் என்றும் வழங்கப்பட்டு வந்தார். "வானிட்ட கீர்த்தி வளர் கூரத்தாழ்வான் மகிழவந்த, தேனிட்டதார் நம்பெருமாள் குமாரர்...பட்டர்" என்று இவரது சிஷ்யரான பிள்ளைப்பெருமாளையங்கார் (திருவரங்கக் கலம்பகக் காப்புச் செய்யுட்களுள் ஒன்றில்) கூறினர். பட்டர் தாமும் ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில் பதினேழாம் ச்லோகத்தில் "ஸ்ரீரங்கராஜகமலாபதலாலிதத்வம்" என்ற பதத்தினால் இதனை ஸ்பஷ்டமாக்கி யருளினதும் உணர்க.

இப்பேராசிரியர் ஸகல சாஸ்திரங்களிலும் அபாரமான பாண்டித்யம் பெற்றவர் என்பது இவர் அருளிச்செய்த க்ரந்தங்களுள் ஸஹஸ்ரநாம பாஷ்யம் ஒன்றுகொண்டே உணரத் தக்கதாகும். இவர் கவித்திறமையில் ஒத்தாரும் மிக்காருமில்லாதவர் என்பது இவர் அருளிய ஸ்ரீ ரங்கராஜஸ்தவ ஸ்ரீ குணரத்நகோசாதிகளால் நன்கு விளங்கும்.

அருளிச் செயல்களில் அற்புதமான விசேஷார்த்தங்களை அருளிச்செய்வதற்கு இவ்வாசிரியரே அஸாதாரணமான வல்லமைபெற்றவர் என்பது திவ்யப்ரபந்த வியாக்கியானங்களில் பெரியவாச்சான் பிள்ளை முதலானோர் அடிக்கடி அருளிச்செய்யு மாற்றால் தெரிகின்றது. வியாக்கியானங்களில், 'என்று பட்டர் அருளிச்செய்வர்' என வருமிடங்களிலெல்லாம் ஒரு விலக்ஷணமான ரஸாநுபவம் கல் நெஞ்சினர்க்கும் உண்டாவது வழக்கம். இவரது நிர்வாஹங்களில் ஒன்றை ஈண்டெடுத்துக் காட்டுவோம்.—

திருநெடுந்தாண்டகத்தில் 'அறுகால சிறுவண்டே தொழுதேனுன்னை" என்ற பாசுரத்தில் வண்டுக்கு ஸ்வாபாவிகமான ஆறுகால்களுள்ளமையை எதற்காகச் சொல்லிற்று? என்று விமர்சிக்கப் புகுந்த சிலர், இரண்டு காலாகவும் நான்கு காலாகவுமின்றியே விரைந்து செல்லுகைக் குறுப்பாக ஆறு கால்கள் இருக்கப் பெற்ற பாக்கியம் என்னே! என்று வியந்து கூறுவதாக நிர்வஹித்தார்கள். இந்த நிர்வாஹத்தில் ஸ்வாரஸ்யமில்லை; வண்டு செல்லுதற்கு ஸாதனம் சிறகேயன்றிக் கால்கள் அல்லவே; ஆதலால் 'அறுகால' என்னும் அடைமொழிக்கு அங்ஙனே கருத்துரைத்தல் பொருந்தாதென்று பட்டர் அருளிச்செய்வதாவது—தொழுதேனுன்னை என்று மேலே யிருக்கையாலே என் தலையிலே வைப்பதற்கு ஆறுகால்கள் உண்டாகப் பெற்றதே என்று வியந்து சொல்லுகிறபடி என்பதாம். (இதனை விவரிப்போம்.) தூது சென்று மீண்டு வந்தால் வண்டின் கால்களைத் தன் தலை நிறைய வைத்துக்கொண்டு கூத்தாடக் குதூஹலித்திருப்பதனால் அதற்குச் சேர இங்ஙனே கருத்துரைத்தபடி. ஸ்வாபதேசத்தில் வண்டாகச் சொல்லுவது ஆசார்யர்களை - ஆசாரியனும் ஆசாரியனுடைய தேவியாரும் அவருடைய திருக்குமாரருமாக மூவரும் உத்தேச்யர் என்பது ஆபஸ்தம்ப ஸூத்ரஸித்தம். மூவர்க்குஞ்சேர்ந்து ஆறு திருவடிகளாதலால் அது தோன்றவே அறுகால சிறுவண்டே! என்றது - என்பது பட்டர் திருவுள்ளம். "கொங்கார் பூந்துழாய் முடி என்குடக் கூத்தற்கென் தூதாய், நுங்கால்கள் என் தலை மேல்கெழுமீரோ நுமரோடே" என்ற திருவாய்மொழிப் பாசுரத்தின் ஸ்வாபதேசார்த்தத்திற்கு மிகவுமிணங்கியதாமிது.

த்ரிபுவன வீரதேவராயன் என்ற அரசன் பட்டர் வைபவத்தைக் கண்டுங் கேட்டும் அவரிடத்து மதிப்புக்கொண்டு ஒரு நாள் 'பட்டரே! நீர் நமது அரண்மனைக்கு ஒரு நாள் வந்து போம்' என்று சொல்ல, அதற்கு பட்டர் சிறிதும் இணங்காமல் "நம் பெருமாள் அஞ்சலென்ற கை மறித்தாலும் அவர்வாசலொழிய வேறொரு போக்கிட முண்டோ எமக்கு" என்று சொல்லி மறுத்துவிட்டனர் என்பது ப்ரஸித்தம். தன்னைச் சரணமடைந்தவர்கட்கு ஆவன வெல்லாஞ் செய்து அவர்களைப் பாதுகாத்தலையே விரதமாகக் கொண்டு அவர்களுக்கு அபயமளிப்பவனான பரம புருஷனுக்கு அடிமைப்பட்ட நாம் சில சிற்றரசரின் வாசலிலே கிடந்து துவளக்கடவோமல்லோம் என்கிற திண்ணிய அத்யவஸாயத்தை வெளியிட்டவாறு.

## நஞ்சீயர் குணாநுபவம்

இப்பெரியார் அத்வைத ஸம்ப்ரதாயத்தில் அவதரித்திருந்தவர். மாதவாசார்யர் என்பது இவருடைய திருநாமமாக இருந்தது. வேதாந்தி என்பது இவர்க்குச் சிறப்புத் திருநாமம், ஷட் தர்சநங்களுக்கும் ஷடாஸநமிட்டு நிகரற்றவித்வானாக மேல்நாட்டில் எழுந்தருளியிருந்தவர் இவர். மதாந்தரஸ்தர்களான வித்வான்கள் பலரையும் திருத்திப் பணிகொண்டருளின எம்பெருமானார் இவரையும் திருத்திப் பணிகொள்ள விரும்பியிருந்தார். ஆனால் அவருடைய வாழ்நாளில் இந்த மநோரதம் நிறைவேறாதொழியவே தமது சரம ஸமயத்தில் ஆழ்வான் திருக்குமாரரான பட்டரை விசேஷேண கடாக்ஷித்தருளி தர்சநஸ்தாபகராக நியமித்தருளின காலத்து "மேல் நாட்டிலுள்ள வேதாந்தியைத் திருத்திப்பணிகொண்டு வாழ்விக்கக் கடவீர்" என்று நியமனம் தந்தருளலாயிற்று. பட்டரும் அதனை நிறைவேற்றுதற்குரிய ஸமயத்தை எதிர் பார்த்திருந்தார்.

இந்நிலைமையில் மேல் நாட்டில் நின்றும் ஒரு அந்தணர் யாத்திரை யடைவிலே நம்பெருமாள் ஸந்நிதிக்கு விடைகொண்டு பட்டரையும் திருவடி தொழுதார். அப்போது வேதாந்தியின் ப்ரபாவங்களை வார்த்தை யடைவிலே எடுத்துரைத்தார். "மேல் நாட்டில் வேதாந்தியென்று ஒரு பெரிய வித்வான் இருக்கிறார்; அவருடைய வித்யையும் கோஷ்டியும் போலே உமக்கு மிருக்கக்கண்டுகளிக்கின்றேன்" என்று பட்டரை நோக்கிக் கூறினர். அவர் திரும்பி ஸ்வதேசத்திற்குச் சென்று வேதாந்தியை நோக்கி "ஸ்வாமிந்! ஸ்ரீரங்கத்தில் பட்டரென்று ஒருவர் எழுந்தருளியிருக்கிறார்; அவர் அத்விதீய வித்வான்; அவருடைய சிஷ்ய கோஷ்டிகளின் பெருமையும் வாசாமகோசரம்' என்று சொல்ல, வேதாந்தியும், "அவர் நமக்கு ஒத்த வித்வானோ? அவர்க்கு என்ன சாஸ்த்ரம் வரும்?" என்று கேட்க; அதற்கு அவ்வந்தணர் "பட்டர் உம்மிலும் சிறந்த வித்வானே யாவர்; தர்க்க வியாகரண மீமாம்ஸைகள் முதலிய ஸகல சாஸ்திரங்களும் அவர்க்கு வாசோவிதேயங்கள்" என்று கூறினர். வேதாந்தியும் அதுகேட்டு "இவ்விபூதியிலே நமக்கு ஒருவரும் எதிரில்லை யென்று ஷட்தர்சனத்திற்கும் ஷடாஸநமிட்டு அதன்மேலே உயரவிருந்தோம்; பட்டரென்பவர் நம்மிலும் அதிகர் என்று இவர் சொல்லுகிறாரே!" என்று அன்று தொடங்கித் திடுக்கிட்டிருந்தார்.

அவ்வந்தணர் மீண்டு மொருகால் அங்கு நின்றும் புறப்பட்டுக் கோயிலுக்கு வந்து பட்டரைத் திருவடிதொழுது 'தேவரீருடைய வைபவங்களை யெல்லாம் வேதாந்திக்குச்சொன்னேன்; தர்க்க வியாகரண மீமாம்ஸாதி ஸகல சாஸ்திரங்களும் தேவரீர்க்கு வாசோ விதேயங்களென்று சொன்னேன்; அவரும் அது கேட்டு விஸ்மயப்பட்டிருக்கிறார்' என்று விண்ணப்பஞ் செய்ய, அதற்கு பட்டர் 'திருநெடுந்தாண்டக சாஸ்திரம் நமக்குத் தெரியும் என்று வேதாந்திகளிடம் சொல்லிற்றிலீரே!' என்றருளிச் செய்ய, அந்தணரும், அப்படியே சொல்லுகிறேனென்று சொல்லிச் சென்று வேதாந்தியிடம் "பட்டர்க்குத் திருநெடுந்தாண்டக சாஸ்த்ரம் அஸாதாரணம்" என்று கூற, அது கேட்ட வேதாந்தி அந்த சாஸ்த்ரம் இன்னதென்று அறியப் பெறாதவராகையாலே அது என்னோ? வென்று வியப்புக் கொண்டிருந்தார்.

இங்ஙனே சில நாள் சென்றபின், எம்பெருமானாருடைய நியமனப்படி வேதாந்தியைத் திருத்திப் பணிகொள்ளத் திருவுள்ளம்பற்றிய பட்டர் நம்பெருமாள் ஸந்நிதியிலே நியமனம் பெற்றுப் புறப்பட்டு மேல் நாட்டிலெழுந்தருளிக் காவேரிக் கரையில் சிறுப்புத்தூரண்டையில் நின்றருள, அப்போது அங்கு எழுந்தருளியிருந்த திருமலை அனந்தாழ்வான், பட்டர் எழுந்தருளின செய்தி யறிந்து சடக்கென வந்து ஸேவித்து 'ஐயோ! ஸுகுமாரரான நீர் காடும்மலையுங் கடந்து இத்தனை தூரம் எழுந்தருளலாமோ?" என்ன, பட்டரும், அனந்தாழ்வான் திருவடியிலே விழுந்து ஸேவித்து "மேல்நாட்டிலே போய் வேதாந்தியைத்திருத்தி நம் தர்சநப்ரவர்த்தகராகும்படி பண்ணென்று நம் உடையவர் நியமித்தருளினாரே; அப்படியே நம்பெருமாளும் விடை ஸாதித்து நியமித்தருளினார்" என்று சொல்ல; அனந்தாழ்வானும் 'எங்கள் குடிக்கரசே! வாரும்' என்று பட்டரை மிகவுமுகந்து அழைத்துக் கொண்டுபோய்த் திரு நாராயணபுரத்திலே மஹாவைபவமாக மங்களாசாஸநம் செய்வித்து வேதாந்திகள் விஜயஞ் செய்திருக்கிற ஊர்க்கும் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு சென்றார்.

சிஷ்யர்கள் பலர் பிருதாவளிகள் கூறத் திருப்பல்லக்கிலே பட்டர் எழுந்தருளா நிற்கக் கண்ட அங்குள்ள அந்தணர் சிலர் பட்டரை நோக்கி "நீர் ஆர்? எங்கேற எழுந் தருளுகிறீர்?" என்று கேட்க; அதற்கு பட்டர் "நாம் இராமானுசனடிகள்; வேதாந்தி களுடனே தர்க்கிக்கப் போகிறோம்" என்று கூற, அதுகேட்ட அவர்கள் "தேவரீர் இப்படி ஸம்ப்ரமத்துடனே எழுந்தருளினுல் வேதாந்திகளைக் காண்பது அருமைப்படும்: அவருடைய சிஷ்யப்ரசிஷ்யர்கள் தலைவாசலிலே யிருந்து, வந்த வித்வான்களுடனே நாலாறுமாதம் தர்க் கித்து அவர்களை உள்ளே புகுரவொட்டாதே புறம்பே தள்ளிவிடுகிறார்கள்: அங்ஙன மாகாமே அவரை நேரிற்கண்டு தர்க்கிக்க ஒருபாய முரைக்கிறோம் கேளும்;

"வேதாந்திகள் மிக்க செல்வச்சிறப்புடையவராதலால் தினப்படியாக ப்ராஹ்மண ஸந்தர்ப்பணை வெகு விசேஷமாக நடத்திவருகிறார். புஜிக்க வருகிற பிராமணர்களுடனே கலந்து தேவரீரும் போஜனசாலையிற் சென்று சேர்தல் நன்று; அங்கு வேதாந்திகள் அவசியம் நிரீக்ஷிக்க வருவர், அப்போது காணலாம்: ஆகையாலே பரிஜந பரிபர்ஹங்களை யெல்லாம் இங்கே நிறுத்தித் தனியே யெழுந்தருளத்தக்கது" என்று ஸதுபாயம் சொல்லிப் போனார்கள்.

பட்டரும், அவ்விதமாகவே போஜனசாலையிற் சென்று சேர்ந்து, பங்க்தியில் எழுந் தருளியிராமல் வேதாந்திகள்பக்கத்திலேயே நிற்க, அவரும் 'பிள்ளாய்! இங்கு ஏன் நிற்கிறீர்?' என்ன, 'பிக்ஷைக்காக' என்று பட்டர் சொல்ல; எல்லோரும் புஜிக்கிற விடத் திலே போய் உட்காரும்' என்று வேதாந்திகள் சொல்ல, "நான் அன்ன பிக்ஷைக்கு வந்தே னல்லேன்" என்று பட்டர் சொல்ல, அது கேட்ட வேதாந்திகள் இவர் வித்வானாயிருக்கக் கூடும் என்றெண்ணி "கா பிக்ஷா?" என்று கேட்க, பட்டரும், "தர்க்க பிக்ஷா" என்ன, வேதாந்திகள் இதைக்கேட்டுத் திடுக்கிட்டு "முன்னே நாம்கேள்விப்பட்டிருந்த பட்டரல்லது வேறொருவர் நம் முன்னே வந்து கூசாமல் நின்று இங்ஙனே சொல்லப்பெறார்; இவர் அந்த பட்டரேயாயிருக்கக்கூடும்" என்று நிச்சயித்து "நம்மைத் தர்க்க பிக்ஷை கேட்டீர்; நீர் பட் டரோ?" என்ன; அவரும் ஆம் என்ன; அவ்வளவிலே வேதாந்திகள், இவருடைய வித்யா வைபவம் காண்போமென்று குதூஹலித்துத் தர்க்கிக்கத் தொடங்கினார். ஒருவர்க்கொருவர் மத்தவாரணம் பிணங்குமாபோலே தர்க்கிக்க, இங்ஙனே ஒன்பதுநாள் சென்றபின்பு பத்தா நாளில் பட்டர் அத்வைதத்தை ஸஹஸ்ரமுகமாகக் கண்டித்து விசிஷ்டாத்வைதத்தை ஸ்தா பித்து, திருநெடுந்தாண்டகத்தின் விழுமிய பொருள்களையும் அழகாக உபந்யஸித்தருள, வேதாந்திகள் விஸ்மய ஸந்தோஷ விவசராய் எழுந்திருந்து அஞ்ஜலி ஹஸ்தராய் நின்று "உம்மை மநுஷ்யமாத்ரமே யென்றிருந்தேன். உம்மோடு நம்பெருமாளோடு வாசியில்லை; உறங்கும் பெருமாள் அவர், உலாவும் பெருமாள் நீர்" என்று பலவாறு துதித்துத் திருவடி களிலே விழுந்து தொழுது அடியேனை அங்கீகரித்தருள வேணுமென்று விஜ்ஞாபிக்க, பட் டரும் தாமெழுந்தருளின காரியம் மிக விரைவாகப் பலித்தமைக்குத் திருவுள்ளமுவந்து வேதாந்திகளுக்குப் பஞ்ச ஸம்ஸ்காரம் ப்ரஸாதித்தருளி மஹாபாகவதோத்தமராக்கி விசேஷகடாக்ஷஞ் செய்தருளி 'வேதாந்திகளே! நீர் ஸர்வஜ்ஞராயிருந்தீர்; நாம் உமக்குப் பரக்கச் சொல்லலாவ தொன்றுமில்லை: வேதாந்தார்த்தங்களிலே தெளிவுபெற்ற நீர் இனி மாயாவாதரீதியை ஸவாஸநமாகத்யஜித்து அருளிச் செயல்களை ஓதி நம் எம்பெருமானார் தர்சநத்தை நிர்வஹித்துப்போரீர்' என்று நியமித்து, அவ்வளவிலே நம்பெருமாள் ஸந்நிதி யில் திருவத்யயநோத்ஸவம் அணித்தான படியை ஸ்மரித்தருளி விரைந்து கோயிலேற வெழுந்தருளப் புறப்பட்டு மார்கழி மாதம் அமாவாஸ்யையன்று திருவரங்கம் வந்து சேர்ந்து அன்றுமாலை நம்பெருமாள் திருமுன்பே விடை கொண்டு நிற்க; பெருமாளும் 'பட்டரே! நீர் புறப்பட்டுப் போன காரியம் என்னாயிற்று?' என்று கேட்டருள, பட்டரும் 'வேதாந்தி கள் தேவரீருடைய திருவடிகட்கு அடியவராயினர்' என்று விஜ்ஞாபிக்க, 'அவரைத் திருத் திப் பணிகொண்டபடி எங்ஙனே?' என்று பெருமாள் கேட்க, பட்டர் உடனே 'இங்ஙனே காணும்' என்று சொல்லித் திருநெடுந் தாண்டகத்தைத் திருவோலக்கத்திலே உபந்யஸித் தார். இந்த இதிஹாஸத்தை அடியொற்றியே நாளைக்கும் நம்பெருமாள் ஸந்நிதியில் திரு வத்யயநோத்ஸவத் தொடக்கத்திற்கு முன்னாள் திருநெடுந்தாண்டகத் திருநாளென்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றதென்று பெரியார் கூறுவர்.

இது இங்ஙனமிருக்க, வேதாந்திகள் ஸ்வதேசத்திலே திருமாலடியார்களைப் பூசித்துவரும் நாளில், ஸம்ஸாரத்தில் விரக்தியெய்தி உத்தமாச்ரமத்தை ஸ்வீகரித்து, இனி, பட்டர் திருவடிவாரத்திலேயே நிழலும் அடிதாறுமாக நித்யவாஸஞ் செய்யவேணுமென்று

அறுதியிட்டுக் கோயிலை நோக்கியெழுந்தருளா நிற்கையில் சிறுப்புத்தூரிலே அனந்தாழ்வானைக் கண்டு ஸேவித்துநிற்க, அவரும் 'வாரீர் வேதாந்திகளே! ஸுகுமாரரான நீர் இங்ஙனே செய்யலாமோ? வேர்த்தபோது நீராடிப் பசித்தபோது அமுது செய்து பட்டர் திருவடிகளே சரணமென்றிருந்தால் உம்மைப் பரமபதத்தினின்றும் தள்ளி விடுவாருண்டோ? இனி என்? திருமந்திரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து த்வயைக நிஷ்டராவீர்' என்று ஆசீர்வதித்துப் போகவிட்டார். வேதாந்திகளும் பயணகதியிலே போய்க் கோயிலேற எழுந்தருளி பட்டர் திருவடிகளிலே வேரற்ற மரம்போலே விழுந்துகிடக்க, பட்டரும் மிகவு முகந்தருளி 'நம்முடைய சீயர்வந்தார்' என்று வாரியெடுத்துக் கட்டிக்கொண்டருளி ஒரு க்ஷணமும் பிரியாமல் தம்முடைய ஸந்நிதியிலேயே வைத்துக்கொண்டு ஸகலார்த்தங்களையும் ப்ரஸாதித்தருள, ஜீயரும் பட்டரையன்றித் தேவுமற்றறியேன் என்றிருந்தார். [பட்டர் 'நம்முடைய சீயர்' என்று சொல்லி அணைத்துக்கொண்ட அன்று தொடங்கி வேதாந்திகளுக்கு நஞ்சீயர் என்று திருநாமம் வழங்கலாயிற்று] உபதேசரத்தினமாலையில் "நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை யென்பர், அவரவர்தமேற்றத்தால்-அன்புடையோர், சாத்து திருநாமங்கள் தாமென்று - நன்னெஞ்சே, ஏத்ததனைச் சொல்லிநீயின்று" என்ற பாசுரம் இங்கு அநுஸந்திக்கவுரியது.

நஞ்சீயருடைய ஆசார்ய ப்ரேமம் பரம விலக்ஷணமானது. ஒரு கைசிக த்வாதசியன்று பட்டர் ப்ரஹ்மரதத்தி லெழுந்தருளித் திருவீதி யலங்கரிக்கப் புறப்பட்டவாறே நஞ்சீயரும் ஸ்ரீபாதம் தாங்கப்புக "உத்தமாச்ரமியாய் த்ரிதண்ட தாரியான வுமக்கு இக்காரியம் தகாது" என்று பட்டர் முதலானோர் மறுத்துக்கூற, அப்போது நஞ்சீயர் 'எனக்கு நீ துணையாகி என்னை ரக்ஷிக்கவேணுமென்னும் பொருளுடையதான "ஸகா மா கோபாய" என்கிற மந்திரத்தைச் சொல்லி ஸ்வீகரிக்கப்பட்ட இந்த முக்கோல்தானே இன்று எனக்கு விரோதி யாகிறதோ? இக்கோல் எனக்குத் துணையல்லவோ? ஸ்வரூபரக்ஷணத்திற்கு இக்கோல் இடையூறுயின், இஃது எனக்கு வேண்டா என்றுசொல்லி த்ரிதண்டத்தை விட்டெறியப் போனாராம். அப்போது அவருடைய பக்திவிசேஷத்தைக்கண்டு அனைவரும் வியந்தனர்.

பட்டர் திருவணையாட எழுந்தருளுகிறபோது, பகலெல்லாம் வழிநடந்தருளின ஆயாஸத்தாலே ஒரு தூற்றடியிலே நஞ்சீயர் மடியிலே திருமுடியை வைத்துக் கண்வளர்ந்தருள, ஓரிரவெல்லாம் துடைமாறுதல் அசைத்தல் செய்யாதே நஞ்சீயர் இருந்தார் என்பதும் இவருடைய ஆசார்ய ப்ரேமத்தின் கனத்தை விளக்கும்.

நஞ்சீயர் நெடுநாள் வரையில் அருளிச் செயல்களின் வாஸனையையும் அறியாதவராயிருந்துவைத்தும், பட்டரை ஆச்ரயிக்கப் பெற்றபின்பு ஆசார்யகடாக்ஷ விசேஷத்தினால் சிறிதுகாலத்திலேயே திவ்யப்ரபந்தங்க ளெல்லாவற்றையும் ஓதித்தரித்து, அவற்றில் விசேஷார்த்தங்கள் நிர்வஹிப்பதில் நல்ல விரகராய் விளங்கினர்.

சிறிய திருமடலில் "அவட்கு மூத்தோனை வெந்நரகம் சேராவகையே சிலை குனித்தான்" என்ற விதற்கு ஸாமாந்யமாகப் பலரும் பொருள் சொல்லக்கூடிய விதம் என்னெனில்; கரனை நரகத்திற்குப் போக வொட்டாமல் வீரஸ்வர்க்கத்திற்குப் போகச் செய்தார் பெருமாள் என்று. இதற்கு இங்ஙனமல்ல பொருள். வளைத்தவில்லுங் கையுமாய் நின்ற பெருமாளைக் கண்ட கரன் 'நாம் மேலே போய் வேறொரு நரகயாதனை அநுபவிக்கவேண்டா; எல்லா நரக வேதனையும் நமக்கு இங்கே அநுபவித்தாயிற்று' என்று குடல் மறுகும்படி போர்க்களத்திலே அவனைப் படாத பாடு படுத்தினான் என்று பட்டர் அருளிச் செய்யும் பொருள். நஞ்சீயர் பட்டரை ஆச்ரயிப்பதற்குமுன்னே ஸ்வதேசத்தில் வாழுங்காலத்து பட்டருடைய சிஷ்ய ரொருவர், நஞ்சீயரைச் சந்தித்து வார்த்தையாடும்போது 'எங்களுடைய திவ்யப் பிரபந்தத்தில் "அவட்கு மூத்தோனை வெந்நரகஞ் சேராவகையே சிலை குனித்தான் என்றிருக்கிறது; வேதாந்திகளே! இதற்கு நீங்கள் என்ன பொருள் சொல்லுவீர்கள்?' என்று கேட்க; அவர் ஸாமாந்யமாக நெஞ்சிற்பட்ட பொருளைச் சொல்லிவிட்டு, 'உங்களுடைய பட்டர் எங்ஙனே சொல்லுவர்?' என்று கேட்க இங்ஙனே சொல்லுவர் என்று அவர் கூற, இப்பொருள் கூறவல்ல பட்டரை நாம் ஸேவிக்க வேணுமென்று அவர்க்குக் காதல் கிளர்ந்ததாகப் பெரியோர் கூறுவர்.

## ஆளவந்தார் பெருமையநுபவம்

நம்முடைய தர்சனத்தில் ஆளவந்தாரைப் போன்ற வித்வத் ஸார்வபௌமர் இதற்கு முன்பு தோன்றினதுமில்லை, இனித் தோன்றப் போகிறதுமில்லையென்று திண்ணமாகச்சொல்லலாம். * நவயம் கவய:ஸ்து கேவலம் நவயம் கேவலதந்த்ரபாரகா:* என்று இவர் தாமே யருளிச் செய்தபடி கவித்திறத்தில் வந்தாலும் நாநாசாஸ்த்ர வைதுஷ்யத்தில் வந்தாலும் ஒத்தாரும் மிக்காருமின்றிக்கே அத்விதீயரான வ்யக்தி இவரொருவரே. ஸ்வாமி எம்பெருமானார் இவ்வாசிரியரை நேரில் ஸேவித்து இவர் திருவடிகளிலே பரிசர்யைகளைப் பண்ணி அர்த்த விசேஷங்களை க்ரஹிக்க ப்ராப்தியற்றவரானாலும் “ஆம் முதல்வனிவன்” என்று இவர் விசேஷ கடாக்ஷம் செய்தருளினதே ஹேதுவாக அவர் விளக்கில் கொளுத்தின தீவட்டிபோல மஹாதேஜஸ்வியாக விளங்கி உலகுக்கு, ஓருயிராகி நின்றார். இவ்விஷயத்தை ஸ்வாமி தாமே தம்முடைய திருவாக்கினால் ஒருவாறு காட்டியருளினார். கீதாபாஷ்யத்தின் உபக்ரமத்தில் * யத்பதாம்போருஹத்யாந வித்வஸ்தாசேஷகல்மஷ:, வஸ்துதாமுபயாதோஹம் யாமுநேயம் நமாமி தம் * என்றருளிச் செய்த சுலோகம் இங்கு அநுஸந்திக்கவுரியது. இதில், ஆளவந்தார் தம்மைக் கடாக்ஷித்தருளினதுதானே ஹேதுவாகத் தாம் சீர்மை பெற்றதாக அருளிச் செய்யாமல், தாம் அவருடைய திருவடித் தாமரைகளையே சிந்தித்து அதனால் சீர்மை பெற்றதாகச் சொல்லியிருக்கிறார்; இதனுடைய உட்கருத்து யாதெனில், ஆளவந்தார் என்னைக் கடாக்ஷித்தருளினதன் பயனாகவே நான் அவரது திருவடிமலரைச் சிந்திக்கும் பாக்கியம் பெற்றேனென்பதாம். * குருபாதாம்புஜம் த்யாயேத் * என்கிற சாஸ்த்ர விதியைப் பின்பற்றியருளிச் செய்தவாறு.

ஸ்வாமி ஆளவந்தாரிடத்தில் நேரில் அர்த்த விசேஷங்கள் கேட்கப்பெறாத குறை தீர அவருடைய திருவடிகளில் ஆச்ரயித்து உய்ந்தவர்களெல்லாரையும் தாம் ஆச்ரயித்து ஒவ்வொருவரிடத்திலும் அர்த்த விசேஷங்களை யதிகரித்து * பஞ்சாசார்யபதாச்ரித: * என்னும் விருது பெற்றார். “ஆளவந்தாரோடு நான் கூடியிருந்தேனாயின் பரமபதத்திற்குப் படி கட்டியிருப்பேன்” என்று ஸ்வாமி ஸாதித்ததாக ப்ரஸித்தமான வார்த்தை இவருடைய ஒப்புயர்வற்ற பெருமையை விளக்காநின்றது. நித்ய விபூதியும் லீலாவிபூதியும் சேர்ந்து ஒரு விபூதியாகவே ஆய்விட்டால் உபயவிபூதிநாதனென்று தான் வஹிக்கும் விருதுக்குக் குறை விளைந்திடுமேயென்கிற எண்ணத்தினாலேயே எம்பெருமான் இவ்வாசிரியர்களைக் கூட்டி வைக்கவில்லைபோலும்.

உபய வேதாந்த ரஹஸ்ய ப்ரஸ்தாநங்களில் இப்போது நாம் அநுபவித்து வரும் அர்த்த விசேஷங்களுக்கெல்லாம் ஆகரம் ஆளவந்தாரேயென்பதில் அதிசயோக்தியில்லை. இவரருளிச் செய்த ஸித்தித்ரயம் முதலான உத்துங்க சாஸ்த்ர க்ரந்தங்கள் இருக்கட்டும். ஆளவந்தார் ஸ்தோத்ரம் என்று வழங்குகின்ற ஸ்தோத்ர க்ரந்தமானது மஹாவித்வான்களுக்கும் பக்தர்களுக்கும் * எனக்குத் தேனே பாலே கன்னலே யமுதே * என்று உள் குழைந்து பேசும்படியாக அமைந்து, உட்புகுந்து நோக்க நோக்க உபய வேதாந்த ரஹஸ்யார்த்தங்களனைத்தையும் அழகாகவும் எளிதாகவும் கொள்ளலாம்படி மஹோபகாரம் செய்திருக்கிற மாண்பு வாசாமகோசரம். இதற்கு ஸ்தோத்ர ரத்நம் என்று திருநாமம் சாத்தியுள்ளார்கள். ஸம்ப்ரதாயம் வல்ல பெரியார்கள் மூன்று ரத்னங்கள் என வழங்குகிறார்கள். (1) ஸ்ரீ விஷ்ணுபுராணத்தைப் புராணரத்நமென்பர்கள். [இது ஆளவந்தார் ஸதோத்ரத்தில் நான்காவது சுலோகத்தில் காணத்தக்கது. (2) த்வயம் என்கிற மந்த்ரத்தை மந்த்ரரத்நமென்பர்கள். [இது ஸ்ரீ வரவரமுநி திநசர்யையில் * மந்த்ரரத்நாநுஸந்தாந ஸந்தத ஸ்புரிதாதரம் * என்பதில் காணத்தக்கது] இனி மூன்றாவது ரத்னம் ஸ்தோத்ரரத்நமென்று வழங்கப்படுகிற இவருடைய ஸ்தோத்ரமேயாகும். இதன் எளிமையும் இனிமையும் வாசாமகோசரம். ஆழ்வான் பட்டர் முதலான ஆசார்யர்கள் பணித்த ஸ்தவங்களுக்கு இந்த ஸ்தோத்ரரத்நமே வழிகாட்டியாயிருந்தாலும் இதனுடைய போக்யதை மற்று எதற்கும் அமையவில்லை. ஆளவந்தாருடைய நியமனத்தினால் எம்பெருமானாரை யீடுபடுத்திக்கொள்வதற்காகக் காஞ்சீபுரத்திற் கெழுந்தருளின பெரிய நம்பி, சாலக்கிணற்றில் நின்றும் திருமஞ்சன தீர்த்த மெழுந்தருளப் பண்ணிக்கொண்டு போராநின்ற எம்பெருமானாரைச் சார்ந்து பின்புறத்திலே இந்த ஸ்தோத்ரரத்நத்தில் ஒரு ச்லோகத்தைச் செவிக்கினிதாக

அநுஸந்தித்ததாகவும் ஸ்வாமி அது கேட்டு இது யாருடைய அருளிச்செயல்?' என்று கேட்டதாகவும், இது ஆளவந்தாருடைய திவ்யஸூக்தியென்று பெரியநம்பி பணித்ததாகவும், ஆகில் அப்பெரியாரை நான் ஸேவிக்கவேணுமென்று சொல்லி ஸ்வாமி அப்போதே அவருடன் ஸ்ரீரங்கத்திற்குப் புறப்பட்டதாகவும் குருபரம்பரா ப்ரபாவாதிகளில் காண்கிறோம். இதனாலும் இந்த ரத்னம் அநர்க்கமென்பது அறுதியிடப்பெறும்.

பகவத் விஷயமென்கிற திவ்ய சாஸ்த்ரம் இப்பேராசிரியர் முதலாகவே பெருக்கமுற்றது. நாதமுனிகளின் காலம் பெரும்பாலும் மூலத்தைச் சேகரிப்பதற்கும் அதைப் பரவச்செய்வதற்குமே பர்யாப்தமாயிருந்தது. அர்த்த விசேஷங்களைக் கண்டறிந்து ப்ரவசனம் செய்தமை அவரிடத்தில் அடியோடு இல்லையென்று சொல்லுவதற்கில்லை. அந்த ஸரணி ஆளவந்தாருடைய காலத்தில்தான் பெரு விளக்காக விளங்கத் தொடங்கிற்றென்று தெரியவருகின்றது.

## ஆண்டாள் பெருமையநுபவம்

இனி, திருவாடிப்பூரத்துச் செகத் துதித்த நங்கையைப் பற்றிச் சிறிது பேசியநுபவிப்போம். உபதேசரத்தின மாலையில் இவளைப்பற்றி யருளிச் செய்கின்ற மணவாள மாமுனிகள் ⁕ அஞ்சு குடிக்கொரு சந்ததியாய் ஆழ்வார்கள் தஞ்செயலை விஞ்சி நிற்குந் தன்மையள் ⁕ என்றார். இது மிகவும் ரஸிக்கத்தக்க திருவாக்கு. ஸகல சாஸ்த்ரக் கடலிலும் ஆழ்ந்த மாமுனிகள் அலங்கார சாஸ்த்ரத்திலும் பெருவிரகராயிருக்கச் செய்தேயும் ஆலங்காரிகர்களுக்கு உயிரான அதிசயோக்தியில் இவர் தம்முடைய திருவாக்கைச் சிறிதும் செல்லவிடுவதில்லை. அதிசயோக்தியைப் பர்யாயமாகப் பொய்யுரை யென்னலாம். ⁕ பொய்யிலாத மணவாள மாமுனி புந்திவாழி ⁕ என்று விசேஷித்து வாழ்த்தப்படுமிவர்க்கு அதிசயோக்தியிலிட்டுப் பேசும் முறைமை வெகு தூரத்தில் விலகி நிற்கவேண்டியதாயிற்று. எதையும் ஸ்வபாவோக்தியாகவே அருளிச் செய்வது இவருடைய நடையாதலால் சிலேடை யமகம் முதலியன அமைத்துப் பேசவேணுமென்கிற நோக்கமே இவர்க்கு உதித்ததில்லை. ஆண்டாளைப் பற்றி ஸ்வபாவோக்தியாகவே அருளிச் செய்கிற விப்பாசுரத்தில் தன்னடையாக ஒரு சிலேடை அமைந்துளது. ஆண்டாளை அஞ்சுகுடிக்கொரு சந்ததியென்றது சிலேடை. அஞ்சு குடி என்றது ஐந்து குடும்பங்கள். அவை எவையெனில், ஆண்டாளுக்கு முன்னே தோன்றிய ஏழு ஆழ்வார்களின் குடி ஐந்தாம், எங்ஙனே யென்னில், முதலாழ்வார்கள் மூவரும் சேர்ந்து ஒரு குடி [அயோநிஜ குடும்பம்] என்க. இரண்டாவது திருமிழிசை யாழ்வார்குடி. மூன்றாவது நம்மாழ்வார் குடி. நான்காவது குலசேகராழ்வாரது குடி. ஐந்தாவது பெரியாழ்வாரது குடி. ஆக இவ்வஞ்சு குடிக்குமாக ஆண்டாளொருத்தியே ஸந்தானமாகத் தோன்றினளென்க.

ஆண்டாளுக்குப் பிறகு திருவவதரித்தருளின தொண்டரடிப்பொடியாழ்வார் திருப்பாணாழ்வார் திருமங்கையாழ்வார் ஆகிய மூவர்க்குங்கூட இவளே சந்ததி—என்கிற பொருளும் இந்தச் சொற்றொடையில் விளங்கக் குறையில்லை. எங்ஙனேயென்னில், அஞ்சு குடி யென்பதை வினைத்தொகையாகக் கொண்டால் அஞ்சுகின்ற குடியென்றும் பொருள்படுதலால் ஆழ்வார்கள் பதின்மரையும் இச் சொல்லால் ஸங்க்ரஹிக்கக் குறையில்லை. எம்பெருமானுக்கு என்ன அபாயம் நேருமோ! என்று அஞ்சுகை பதின்மர்க்கும் உளதாதலால் அப் பதின்மரையும் அஞ்சுகுடியென்னத் தட்டில்லை. ஆகவே ஆழ்வார்கள் பதின்மர்க்கும் ஆண்டாளொருத்தியே புதல்வியாகத் தோன்றியவள் என்கிற பரமார்த்தமும் தெரிவிக்கப்பட்டதாயிற்று. ⁕ "ப்ரஜயா பித்ருப்ய:" என்று வேதத்தில் ஓதப்பட்டதொரு கடனும் ஆழ்வார்கட்கு ஆண்டாளால் தீர்ந்ததென்க. வேதாந்த தேசிகரும் கோதாஸ்துதியில் "குரவஸ்த்வதீயா:" என்று ஆழ்வார்கள் பதின்மரையும் ஆண்டாளுக்குத் திருத்தகப்பன்மார்களாகப் பேசியுள்ளமை இங்கு அறியத்தக்கது.

இனி ஆழ்வார்கள் தஞ்செயலை விஞ்சி நிற்குந் தன்மை இன்னதென்பதை நிரூபிப்போம். ஆழ்வார்கள் இயற்கையிலே ஆண்களாய்ப் பிறந்து பெண்மையை ஏறிட்டுக்கொண்டு பேசினார்கள். ஆண்டாள் அப்படியல்லாமல் இயற்கையிலேயே பெண்ணாய்ப் பிறந்து புருஷோத்தமனை அநுபவிக்கும் திறத்தில் சிறந்த உரிமையுடையளானது பற்றி 'ஆழ்வார்கள் தம் செயலை விஞ்சி நிற்குந் தன்மையளாய்' எனப்பட்டது.

திருமங்கை யாழ்வார் "என்னையும் நோக்கி யென்னல்குலும் நோக்கி யேந்திளங் கொங்கையும் நோக்குகின்றார்" என்றும், * என்னுடைய பெண்மையும் என்னலனுமென் முலையும், மன்னு மலர் மங்கை மைந்தன். கணபுரத்துப் பொன் மலைபோல் நின்றவன் தன் பொன்னகலம் தோயாவேல், என்னிவை தான் வாளாவெனக்கே பொறையாகி, முன்னிருந்து மூக்கின்று மூவாமைக் காப்பதோர், மன்னுமருந்தறிவீ ரில்லையே" (பெரிய திருமடல்) என்றுமிங்ஙனே பல பாசுரங்கள் பேசியுள்ளார். பெரியாழ்வாரும் "கொங்கை யின்னம் குவிந்தெழுந்தில" இத்யாதிகள் அருளிச் செய்துள்ளார். இவற்றுக்கு ஸ்வாபதேசார்த்தமென்று ஒன்றைச் சொல்லிப் பொருந்தவிட வேணுமேயல்லது உள்ளவாற்றில் பொருத்தம் காண்பரிது. இந்த வருத்தத்திற்கு இடமில்லாதபடி ஆண்டாள் இயற்கையிற் பெண்ணாகவே பிறந்திட்டாளாதலால் "கொங்கைத் தலமிவை நோக்கிக் காணீர்" என்றும் * குற்றமற்ற முலை தன்னைக் குமரன் கோலப்பணைத் தோளோடு அற்ற குற்றமவைதீர அணைய வமுக்கிக் கட்டீரே" என்றும், * கொம்மை முலைகளிடர்தீர" என்றும் இவள் பேசியுள்ள பாசுரங்களெல்லாம் வேறொரு பொருளையிட்டுப் பொருந்தவிட வேண்டாதே உள்ளபடியே நன்கு பொருந்துகின்றனவாயிற்று. இதுவே ஆழ்வார்களிற் காட்டில் இவளுக்குண்டான ஏற்றம்.

ஆண்டாளுடைய வாழித்திருநாமத்தில் "பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே" என்றுள்ளது உலகமறிந்தது. பெரும்பூதூர் மாமுனியென்பது எம்பெருமானாரை; அவர்க்கு ஆண்டாள் தங்கையென்று இதனால் ஏற்படுகின்றது. ஆண்டாள் பெரியாழ்வார் திருமகளாரென்பது ப்ரஸித்தம். இவள் ஔரஸபுத்ரியல்லள். ஜநக சக்ரவர்த்திக்கு வேள்வி நிலத்தில் ஸீதாபிராட்டி தோன்றி அவர்க்குப் புதல்வியானது போல இவளும் பெரியாழ்வார்க்குத் திருத்துழாய் வனத்தில் தோன்றிப் புதல்வியாயினள். பெரியாழ்வார் காலத்திற்கும் எம்பெருமானார் காலத்திற்கும் இடையில் காலவ்யவதானம் மிகப் பெரிதுமுண்டு. இவ்விருவர்க்கும் யாதொரு தொடர்புமில்லை. ஆகவே ஆண்டாள் எம்பெருமானார்க்குத் தங்கையென வழங்கப் பெறுதற்கு ஔசித்யமில்லையே. "பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே' என்று வாழ்த்துவது எதுகொண்டு?—என்னில்;

ஸம்பிரதாயத்தில் வழங்கும் ஓர் இதிஹாஸம் இங்கு உணரத்தக்கது. அதாவது—எம்பெருமானார் உபயவேதாந்த நிர்வாஹகராக எழுந்தருளியிருந்தவர். அவர் நாச்சியார் திருமொழி காலக்ஷேபம் ப்ரஸாதித்தருளும் போது,

"நாறுநறும்பொழில் மாலிருஞ்சோலை நம்பிக்குநான்
நூறுதடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து பராவி வைத்தேன்
நூறுதடாநிறைந்த அக்காரவடிசில் சொன்னேன்
ஏறு திருவுடையான் இன்று வந்திவை கொள்ளுங்கொலோ" (9—6)

என்கிற பாசுரத்தளவிலே வந்தவாறே திருமாலிருஞ் சோலை நம்பிக்கு நூறு தடாநிறைந்த அக்காரவடிசிலும் நூறுதடா நிரம்பிய வெண்ணெயும் ஸமர்ப்பிக்க வேணுமென்று ஆண்டாள் கொண்ட மநோரதம் வாசிகமாக மாத்திரம் நின்றதேயொழிய க்ரியா பர்யவஸாயியாகவில்லை; அதனை நாம் குறையறச் செய்து தலைக்கட்டவேணும் என்று கோஷ்டியில் அருளிச் செய்து அன்றே பரிஜன பரிவாரங்களுடன் புறப்பட்டுத் திருமாலிருஞ் சோலை மலைக்கு எழுந்தருளி * நூறு தடா நிறைந்த வெண்ணெயும் நூறு தடா நிறைந்த அக்காரவடிசிலும் அழகருக்கு அமுது செய்வித்தருளி அப்படியே ஸ்ரீவில்லிபுத்தூரேற வெழுந்தருளி ஆண்டாளை அடி பணிந்து நிற்க, ஆண்டாளும் அர்ச்சாவதாரஸமாதியைக் கடந்து நடந்துவந்து, தன் நினைவறிந்து இவர் செய்த காரியத்திற்கு உள்ளம்பூரித்து 'நம் அண்ணரே!' என்று சொல்லித் தழுவிக் கொண்டாள். ஆனதுபற்றியே * பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் என்று அன்று தொடங்கி ஆண்டாளுக்கு வியவஹாரம் வழங்கலாயிற்று என்பது ஐதிஹ்யம்.

இனி அந்தப் பாசுரத்தைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். நாச்சியார் திருமொழியில் * சிந்துரச் செம்பொடிப்போல் என்கிற ஒன்பதாவது பதிகத்தில் ஆறுவது பாசுரமாக அமைந்தது * நாறுநறும் பொழிலென்னுமிப் பாசுரம். இதற்கடுத்த பாசுரம்,

"இன்றுவந்தித்தனையும் அமுது செய்திடப்பெறில், நான்
ஒன்றுநூறாயிரமாக் கொடுத்துப் பின்னுமாளுஞ் செய்வன்
தென்றல் மணங்கமழுந் திருமாலிருஞ்சோலை தன்னுள்
நின்றபிரான் அடியேன் மனத்தே வந்து நேர்படிலே.'' என்பதாம்.

இவ்விரண்டு பாசுரமும் இந்தத் திருமொழியில் சேர்ந்திருக்க என்ன ப்ரமேயம்? முன்னேயுள்ள ஐந்து பாசுரங்களுக்கும் பின்னேயுள்ள இரண்டு பாசுரங்களுக்கும் சேர்ந்திருக்கவேணுமே இடையிலுள்ள பாசுரங்கள். சேர்த்தி சிறிதுமில்லை. இத்திருமொழியின் பிரமேயம் என்னவென்று பார்க்கவேணும். இதற்குக் கீழ்த் திருமொழியில் மேகங்களைக் கண்ட ஆண்டாள் அவற்றைத் திருவேங்கடமுடையான் பக்கலில் தூது செல்லும்படி யிரந்தாள். இவள் வேண்டினபடி காரியம் செய்யவல்ல ஆற்றல் அந்த மேகங்களுக்கு இல்லையே. அவை தாங்கள் வந்த காரியத்தைச் செய்தன. நன்றாக மழை பொழிந்தன. உடனே வர்ஷாகாலத்தில் புஷ்பிக்கக் கூடிய புஷ்பங்களெல்லாம் முகங் காட்டத் தொடங்கின. மழைகாலத்தில் களித்துத் திரியுமவையான மயில் முதலிய சில பிராணிகளும் ஸம்பிரமத்தோடு வந்து உலாவப்புக்கன. ஆக இப்படிப்பட்ட பதார்த்தங்களெல்லாம் இவளுடைய இந்த விரஹதசையிலே வந்து தோற்றவே ஆற்றாமை மீதூர்ந்து உயிர்கொண்டு தப்பிப் பிழைக்கமுடியாத அவஸ்தையாயிற்று. அதனால் மிகவும் துவண்டு நிர்வேதமே வடிவெடுத்ததாம்படி பேசுகிற பாசுரம் * சிந்துரச் செம்பொடி யென்கிற திருமொழி. இதில் ஒவ்வொரு பாசுரமும் நிர்வேதமே வடிவெடுத்திருக்கும்படியை அநாயாஸமாகச் சொல்தொடையிலே காணலாம். * சுந்தரத்தோளுடையான் சுழலையில் நின்று உய்துங்கொலோ * கார்க்கொள் படாக்கள் நின்று கழறிச் சிரிக்கத் தரியேன் * ஐம்பெரும்பாதகர்காள்! அணிமாலிருஞ் சோலைநின்ற எம்பெருமானுடைய நிறம் உங்களுக்கென் செய்வதே!* என்றிப்படி வயிறெரிந்து அளவுகடந்த கிலேசத்துடனே சொல்லும் பாசுரங்கள் மலிந்த இத் திருமொழியில் * நாறுநறும் பொழில் * என்கிற பாசுரமும் * இன்றுவந்தித்தனையுமமுது செய்திடப்பெறில் * என்ற பாசுரமும் இடையில் இடம் பெறுவதற்கு என்ன ப்ரஸக்தி? என்று சங்கை தோன்றக் கூடியது.

இதற்கு ஸமாதானம் கேண்மின்; கீழ்ப்பாட்டில் "மலர்மேல் தொங்கிய வண்டினங்காள்! தொகு பூஞ்சுனைகாள்! சுனையில் தங்கு செந்தாமரைகாள்! எனக்கோர் சரண் சாற்றுமினே" என்றாள், திருமாலிருஞ் சோலை மலைப் பொழில்களில் மலர்ந்துள்ள பூக்களில் தங்குகின்ற வண்டுகளும் சுனைகளும் அழகருடைய திருவுருவை நினைப்பூட்டி நலிந்தபடியாலும், சுனைகளில் மலர்ந்த செந்தாமரை மலர்கள் அவருடைய திவ்யாவயவங்களுக்கு ஸ்மாரகங்களாய்க் கொண்டு நலிந்தபடியாலும் அந்த ஹிம்ஸையைப் பொறுக்கமாட்டாத ஆண்டாள் அவற்றை நோக்கி அந்தோ! நான் உங்களுக்குத் தப்பிப் பிழைப்பதொரு உபாயம் சொல்ல வல்லீர்களோ? என்றாள். அவ்வளவிலே தளர்ச்சி அதிகரித்தது. உடனே த்வயாநுஸந்தானம் பண்ணினாள். த்வயத்தில் உத்தர கண்டத்தை நன்றாக அநுஸந்தித்தாள். அதற்கு அர்த்தமாகிய கைங்கர்ய ப்ரார்த்தனையிலே ஊன்றினாள். காயிகமான கைங்கரியமொன்றும் செய்ய முடியாதபடி தளர்ந்திருக்கும் நிலைமையாதலால் வாசிகமான கைங்கரியம் செய்ய விரும்பினாள். அது செய்தபடியைச் சொல்லுகிறாள் * நாறுநறும் பொழிற்பாட்டில், இப்பாட்டுக்கு சேஷபூதம் மேற்பாட்டு.

## பிள்ளைலோகாசார்யரும் மணவாளமாமுனிகளும்

பிள்ளைலோகாசார்யர். ஐப்பசியில் திருவோணத்தன்று அவதரித்த இவ்வாசிரியரின் பெருமையைச் சிறிது பேசி மகிழ்வோம். இவருடைய ஜ்ஞாநாநுஷ்டானப் பெருமைகள் ஒருபுறமிருக்க, பரமகருணையின் திறத்தை என்னென்று பகர்வது! ஆசாரியர்கள் பொதுவாக இருவகைப்படுவர்கள்; 1. அநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்யர்கள் என்றும் 2. க்ருபாமாத்ர

ப்ரஸந்நாசார்யர்களென்றும். சிஷ்யர்கள் பலகால் துவண்டு வேண்ட அதனாலே அநுக்ரஹிப்பவர்கள் அநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்யர்களாவர். சிஷ்யப்ரார்த்தனையைச் சிறிதும் எதிர்பாராமல் தம்முடைய இயற்கையின்னருளால் தாமாகக் கனிந்து * பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும் செயல் நன்றாகத் திருத்திப்பணிகொள்வான் * என்ற கணக்கிலே தம் பேறாக அநுக்ரஹித்தருள்பவர்கள் க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யர்கள். நமது ஆசார்ய கோஷ்டியில் எம்பெருமானார் தாம் க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யரென்ற பட்டத்தை முதன்மையாகப் பெற்றவர். ஆயினும் அவர் ஸம்ப்ரதாய ரஹஸ்யார்த்த விவரணமாக ஒரு க்ரந்தமும் அருளிச் செய்தாரல்லர். ப்ரஹ்மஸூத்ரங்களின் அர்த்தங்களை விவரிக்க மூன்று நூல்களை யருளிச்செய்தவர் ரஹஸ்யார்த்த விவரணமாக ஒரு சிறு நூலாவது அருளிச் செய்திருக்கலாம். இன்னுமொரு திருக்கோலம் பூண்டு [அதாவது—மணவாளமாமுனிகளாக அவதரித்து] அப்போது அருளிச்செய்யவேணுமென்று திருவுள்ளம் பற்றியிருந்தமையாலே ஸ்ரீராமாநுஜரான அந்த அவதாரந்தன்னிலே ரஹஸ்யார்த்தங்களை ஏடுபடுத்தாமே சென்றனர்; ஸ்ரீபாஷ்யம் கீதாபாஷ்யம் முதலிய திவ்ய க்ரந்தங்களில் ஸம்ப்ரதாய ரஹஸ்யார்த்தங்களும் ஆங்காங்குச் சேமிக்கப்பட்டே யிருந்தாலும் அவற்றைக் கையிலங்கு நெல்லிக்கனியாகக் காட்டித் தாராத குறை குறையே. அக்குறை தீரவே ஸர்வஜ்ஞ ஸார்வபௌமரான இப்பிள்ளையுலகாசிரியர்தாமே முதன்முதலாக ஸ்ரீவைஷ்ணவ மண்டலிக்கு மஹோபகாரஞ் செய்தருளினார். லோகாசார்யரென்கிற திருநாமம் இவர்க்கே தகும். இவ்விருள் தருமாஞாலத்தின் அகவிருளை அறவேயொழிக்கவல்ல திவ்ய ஸ்ரீஸூக்திகளைத் தேனும் பாலும் நெய்யுங் கன்னலு மமுதுமாக அளித்தருளினவர் இம்மஹாசார்யர். இவருடைய ஸர்வஜ்ஞத்வமும் பரமகாருணிகத்வமும் பரமப்ராமாணிகத்வமும் ஒவ்வொன்றும் நெஞ்சால் நினைப்பரிதே. ஒரு அர்த்தத்திலும் ஆக்ரஹமின்றிக்கே ஆசார்யபரம்பரா ப்ராப்தமான அர்த்தங்களையே அற்புதமாக அமைத்திருக்குமழகு இவருடைய க்ரந்தங்களுக்கே அஸாதாரணச் செல்வமாயிருக்கும்' இவரருளிச் செய்த நூல்கள் அஷ்டாதச ரஹஸ்யமென்று ஸுப்ரஸித்தமாயிருக்கும்.

மணவாளமாமுனிகள். ஐப்பசியில் திருமூலத்தன்று அவதரித்தருளின இவ்வாசார்ய ஸார்வபௌமருடைய பெருமையை இன்று நாம் புதிதாகப் பேசப்போகிறோமோ? எத்தனை தடவை பேசினாலும் * அப்பொழுதைக் கப்பொழுதென்னாராவமுதமே * என்னும்படியாகவிருக்கும் இவர் பெருமை. எம்பெருமானார் அவ்வவதாரத்திலே சேஷித்திருந்த காரியங்களை நிறைவேற்றுவதற்கென்றே இங்ஙனேயொரு திருக்கோலம் மீண்டும் பூண்டபடி. பெரும்பாலும் வியாக்கியான க்ரந்தங்களை யருள்வதிலேயே இரண்டவதாரத்திலும் முழு நோக்கு. அத்யுக்தி அதிசயோக்தியென்னும்படியான வசனவ்யக்திகளைக் கனவிலுமறியாமை இரண்டவதாரத்திற்கும் அஸாதாரணம். மயங்கவைத்தல் வலிந்து கூறல் முதலிய குற்றங்களுக்குச் சிறிதும் இடம் தாராமே தெள்ளமுதெனும் திவ்யஸூக்திகளை அருளுந்திறன் இவ்விரண்டவதாரத்திலேயே கண்டதாகும்.

கீழே பிள்ளைலோகாசார்யரைப் பரமகாருணிகரென்று புகழ்ந்தோம். இப்பேராசிரியர் திருவவதரியாவிடில் அவருடைய பரமகாருணிகத்வமும் * கன்னவிலுங் காட்டகத்தோர் வல்லிக் கடிமலரின் நன்னறுவாசம் மற்றாரானுமெய்தாமே மன்னும் வறுநிலத்து வாளாங்குகுத்ததுபோலாகுமத்தனை. அவ்வாசிரியர் அருளிய அஷ்டாதச ரஹஸ்யங்களுள் தலைசிறந்து விளங்கும் முமுக்ஷுப்படி தத்வத்ரயம் ஸ்ரீவசநபூஷணமென்னும் மூன்று ரஹஸ்யங்களுக்கு இவருடைய வியாக்கியானங்களில்லையேல் இம்மாஞாலம் இருள் தருமாஞாலமேயாம்.

இவர்க்கு விசதாவாக் சிகாமணி யென்றொரு பிருதம் வழங்கிவருகின்றது. இதனை முதன்முதலாக அளித்த மஹாநுபாவர் யாரோ அறிகின்றிலோம். மருமமறிந்து அளித்த அந்த விருது இவ்வாசார்ய சிகாமணியொருவர்க்கேதான் ஏற்கும். நீறுபூத்த நெருப்பு என்ன நின்ற இவ்வாசிரியரின் திருவாக்குப்போல் இவ்வுலகில் இதுகாறும் கண்டதில்லையென்றால் இனிமேலா காணப்போகிறோம். இவருடைய திவ்யமங்கள விக்ரஹமும் திருவுள்ளமும் ஸத்வ குணமொன்றே வடிவெடுத்ததாயிருந்ததென்பது இவரது திருவாக்குக்களில் அக்ஷரந்தோறும் புலப்படாநின்றது. ஸகல சாஸ்த்ரார்த்தங்களையும் வெகு அழகாகத் திருவுள்ளத்திலே யடக்கிக்கொண்டு நாட்பூ அலர்ந்தாற்போலே ஸ்ரீஸூக்திகளை ஏற்றக் குறைவின்றி அமைத்திருக்கிற அழகு என்னே! என்னே!! என்று உள்ளம் குழைகின்றதத்தனை. விமர்ச

சக்தி, நிரூபணநைபுண்யம் என்றிங்ஙனே சொல்லும்படியான திறமையெல்லாம் மிக வியக்கும்படியான முறையில் இவர் தம்முடைய வியாக்கியான ஸ்ரீஸூக்திகளிலே தானுள்ளது.

பல சொல்லி என்? ஸாரமாக வொன்று சொல்லித் தலைக்கட்டுவோம். ✠ அப்திர் லங்கித ஏவ வாநரபடைஃ .....என்று முராரியென்கிற வொரு மஹாகவி சொல்லுகிறுர். வாநரவீரர்கள் கடலைக்கடந்து அப்பால் சென்று விட்டார்களெனினும் கடலின் ஆழத்தை அவர்கள் சிறிதும் அறியகில்லார்கள். கடலினுள்ளே பாதாளம் வரையில் அமிழ்ந்து கிடந்த மந்தரமலைக்கன்றே அந்த ஆழம் தெரியும்—என்பது இந்த ச்லோகத்தின் கருத்து. ஜ்ஞாதாக்களெனறும் வித்வான்களென்றும் பேர் படைத்த மற்றவர்களெல்லோரும் வானரமுதலிகளின் ஸ்தானத்திலேயாய் மணவாளமாமுனிகளொருவரே மந்தர மலையின் ஸ்தானத்திலே யெண்ணக்கூடியவராகவுள்ளார் ஆசார்யரென்கிற சொல்லுக்கு மாமுனிகளொருவரே இலக்காமவர் என்றும், ஸூக்தி ஸ்ரீஸூக்தி திவ்யஸூக்தி திவ்ய ஸ்ரீஸூக்தி என்றிங்ஙனே சொல்லும் சொற்களெல்லாம் மாமுனிகளின் திருவாக்கையே தான் இலக்காகக் கொள்ளத்தக்கவை யென்றும் நிஷ்பக்ஷபாதர்களின் ஸித்தாந்தம்.

❋ செந்தமிழ் வேதியர் சிந்தை தெளிந்து சிறந்து மகிழ்ந்திடவும், சீருலகாரியர் செய்தருள் நற்கலை தேசு பொலிந்திடவும், மந்தமதிப்புவி மானிடர் தங்களை வானிலுயர்த்திடவும், மாசறு ஞானியர் சேரெதிராசர்தம் வாழ்வு முளைத்திடவும், கந்த மலர்ப்பொழில் சூழ் குருகாதிபன் கலைகள் விளங்கிடவும் இந்த நிலந்தனில்வந்து உதயஞ்செய்த பரமாசார்யரன்றோவிவர். நமது ஆழ்வார்களும் ஆசாரியர்களுமெல்லாரும் ஒருங்கே திரண்டு அவதரித்த அவதாரமான இம் மாமுனிகளின் தனியனையும் வாழித் திருநாமங்களையும் இப் பரத கண்டம் முழுவதும் அநுஸந்தித்து உஜ்ஜீவனம் பெறுகின்றது.

திருவாய் மொழிக்குச் சிறந்த வியாக்கியானமாக அமைந்த ஈடு முப்பத்தாறுயிரப்படியின் விசேஷார்த்தங்களை இவ்வாசிரியருடைய திருவாக்கினால் கேட்கப் பெறவேணுமென்று ஆவல் கொண்ட அரங்கநாதன் தனது ஸந்நிதியின் திருமுன்பே கருட மண்டபத்தில் எழுந்தருளியிருந்து ஸாதித்தருளவேணுமென்று இவர்க்குக் கட்டளையிட்டனன். அப்படியே ஒரு ஸம்வத்ஸரம் பகவத்விஷய ப்ரவசனம் நடந்துவர, ஸமாப்தி தினத்தில் ஸ்ரீரங்கநாதன் ஒரு சிறு குமாரனாய்த் திருவோலக்கத்திலே வந்து நின்று

> "ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்,
> யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்."

என்கிற திவ்ய பத்யத்தைக் கைகூப்பி நின்று விஜ்ஞாபித்தனனென இதிஹாஸம் ப்ரஸித்தம். இந்தத் தனியனில் அமைந்திருக்கின்ற சொற்களின் அழகை ஆராய்ந்தால் இது தெய்வ வாக்கேயன்றி மானிட வாக்கு அன்று என்பது அனைவருமிசையற்பாலதாகும். அவ்வழகினை இங்குச் சிறிது விவரிப்போம்.

### 1. ஸ்ரீசைலேச தயாபாத்ரம்

"மாமுனி வேள்வியைக் காத்து அவபிரதமாட்டிய அடுதிறலயோத்தியெம்மரசே! அரங்கத்தம்மா!" என்கிறபடியே ஸ்ரீரங்கநாதனே விபவரூபேண ஸ்ரீராமபிரானைத் தோன்றியிருந்தனனாதலால் அத்திருவவதாரத்தில் சைலேச தயாபாத்ரத்தை வணங்கியிருந்தானாயினும் ஸ்ரீசைலேச தயாபாத்ரத்தை வணங்கப் பெறவில்லை. சைலேச தயா பாத்ரமென்று ஸுக்ரீவனைச் சொல்லி, ஸ்ரீபதத்தினால் தத்வ்யாவ்ருத்தி பண்ணுகிறது; ஸ்ரீராமாயணம், கிஷ்கிந்தாகாண்டத்தில் பதினோராவது ஸர்க்கத்தினால் ஸுக்ரீவ மஹாராஜர் சைலேச தயாபாத்ரபூதர் என்பது அறியத்தக்கது.

அது எங்ஙனேயென்னில்; இங்கே சைலமாவது ரிச்யமூகபர்வதம். அதற்கு ஈசர்-மதங்கமுனிவர். அவருடைய தயைக்கு ஸுக்ரீவன் பாத்ரமாக இருந்தனன். துந்துபியோடு போர் புரிந்த வாலியானவன் அவனது உடலைத் தூக்கி வீசியெறிந்தவளவில் அவனது வாயிலிருந்து ரக்த பிந்துக்கள் காற்றினால் தள்ளுண்டு மதங்கமாமுனியின் ஆச்ரமத்தில் போய் விழ, அது கண்டு கோபித்த அம்முனிவர் இத்தீய செயல் செய்தவன் வாலியென்று ஞானக்கண்ணாலுணர்ந்து அவ்வாலியின் விஷயத்தில் சாபமிட்டதும், அதுவே காரணமாக ஸுக்ரீவன் அம்முனிவருடைய அருளுக்கு இலக்

கானதும் கொண்டு சைலேச தயாபாத்ரத்வம் ஸுக்ரீவனுக்குப் பொருந்தியது. எம்பெருமான் அவனை அடிபணிந்திருந்தானென்பது ✠ ஸுக்ரீவம் சரணம் கத: ✠ என்கிற ப்ரமாணத்தினால் ஸித்தம். சரணம் புகுந்தவிடத்தில் மநஸ்தாபமின்றிக்கேயிருக்கவேணுமே. ஸுக்ரீவன் விஷயபோகங்களிலே ஒருப்பட்டிருந்து குறிப்பிட்ட காலத்திலே வந்திலனாக, இளைய பெருமானை யனுப்பித் தீவ்ரதண்டம் நடத்த நினைத்தமையை வெளியிட்டபடியாலே, அந்த சைலேச தயாபாத்ரத்தினிடத்திலே முன்பு பணிந்து பின்பு வருந்தின குறைதீர இப்போது ஸ்ரீசைலேச தயாபாத்ர பூதரை வணங்கி வாழ்கின்றேனென்றதாயிற்று. திருமலையாழ்வாரென்கிற திருவாய்மொழிப் பிள்ளையின் இன்னருளுக்கு இலக்கானவர் மாமுனிகள் என்கை.

### 2. தீபக்த்யாதி குணார்ணவம்.

ஸ்ரீராமனாக அவதரித்திருந்தஅக்காலத்திலேஸுக்ரீவன் காலிலேகுனிந்ததுபோல, லவணார்ணவத்தின் காலிலும் குனிந்தமை யுத்தகாண்டப்ரஸித்தம். "ஸமுத்ரம் ராகவோ ராஜா சரணம் கந்துமர்ஹதி" என்ற விபீஷணாழ்வானுடைய வாக்கின்படி லவணார்ணவத்தை அடிபணிந்திருந்து அங்கும் மநஸ்தாபம் மிகுந்தது ஸுப்ரஸித்தம். ✠ ஸாகரம் சோஷயிஷ்யாமி ✠ என்று நிக்ரஹத்திலே யன்றோ ஒருப்பட்டது. அப்படியான குறை தீர அந்த லவணார்ணவத்தை விட்டு தீபக்த்யாதி குணார்ணவத்தை அடிபணிகின்றேனென்றதாயிற்று. ஞானபக்தி விரக்திகளுக்குக் கடல் மாமுனிகள்.

### 3. யதீந்த்ரப்ரவணம்

யதீந்த்ரரென்று எம்பெருமானார்க்குத் திருநாமம். "அப்பனுக்குச் சங்காழியளித்தருளும் பெருமான்" என்று போற்றப்படுகின்ற எம்பெருமானார், எம்பார் ஆண்டான் முதலானார்க்குத் திருவிலச்சினையளித்ததுபோலத் திருவேங்கடமுடையானுக்கும் திருவிலச்சினையளித்ததாக இதிஹாஸமாகையாலே ✠ மந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள் சந்திசெய்ய நின்ற அரங்கத்தரவினணையான் யதீந்ரதாரிடத்திலும் சிஷ்ய வ்ருத்தி கொண்டிருந்தானாயிற்று. இராமாநுச நூற்றந்தாதியிலே ✠ தன்னையுற்றாட்செய்யுந்தன்மையினோர் ✠ என்கிற பாசுரத்தைத் திருச்செவி சாத்தின பிறகு, 'யதீந்திரரிடத்திலே சிஷ்ய வ்ருத்தி செய்வதிற்காட்டிலும் யதீந்திரப்ரவணரானார் பக்கலிலே சிஷ்யவ்ருத்தி செய்வதே சிறந்தது என்று தேறினபடியாலே இப்போது யதீந்த்ர ப்ரவணரை அடிபணிகின்றமை மிகவும் பொருந்தும்.

### 4. ரம்யஜாமாதரம் முநிம்

ராமாவதாரத்தில் விச்வாமித்ர முனிவன் பக்கலிலும், க்ருஷ்ணாவதாரத்தில்ஸாந்தீபநி முனிவன் பக்கலிலும் சிஷ்யவ்ருத்தி செய்திருந்து அவர்களிடத்திலே ஸம்ஸாரித்வ பூர்த்தியையே கண்டு திருவுள்ளம் நொந்திருந்தபடியாலே அக்குறைதீர, விரக்தாக்ரேஸரரான மணவாளமாமுனிகளை யடிபணிந்தேனென்கை.

விச்வாமித்ர முனிவனுடைய ஸம்ஸாரித்வம் அவனது கதைகளினால் விசதம். ஸாந்தீபநி முனிவனது ஸம்ஸாரித்வம் என்றைக்கோ மறிகடல்வாய் மாண்டொழிந்த மகனை மீட்டுத்தர வேணுமென்று விரும்பியதனால் விளங்கும்.

ஆக இப்படிப்பட்ட அர்த்த விசேஷங்களுக்கு ஸ்புடப்ரதீதி யுண்டாகும்படி சப்தஸந்நிவேசங்களை அமைத்துத் தனியனிட்டு உலகங்களை உஜ்ஜீவிப்பித்தருளின அழகிய மணவாளனுக்கு ஆசிரியரான அழகிய மணவாளமாமுனிகளை அனுதினமும் சிந்தை செய்து அகமகிழ்வோமாக.

## ஆசார்ய ஹ்ருதயத்தின் பெருமையநுபவம்

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்குச் சிறந்த பெருவிளக்காய்த் திருவவதரித்த திவ்யக்ரந்தங்களுள் ஆசார்ய ஹ்ருதயமென்னும் க்ரந்தத்தின் அருமை பெருமைகள் அளவிட்டுச் சொல்ல முடியாதவை. வேதம் எப்படி ஒரு ப்ராதுர்ப்பாவவிசேஷமோ, அப்படியே இந்த திவ்யக்ரந்தமும் ஒரு ப்ராதுர்ப்பாவவிசேஷம் என்று சொல்லுவது சிறிதும் அதிசயோக்தியாகாது. அவ்ரவர்கள் அநுபவித்தே அறியவேண்டியதான இதன் பெருமையை அறிவிலியான் அடியேன் எடுத்துப் பேசப்புகுவது பேதைமையேயாகும்.

ஈடு முப்பத்தாறாயிரப்படியென்று ஸுப்ரஸித்தமான பகவத்விஷய மஹாக்ரந்தத்தை அருளிச்செய்தவரான வடக்குத் திருவீதிப் பிள்ளைக்கு இரண்டு திருக்குமாரர்கள். பிள்ளைலோகாசார்யர் மூத்தவர். அழகியமணவாளப்பெருமாள் நாயனர் இளையவர். இவ்விருவரும் நைஷ்டிகப்ரஹ்மசாரிகளென்று பெரியோர் பணிப்பர். இவ்விரண்டு ஆசார்ய சிகாமணிகளும் நம் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்குச் செய்தருளிய மஹோபகாரங்களைச் சொலப்புகில் வாயமுதம் பரக்கும், இருவினை பற்றறவோடும்.

ஸ்ரீவசநபூஷணம் முதலிய அஷ்டாதசரஹஸ்யக்ரந்தங்கள் பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்தவை ஸுப்ரஸித்தங்கள். அவருடைய திருத்தம்பியான அழகியமணவாளப் பெருமாள் நாயனர் அருளிச்செய்தவை திருப்பாவைக்கு ஆறாயிரப்படி வியாக்கியானம், கண்ணிநுண்சிறுத்தாம்பு வியாக்கியானம், ஆசார்யஹ்ருதயம், அருளிச்செயல் ரஹஸ்யம் முதலியனவாம். இவற்றுள் ஆசார்யஹ்ருதயம் ஒப்புயர்வற்றது. வைதிகஸந்தானத்திற்கு ப்ரதம ஆசார்யரான நம்மாழ்வார் அருளிச்செய்த திவ்யப்ரபந்தங்களில் அவருடைய திருவுள்ளக் கருத்துக்களைத் தெளிய வெளியிடுகையாலே இதுதனக்கு ஆசார்யஹ்ருதயமென்று திருநாமமாயிற்று. ஸகல ச்ருதிஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களும் ஆழ்வாரருளிச் செயல்களும் அவற்றின் வியாக்கியானங்களும் எல்லாம் ஒருங்கே திரண்டு இவ்வாசார்யஹ்ருதயக்ரந்தமாக வடிவெடுத்ததென்றே கொள்ளவேணும். இந்நூலிலுள்ள வாக்கியங்களெல்லாம் பெரும்பாலும் ஆழ்வாராசார்யர்களது திவ்ய ஸ்ரீஸூக்திகளையும் இதிஹாஸ புராண வசனங்களையுமே சேர்த்துத் தொகுத்ததாயிருக்கும். இதில் பொருளையறியப்பெறாதார்க்கும் சொல்தொடைதானே மிகவும் இனிதாயிருக்கும்.

இந்த திவ்ய க்ரந்தத்தை ஆழ்ந்து அநுபவிக்கும்படியான பாக்கியம் பெற்றவர்கள் இதைத்தவிர வேறொன்றாலும் காலக்ஷேபம்பண்ணக்கருதார்கள். இதனை அறியக்கற்று வல்லாரானவர்கள் ஸர்வஜ்ஞர் என்னும் சிறப்புப் பெயர் பெறுதற்கே உரியராவர். இருநூற்று முப்பத்தொரு சூர்ணிகைகள் அமைந்தது இந்நூல். எம்பெருமான் இவ்வுலகின்கண் சாஸ்த்ரங்களை ப்ரவசனஞ் செய்தருளியது, சாஸ்த்ரங்களினால் நாம் பெறத்தக்க பேறு, சாஸ்த்ரங்களின் முக்கியமான அர்த்தவிசேஷங்கள், திருமந்த்ரம் ஸகல சாஸ்த்ரஸாரம் என்பது, அது திருவவதரித்தபடி, அதன் பொருளையுணர்ந்து அதுதன்னிலே நிஷ்டையுடையாருடைய பெருமைகள், திருமந்த்ரம் முதலிய ரஹஸ்யத்ரயத்தின் ஆழ்பொருள்களை வெளியிடுவதற்கே அவதரித்த ஆழ்வாரருளிச்செயல்களின் சீர்மை, அவற்றுக்கு வேதஸாம்யம், வேதோபப்ரும்ஹணத்வம், வேதங்களிற் காட்டில் உயர்வு, மஹர்ஷிகளிற் காட்டில் ஆழ்வார்க்குண்டான சிறப்பு, ஜந்மோத்கர்ஷாபகர்ஷநிரூபணம், எம்பெருமான் ஆழ்வாரைக் கடாக்ஷித்தருளின விதம், அந்தக் கடாக்ஷத்தின் பெருமை, ஆழ்வாருடைய பக்தியின் வைலக்ஷண்யம், எம்பெருமானுடைய நிர்ஹேதுகக்ருபையின் சிறப்பு, அருளிச் செயல்களில் தோழி தாய், மகள் பாசுரங்களாக வருதற்குக் கருத்து, ஸீதாபிராட்டி முதலானாரோடு ஆழ்வாருக்கு ஸாம்யநிர்வாஹம், அருளிச்செயல்களில் பலபல சொற்களுக்கு ஸ்வாபதேசார்த்த நிர்வஹணக்ரமம், ஆழ்வார் எம்பெருமான்பக்கலில் தூதுவிடுவதைப்பற்றின பரிசீலனைகள், நம்மாழ்வார் மங்களாசாஸனம் செய்த திருப்பதிகளில் விளங்கும் திருக்குணங்களின் நிரூபணம், நம்மாழ்வார் திவ்யப்ரபந்தமருளிச் செய்யத் தொடங்கின காலத்தை நிரூபித்தல், அதினுடைய ஸர்வாதிகாரத்வ பரம போக்யத்வ நிரூபணங்கள், திருவாய்மொழிக்கும் பகவத்கீதைக்கு முண்டான ஸாம்யப்ரபஞ்சனம், கீதையிலுங்காட்டில் திருவாய்மொழிக்குண்டான ஏற்றத்தை விவரித்தல், ஆழ்வாருடைய உபதேசவிஷயங்களையும் உபதேச ஹேதுக்களையும் பரக்க நிரூபித்தல், நம்மாழ்வாருடைய திவ்யப்ரபந்தங்கள் நான்கும் ரஹஸ்யத்ரயார்த்தப்ரதிபாதகமாய் அர்த்தபஞ்சக விவரணமாயிருக்கும்படியை விரிவாக நிரூபித்தல், திருவாய்மொழியில் பத்துப்பத்தாலும் ப்ரதிபாதிக்கப்படும் அர்த்தவிசேஷங்களை ஒன்றுவிடாமே வெகு அழகாக விளக்குதல்-ஆகிய இவையும், ப்ராஸங்கிகமாக மற்றும் பல அற்புதமான விஷயங்களும் இவ்வாசார்யஹ்ருதய திவ்ய க்ரந்தத்தில் அருளிச்செய்யப்பட்டவையாகும்.

பலபடியாலும் அபௌருஷேயமென்றே அறுதியிடத்தக்கதான இந்த திவ்யக்ரந்தத்திற்கு மிகச்சிறந்த வியாக்கியானமருளிச் செய்தவர் மணவாளமாமுனிகள். ஸ்ரீபாஷ்யத்தின் பெருமைக்குத் தக்கவாறு அதற்கு வியாக்கியானமாக ச்ருதப்ரகாசிகை அவதரித்தது போல் இவ்வாசார்ய ஹ்ருதயத்தின் பெருமைக்குப் பொருந்த மணவாளமாமுனிகளின் வியாக்கியானம் அமைந்தது 'சர்க்கரைப் பந்தலில் தேன்மழை பொழிந்ததாம்' என்னும்

பழமொழியையே நினைப்பூட்டும். "நாமூலம் லிக்யதே கிஞ்சித் நாநபேக்ஷித முச்யதே." என்கிறபடியே பொருத்தமுள்ள வியாக்கியானம் மணவாளமாமுனிகள் தவிர மற்ற எவராலும் இயற்றலாகாதென்பது அநுபவரஸிகர்களான அநஸூயுக்களின் ஸித்தாந்தம். பூர்வோத்தர ஸங்கதிகளைக்காட்டி அவதாரிகையிடுந்திறனும், மயங்கவைத்தல், விரியவுரைத்தல், சுருங்கச் சொல்லல் என்னுங் குற்றங்குறைகளுக்கு அணுவளவும் இடமின்றியே மூலத்தை விவரிக்குமழகும், பிண்டிதார்த்தத்தை ஆங்காங்கு உபஸம்ஹரித்துக் காட்டும் நேர்த்தியும், ப்ராமாணிக ஸரணியிலிருந்து இறையும் வழுவாத ஆர்ஜவமும், ✠ அநாக்ராதாவத்யம் பஹுகுணபரீணாஹி மநஸோ த்ருஹாநம் ஸௌஹார்தம் பரிசிதமிவாதாபிகஹநம், பதாநாம் ஸௌப்ராத்ராத் அநிமிஷநிஷேவ்யம் ச்ரவணயோ:.. வாணீவிலஸிதம்." என்று ஸ்ரீ குணரத்நகோசத்தில் பட்டர் அருளிச்செய்தபடியே அந்த லக்ஷணங்களின் பரிபூர்த்தி பொருந்திய அமுதொழுகுகின்ற அத்புத பங்க்திகளை அருளிச்செய்யுமியல்வும், அதிகஹந சாஸ்த்ரார்த்தங்களையும் எளிய தெளிய மொழிகளாலே ஸுலபப்படுத்தும் ஸாரஸ்யமும் நம் மணவாளமாமுனிகளின் வியாக்கியானங்களிலன்றி மற்றெதிலும் காணக் கிடைக்காது.

இப்படிப்பட்ட மஹாசார்யருடைய வியாக்கியானம் பிள்ளை லோகாசார்யருடைய மூன்று ரஹஸ்யங்களுக்குப் போல, ஆசார்யஹ்ருதயத்திற்கு அமைந்திலதென்றால் மூலக்ரந்தம் அவதரித்தும் ஒரு பேறும் பெற்றிலோமாவோம். நமது வாசாமகோசர பரம பாக்யத்தினாலன்றோ மாமுனிகளின் திருவவதாரமும் அவரது திவ்ய ஸ்ரீஸூக்திகளின் திருவவதாரமுமாயின.

இந்த ஸம்ஸார மண்டலத்தில் அடிக்கொதிப்பு ஒரு புறமிருக்கச் செய்தேயும் "எம்மாவீட்டுத் திறமும் செப்பம்" என்றும் 'அச்சுவை பெறினும் வேண்டேன்" என்றும் "வைகுண்ட வாஸேபி ந மே அபிலாஷ:" என்றும் பரமபதத்தை வெறுத்து இவ்விபூதியில் நித்யவாஸஞ்செய்யக் குதூஹலிப்பதொரு முறையுண்டு. மணவாளமாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளை அநுபவித்து அகங்குழையுமானந்தம் பரமபதத்திலும் நமக்குக் கிடைக்கமாட்டாதே. இப்போது நமக்குக் கிடைத்திருக்கும் பாக்கியம் மறுபிறப்பிலும் இங்ஙனமே கிடைக்குமென்றும் நிச்சயிக்க வழியில்லையே. இந்த திவ்யஸூக்திகளின் அநுபவானந்தம் இடையறாது செல்லுதற்குப் பாங்கான இச்சன்மமே நமக்கு நீடூழிவாழ்க! வாழ்க! என்றே ஆசம்ஸிக்க வேண்டியிராநின்றது.

அடியேன் விண்ணப்பம் செய்த ஸ்ரீ வரவரமுநி வைபவ ஸ்தோத்ரத்தில் ✠ தீர்த்வா பவாம்புராசிம் யதி திவமாஸாதயேயமபி தத்ர; காந்தோபயந்த்ருமுநிவரதிவ்யோக்தி ஸுதைவ புக்திரஸ்து மம." என்பது பதினெட்டாவது ச்லோகம். இதன் பொருள்:—பிறவிக்கடலைக் கடந்து ஒருகால் விண்ணுலகம் சென்று சேரப்பெறுவேனாயினும் அங்கும் மணவாளமாமுனிகளின் ஸ்ரீஸூக்தியமுதமே அடியேனுக்கு உணவாகவேணும் என்பதாம். நீசனேன் நிறையொன்றுமிலேனாகிய பாவியேனுடைய பாரிப்பே யிதுவானால், அறிவிற் சிறந்த ஆரியர்களின் பாரிப்பைப்பற்றிப் பேசவும் வேணுமோ?

## ஸ்ரீமந்நாதமுனிகளின் ஆச்ரமவிசாரம்

நமது ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்திற்குத் தலைமையாசிரியரான நாதமுனிகள் தமது திருவவதாரஸ்தலமான காட்டுமன்னார் ஸந்நிதியிலும், மற்றும் எந்த திவ்ய தேசத்திலும் அர்ச்சையில் க்ருஹஸ்தாச்ரமமாகவே ஸேவை ஸாதிக்கிறார். இவரது சரித்திரத்திலும் க்ருஹஸ்தராகவே திருநாட்டுக்கெழுந்தருளினதாகக் காண்கிறது. ஒருநாள் சோழராஜன் ஸபரிவாரனாய் வேட்டையாட வந்து திரும்பிப் போகையில் இவருடைய பெண்பிள்ளைகள் வந்து 'அய்யா! நம் க்ருஹத்திலே ஒரு குரங்கும் இரண்டு வில்லிகளும் ஒரு பெண்பிள்ளையுமாக வந்து நாதமுனிகள் எங்கேயென்று தேடிப் போனார்கள்' என்று சொல்ல, அது கேட்ட நாதமுனிகள் பெருமாளும் பிராட்டியும் இளைய பெருமாளும் சிறிய திருவடியுமாக இந்நால்வர் வந்திருக்கக் கூடுமென்றெண்ணி அவர்களைப் பின்தொடர்ந்து செல்வதாகப் புறப்பட்டு, வழியில் எதிர்ப்பட்டவர்களையெல்லாம் நோக்கி 'இப்படி போகிறவர்களைக் கண்டீர்களோ?' என்று கேட்க, அவர்களும் 'போகிறார்கள்' என்றே சொல்ல,

வேகமாக வெகு தூரமெழுந்தருளிக் கங்கைகொண்ட சோழபுரத்தில் கீழவாசல் வரையி லெழுந்தருளி அங்குள்ளவர்களை நோக்கி விசாரிக்கையில் அவர்கள் 'நாங்கள் பார்க்க வில்லையே' என்று சொல்ல, போகிற வில்லிகளும் காணக்காண மறைந்தவாறே இவரும் ஏங்கி விழுந்து மோஹித்து அதுவே ஹேதுவாக அவ்விடத்திலேயே திருநாட்டுக் கெழுந் தருளினார்—என்று குருபரம்பராப்ரபாவாதிகள் கூறுகின்றன. இதனால் ஸந்ந்யாஸாச்ரம ப்ரஸக்தியே தெரியவில்லை.

ஆசார்யஹ்ருதய வியாக்கியானத்திலுள்ள மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்தி யொன்றினால் நாதமுனிகள் ஸந்ந்யாஸிகளென்று நினைக்க நேர்கின்றது. அதில் மூன்றாவது ப்ரகரணத்தில் ஹம்ஸத்திற்கு ஸ்வாபதேசமருளிச் செய்கிற "விவேகமுகராய்" இத்யாதி சூர்ணையில்:—"பற்றற்ற பரமஹம்ஸராதலான நயாசலன் மெய்ஞ்ஞாவன் நாதயாமுநர் போல்வாரை அன்னமென்னும்' என்றவிடத்து வியாக்கியானத்திலே—

"* சிற்றெயிற்று முற்றல் மூங்கில் மூன்று தண்டரொன்றினர் அற்ற பற்றர் *
என்று சொல்லுகிறபடியே ஸாம்ஸாரிக ஸகல ஸங்கமுமற்று உத்தமாச்ரமிக
ளாய் பரமஹம்ஸ சப்தவாச்யரான நாதமுனிகள் யாமுன முனிகள் போல்வாரையும்'.

என்கிற ஸ்ரீஸூக்திகளிவை மணவாள மாமுனிகளருளிச் செய்தவை. இதில் நாதமுனி களை உத்தமாச்ரமிகளென்றும் பரமஹம்ஸசப்தவாச்யரென்றும் கூறியிருத்தலால் ஆச்ர மத்தினுண்மை என்னவென்று சங்கிக்க நேர்கின்றது. மூலத்தாலும் வியாக்கியானத்தா லும் ஸ்பஷ்டமாக விளங்குமிவ்விஷயத்தை எங்ஙனே நிர்வஹிப்பதென்று பஹுச்ருதர் களான பெரியார் ஆராய்க. வேதாந்த தேசிகரும் சததூஷணியில் நாதமுனிகளை உத்த மாச்ரமியாகவே உரைத்தருளினர்.

## முன்னோர்களும் நாமும்

பேரிருளிலே திரிவார்க்கு விளக்குக் காட்டுவது போல இவ்விருள் தருமா ஞாலத் திலே கண்கெட்டுத் தவிக்கும் நர்போலியர்க்குப் பரம கருணாநிதயான பரம புருஷன் பல வகையான நூல்களைப் பயந்தருளினன். "கலைகளும் வேதமும் நீதி நூலும் கற்பமும் சொற் பொருள் தானும், மற்றை நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினாலருள் செய்து" என்றார் திருமங்கையாழ்வார். ஃஹர்த்தும் தமஸ் ஸதஸதீ ச விவேக்துமீசோ மானம் ப்ரதீப மிவ காருணிகோ ததாதி ஃ என்றார் பட்டர்.

இங்ஙனே எம்பெருமான் கொடுத்தருளின சாஸ்த்ரங்களில் தலையானது வேதம். அது கர்மகாண்டமென்றும் ப்ரஹ்மகாண்டமென்றும் இரண்டு பாகுபாடுகளையுடையது. ப்ரஹ்மகாண்டமே உபநிஷத்தென்றும் வேதாந்தமென்றும் வழங்கப்பெறும். கர்ம காண் டத்தை வியாக்கியானம் பண்ணுவதற்கு ஸ்மிருதிகளென்னப்படுகிற தர்மசாஸ்த்ரம் முதலியவை அவதரித்தன. ப்ரஹ்மகாண்டத்தை வியாக்கியானம் பண்ணுவதற்கு இதி ஹாஸ புராணங்கள் ப்ரஹ்ம ஸூத்ரம் முதலியவை அவதரித்தன. ஆழ்வார்களுடைய திவ்யஸூக்திகளும் இவற்றில் சேர்ந்தவை. இவையெல்லாம் பெரும்பாலும் வியாக்கி யானங்கள் இல்லாமல் பொருள்பட மாட்டாமையாலே இவற்றின் பொருள்களை விவரிப்ப தற்கு பிற்பட்ட ஆசாரியர்கள் பாஷ்யம் முதலியவற்றை இயற்றினார்கள். இந்த வியாக்கி யானங்களைக்கொண்டு நாம் வேதவேதாந்த வேதாங்க திவ்யப்ரபந்தங்களின் பொருள்களை யறிகின்றோம்.

இங்குச் சிலர் கேட்பது என்னவென்றால், ஒரு மூல க்ரந்தத்திற்கு ஒரே வியாக்கி யானந்தான் என்கிற நிர்ப்பந்தமில்லை ; ஒன்றுக்கே பல வியாக்கியானங்கள் காண்கின்றன. அந்த வியாக்கியானங்களில் பல வகைப்பட்ட நிர்வாஹங்கள் யோஜனைகள் காணப்படு கின்றன. ஒரு வ்யாக்யாதா கூறின அர்த்தத்தையே மற்ற வ்யாக்யாதாக்களும் தழுவுவ தென்கிற நிர்ப்பந்தம் கண்டிலோம். அவரவர்கள் தங்கள் தங்கள் புத்திசக்திக்கும் ப்ரதி பாவிலாஸங்களுக்கும் தக்கவாறு பலவகையான ப்ரக்ரியைகளாலே அர்த்தங்களை யெழுதி யிருக்கக் காணுகின்றோம். ஒரு வ்யாக்யாதா எழுதின அர்த்தத்தை மற்றொரு

வ்யாக்யாதா கண்டித்து எழுதியிருக்கவும் காணுகின்றோம். அதையும் கண்டித்து வேறொருவர் வேறொருவிதமான அர்த்தத்தை யெழுதியிருக்கவும் காண்கின்றோம். இந்த ரீதி அத்யாத்ம சாஸ்திரங்களில் மாத்திரமல்ல; தர்க்கம் வியாகரணம் காவ்ய நாடகாலங்காரம் முதலிய ஏனைய வகுப்பு நூல்களிலும் காணப்படுவதே. இப்படியிருக்கும் போது, அந்த மூலக்ரந்தங்களுக்கு நாமும் நம்முடைய புத்திசக்திக்குத் தக்கவாறு தோன்றும் அர்த்தங்களை எழுதினாலென்ன? பூருவர்கள் எழுதியுள்ள அர்த்தங்கள் அஸங்கதங்களென்றோ அபஸ்வரஸங்கதங்களென்றோ ஒருவர்க்குத் தோன்றினால், ஸங்கதமும் ஸ்வரஸமுமான அர்த்தம் தமது புத்தியில் பட்டிருந்தால் அதை அவர் எழுதினால் என்ன பிசகு? என்றிங்ஙனே சில கேள்விகள் கேட்கிறார்களிக்காலத்தவர்கள். நமது அபிப்ராயத்தைத் தெரிவிப்போமிங்கு. "பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதாந்" ✠ இத்யாதி ச்ருதிவாக்யத்தின்படியே ஆசார்யஸன்னிதிகளில் துவண்டு சுச்ரூஷித்து அர்த்தங்களைக் கேட்பதென்கிற பத்ததி இக்காலத்தில் அறவேமறைந்துவிட்டது. எந்தப்புத்தகமும் அச்சேறிவிட்டபடியால்அவற்றை வாங்கி ஈஸிசேர்களில் படுத்துக்கொண்டபடியே பார்ப்பதும் ஒன்றைவேறொன்றாக க்ரஹிப்பதும், 'இப்படிச் சொன்னாலென்ன? என்று முஷ்டிபிடிப்பதும் இக்காலத்தவர்களுக்கு இயற்கையாய்விட்டது. நம் பூருவாசாரியர்கள் பஹுச்ருதர்கள் ஆசார்யபக்தியில் தலைசிறந்தவர்கள். ஆசார்ய நியமனமின்றி எதுவும் எழுதினார்களல்லர். சிஷ்யர்களின் ப்ரார்த்தனையோ ஆசார்யர்களின் நியமனமோ கொண்டு வியாக்கியானம் முதலியவற்றையெழுதிப் பெரியார்களுடைய ஸ்ரீபாதத்திலே கொண்டுவைப்பதும் அவர்கள் திருக்கண் சாத்தி, வெளியிட நியமித்தருளினால் வெளியிடுவது; இல்லையேல் இல்லை செய்வதாய் இப்படிப்பட்ட வ்யவஸ்தைகளுடனே அவதரித்து அனைவர்க்கும் சிரோபூஷணமாக விளங்குகின்ற க்ரந்தரத்னங்களின் கௌரவம் அநிதரஸாதாரணம். அவற்றிலுள்ள யோஜநாபேதங்களும் நிர்வாஹபேதங்களும் பொன்னேபோல் போற்றத்தக்கன. அவற்றோடு ஸம்பந்தப்படாமல் தன்னெஞ்சில் தோற்றினதே சொல்லியுமெழுதியும் போந்தால் தடைசெய்வாராருமில்லை. தடைக்கு அஞ்சுகின்றவர்களுமில்லை, தோன்றிற்றை யெழுதவும், எழுதியவற்றை யச்சிடவும், அச்சிட்டவற்றை வெளியிடவும் யாவரும் அவ்யாஹதமான அதிகாரம் பெற்றிருக்கிறார்கள், அப்படி வெளிவருமவற்றை ஆதரிப்பதென்பது அவரவர்களுடைய அபிமானத்தைப் பொறுத்தது. புதிதான அர்த்தங்களை யெழுதக்கூடாதென்று யாரை யார் தடைசெய்வது. அப்படி யெழுதப்படும் அர்த்தங்களை ஆதரிக்கக்கூடாதென்றுதான் யாரை யார் தடை செய்வது. "ஆவாஹனமுமில்லை, விஸர்ஜனமுமில்லை" என்று சொல்லுகிறவொரு வார்த்தையுண்டே, அதுதான் இங்கு உற்றது.

## "ஏழை கடுக்காய்"

நமது பூருவாசாரியர்கள் அபரிமிதமான சாஸ்த்ரரார்த்தங்களை வாரிப் பொழிவதில் வல்லமை பெற்றிருந்தது போலவே விநோதரூபமான லோகோக்திகளையும் லௌகிக கதைகளையும் எடுத்துரைப்பதிலும் வல்லமை பெற்றிருந்தார்களென்பது அருளிச் செயல் வியாக்கியானங்களில் அவகாஹித்தவர்களுக்குத் தெரியும்.

அப்பேராசிரியர்கள் கையாண்ட லோகோக்திகளில் "எருது கெடுத்தார்க்கு மேழை கடுக்காய்" என்பது ஒன்று. திருவிருத்தத்தின் நம்பிள்ளையீட்டிலும் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்திலும [நாற்பத்திரண்டாவது பாட்டில்] இந்த லோகோக்தி (ஓரடிமாத்திரம்) அருளிச் செய்யப்பட்டிருக்கின்றது. அவ்விடத்து அரும்பதவுரையொன்றில் அத்தோடு மற்று மோரடியும் காட்டப்பட்டுச் சிறிது பொருளும் விவரிக்கப்பட்டுள்ளது. திருவாய்மொழியில் (1-10-2) ஈட்டின் அரும்பதவுரையில் இந்த லோகோக்தியின் நான்கடிகள் காட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் பொருள் கூறப்படவில்லை. அந்த நான்கடிகளாவன :—

"எருது கெடுத்தார்க்குமேழை கடுக்காய் ஈனுப் பெண்ணுக்குமேழை கடுக்காய்
படை யெடுத்த மன்னர்க்குமேழை கடுக்காய் பாவியேன் குன்றி யகப்பட்டுக்
[கொண்டேனே." என்று.

திருவிருத்த வியாக்கியான அரும்பதத்தில் முன்னிரண்டடிகளுக்கு மாத்திரம் ஏதோ வொருவாறு பொருள் கூறப்பட்டுளதேயன்றி, பின்னிரண்டடிகட்கு மற்றெவ்

விடத்திலும் பொருள் விவரிக்கப்பட்டிருப்பதாகக் காணவில்லை. திருவிருத்த-அரும்பதத்தி லுள்ள விவரணமும் பலர்க்கு த்ருப்தி பயக்கவில்லை. நாம் கேட்டபடி விளக்குகிறோம்.

ஓர் ஊரில் ஒரு பெரியவர் மந்த்ரம் தந்த்ரம் வைத்யம் ஜோஸ்யம் முதலியன பலவும் பயின்று வாழ்ந்து வந்தார். அவர்க்கு ஒரு புதல்வர். அவர் ஒருவிதமான யோக்யதையுமின்றி ஜீவிக்க வழி தெரியாதிருந்தார். தகப்பனார் பரலோகமெய்தும்போது அப் புதல்வர்க்கு ஸூத்ரம்போல் ஒரு வார்த்தை சொல்லிக் கொடுத்துப் போனாராம்; அதாவது, "எது கேட்டாலும் ஏழே கடுக்காய்" என்பதாக.

தகப்பனார் காலஞ்சென்ற பிறகு பழைய வாஸனையாலே குமாரரிடம் ஆரூடம் முதலானவை கேட்க வேண்டியதாயிற்று. அவ்வூரில் ஒருவருடைய எருது காணாமற் போக, எங்குத் தேடியும் கிடைக்காமையினால் இக் குமாரரிடம் வந்து அவர் ஆரூடம் கேட்டார். இவர் தமக்குத் தந்தையார் சொல்லிக்கொடுத்திருந்த ஸூத்ரத்தை நினைத்து ஏழு கடுக்காய் உட்கொள்ளும்படி கூறினர். அவரும் அங்ஙனமே செய்தார்; கடுக்காய் உட்கொண்டதன் காரியமாக விரேசனமுண்டாக அதற்காக ஓரிடத்தே சென்றவளவிலே யாத்ருச்சிகமாக அங்கு எருது மேய்ந்து கொண்டிருப்பதைக் கண்டுகளித்து அதனைப் பிடித்துக் கொணர்ந்து வீட்டிலே சேர்த்துச் சோதிடருடைய ஸாமர்த்தியத்திற்கும் உவந்தார்.

மலடியாயிருந்த ஒரு ஸ்த்ரீயானவள் ஒருநாள் இவரிடம் வந்து 'எனக்கு ஸந்தான முண்டாக வழியுண்டோ?' என்று கேட்க, இவரும் ஏழு கடுக்காய் உட்கொள்ளும்படி விதிக்க, அவளும் அப்படியே செய்தவளவிலே வயிற்றுக் கோளாறுகள் தீர விரேசனமாகி கர்ப்பப்பையிலிருந்த கல்மஷங்களும் போக, வெகு சீக்கிரமாகவே கருத்தரித்து ஸந்தானம் பெற்றாள். அவளாலும் இவருடைய பெயர் ஓங்கிற்று.

ஒருநாள் அவ்வூரரசன்மேல் அசல் நாட்டரசர் படையெடுத்து வருவதாகச் செய்தியறிவிக்க, உள்ளூரரசன் தப்பிப் பிழைக்க வழி தோன்றாமல் இச்சோதிடரிடம் வந்து 'இப்போது தப்பிப் பிழைக்கும் வழி யுண்டோ?' என்று கேட்க, 'ஏழே கடுக்காய்' என்று கூற, அவ்வரசன் தனது சேனைக் காலாள்களுக்கெல்லாம் ஏழு கடுக்காய் உட்கொள்ளுமாறு கட்டளையிட, அவர்களுமப்படியே செய்து எங்கும் விரேசனமாகிக் களைத்து விழுந்து கிடக்க' இவ்வூரில் விஷூசிகை நோய் பரவியிருக்கிறதென்று எங்கும் வார்த்தையுண்டாக அயல்நாட்டரசர்கள் அஞ்சித் திரும்பியோடிச் சென்றார்கள்' இதனாலும் இச்சோதிடருடைய புகழ் மிக்கது.

மற்றொருகால் ஒரு பெரியவர் அபரிமிதமான கடன் ஏறி இவரிடம் வந்து 'கடன் தீர வழியுண்டோ?' என்று கேட்க, அவர்க்கும் ஏழே கடுக்காய் என்ன, அவரும் ஏழு கடுக்காய் உட்கொண்டும் கடன் தீர்ந்தபாடில்லாமல் மேன்மேலும் கடன் வளர்ந்தே செல்வதைக் கண்டு மீண்டும் சோதிடரிடம் வந்து 'நீர் சொன்னது ஒன்றும் பலிக்கக் கண்டிலோமே' என்று கூற, இப்படியே பல நாள் கண்டு சொல்ல, அப்போது அந்தச் சோதிடர் சொன்ன பாட்டு:—

"எருது மகடுத்தார்க்குமேழே கடுக்காய், ஈனுப் பெண்ணுக்கு மேழே கடுக்காய்
படையெடுத்த மன்னர்க்குமேழே கடுக்காய் ... ... ... " என்று.

முதலடியின் கருத்து தெரிந்ததே.

இரண்டாமடியில், ஈனுப் பெண்—பிரஸவியாத ஸ்த்ரீ; மலடியென்றபடி.

மூன்றாமடியில், படையெடுத்த மன்னர்க்கும் என்றது—படை யெடுத்துவந்த மன்னரை யோட்டுதற்காக வென்றபடி.

இனி நான்காமடியில் பிறழாத பாடம் கிடைக்கவில்லை; "பாவியேன் குன்றியகப் பட்டுக்கொண்டேனே" என்கிற பாடம் அடையவளைந்தா னரும்பதவுரையிற் காண்கிறது. இதில் குன்றி என்பதற்குப் பொருள் விளங்கவில்லை. "பாவியேன் உன்னிலகப்பட்டுக் கொண்டேனே" என்பதாகச் சிலர் பாடம் கூறுகிறார்கள். மற்ற பேர்களுக்கெல்லாம் நான் ஆரூடம் சொல்லி வெற்றி பெற்றுவிட்டேன்; உன்னிடத்தில் அந்தோ! அகப்பட்டுக்கொண்டேனே! என்றபடியாம். (உன்னில்—உன்னிடத்தில்.) 'பாவியேன் ஒன்றில் அகப்பட்டுக் கொண்டேனே' என்றும் சிலர் பாடம் கூறுகின்றனர். கீழ் விஷயங்களில் வெற்றிபெற்ற நான் இவ்வொரு விஷயத்தில் அகப்பட்டுக்கொண்டேனே யென்றபடியாம்.

## ஆசார்ய ஹ்ருதயத்தில் ஓர் ஆராய்ச்சி

ஆசார்யஹ்ருதயம் முதற் பிரகரணத்தில் "ம்லேச்சனும் பக்தனுனல்" இத்யாதியான பெரிய சூர்ணையில் "ஸம்யக் ஸகுண ஸஹபோஜநமும்" என்கிற ஸ்ரீ ஸூக்தியுள்ளது. ஸ்ரீராமபிரான் சபரியின் கையாலே பண்ணின போஜநம் ஸம்யக் போஜநம். பாண்டவர்களுக்காகத் தூது போன கண்ணபிரான் விதுரர் திருமாளிகையில் பண்ணின போஜநம் ஸகுண போஜநம். சிறிய திருவடியோடு பெருமாள் செய்தது ஸஹபோஜநம்—என்று பிரமாணங்கள் காட்டி மணவாளமாமுனிகள் வியாக்கியானஞ் செய்துள்ளார்.

"சபர்யா பூஜிதஸ் ஸம்யக்" என்ற ஸ்ரீராமாயண ச்லோகத்தினுல் சொல்லப்பட்ட ஸம்யக் போஜன விஷயத்திலும், ✠ விதுராந்நாநி புபுஜே சுசீநி குணவந்திச ✠ என்ற மஹாபாரத ச்லோகத்தினுல் சொல்லப்பட்ட ஸகுணபோஜனத்திலும் இப்போது விசாரமொன்றுமில்லை. ஸஹபோஜனம் என்றதைப்பற்றியே விசாரம் ப்ராப்தமாகின்றது.

அனுமானேடு பெருமாள் ஸஹபோஜனம் செய்ததாக இங்குச் சொல்லப்படுகிறது. இதற்கொரு ப்ரமாணமும் மணவாளமாமுனிகளால் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது. அதாவது—✠ உபகாராய ஸுக்ரீவோ ராஜ்யகாங்க்ஷீ விபீஷண:, நிஷ்காரணாய ஹநுமாந் தத்துல்யம் ஸஹபோஜநம் ✠ என்பதே அந்தப்ரமாணம், இந்த ச்லோகம் எவ்விடத்திலுள்ளதென்று தெரியவில்லை. ஸ்ரீராமாயணத்தில் கிடையாது. வாஸிஷ்ட ராமாயணத்திலோ பாத்மோத்தரத்திலோ; ராமகதையைச் சொல்லுகிற மற்றும் ஏதேனுமொரு புராணத்திலோ இவ்வசனம் இருக்கக்கூடும். பிராமாணிகர்களான ஆசாரியர்கள் உதாஹரித்தருளினதாகையாலே வசனத்தில் ஸந்தேகங்கொள்ள இடமில்லை. ஸ்ரீராமன் அனுமானேடு செய்ததாகச் சொல்லப்படுகிற இந்த ஸமபோஜனம் எந்த ஸமயத்தில் எவ்விதமாகச் செய்தது என்று விமர்சிக்கவேணும்.

திருமங்கையாழ்வாருடைய பெரிய திருமொழியில் (5-8-2) ✠ வாதமாமகன் மற்கடம் விலங்கு...... கோதில் வாய்மையினுயொடு முடனே யுண்பன் நானென்ற வொண்பொருள் ✠ என்கிற பாசுரத்திலும் அனுமானேடு ஸ்ரீராமன் உணவு செய்ததாக அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. ஆனுல் அந்தப் பாசுரத்தின் வியாக்கியானத்தில் பெரியவாச்சான் பிள்ளை மேற்குறித்த ச்லோகத்தை உதாஹரித்தருள வேண்டியிருந்தும் உதாஹரிக்கவில்லை. பாசுரத்திற்கு அர்த்தம் செய்தருளினதிலும் ஸமபோஜன மென்பதான அர்த்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. அனுமான் இலங்கை சென்று பிராட்டியைக் கண்டு திரும்பி வந்து சேர்ந்து 'கண்டு வந்தேன் ஸீதையை' என்று சொன்னபோது ✠ ஏஷ ஸர்வஸ்வ பூதஸ்து பரிஷ்வங்கோ ஹநூமத:, மயா காலமிமம் ப்ராப்ய தத்தஸ் தஸ்ய மஹாத்மந: ✠ என்று சொல்லிப் பெருமாள் அவ்வனுமனை ஆரத்தழுவிக் கொண்டாரே அதைத் தான் திருமங்கையாழ்வார் அருளிச் செய்வதாக அங்குப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானம் செய்தருளியுள்ளார். மணவாளமாமுனிகளுக்கும் அது உடன்பாடு என்னலாம்.

ஆனுல் இவ்விடத்தில் மணவாளமாமுனிகள் உதாஹரித்தருளியுள்ள ப்ரமாண வசனத்தில் "ராஜ்ய காங்க்ஷீ விபீஷண:" என்பது சேர்ந்திருப்பதை விமர்சிக்க வேணும். திருவடியைப் பெருமாள் ஆரத்தழுவின ஸமயத்தில் ஸ்ரீவிபீஷணழ்வான் ப்ரஸ்தாவம் வருவதற்கு ப்ரஸக்தியில்லையன்றே. திருவடியைப் பெருமாள் ஆரத்தழுவியது விபீஷணழ்வான் பெருமாளிடம் வந்து சேருவதற்கு மிக முன்பேயாதலால், அப்போது ✠ ராஜ்ய காங்க்ஷீ விபீஷண: ✠ என்று சொல்வதற்கு ப்ரஸக்தியில்லையே. ஆகவே விபீஷணழ்வான் பெருமாளை ஆச்ரயித்த பின்பு அனுமானுக்கும் பெருமாளுக்கும் ஒரு ஸஹபோஜநம் நடந்திருக்க வேணுமென்று கொள்ளவேண்டியதாகிறது.

✠ கோதில் வாய்மையினுயொடு முடனே யுண்பன் ✠ என்கிற பெரிய திருமொழிப் பாசுரத்தின் வியாக்கியானத்தில் பெரிய வாச்சான் பிள்ளை "தத்துல்யம் ஸஹபோஜநம்" என்கிற ப்ரமாண வசனத்தை யெடுத்துக் காட்டியருளாமையாலே அவ்விடத்தில் விசாரமில்லை ஸஹபோஜநபர்யாயமான பரிஷ்வங்கத்தையே அங்கு அர்த்தமாகக் கொள்வதில் குறையொன்றுமில்லை. ஆசார்ய ஹ்ருதய வியாக்கியானத்தில் அப்படியன்றிக்கே 'தத்துல்யம் ஸஹபோஜநம்' என்கிற ப்ரமாண வசனத்தை உதாஹரித்தருளியிருப்பதாலும், அதில் 'ராஜ்ய

காங்க்ஷி விபீஷண;' என்று விபீஷணனைப் பற்றின பேச்சுமிருப்பதாலும் விபீஷணனைப் பரிக்ரஹித்தான பிறகு திருவடிக்கும் பெருமாளுக்கும் இது நடந்திருக்கவேண்டும் போலும்.

ஆகவே பரிஷ்வங்கத்திற்காட்டிலும் வேறானவொரு ஸஹபோஜனத்தை ஆசார்ய ஹ்ருதயகாரர் திருவுள்ளம் பற்றுவதாகச் சொல்ல இடமுண்டு. மேலும் அவ்விடத்தில் அவர் ஸம்யக்போஜந ஸகுண போஜனங்களையருளிச் செய்து அவற்றோடு சேர்ந்தாப் போலவே ஸஹபோஜனத்தையும் அருளிச் செய்திருக்கையாலே இதுவும் ஒரு போஜன விஷயமாகவேயிருக்க வேணுமென்கிற ஔசித்யமுமுண்டு.

ராவண ஸம்ஹாரமான பின்பு ஸ்ரீ ராமபிரான் ஸபரிவாரராய்ப் புஷ்பக விமானத்திலேறி ஆகாய மார்க்கமாக அயோத்தி நோக்கி மீண்டெழுந்தருளும் போது பிரயாகையில் பரத்வாஜ முனிவருடைய விருப்பத்தின்படி அவரது ஆச்ரமத்திலிறங்கி ஸேனைகளுடன் அங்கு விருந்துண்ண இசைந்து நின்றபோது பெருமாளுக்கு ஸ்ரீ பரதாழ்வானைப் பற்றியொரு கவலை ஏற்பட்டது; தவணை கடந்து விடுகின்றதென்று பரதன் வருந்தித் தீக்குதித்து உயிர் துறந்து விடுவானோவென்று கவலையுண்டாகி, தாம் மீண்டு வந்த செய்தியைப் பரதனிடம் சொல்லுமாறு பெருமாள் அனுமானை நந்திக் கிராமத்திற்கு அனுப்பினார். அனுமன் அப்படி புறப்பட்டுப் போயிருந்த ஸமயத்தில் பரத்வாஜ முனிவர் தமது தவப் பெருமையினால் வெகு ஸம்ப்ரமமாக ஸ்ரீ ராமனுக்கு விருந்து செய்வித்தார். அந்த விருந்தை ராமனும் அவனது பரிவாரங்களும் தம் தமக்கென்று பரிமாறிய வாழையிலையில் உண்ணுகிற பொழுது அனுமான் பரதனிடம் செய்தி கூறிவிட்டுத் திரும்பி வந்தான். அப்பொழுது அனுமானுக்காக பரத்வாஜர் தனியே ஓர் இலையை மறுபடியும் வருவிக்க வேண்டாதபடி ஸ்ரீ ராமன் அனுமானைத் தன்னெதிரில் இருந்து தன் இலையிலேயே ஒரு பகுதியில் உண்ணும்படி நியமித்து ஸஹபோஜனம் செய்தனனென்று ஒரு கதை சொல்லப்படுகிறது.

முன்பெல்லாம் வாழையிலையில் தாமரையிலையிற்போல இடை நரம்பு இல்லாமலிருந்ததென்றும், இராமன் அனுமானைத் தன்னெதிரில் உட்காரவைத்துத் தன் இலையின் ஒரு பாதியிலேயே அவன் உண்ணுமாறு அவ்விலையின் நடுவில் தனது திருக்கையால் ஒரு வரையறைகீற அதுமுதல் ஸங்கல்பத்தால் அவ்விலையில் இடை நரம்பு ஏற்பட்டதென்றும் மூதறியுமம்மனைமார் சொல்வதுமுண்டு.

பரதனிடம் சென்ற அனுமான் மீண்டும் ப்ரத்வாஜாச்ரமத்திற்கு வந்ததாக வால்மீகி ராமாயணத்தில் இல்லை. வேறு சில புராணங்களிலுண்டு. அனுமான் மீண்டு பரத்வாஜாச்ரமத்திற்கு வந்த பின்பு இராமன் அம்முனிவனளித்த விருந்தை ஏற்றுக் கொண்டதாகப் பாத்மபுராணம் கூறுகிறது.

ஸ்ரீ ராம சரித்திரத்தைக் கூறுகின்ற இதிஹாஸ புராணங்களில் ஸ்ரீராமனும் அனுமானும் ஸஹபோஜனம் செய்ததாக எங்குக் கூறப்பட்டிருக்கிறதென்பது நமக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. அறிஞர் தெரிவித்தருளினால் லோகோபகாரமாகும்.

"வாதமாமகன் ........ உடனேயுண்பன்" என்று திருமங்கையாழ்வாரருளிச் செய்தவிடத்தில் வியாக்கியானத்தில் பெரியவாச்சான் பிள்ளை ஸஹபோஜனமான ஒரு இதிஹாஸத்தை அருளிச் செய்யவேண்டியிருந்தும் அருளிச் செய்யாமையாலே அப்படியொரு இதிஹாஸம் பெரிய வாச்சான் பிள்ளைக்கு உபலப்தமாகவில்லை யென்று தோன்றுகிறது. ஆசார்ய ஹ்ருதயகாரர்க்கு ஏதோவொரு இதிஹாஸம் விசிஷ்ய உபலப்தமாயிருக்கிறதென்று நன்கு தெரிகிறது. இதனைப் பெரியார்கள் பரிசீலனை செய்யவேணும்.

## ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் முக்கியமாக அறியவேண்டியவை

உலகில் பிரமனால் படைக்கப்பட்ட யோனிகள் பலபல. அவற்றுள் மானிடப் பிறவியில் ஜனிக்கப்பெறுவது எவ்வளவோ விசேஷம். அதிலும் ஸ்ரீவைஷ்ணவ குலத்தில் பிறக்கப்பெறுவது ஒப்புயர்வற்ற விசேஷம்.

ஜந்மாந்தர ஸஹஸ்ரநற்றவங்களின் பலனாக ஸ்ரீவைஷ்ணவகுலத்தில் ஜனிக்கப் பெற்றவர்கள் தங்களுடைய பிறப்பைப் பெருமைப்படுத்திக் கொள்ள வேண்டுவது மிகவும் அவசியம். அதற்காக ஸ்ரீவைஷ்ணவர்கள் முக்கியமாகத் தெரிந்துகொள்ள வேண்டிய

விஷயங்கள் இங்குத் தொகுக்கப்படுகின்றன. இவ்விஷயங்களை ஒவ்வொருவரும் நித்யம் அநுஸந்தானம் செய்வது நன்று. இதுவே முக்கியமான நித்யாநுஸந்தானம்.

எம்பெருமான் செய்தருளின அவதாரங்கள் எண்ணிறந்தவை. 'தசாவதாரங்கள்'' என்று வழங்கிவருவதைக் கொண்டு பத்து அவதாரங்களே பகவான் செய்தவையென்று எண்ணலாகாது. எண்ணிறந்த அவதாரங்களுள் மத்ஸ்ய கூர்மாதிகளான பத்து அவதாரங்கள் சிறப்பாக எடுத்துக் கூறப்படுகின்றனவத்தனை. அப்படியே எம்பெருமானுடைய அர்ச்சாவதாரங்களும் எண்ணிறந்தவை. பக்த சிகாமணிகளான ஆழ்வார்களின் திருவாக்கில் புகுந்து புறப்பட்ட அர்ச்சாவதாரங்களே திவ்ய தேசங்கள் என வழங்கப்பெறும்.

திவ்ய என்கிற பதத்தை நமது பெரியோர்கள் ப்ரமாணப்ரமேய ப்ரமாதாக்களில் தகுதி நோக்கி வெகு அழகாக உபயோகப்படுத்தி யுள்ளார்கள். எம்பெருமானைப் பற்றித் தெரிவிக்கும் நூல்கள் எல்லாவற்றினுள்ளும் தமிழ்வேதமே சிறந்ததென்கிற கருத்தினால் அதனைத் திவ்யப்ரபந்தம் என்றார்கள். அந்த திவ்யப்ரபந்தங்களைப் பாடினவர்களை திவ்ய ஸூரிகள் என்றார்கள். திவ்யஸூரிகளால் திவ்யப்ரபந்தங்களில் மங்களாசாஸனம் செய்யப் பெற்ற தலங்களையே திவ்யதேசம் என்றார்கள். இது எவ்வளவு திவ்யமான அமைப்பு.

திவ்யஸூரிகளான ஆழ்வார்கள் பதின்மர். 1. பொய்கையாழ்வார். 2. பூதத்தாழ்வார். 3. பேயாழ்வார். (இம்மூவரையும் முதலாழ்வார்களென்று கூறுவது ஸம்பிரதாயம்.) 4. திருமழிசையாழ்வார். 5. நம்மாழ்வார். 6. குலசேகராழ்வார். 7. பெரியாழ்வார். 8. தொண்டரடிப் பொடியாழ்வார். 9. திருப்பாணாழ்வார். 10. திருமங்கையாழ்வார்.

நம்மாழ்வாருடைய சிஷ்யரான மதுரகவியாழ்வாரையும் பெரியாழ்வாருடைய திருமகளான சூடிக்கொடுத்த நாச்சியாரென்கிற ஆண்டாளையும் சேர்த்து ''ஆழ்வார்கள் பன்னிருவர்'' என்று வழங்குதலுமுண்டு. ஆண்டாள் ஸ்ரீமஹாலக்ஷ்மியின் அம்சமாகத் தோன்றியவளாதலால் பிராட்டிமார் வகுப்பில் எண்ணப்பட்டவளாயிருந்தும், திவ்யப்ரபந்தமருளிச் செய்த காரணத்தினால் ஆழ்வார்கள் கோஷ்டியிலும் எண்ணத்தகுதியுடையாள்.

மதுரகவிகள் எம்பெருமான் விஷயத்தில் ஒன்றும்பாடாமல் நம்மாழ்வார் விஷயமாகவே பத்துப்பாசுரம் பாடியிருந்தாலும் இவருடைய பிரபந்தத்தையும் திவ்யப்ரபந்த கோஷ்டியிலே சேர்த்து, இவரையும் திவ்யஸூரி கோஷ்டியிலே சேர்த்தார்கள் பூருவாசாரியர்கள். ஆகவே இவர் மதுரகவியாழ்வாராயினர்.

1. பொய்கையாழ்வார். இவர் காஞ்சீபுரத்தில் திருவெஃகா என்கிற ஸ்ரீயதோக்தகாரிஸந்நிதியைச் சேர்ந்த பொய்கையில் ஐப்பசியில் திருவோணத்தில் அவதரித்து 100 பாசுரங்கள் கொண்ட முதல்திருவந்தாதியை அருளிச் செய்தார்.

2, பூதத்தாழ்வார். திருக்கடன்மல்லையில் ஐப்பசியில் அவிட்டத்தில் அவதரித்து 100 பாசுரங்கள் கொண்ட இரண்டாந் திருவந்தாதியை அருளிச் செய்தார்.

3. பேயாழ்வார். மயிலையில் ஐப்பசியில் சதயத்தில் அவதரித்து 100 பாசுரங்கள் கொண்ட மூன்றாந்திருவந்தாதியை அருளிச் செய்தார். இம்மூவரும் திருக்கோவலூரில் சந்தித்தவர்கள்.

4. திருமழிசையாழ்வார். திருமழிசையில் தையில் மகத்தில் திருவவதரித்து 96 பாசுரங்கள் கொண்ட நான்முகன் திருவந்தாதியையும் 120 பாசுரங்கொண்ட திருச்சந்த விருத்தத்தையும் அருளிச் செய்தார்.

5. நம்மாழ்வார். திருக்குருகூரில் வைகாசியில் விசாகத்தில் திருவவதரித்து திருவிருத்தம் பாசுரம் (100) திருவாசிரியம் (7) பெரிய திருவந்தாதி (87) திருவாய்மொழி (1102) ஆகிய நான்கு திவ்யப்பிரபந்தங்களை அருளிச்செய்தார்.

6. மதுரகவியாழ்வார். ஆழ்வார்திருநகரிக்கு ஸமீபத்திலுள்ள திருக்கோளூரில் சித்திரைமீ சித்திரை நக்ஷத்திரத்தில் திருவவதரித்து ''தேவுமற்றறியேன்'' என்று நம்மாழ்வாரைத் தவிர வேறு தெய்வமறியாதவராய் ஆழ்வார்விஷயமாகப் பதினொரு பாசுரங்கொண்ட கண்ணிநுண் சிறுத்தாம்பை அருளிச்செய்தார்.

7. குலசேகராழ்வார். திருவஞ்சிக்களத்தில் மாசிப்புனர்பூசத்தில் அவதரித்து 105 பாசுரங்கள் கொண்ட பெருமாள் திருமொழியை அருளிச்செய்தார்.

8. பெரியாழ்வார். ஸ்ரீ வில்லிபுத்தூரில் ஆனிஸ்வாதியில் அவதரித்து 12 பாசுரங்கொண்ட திருப்பல்லாண்டையும் 461 பாசுரங்கொண்ட "பெரியாழ்வார் திருமொழி" என வழங்கும் பிரபந்தத்தையும் அருளிச்செய்தார்.

9. ஆண்டாள், ஸ்ரீ வில்லிபுத்தூரில் திருவாடிப்பூரத்தில் பெரியாழ்வார் திருமகளாய்த்தோன்றிச் சூடிக்கொடுத்த நாச்சியார் என்று திருநாமம் பெற்று 30 பாசுரங்கொண்ட திருப்பாவையும் 143 பாசுரங்கொண்ட நாச்சியார் திருமொழியையும் அருளிச் செய்தாள்.

10. தொண்டரடிப்பொடியாழ்வார். மண்டங்குடியில் மார்கழிக் கேட்டையில் திருவவதரித்து 10 பாசுரங்கொண்ட திருப்பள்ளியெழுச்சியையும் 45 பாசுரங்கொண்ட திருமாலையையும் அருளிச்செய்தார்.

11. திருப்பாணாழ்வார். உறையூரில் கார்த்திகை ரோகிணியில் திருவவதரித்து 10 பாசுரங்கொண்ட அமலனாதிபிரான் அருளிச்செய்து அழகிய மணவாளனுடைய திருமேனியில் அந்தர்த்தான மடைந்தனர். முநிவாஹநர் என்பதும் இவரையே.

12. திருமங்கையாழ்வார். திருவாலி திருநகரியைச் சார்ந்த திருக்குறையலூரில் கார்த்திகையில் கார்த்திகைநாளில் திருவவதரித்து, நம்மாழ்வார் அருளிய நான்கு வேதஸாரமாகிய நான்கு திவ்யப்பிரபந்தங்களுக்கு ஆறு அங்கம்போன்ற ஆறு திவ்யப்பிரபந்தங்களையருளிச்செய்தார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | பெரியதிருமொழி— | 1084. | (4) | சிறியதிருமடல் | 1, |
| (2) | திருக்குறுந்தாண்டகம். | 20. | (5) | பெரியதிருமடல் | 1. |
| (3) | திருவெழுகூற்றிருக்கை. | 1. | (6) | திருநெடுந்தாண்டகம். | 30. |

இவ்வாழ்வார்கள் யாவரும் நம்மாழ்வார்க்கு அவயவபூதர்களென்றும், நம்மாழ்வாரே ப்ரதானபூதரான அவயவியென்றும் ஸம்ப்ரதாயம். ஆசார்யகோஷ்டியில் சேர்ந்த உடையவரையும் நம்மாழ்வாருடைய அவயவங்களில் திருவடியாக நிர்வஹித்தார்கள். ஆனதுபற்றியே நம்மாழ்வாருடைய பாதுகைக்கு இராமானுசன் என்றே திருநாமம். இவர் விஷயமாகத் திருவரங்கத்தமுதனார் அருளிச்செய்த இராமானுச நூற்றந்தாதியும் திவ்யப்ரபந்தத் திரளிலே பரிகணிதமாயிற்று. இதை ப்ரபந்நகாயத்ரீ என்பர்கள். ஸ்ரீவைஷ்ணவர்கள் இதனை முகபாடம் செய்து நித்தியம் அநுஸந்திப்பது விசேஷம்.

## இனி ஆசாரியர்களைப்பற்றிச் சிறிது பேசுவோம்

ஸ்ரீமந்நாதமுனிகள். காட்டுமன்னார் ஸந்நிதியில் ஆனிமீ அனுஷத்தில் அவதரித்தவர். நம்மாழ்வாரை யோகதசையில் ஸாக்ஷாத்கரித்து திவ்யப்ரபந்தங்களை உபதேசம் பெற்றவர். ஆசார்யபரம்பரையில் நம்மாழ்வாருக்கு அடுத்த ஸ்தானத்திலுள்ளவர். இவர் சில க்ரந்தங்கள் அருளிச்செய்திருந்தும் இப்போது ஒன்றும் கிடைப்பதில்லை.

உய்யக்கொண்டார். ஸ்ரீமந்நாதமுனிகளின் சிஷ்யர்களில் இவர் தலைவர். சித்திரை மாதத்துக் கார்த்திகையில் திருவவதரித்தவர். ஸ்ரீமந்நாதமுனிகள் தமது திருக்குமாரரான ஈச்வர முனிகளுக்கு ஒரு திருக்குமாரர் அவதரிப்பர் என்றறிந்து அவருக்கு உபதேசிக்குமாறு ஸகலார்த்தங்களையும் இவரிடத்தில் உபதேசித்தருளியிருந்தார்; அதனை நிறைவேற்றுதற்கு முன்னமே இவர் திருநாட்டுக்கெழுந்தருளினார்.

மணக்கால்நம்பி. உய்யக்கொண்டாருடைய சிஷ்யர்களில் இவர்தலைவர். இவர் ஸ்வாசார்யரிடத்தில் ஸகலார்த்தங்களையும் பெற்று, ஆளவந்தாரை மிகவும் அநுவர்த்தித்து சிஷ்யராக்கிக்கொண்டு அவருக்கு உபதேசித்தருளினார். மாசியில் மகத்தில் திருவவதாரம்.

ஆளவந்தார். இவர் ஸ்ரீமந்நாதமுனிகளின் திருப்பேரனார். உடையவருடைய ஆசாரியர்களுக்கு ஆசாரியர். ஆடி உத்தராடத்தில் காட்டுமன்னார் ஸந்நிதியில் திருவவதரித்தவர். ஒப்புயர்வற்ற மஹாவித்வான். ஆகமப்ராமாண்யம், ஸித்தித்ரயம், கீதார்த்த ஸங்க்ரஹம், ஸ்தோத்ரரத்நம், சதுச்ச்லோகி முதலிய க்ரந்தங்கள் அருளிச்செய்தவர். இவருடைய கடாக்ஷத்தினாலேயே உடையவர் ஸித்தாந்த ப்ரவர்த்தகரானார். யமுனைத்துறைவர், யாமுனாசார்யர் என்பதும் இவரையே.

பெரியநம்பி. ஆளவந்தாருடைய சிஷ்யர்களுள் ஒருவர். உடையவருடைய ஸமாச்ரயணாசார்யர். இவரே ஆளவந்தாருடைய நியமனத்தினால் உடையவரை விஷயீகரித்து தர்சனப்ரவர்த்தகராக ஆக்கினார். வாக்யகுருபரம்பரையில் பராங்குசதாஸர் என்பது இவரையே. மஹாபூர்ணர் என்பதும் இவரையே. இவருடைய திருவம்சஸ்தர்கள் அனேக திவ்ய தேசங்களில் ஸ்தலாசார்ய புருஷர்களாக விளங்கிவருகிறார்கள்.

உடையவர். எம்பெருமானார், ஸ்ரீராமாநுஜர், ஸ்ரீபாஷ்யகாரர். யதீந்திரர் இத்யாதி திருநாமங்களினால் வழங்கப்பெற்ற ஜகதாசார்யர் இவரே. ஆதிசேஷனுடைய அபராவதாரம். ஸ்ரீபெரும்பூதூரில் சித்திரைத் திருவாதிரையில் அவதரித்தார் ஆளவந்தாருடைய சிஷ்யர்களான பெரியநம்பி, திருமலைநம்பி, திருக்கோட்டியூர் நம்பி, திருமாலையாண்டான், திருவரங்கப்பெருமாளரையர் என்னும் ஐந்து குரவர்களை ஆசார்யர்களாகக் கொண்டவர். திருக்கச்சிநம்பிகளிடத்தில் மிக்க ப்ராவண்யமுடையவர். முதலியாண்டான், எம்பார், கூரத்தாழ்வான், அருளாளப்பெருமாளெம்பெருமானார், அனந்தாழ்வான் முதலான பலபல மஹான்களுக்கு ஆசார்யர். இவருடைய ப்ரதான சிஷ்யர்கள் எழுபத்தி நான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளென்று சிறப்புப்பெற்று விளங்கி வருகிறார்கள். ஸ்ரீபாஷ்யம், வேதாந்ததீபம், வேதாந்தஸாரம், கீதாபாஷ்யம், வேதார்த்த ஸங்க்ரஹம், நித்யம். கத்யத்ரயம் என்னும் திவ்ய க்ரந்தங்களை அருளிச்செய்தவர்.

உடையவருடைய சிஷ்ய பரம்பரை. உடையவரிடமிருந்து சிஷ்யர்களின் பரம்பரை பலபல கிளைகளாகப் பெருகிவந்திருக்கின்றது. இருந்தாலும் பூர்வாசார்ய பரம்பரை உடையவரிடமிருந்து இரண்டு பிரிவாக நிகழ்ந்திருக்கின்றது.

உடையவர்

| | |
|---|---|
| எம்பார். | திருக்குருகைப்பிரான் பிள்ளான் |
| பட்டர். | கிடாம்பியாச்சான். |
| நஞ்சீயர். | எங்களாழ்வான்; |
| நம்பிள்ளை. | நடாதூரம்மாள், |
| வடக்குத் திருவீதிப் பிள்ளை. | கிடாம்பியப் புள்ளார். |
| பிள்ளை லோகாசார்யர். | வேதாந்த தேசிகர், |
| திருவாய்மொழிப் பிள்ளை. | நயனாராசார்யர். |
| மணவாளமா முனிகள். | |

எம்பார். மதுரமங்கலமெனவழங்கிவருகிற மழலைமங்கலத்தில் தைமீ புநர்வஸுவில் திருவவதரித்தவர். உடையவர்க்குச் சிறிய தாயார் குமாரர். ராமாநுஜ பதச்சாயா.

பட்டர். ஸ்ரீபராசரபட்டர் என்பதும் இவரே. கூரத்தாழ்வானுடைய திருக்குமாரர். இவர் தமது திருத்தகப்பனாரிடத்திலும் எம்பாரிடத்திலும் அர்த்தவிசேஷங்கள் கேட்டவர். ஸ்ரீரங்கநாதனாலும் ஸ்ரீரங்கநாச்சியாராலும் புத்ரஸ்வீகாரமாக வளர்த்துக் கொள்ளப்பட்டவர். ஸகலசாஸ்த்ரபாரங்கதர். திவ்யப்ரபந்தங்களில் வெகு அழகிய நிர்வாஹங்கள் அருளிச்செய்தவர். ஸஹஸ்ரநாம பாஷ்யம், அஷ்டச்லோகீ, ஸ்ரீரங்கராஜஸ்தவம், ஸ்ரீகுணரத்நகோசம் முதலிய க்ரந்தங்கள் அருளிச்செய்தவர். வைகாசி மீ அனுஷத்தில் அவதாரம். பிள்ளைப் பெருமாளையங்கார் இவருடைய சிஷ்யரென்பர்.

நஞ்சீயர். இவர் அத்வைத ஸம்பிரதாயத்திலிருந்து பட்டரால் திருத்திப்பணி கொள்ளப்பட்டவர். முன்னிலைமையில் வேதாந்திகள் என்றும் மாதவாசார்யர் என்றும் ப்ரஸித்தர். பட்டர் திருவடிகளில் ஆச்ரயித்த பின்பு உத்தமாச்ரமியாகி நஞ்சீயரென்று திருநாமம் பெற்றார். இவர் திருவாய்மொழிக்கு ஒன்பதினாயிரப்படி உரையும் மற்றுஞ்சில திவ்யப்ரபந்தங்களுக்கு வியாக்கியானமும் ஸ்ரீஸூக்த பாஷ்யமும் அருளிச்செய்தார். [இப்போது சிலர் வெளியிட்டிருக்கும் ஸ்ரீஸூக்தபாஷ்யம் இவருடையதன்று.] பங்குனி யுத்தரத்தில் இவரவதாரம்.

நம்பிள்ளை. நஞ்சீயருடைய சிஷ்யர்களில் தலைவர். வரதராஜாசார்யர் என்பது இவருடைய நிஜநாமதேயம். லோகாசார்யர் என்கிற சிறப்புப் பெயருமுண்டாயிற்று. இவருடைய ஸகலசாஸ்த்ர ப்ராவீண்யம் வாசாமகோசரம். திவ்யப்ரபந்தங்களில் விசேஷார்த்தங்களெல்லாம் இப்பேராசியர் முகமாகவே வெளியாயின கார்த்திகையில் கார்த்திகைநாள்.

வடக்குத்திருவீதிப்பிள்ளை. நம்பிள்ளையின் சிஷ்யகோடிகளில் தலைவர். பெரிய வாச்சான்பிள்ளையோடுகூடவே ஸகலார்த்தங்களும் கேட்டவர். திருவாய்மொழிக்கு ஈடு முப்பத்தாறுயிரப்படியென்கிற மிகச் சிறந்த வியாக்கியானம் பட்டோலை கொண்டவர்.

பிள்ளை லோகாசார்யர். வடக்குத்திருவீதிப்பிள்ளையின் திருக்குமாரர். ஆசார்ய ஹ்ருதயம் முதலிய அத்யாச்சர்ய க்ரந்தங்களருளிச் செய்த அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்க்குத் திருத்தமையனார். (இருவரும் நைஷ்டிகப்ரஹ்மசாரிகள்.) இவர் பேரருளாள னுடைய அபராவதாரர். ஸ்ரீவசநபூஷணம், முமுக்ஷுப்படி முதலிய அஷ்டாதசரஹஸ் யாதிகள் அருளிச் செய்தவர். நம்பிள்ளையின் திருநாமமாகிய உலாகாசிரியர் என்பதே இவர்க் குச் சாத்தப்பட்டது. இவருடைய திவ்யஸூக்திகள் அவதரிக்கவில்லையாகில் இவ்வுலகம் இருள் தருமாஞாலமே. பகவதவதாரம் போலவே இவரவதாரமும் போற்றத்தக்கது.

திருவாய்மொழிப்பிள்ளை. பிள்ளை லோகாசார்யருடைய திருவடிகளில் தலைவர். வைகாசி விசாகத்தில் குந்தீநகரத்தில் திருவவதரித்தவர்.

மணவாளமாமுனிகள். திருவாய்மொழிப் பிள்ளையின் சிஷ்யர்களில் தலைவர். ஆழ்வார் திருநகரியில் ஐப்பசியில் திருமூலத்தில் எம்பெருமானாருடைய அபராவதாரமாகத் தோன்றி யவர். ஸகல சாஸ்த்ரங்களிலும் மிகத் தெளிவான ஞானம் பெற்றவர். இவருடைய திவ்யஸூக்திகளின் பெருமை ஒப்புயர்வற்றது. ஸ்ரீரங்கநாதனுக்கும் ஆசார்யராக அமைந் தவர். ஆசார்யரென்கிற வ்யபதேசம் இவர் தமக்கே முக்கியமாக இணங்குவதென்பது இவருடைய திவ்ய ஸூக்திகளில் அவகாஹித்தவர்களுக்கு அறியவெளிதாம். பூர்வாசார்ய பரம்பரை இவரளவிலே விச்ராந்தம். அஷ்டதிக்கஜஸ்தாபகரிவர்.

அஷ்டதிக்கஜா சார்யர்களாவார்;-வானமாமலை ஜீயர், திருவேங்கடராமாநுஜ ஜீயர், பட்டர்பிரான் ஜீயர், கோயிலண்ணன், எறும்பியப்பா, பிரதிவாதிபயங்கரம் அண்ணா, அப்பிள்ளை, அப்பிள்ளார்.

உடையவருடைய மற்றொரு சிஷ்ய பரம்பரை

திருக்குருகைப்பிரான்பிள்ளான். உடையவருடைய நியமனத்தினால் திருவாய்மொழிக்கு ஆறுயிரப்படி வியாக்கியானமருளிச் செய்தவர்.

கிடாம்பியாச்சான். உடையவருடைய திருமடைப்பள்ளி கைங்கரியத்தில் அமர்ந்திருந் தவர். ஸகலார்த்த ஸாரஜ்ஞர். "இதி யதிராஜமஹாநஸபரிமள...' என்றும், "எதிவரனார் மடைப்பள்ளி வந்த மணமெங்கள் வார்த்தையுள் மன்னியதே" என்றும் ஸ்ரீதேசிகன் அருளிச்செய்தவற்றால் இவருடைய பெருமை விளங்கும்.

எங்களாழ்வான். "தினவடங்கச் சொல்லுவர் திருவெள்ளறைச்சோழியர்" என்று ப்ரஸித்தமான வழக்கு இவரைப்பற்றியதே. விஷ்ணு சித்தாசார்யரென்பது திரு நாமம். ஸ்ரீவிஷ்ணு புராண வியாக்கியானம் முதலியன அருளிச்செய்த மஹாவித்வான்.

நடாதூரம்மாள், எங்களாழ்வானுடைய சிஷ்யர்களில் தலைவர். வரதகுரு என்று திருநாமம். ஸ்ரீபாஷ்யப்ரவசனத்தில் நிகரற்ற மஹா வித்வான். இவருடைய ஸ்ரீபாஷ் யார்த்த நிர்வாஹமே ச்ருதப்ரகாசிகையாக அவதரித்துள்ளது.

இராமானுசப்பிள்ளான். அம்மாளுடைய சிஷ்யர்களில் ஒருவர். கிடாம்பியப் புள்ளார் என்பதும் இவரையே. தேசிகருடைய மாதுலரும் ஆசார்யருமாவர்.

இவருடைய திருவடியான ஸ்ரீ வேதாந்த தேசிகரைப்பற்றி அடுத்த பக்கத்திற் காண்க.

நயனாராசார். ஸ்ரீதேசிகனுடைய திருக்குமாரர். குமார வேதாந்தாசார்யர் என்பது மிவரையே. "தீபாத் உத்பந்ந ப்ரதீபம்" என்னுமாபோலே தேசிகனிலும் விஞ்சிய ஞான விளக்கமுடையவர். சில வியாக்கியான க்ரந்தங்கள் அருளிச்செய்தவர்.

இப்படிப்பட்ட ஆழ்வார்களும் ஆசாரியர்களும் அவதரித்ததனால் இந்நிலவுலகம் பெருமை பெற்றுளது. இவர்களது வைபவங்களை (அல்லது) திருநாமங்களை நாடோறும் சிந்தனை செய்வதே ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குச் சேம நிதியாகும். இவ்வாழ்வாராசார்யர் களின் திவ்ய ஸ்ரீஸூக்திகளில் சிந்திப்போன அர்த்தங்களையும் இவர்களது பல்வகைப் பெருமைகளையும் பரக்கப் பேசியநுபவிப்பதே நமக்கு நற்போது போக்கு.

## வேதாந்த தேசிக வைபவாநுபவம்

ஆச்சரியமான பாண்டித்யமும், அற்புதமான அனுட்டானமும், ஆதரிக்கத்தக்க ஆத்மகுண பூர்த்தியும், விசேஷித்துக் கூறத்தக்க விரக்தியும் ஒருங்கே அமைந்த ஸ்ரீமத் வேதாந்த தேசிகர் நமது ஸ்ரீவைஷ்ணவ குலத்தில் திருவவதரித்ததனாலே நமது ஸித்தாந்தம் மிகச் சிறந்ததென்பதை அனைவரும் எளிதிலறியப் பாங்காகும். இம் மஹான் அவதரித் திராவிடில் கவியுலகில் பண்டித வுலகில் ஸ்ரீ வைஷ்ணவ வுலகில் இவ்விருள் தருமாஞாலத்தில் இன்பம் காண முடியாததே யாகும். இவ் வாசிரியர் தோன்றி அருளிய திவ்ய ஸூக்திகள் அளவிறந்தவை. இவரது சாஸ்திர பாண்டித்யச் சீர்மையை 1. சததூஷணீ, 2. தத்வமுத்தாகலாபம் 3. ஸர்வார்த்த ஸித்தி, 4. ந்யாய பரிசுத்தி, 5. ந்யாய ஸித்தாஞ்ஜநம், 6. ஸேச்வரமீமாம்ஸை, 7. மீமாம்ஸா பாதுகை என்னும் அரும்பெரும் நூல்கள் அறிவிக்கும். அரிய பெரிய வியாக்கியானங்களை அருளிச் செய்வதிலுள்ள அற்புதமான சக்தியை தத்வடீகை, கீதாதாத்பர்ய சந்திரிகை, கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷை, ஸ்தோத்ர பாஷ்யம். சதுச்ச்லோகீபாஷ்யம், கத்யபாஷ்யம் என்னும் திவ்ய க்ரந்தங்கள் தெளிவிக்கும். காளிதாஸாதி மஹாகவிகளைப்போலே மிகச் சிறந்த காவ்ய நாடகங்களை இயற்றுவதில் நிகரற்ற நைபுண்யத்தை யாதவாப்யுதயம், ஸங்கல்ப ஸூர்யோதயம், ரகுவீரகத்யம், ஹம்ஸஸந்தேசம், ஸுபாஷிதநீவி முதலியவைகளும், பாதுகா ஸஹஸ்ரம் முதலிய பலபல துதி நூல்களும் புலப்படுத்தும். ஆழ்வாரருளிச் செயல்களில் ஆழ்ந்து அகங்குழைந்து உருகிநிற்கும் பெருமை த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி, த்ரமிடோபநிஷத் ஸாரம் முதலியவற்றால் மூதலிக்கப்படும். தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் ஆச்சரியமான அறிவுபெற்று அமுதிலுமினிய கவிகளை யியற்றும் பெற்றி தேசிகப்பிரபந்தமென வழங்கப் பெறும் தமிழ் நூல்களினால் தலைமைபெற்று நிற்கும்.

அனுட்டான விஷயங்களில் ஆழ்ந்து ஆராய்ச்சிகளைச் செய்து அழகிய நிர்ணயங்களை வெளியிடும்வல்லமை ஸச்சரித்ரரக்ஷை. ஸ்ரீபாஞ்சராத்ரரக்ஷை, நிக்ஷேபரக்ஷை முதலியவற்றால் நன்குணர்த்தப்படும். சீரிய ரஹஸ்யார்த்தங்களையும் வெளியிட்டு ஸம்ஸாரிகளை உய்விப்பதில் உண்டாகிய ஒப்பற்ற பரமகருணை ஸம்ப்ரதாய பரிசுத்தி முதலிய ரஹஸ்ய க்ரந்தங்களினால் விளங்கும் பகவத் பாகவத பக்திப் பெருஞ் செல்வமும் ஐஹிகஸுகங்களில் அதிமாத்ரவிரக்தியும் இவரது நித்ய சரித்திரங்களினால் நிலைநின்று விளங்கும்.

✠ திருமலைமால் திருமணியாய்ச் சிறக்க வந்த இப்பேராசிரியர்க்கு இத்தகைய வைபவங்கள் வாய்ந்தது வியப்பன்று. "வெள்ளைப் பரிமுகர் தேசிகராய் விரகால் அடியோமுள்ளத் தெழுதியது ஓலையிலிட்டனம்" என்று இவர்தாமே அருளிச் செய்திருக்கிறபடி ஹயக்ரீவனுடைய திருவருளே ஒரு மடை செய்து ப்ரவஹித்த பெருமை பாராட்டற்பாலது.

இவ்வாசிரியருடைய எண்ணில் பல்குணங்களில் எந்தத் திருக்குணத்தைப்பற்றிப் பேசலாமென்று ஆராயப் புகுந்தால் ஒவ்வொரு திருக்குணமும் அஹமஹமிகயா வந்து தோன்றுகின்றன. ஞான பக்தி விரக்திகள் என்ற மூன்று குணங்களை ஆசாரியர்கட்கு அணிகலமானவை. அவற்றுள் ஞானம் என்பதைப்பற்றிப் பேசப்புகுந்தால் ஸர்வதந்த்ர ஸ்வதந்திரரென்றும் கவிதார்க்கிக கேஸரியென்றும் வேதாந்தாசார்யரென்றும் விருதுகள் பெற்றுள்ள இம்மஹானது ஞானத்தைப்பற்றிப் பேசுவதற்கு நாமோ அதிகாரி? "அவரவர் தாந்தாமறிந்தவா றேத்தி' என்ற பொய்கையார் பாசுரத்தின்படி நமது சிற்றறிவிற்கு எட்டியவளவு பேசலாமெனினும், இவ்வாசிரியரது கவித்திறம், சாஸ்த்ர பாண்டித்யம், தமிழ் பிராகிருதம் முதலிய பல பாஷைகளில் அளவு கடந்த வல்லமை. எளிய நடையில் ஸ்தோத்திரங்கள் இயற்றும் பெற்றி, கம்பீர நடையில் சாஸ்த்ரீயக்ரந்தங்களருளிச்செய்யுமழகு என்று இங்ஙனே மகுடம் புனைந்து பேசக் கூடிய விஷயங்கள் பலவுள்ளதனால் எந்த வகுப்பின் கீழ்ப் பேசப் புகுவதென்கிற சிந்தனையே சிறந்துள்ளது. ஆயினும் ஒவ்வொரு வகுப்பிலும் சிறிது சிறிது பேசி ஸ்ரீமத் வேதாந்த தேசிக வைபவமென்றொரு தனிப்புத்தகம் வெளியிட்டிருக்கிறோம். கண்டு கொள்வது.

## பூர்வாசார்ய ஸ்ரீஸூக்தி விமர்சம்

"ஸம்ஸ்ப்ருசந் ஆஸநம் சௌரே; விதுரஸ் ஸ மஹாமதி.;" என்கிற மஹாபாரத ச்லோகத்தை நம் பூருவாசாரியர்கள் விசேஷமாக எடுத்தாள்கின்றனர். விதுரர் தம்முடைய க்ருஹத்தில் கண்ணபிரானுக்குத் தாமே இட்ட ஆஸனத்தில் தமக்கே அதி சங்கை யுண்டாகி அவ்வாஸனத்தைத் தடவிப் பார்த்தார்" என்று மேற் காட்டிய ச்லோகத்திற்குப் பொருள் அருளிச் செய்யப்படுகிறது. திருவாய்மொழியின் ஈடு முப்பத்தாறுயிரப் படியிலும், அழகிய மணவாளப் பெருமாள் நாயனர் அருளிச் செய்த திருப்பாவை ஆறுயிரப் படியிலும், ஜநந்யாசார்யரும் மணவாள மாமுனிகளும் அருளிச் செய்த ஸ்ரீ வசநபூஷண வியாக்கியானங்களிலும் இந்த இதிஹாஸம் இங்ஙனமே யருளிச் செய்யப்பட்டுள்ளது. "ஸம்ஸ்ப்ருசந்" இத்யாதி ச்லோகமும் காட்டப்பட்டுள்ளது, அந்த ச்லோகம் ஸ்ரீ மஹாபாரதத்தில் உத்யோக பர்வத்தின் உள்ளீடான பகவத்யாந பர்வத்தில் தொண்ணூற்று நான்கா மத்தியாயத்தில் அறுபத்து மூன்றுவது ச்லோகமாக இக் காலத்திய அச்சுப் புத்தகத்தில் காண்கிறது. "ஸம்ஸ்ப்ருசந் ஆஸநம் சௌரேர் ஹமாமதிருபாவிசத்' என்று மூலத்தில் பாடம் காண்கிறது. ".........விதுரஸ் ஸ மஹாமதி:" என்று நம் ஆசார்யர்கள் உதாஹரித்துளர்; ஜநந்யாசார்யர் மாத்திரம் மஹாமதிருபாவிசத்" என்றே பாடம் காட்டியிருக்கிறுர். இப் பாடபேதம் ஒரு பெரிதான விஷயமல்ல; எவ்வாறுயினுமாயிடுக. இந்த ச்லோகத்திற்கு நம்மவர்கள் அருளிச் செய்துள்ள பொருள் ப்ரகரணத்திற்குப் பொருந்தாதுபோல்தோன்றுகிறது. விதுரர் தமது திருமாளிகையிலே தாமிட்ட ஆஸனத்தைத் தடவிப் பார்த்ததாக வன்றே நம்மவர்கள் பொருள் அருளிச் செய்திருப்பது; மூலத்தில் இந்த ச்லோகம் எந்த ப்ரகரணத்தில் இரா நின்றதென்றுல், விதுரர் திருமாளிகையினின்றும் கண்ணபிரான் துரியோதனனது ஸபாமண்டபத்திற்கு எழுந்தருளின பிறகு அங்கு துச்சாஸநன், ஸாத்யகி, கர்ணன், சகுநி, துரியோதனன், கண்ணன் விதுரர் முதலானோர் வீற்றிருக்கு மாற்றைக் கூறும் ப்ரகரணத்திலுள்ளது. விதுரர் திருமாளிகை விருத்தாந்தம் தொண்ணூற்றோராவது அத்தியாயத்தில் கூறப்பட்டுளது, அந்த ப்ரகரணத்தில் இந்த ச்லோகம் காணப்படவில்லை. துர்யோதந சபையில் நடந்த செய்தியைக் கூறுமிடத்துள்ள ச்லோகத்தை மேற்கொண்டு இங்ஙனே பொருள் கூறுதல் எங்ஙனே பொருந்தும்? விதுரர் கண்ணபிரானுக்கு அந்தரங்க பக்தராதலால் அப் பிரானுடைய ஆஸனத்தைத் தொட்டுக் கொண்டு மிகவும் ஸமீபஸ்தராய் உட்கார்ந்தார் என்றுதான் ப்ரகரணத்திற்குச் சேரப் பொருள் சொல்லத் தக்கதாகத் தோன்றுகிறது. விதுரர் தமது திருமாளிகையில் கண்ண பிரானுக்கு ஆஸனமிட்டதாகவாவது தாமும் ஆஸனத்தில் உட்கார்ந்ததாகவாவது மஹாபாரதத்தில் சொல்லப்பட்டிருக்கவில்லை. இப்படியிருக்க நம் ஆசார்யர்கள் "ஸம்ஸ்ப்ருசந்" இத்யாதி ச்லோகத்திற்கு வேறு வகையாகப் பொருள் அருளிச் செய்தது என்னே! என்று அடியேனுடைய நெஞ்சம் சங்கா களங்கிதமாயிரா நின்றது.

இதற்கு இங்ஙனே சிலர் விடையளிக்கக் கூடும்: இதிஹாஸ புராணங்களெல்லாம் இக் காலத்தில் பல வகையாக விகாரப்பட்டிருப்பதால் இந்த ச்லோகம் மஹாபாரதத்தில் இடம்மாறி அச்சிடப்பட்டிருக்கலாம்; அச்சுப் புத்தகத்தை ஆதாரமாகக் கொண்டு பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளில் அதிசங்கை கொள்ள வொண்ணுதென்பர்.

இதிஹாஸ புராணங்களுக்கு ஆசார்யர்களின் காலத்திலிருந்து ஸந்நிவேசமும் இப்போதைய ஸந்நிவேசமும் மிகவும் மாறுபாடுற்றிருக்கிற தென்பது ஸத்யம் ஸத்யம்புநஸ் ஸத்யம்; அத்யாயக்ரமத்திலும் ச்லோகங்களின் ஆநுபூர்வியிலும் பாட ப்ரக்ரியைகளிலும் வாசாமகோசரமான வைபரீத்யங்கள் ஏற்பட்டிருக்கின்றமையை அடியேன் குவாலாக அறிந்துளேன்; அதில் எள்ளளவும் ஸம்சயமில்லை. "ஸம்ஸ்ப்ருசந்" இத்யாதி ச்லோகத்திற்கு நம் ஆசார்யர்கள் அருளிச் செய்த அர்த்தம் நன்கு பொருந்துமாறு அந்த ச்லோகம் எந்தப் ப்ரக்ரணத்தில் இருக்க வேண்டுமோ அந்தப் ப்ரகரணத்தில் தானே அந்த ச்லோகம் அமையப் பெற்ற மஹாபாரத ஸ்ரீ கோசம் யாரிடத்திலாவது கிடைக்கக் கூடுமா? ப்ராசீநதாள கோசங்களைச் சேமித்து வைத்திருப்பவர் பலருண்டே. அவற்றில் இந்த

ச்லோகம் க்ரமமான ஸ்தானத்தில் அமைந்திருக்கின்றதாவென்பதை யாரேனுமொரு மஹாநுபாவர் பரிச்ரமப்பட்டுக் கண்டறிந்து வெளியிடுவரேல் தலையல்லால் கைம் மாறிலேன்.

இந்த ப்ரஸக்தியிலே மற்றொரு விஷயமும் காட்டப்படுகின்றது: ஸ்ரீ வேதாந்த தேசிகனுடைய ரஹஸ்யத்ரயஸாரக்ரந்தத்தில் இருபத்தைந்தா மதிகாரமான ப்ரபாவவ்யவஸ்தாதிகாரத்தில் "விதுரர்ந்நாநி புபுஜே சுசீநி குணவந்தி ச" என்றிதைக் கேட்டு துர்யோதனன் 'பீஷ்மத்ரோணாவதிக்ரம்ய மாஞ்சைவ மதுஸூதந! கிமர்த்தம் புண்டரீகாக்ஷ! புக்தம் வ்ருஷல போஜநம்? என்று கேட்க; 'த்விஷதந்நம் ந போக்தவ்யம் த்விஷந்தம் நைவ போஜயேத்' பாண்டவாந் த்விஷஸே ராஜந்! மம ப்ராணா ஹி பாண்டவா; என்று உத்தரமருளிச் செய்கையாலே .....'' என்கிற வாக்கியங்கள் காணப்படுகின்றன. இதுவும் மூல விருத்தமாயிரா நின்றது,

"விதுராந்நாநி புபுஜே'' இத்யாதி ச்லோகம் முந்தினதாகவும் "த்விஷதந்நம் ந போக்தவ்யம்'' இத்யாதிச்லோகம் பிந்தினதாகவுமன்றோ தேசிகனால் உதாஹரிக்கப்பட்டிருக்கிறது. மூலத்தில் அங்ஙனில்லை. உத்யோக பர்வத்தில் தொண்ணூற்றொராவது அத்யாயத்தில் இருபத்தேழாவது ச்லோகமாக "த்விஷதந்நம்'' என்னும் ச்லோகமும் நாற்பத்தைந்தாவது ச்லோகமாக ' 'விதுராந்நாநி புபுஜே'' என்னும் ச்லோகமும் அச்சுப் புத்தகத்திற் காண்கிறது, "பீஷ்மத்ரோணாவதிக்ரம்ய' என்கிற ஸுப்ரஸித்தமான ச்லோகம் இத்த ப்ரகரணத்தில் அடியோடு காணப்படவில்லை. விதுரருடைய அடிசிலைக் கண்ணபிரான் அமுது செய்த பிறகு அப் பிரானை துர்யோதநன் அதிக்ஷேபித்துக் கேட்பதாக தேசிகன் முதலிய நம்மவர்கள் அருளிச் செய்திருக்கிறபடிக் கிணங்க இப்போதைய மஹாபாரதத்தில் ச்லோகங்களின் ஆநுபூர்வி அமைந்திருக்கவில்லை.

இப்படி ஒவ்வொரு விஷயத்தையும் நாம் ஆராயப் புகுங்கால் மூலக்ரந்தங்கள் எல்லை கடந்த விகாரத்தை அடைந்திட்டனவாக அறுதியிடுதல் இன்றியமையாததா கின்றது. மற்றுள்ள புராணங்களிலும் ஸ்ரீ பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளிலும் நுழைந்து பார்த்தாலோ, அவற்றிலுள்ள விபர்யாஸங்கள் பேச்சுக்கு நிலமல்ல. அந்தணர் நூலாயும் மூலப்ரமாணமாயுமுள்ள வேதங்களின் உப ப்ரும்ஹணங்களான இதிஹாஸ புராணாதிகளைப் பரிஷ்காரப் படுத்துதல் நமக்கு முக்கியமான கைங்கர்யமல்லவா? இவ்விஷயந் தன்னை முக்கியமாகக் குறிக்கொள்வாருண்டா?

ஸ்ரீ வசந பூஷணத்தில் இரண்டாம் ப்ரகரணத்தில் "அழகுக் கிட்ட சட்டை அணைக்கைக்கு விரோதியாமாப்போலே' என்ற சூர்ணிக்கைக்கு அடுத்தபடியாக ஹாரோபி என்றொரு ஸ்ரீஸூக்தி பிள்ளை லோகாசாரியரால் உதாஹரிக்கப்பட்டுள்ளது. அவ்விடத்து வியாக்கியானத்தில் [ஆய்ப்படியிலும் ஜீயர் படியிலும்]

ஹாரோபி நார்ப்பித; கண்டே ஸ்பர்சஸம்ரோதபீருணா
ஆவயோரந்தரே ஜாதா; பர்வதாஸ் ஸரிதோ த்ருமா;

என்று அந்த ச்லோகம் பூர்ணமாக உதாஹரிக்கப்பட்டு வியாக்கியானிக்கப்பட்டு மிருக்கிறது. இது ஸ்ரீ ராமாயணத்தில் பெருமாளுடைய திருவாக்காகத் தெரிகின்றது. ஆனால் இந்த ச்லோகம் இதுகாறும் வெளிவந்துள்ள ஸ்ரீ ராமாயணப் பதிப்புகளில் ஒன்றிலும் காணப்படவில்லை. இருபது முப்பது ஓலை ஸ்ரீ கோசங்களை நானா தேசங்களிலிருந்து ஸம்பாதித்து வைத்துக் கொண்டு சோதித்து ஸ்ரீ ராமாயணத்தைப் பதிப்பித்தவர்கட்கும் இந்த ச்லோகம் கிடைக்கவில்லை. நாலைந்து வருஷங்களுக்கு முன் அருமையாகக் கிடைத்ததாக ஒரு ஆப்தர் காட்டினர். சென்னை ஜி. ஏ. நடேசன் அண்டு கம்பெனியாரால் ஆங்கில மொழி பெயர்ப்புடன் வெளியிடப்பட்ட ஸ்ரீ ராமாயண ஸம்க்ஷேபத்தில் யுத்த காண்டத்தில் (பக்கம் 330-ல்) இந்த ச்லோகம் அச்சிடப் பட்டு மிருக்கிறது. ஆனால்' "ஆவயோரந்தரே'' என்ற விடத்தில் புஜயோரந்தரே என்று காண்கிறது. இருந்தாலும் ஒருவிதமாக ச்லோக ஸந்நிவேசம் கிடைத்தது பரமானந்தத்தை விளைக்கின்றது.

திருவாய்மொழி யீட்டில் (2-2-4) பூவும் பூசனையுந் தருமே என்ற விடத்தில் "ஸஏஷ ப்ருது தீர்க்காக்ஷஸ் ஸம்பந்தீதே ஜநார்தந; என்று ஸ்ரீ பீஷ்மர் நெடும்போது அவனுடைய பரத்வத்தை உபபாதித்துக்கொண்டு போந்து'' என்றவிடத்தில் அடையவளைந்தானரும்பதத்தில், "இந்த ச்லோகம் இப்போதைய மஹாபாரத க்ரந்தங்களில் பீஷ்மருடைய வாக்ய

மாகக் காணப்படவில்லை யென்றும், வேறொரு இடத்தில் தரும புத்திரரைக் குறித்து மார்க்கண்டேயருடைய வாக்கியமாகக் காணப்படுகின்றதென்றும் சொல்லுகிறார்கள்.'' என்று எழுதப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இதனால் முந்நூறு நானூறு வருஷங்களுக்கு முன்னமே இத்தகைய விபர்யாஸங்கள் விளைந்தனவாக அறியலாகிறது.

நமது பூருவாசாரியர்களின் திவ்ய க்ரந்தங்களில் உதாஹரிக்கப்பட்டுள்ள ப்ரமாணங்களை மாத்திரமாவது நாம் நன்கு பரிஷ்கரித்து வைத்துக்கொள்வது நலம். இவ்விஷயத்தில் மஹான்கள் முயற்சிகொள்ளவேணும்.

## தென்மொழியும் வடமொழியும்

உலகில் பல பாஷைகள் தோன்றியிருந்தாலும் ஸம்ஸ்க்ருத பாஷைக்கும் தமிழ்ப் பாஷைக்குமுள்ள சிறப்பு மற்றெந்த பாஷைக்குமில்லை யென்னலாம். ஆனால் தேசாபிமானம் பாஷாபிமானம் ஜாத்யபிமானம் குலாபிமானம் என்று சொல்லப்படுகிற பலவகையபிமானங்களுள் பாஷாபிமானமும் ஒன்றாதலால் அவரவர்களுக்குத் தம் தம் பாஷைகளில் உள்ள அபிமானம் பேர்க்கவும் பேராதது. வடுகு கன்னடம் மலையாளம் ஹிந்தி முதலிய பாஷைகளைப் பயின்றவர்கள் அவ்வப் பாஷைகளுக்குச் சிறப்பு நினையாமையில்லை. அது கூடாதென்றாவது தகாதென்றாவது இப்போது நாம் மறுக்க வந்தோமல்லோம்.

பிரகிருதத்தில் நம்முடைய இக் கட்டுரையை *ந ஹி நிந்தா ந்யாயத்திற் கொள்க. ஆழ்வார்கள் எம்பெருமானைத் துதிக்கும்போது "அந்தமிழினின்பப்பாவினை அவ்வடமொழியை" என்றும் 'செந்திறத்த தமிழோசை வடசொல்லாகி' என்றும் இங்ஙனே யருளிச் செய்கிறார்கள். இவ்வுபய பாஷைகளின் ஸ்வரூபமாக எம்பெருமானை யேத்துகின்றார்கள்.

தமிழும் அபப்ரம்சமான பாஷைதானே யென்று சிலர் முற்காலத்திலேயே சொல்லத் தலைப்பட்டார்கள். அதை மறுத்து இது அகஸ்த்யரென்னும் மஹர்ஷியினால் குலாவப்பட்ட திவ்யபாஷையென்று நிரூபித்தார்கள் நம் ஆசாரியர்கள். ஈடு முப்பத்தாறாயிரப்படியிலுள்ள பல ஸ்ரீஸூக்திகளை ஸங்க்ரஹித்து 'ஆகஸ்த்யமும் அநாதி" என்றார் ஆசார்ய ஹ்ருதயகாரர். "ஸாசாகஸ்த்ய ப்ரஸூதாத்விதி பரிஜக்ருஹே" என்றார் தேசிகர். பாதுகாஸஹஸ்ரத்திலும் "கும்பீஸூநோரஸூர கபளக்ராஸிந:'' என்றது காண்க.

தந்தையும் தனயனும் போலவோ தமையனும் தம்பியும் போலவோ மிக்கவுறவு கொண்டாடி விளங்குகின்ற இவ்விரு பாஷைகளின் சுவையை உட்புகுந்து அநுபவிக்கப் பெறுவதென்பது தனிப்பட்டவொரு பாக்கியமாகும். ஸம்ஸ்க்ருதபாஷையின் சுவட்டையும் சுவையையும் நன்கறிந்த மஹாகவிகள் தங்கள் அருமருந்தன்ன வாக்கைப் பெரும்பாலும் விஷயாந்தர வர்ணனைகளிற் செல்லவிட்டார்களே! என்கிற வருத்தமொன்று மாத்திரம் நமது நெஞ்சை விட்டகலாதது. ஆயினும் அவர்களுடைய சொற்சுவை பொருட்சுவைகள் பெரிதும் ரஸிக்கத்தக்கனவென்பதில் ஐயமில்லை.

ஈண்டு ஒரு விஷயத்தை யெடுத்துக்கொண்டு பேசுவோம். காளிதாஸர் ஒரு நாடகத்தில் ஒரு பெண்மாதை வருணிக்கின்றார் :— [விக்ரமோர்வசீய நாடகத்தில்]

*ஆபரணஸ்யாபரணம் ப்ரஸாதநவிதே: ப்ரஸாதநவிசேஷ:, உபமாநஸ்யாபி ஸகேப்ரத்யுபமாநம் வபுஸ் தஸ்யா:'' என்று இதைக் காணும்போது எமக்குத் தோன்றியதாவது—நம்பெருமாள் ஸந்நிதியில் எம்பெருமானுக்குப்படியேத்தம் முதலானவை சொல்லும்போது 'ஆபரணத்துக்கு அழகு கொடுக்கும் பெருமாள்!' என்று விருதூதுவது நெடுநாளாகவுள்ளதொரு வழக்கம். அதைக் காளிதாஸர் கேட்டிருக்கக் கூடும். அந்தப் பொருளை தாம் எடுத்துக்கொண்ட வர்ணநீய விஷயத்தில் ஏறிட்டுக் கூறிவிட்டார்.

கம்பர் பிராட்டியைப் பற்றிப் பேசுங்கால் வெகு அற்புதமாகக் கூறியுள்ள பாசுர மொன்று கேண்மின்;

"இழைகளுங் குழைகளுமின்ன முன்னமே
மழைபொரு கண்ணிணை மடந்தை மாரொடும்
பழகியவெனினும் இப்பாவை தோன்றலால்
அழகெனு மவையு மோரழகு பெற்றவே."

[மிதிலைக்காட்சிப் படலம்—34.

காதணிகள் முதலிய ஆபரணங்கள் பலவும் இந்தச் சீதை அவதரிப்பதற்கு முன்னமே கண்ணழகிகளான பல மாதருடனே பழகியவையாயிருந்தாலும் அவை இப் பிராட்டி யவதரித்த பின்பு இவளிடத்து வந்து சேரப்பெற்று, பிறர்க்கு அழகைத் தருவன வென்று சொல்லப்படுகிற அவ்வணிகலன்களும் தாம் புதுமையாக அழகு பெற்றன— என்பது இச் செய்யுளின் தாத்பரியம். பிறமாதர்கள் ஆபரணங்களை யணிந்தே அழகு தோன்றப் பெறுவார்கள்; ஆபரணமில்லையென்றால் கண்ணுற்காண வழங்காது. பிராட்டியோ வென்னில் இயற்கையழகு மலிந்தவளாதலால் ஆபரணமணிந்து அழகுபெற வேண்டியவளல்லள். ஆயினும் மங்களார்த்தமாக ஆபரணங்களணிந்து விளங்குகின்றாளென்ற விஷயம் எவ்வளவு சமத்காரமாகப் பேசப்பட்டுளதென்று பாருங்கள்.

## கஜேந்திர மோக்ஷம்

எம்பெருமான் ஆனைக்கு அருள் செய்தனனென்கிற கதை இதிஹாஸ புராணங்களிலும் ஆழ்வாராசார்ய ஸ்ரீ ஸூக்திகளிலும் மிக அதிசயமாகப் பாராட்டிப் பேசப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் திருவல்லிக்கேணி முதலான திவ்ய தேசங்களில் ஆடி மாதத்துப் பௌர்ணமி யன்று இந்த இதிஹாஸம் உத்ஸவரூபமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. சில திவ்ய தேசங்களில் சித்திரை மாதத்துப் பௌர்ணமியன்று கொண்டாடப்படுவதாகவும் தெரிகிறது. நாள் பேதித்தாலும் இவ்வுத்ஸவம் திவ்ய தேசங்களிலும் மற்றும் ஸாமான்ய தேவாலயங்களிலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. * தொழுங் காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே" என்று நம்மாழ்வாருளிச் செய்தபடி பெரிய திருவடியின் மீதேறி அன்று எம்பெருமான் காட்சி தரும அதிசயம் கல் நெஞ்சையும் கரையப் பண்ணுமது. பரமபக்தனுக்கு அருள் செய்யப்புறப்பாடு கண்டருளுகிறபடியாதலால் இப்புறப்பாட்டில் எம்பெருமானுடைய திருமேனியும் திருமுக மண்டலமும் புதுக்கணித்து விளங்கும் வீறு அநுபவ ரஸிகர்களுக்கே அறியவெளியது.

எம்பெருமான் பக்தர்களுக்கு அருள் செய்த இதிஹாஸங்கள் பல பல இருக்கச் செய்தேயும் இவ்விதிஹாஸத்தை அர்ச்சாவதாரத்தில் பிரபலமாகக் கொண்டாடுவது எதற்காகவென்று ஆராய்ந்தபோது அடியேனுடைய நெஞ்சில் தோன்றியவற்றை இங்கு விண்ணப்பஞ் செய்துகொள்ள விரும்புகிறேன். இந்த கஜேந்திர மோக்ஷ கதையில் முக்கியமாக இரண்டு சாஸ்த்ரார்த்த வுண்மைகள் வெளியாகின்றன. அருள்பெறும் பக்தர்களைப் பற்றின தத்துவம் ஒன்று; அருள் தரும் எம்பெருமானைப் பற்றின தத்துவம் மற்றொன்று. பக்தர்களைப் பற்றின தத்துவம் யாதெனில்;—வர்ணம் ஆச்ரமம் வித்யா வ்ருத்தம் என்னுமிவற்றால் ஏற்றம் பெற்றவர்களே எம்பெருமானுடைய திருவருளுக்கு இலக்காவர் என்பதில்லை; இவற்றால் தண்ணியரானவர்களும் பக்தியின் கனமொன்றே காரணமாக முக்திச் செல்வம் பெறத் தட்டில்லை—என்பதாம். ஆசார்யஹ்ருதயத்தில் முதல் பிரகரணத்தின் முடிவில் "அஜ்ஞர் பிரமிக்கிற வர்ணாச்ரம வித்யா வ்ருத்தங்களை கர்த்தபஜன்மம் ச்வபசாதமம் சில்பநைபுணம் பஸ்மாஹுதி சவவிதவாலங்காரமென்று கழிப்பர்கள்" என்றுள்ள சூர்ணிகை இங்கு அநுஸந்திக்க வுரியது. திருமாலையில் முடிவில் "அடிமையில் குடிமையில்லா" என்கிற பாசுரந் தொடங்கி ஐந்து பாசுரங்களினால் பாகவதர்களின் உத்கர்ஷத்தை மிகவும் உத்துங்கமாக நிரூபித்தருளின தொண்டரடிப் பொடியாழ்வார் உடனே * பெண்ணுலாஞ் சடையினானும்.........ஆனைக்கு அன்றருளை யீந்த * என்ற பாசுரம் முழுவதினாலும் இந்த கஜேந்த்ர வ்ருத்தாந்தத்தை யருளிச் செய்து தலைக்கட்டினவாற்றை நோக்கினாலும் இது நன்கு அறியற்பாலதாம்.

இனி, இக் கதையில் எம்பெருமானைப் பற்றின தத்துவம் யாதெனில்; எம் பெருமான் அவதாரங்கள் செய்வது எதற்காகவென்று பிரபலமாக வொரு கேள்வி பிறக்கிறது. இதற்கு பகவத்கீதையில் பகவான் தானே சோதிவாய்திறந்து ஒரு ஸமாதானமருளிச் செய்துள்ளான். "பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம், தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே" (4-8.) என்பது ப்ரஸித்தமான ச்லோகம். ஸாதுக்களை ஸம்ரக்ஷித்தல் துஷ்டர்களைத் தொலைத்தல் தர்மஸ்தாபநம் செய்தல் என்கிற மூன்று ப்ரயோஜனங்கள் அவதாரத்தினால் ஸாதிக்கப்படுமவையாக இதில் பேசப்பட்டுள்ளது. இதில் பிரபலமாக வொரு சங்கையுண்டாகக் கூடியது. எம்பெருமானே ஸத்யஸங்கல்பன்; விசாலமான பிரபஞ்சங்களின் ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களையெல்லாம் க்ஷணகாலத்திலேயே ஸங்கல்பமாத்திரத்தினாலேயே செய்து தலைக்கட்டுவதாக உபநிஷத்துக்கள் ஓதுகின்றன. அத்தகைய ஒப்புயர்வற்ற சக்திவாய்ந்த பெருமான் ஸாது பரித்ராணம் முதலியவற்றைச் செய்தருள விரும்பினால் இவற்றைத் தனது அப்ரதிஹத ஸங்கல்ப வைபவத்தினால் செய்து முடிக்கலாகாதோ? இவற்றிற்காக ❋ நாட்டிற் பிறந்து படாதனபட்டு ❋ என்கிறபடியே பலவகைக் கஷ்டங்களை யநுபவித்தற் குறுப்பான அவதாரங்களைச் செய்ய வேணுமோவென்று சங்கை தோன்றுமன்றோ.

இதற்கு கீதாபாஷ்யத்திலேயே பரிஹாரமுள்ளது. அதில் "பரித்ராணாய ஸாதூநாம்" என்பதற்கு பாஷ்யமிட்டருளாநின்ற எம்பெருமானார் "மத்ஸ்வரூப சேஷ்டிதாவலோகந ஆலாபாதிதாநேந தேஷாம் பரித்ராணாய" என்று அருளிச் செய்துள்ளார். எம்பெருமானுடைய திருவுருவத்தையும் திவ்ய சேஷ்டிதங்களையும் நேரில் காணப்பெற வேணுமென்றும் நேரில் ஸம்பாஷிக்கவேணுமென்றும் கண்ணாரக்கண்டு நேராக ஆராதிக்க வேணுமென்றும் ஆசைப்படுமவர்களே ஸாதுக்களெனப்படுவார்கள். அன்னவர்களைப் பரித்ராணம் செய்வதாவது கீழ்ச்சொல்லப்பட்டவிதமான அவர்களது மனோரதத்தை நிறைவேற்றுவித்தலாகும். இது ஸங்கல்பத்தாலே நிர்வஹிக்கக்கூடியதன்று. இதனை கஜேந்த்ரமோக்ஷ சரிதையிற் கண்டுகொள்ளலாமென்று நம்மாழ்வார் எடுத்துக் காட்டியருள்கின்றார்.

திருவாய்மொழியில் (3-1-9) ❋ மழுங்காத வைநுதிய ❋ என்கிற பாசுரத்தில் 'தொழுங் காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே" என்ற இரண்டாமடியும் மேலிரண்டடிகளும் உற்று நோக்கத்தக்கன. முதலையின் வாயிலகப்பட்டுத் துடித்து ஆதிமூலமேயென்று கதறின கஜேந்த்ராழ்வான், அக் கூக்குரல் கேட்டு அரை குலையத் தலைகுலைய மடுவின் கரையிலே வந்து நின்ற எம்பெருமானை நோக்கி "நாஹம் களேபரஸ்யாஸ்ய த்ராணார்த்தம் மதுஸூதந, கரஸ்தகமலாந்யேவ பாதயோரர்ப்பிதும் தவ" என்றான். என்றேனுமொரு நாள் அழிந்தே போகக்கூடியதான இந்த வுடலைப் பாதுகாத்துக்கொள்வதற்காக நான் கரைந்தே னில்லை; எம்பெருமானே! உன்னை நேரில் ஸேவித்து உன்றன் பொன்னடிகளில் இத்தாமரைமலர்களைப் பணிமாறுவதற்காகவே கரைந்தேன் என்றான். இப்படிப்பட்ட ஆசையை ஸங்கல்பத்தினால் தலைக்கட்டுதல் எங்ஙனே ஸாத்யமாகும். ஒரு நாளுமாகாது.

ஆக, இவ்விரண்டு தத்துவங்களையும் நன்கு காட்டிக் கொடுக்கும் இதிஹாஸம் கஜேந்த்ரமோக்ஷமேயாதலால் இதனை ஆலயங்களில் சிறப்பாகக் கொண்டாடவேண்டிய அவசியம் ஏற்பட்டதென்று தோன்றுகிறது.

## நாஸ்திகனுக்கும் ஆஸ்திகத்வம்

எப்போதுமே ஆஸ்திகர்கள் குறைந்தும் நாஸ்திகர்கள் நிறைந்துமிருப்பது ஸஹஜம்; ஆஸ்திகர்கள் ஸமயோசிதமாகப் பலவகை யுபதேசங்களைச் செய்து நாஸ்திகர்களைத் திருத்துவதிலேயே கருத்தூன்றியிருத்தல் வேண்டும். 'இந்த பாபியினுடைய துர்ப்புத்தி நம்முடைய உபதேசத்தினாலா திருந்தப்போகிறது' என்று நினைக்கவே கூடாது. நல் விஷயங்களை உபதேசிப்பது அடியோடு நிஷ்ப்பலமாய்விடாது; என்றேனுமொருநாள் பலிக்கவுங்கூடும். எமது அநுபவத்திற்கண்டதோர் இதிஹாஸம் கேண்மின்;—

பரமநாஸ்திகனுனவொருவனுக்கும் மஹா ஆஸ்திகரான வொருவர்க்கும் ஒப்புயர்வற்ற நட்பு ஏற்பட்டிருந்தது. அதை தாராமைத்ரீ என்று சொல்லவேணும். இவர்களுடைய நட்புப் போல் வேறு எவர்க்குமே நட்பு கண்டதில்லை என்றும் கூறலாம். அப்படி உயிர் நண்பராக வாழ்ந்தனர். ஆஸ்திகனுன நண்பன் தனது நாஸ்திக நண்பனைத் திருத்துவதற்குப் பல வழி களும் பார்த்துக்கொண்டேயிருந்தனன். ஆனுலும் அந்த நாஸ்திகன் தன் பிடிவாதத்தை ஈஷத்தும் விடமாட்டான். "அப்பா! நீ எது சொன்னுலும் கேட்கிறேன்; ஆனுல் சாஸ்த் ரத்தை நம்பு என்கிற வார்த்தையை மாத்திரம் நீ என்னிடம் சொல்லாதே. சாஸ்த்ரமெல் லாம் கட்டுக்கதையென்றே என்னுடைய உறுதி. அதில் எனக்கு ஒருநாளும் நம்பிக்கை யுண்டாகாது என்றே நாஸ்திக நண்பன் அடிக்கடி சொல்லுவன். ஆனுலும் நல்ல காலம் பிறக்குமென்றேயிருந்தான் ஆஸ்திகன்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் அந்த நாஸ்திகன் ஒருகஷ்டத்திற்கு உள்ளாகி சிகித்ஸை யடைவதற்காக ஆஸ்பத்திரியில் சென்று சேரும்படி நேரிட்டது. இதைக் கேள் விப்பட்ட ஆஸ்திக நண்பன் மிக வருந்தி அவனை விசாரிப்பதற்காக அங்குச் சென்று 'நண்பா! ஏனிப்படி? திடீரென்று என்ன கஷ்டம் வந்தது? எதனுல் வந்தது?' என்று விசாரித்தான். அதற்கு அவன் பதில் சொன்னுன்—'நான் நித்தியம் தாஸீ க்ருஹத்திற்குப் போகிற வழக்கப்படி இன்றைக்கும் போனேன்; புறப்படும்போதே ஒற்றைப் பார்ப்பான் எதிரே வந்தான்; அபசகுனமாகிறதேயென்று திரும்பிச் சற்று உட்கார்ந்துவிட்டுத்தான் போனேன். ஆனுல் அந்த ஸமயம் கொழுத்த ராகு காலமென்று எனக்கு ஞாபகமில்லாம லிருந்தது. ஞாபகமிருந்தால் புறப்பட்டிருக்கவே மாட்டேன். ராகுகால பலன் கைமேல் கண்டதாயிற்று. போன விடத்தில் எதிர்பாராதபடி ஒருவனேடே குத்துச் சண்டை செய்ய நேர்ந்தது; அது கத்திச் சண்டையாய் முடிந்து ஆபத்தாகி இங்கே வந்து சேர்ந்திருக்கிறேன்' என்றுன்.

இந்த வார்த்தையை ஆஸ்திக நண்பன் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருந்து அந்த நாஸ்திக நேசனுக்கு உடம்பு லகுவான பிறகு, 'தம்பீ! சுப சகுனம் அப சகுனம் என்பவை சாஸ்த்ரங்களினுல் தான் ஏற்பட்டிருக்கிறது. ராகு காலத்தின் கொடுமையும் சாஸ்த்ரத்தினுல் தான் ஏற்பட்டிருக்கிறது. தாஸீ க்ருஹம் போவதின் ஹேயத்வமும் சாஸ்த் ரங்களில்தான் ஏற்பட்டிருக்கிறது. சகுனத்திலும் ராகு காலத்திலும் மாத்திரம் உனக்கு நம்பிக்கை ஏற்பட்டு மற்றவற்றில் நம்பிக்கை ஏற்படாமலிருப்பதை நினைக்குங்கால் எனக்கு வெகு ஆச்சரியமாயிருக்கிறது' என்று பலவும் பேசினுன். இது கேட்ட நாஸ்திக நண்ப னுக்கு ஒன்றுமே மறுவாய் திறக்க முடியவில்லை. ஆஸ்திக நண்பனுடைய அழகான வார்த்தை அவனது நெஞ்சில் பசுமரத்தாணி போல் பதிந்து விட்டது. நாஸ்திகத் தன்மை வெகு மூடத்தனம் என்று அப்போதே அழுத்தமாகப் பட்டுவிட்டது. மிகவும் கழிவிரக்கங் கொண்டான். அந்த க்ஷணம் முதலாகவே ஆஸ்திகர்களில் தலைவனுக ஆய்விட்டான்.

## ஒரு விநோதப் பேச்சு

ஒரு மேதாவியான சிறுவன் ஒரு மஹாப்ரபுவை யடுத்திருந்தான். இச்சிறுவனுக் குப் படிப்பு அடியோடு கிடையாது. வாக்சாதுரியம் மாத்திரம் மிகவுண்டு. வெகு அழகாகப் பேசவல்லவன். இந்தப் பேச்சினிமைக்காகவே மஹாப்ரபு இச்சிறுவனைத் தன்னிடத்திலே வைத்துக்கொண்டு போஷித்துவந்தார். இப்படியிருக்கையில் இச்சிறுவனுக்கு விவாஹ ப்ரஸக்தி யேற்பட்டது. 500 ரூபாயிருந்தால் விவாஹம் நடைபெறுவதாயிருந்ததனுல் ஏழை யான இச்சிறுவன் எங்கிருந்து எப்படி அவ்வளவு பணம் சேகரிப்பதென்று திடுக்கிட்டிருந் தான். மஹாப்ரபு ஸந்தோஷமாயிருக்கும் சமயத்தில் அவரிடத்தில் ப்ரஸ்தாவஞ்செய்து 'தாங்களே கைகொடுத்து விவாஹத்தை நடத்திவைக்கவேணும்' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான். அதற்கு ப்ரபு, 100 ரூ. மாத்திரமே என்னுல் கொடுக்க முடியும்; அதற்கு மேல் ஒரு பைஸாவும் என்னிடத்தில் நீ எதிர்பார்க்கலாகாது; சுப முகூர்த்தம் நிச்சயமான பிறகு ஷ 100 ரூபாயைப் பெற்றுக்கொண்டு போ, என்று சொல்லிவிட்டார். சிறுவனும் ஸந்தோஷமென்றுன். பிறகு ஒரு மாதத்தில் முகூர்த் தம் நிச்சயமாயிற்று. சிறுவன் பிரபுவிடம் வந்து இனிமையாகப் பேசிக்கொண்டிருந்து முகூர்த்த நிச்சயமானதை ப்ரஸ்தாவித்து 'மஹாப்ரபோ! இதற்காக ஐநூறு ரூபாய்

கொடுப்பதாகத் தாங்கள் வாக்களித்திருக்கின்றீர்களே! அதைக் கொடுக்கவேணும்' என்ருன். பயலே! பொய் சொல்லாதே' என்ருர் பிரபு. "நானூறு ரூபாய் கொடுப்பதாகச் சொன்னீர்களே, அதைக் கொடுங்கள்' என்ருன் சிறுவன். 'பயலே ஏதுக்கிப்படி பொய் சொல்லுகிருய்?' என்ருர் பிரபு. 'முந்நூறு ரூபா கொடுப்பதாகச் சொல்லியிருந்தீர்களே, அதையாவது கொடுங்கள்' என்ருன் சிறுவன். இதுவும் பொய்யல்லவா? என்ருர் பிரபு. இரு நூறு ரூபா கொடுக்கிறேனென்றீர்களே யென்ருன் சிறுவன். இதுவும் அஸத்யமே என்ருர் பிரபு. கடைசியாக நூறு ரூபாய்தான் கொடுங்கள் என்ருன் சிறுவன்.

"பயலே! இதை முதல் வார்த்தையிலேயே கேட்டிருக்கலாகாதா? இத்தனை பொய்யுரைகள் எதற்காகச் சொன்னுய்? பொய்யனுக்கு நான் பைசாவும் கொடுக்கமாட்டேன்' என்ருர் பிரபு. இது கேட்ட சிறுவன், 'மஹாப்ரபோ! நான் ஒரு பொய்கூட சொல்லவில்லை. நான் சொன்னதெல்லாம் சத்யமே' என்ருன். எப்படி சத்யமென்று கேட்டார் பிரபு. சிறுவன் பதில் சொல்லுகிருன்.

(1) ஐ நூறு ரூபா கொடுப்பதாக நீங்கள் சொன்னது உண்மையே. ஆங்கிலத்தில் (ஐ) என்பதற்கு நான் என்று அர்த்தமல்லவா? ஐ-நான் நூறு ரூபா கொடுக்கிறேனென்று நீங்கள் சொன்னது உண்மைதானே.

(2) நானூறு கொடுப்பதாக நீங்கள் சொன்னதும் உண்மையே. 'நான் நூறு' என்று பதம் பிரியாதோ? நான் நூறு ரூபா கொடுக்கிறேனென்று நீங்கள் சொன்னது உண்மைதானே.

(3) முந்நூறு ரூபா கொடுப்பதாக நீங்கள் சொன்னதும் உண்மையே. முன்—முன்பு (ஒரு மாதத்திற்கு முன்பு) நூறு ரூபா கொடுக்கிறேனென்று நீங்கள் சொன்னீர்களல்லவோ?

(4) இரு நூறு ரூபா கொடுப்பதாக நீங்கள் சொன்னதும் உண்மையே; இரு—சில நாள் பொறுத்திரு; நூறு ரூபா கொடுக்கிறேனென்றுநீங்கள் சொன்னீர்களல்லவோ? ஆக இவ்வுண்மைகளைத் தானே நான் பேசினேனென்ருன் சிறுவன். இந்த வியாக்கியானங்களைக் கேட்ட பிரபுவுக்கு அளவுகடந்த ஆனந்தமுண்டாயிற்று. உடனே தனது தனதிகாரியை வரவழைத்து 'இப்பயல் கேட்ட தொகையை மும் மடங்காகக் கொடு' என்று கட்டளையிட்டான். அதைக்கேட்டவுடனே சிறுவன் இந்தத் தொகையும் ஏற்கெனவே நீங்கள் வாக்களித்ததுதான் என்ருன். எப்படி யென்று பிரபு கேட்க. சற்றுமுன்னே நான் விவரித்த படி 100, 200, 300, 400, 500 ஆகிய 5 தொகையையும் கூட்டினுல் 1500 ஆகவில்லையா? நான் கேட்ட தொகையின் மும் மடங்கு இதுதானே யென்ருன் சிறுவன். புத்தி சாதுரியத்திற்கு எல்லாரும் அதிசயித்தனர்.

## ஸ்ரீராமாயணத்தில் சில விரோத பரிஹாரங்கள்

இதிஹாஸ புராணங்களுக்குள் ஸ்ரீராமாயணத்தின் அமைப்பு அற்புதமானது. அநுபவிக்க அநுபவிக்க ஆனந்தம் மேலிடும்படியான திவ்யக்ரந்தம் இஃதொன்றே. பக்திமான்களான மேதாவிகள் உட்புகுந்து குடையக்குடைய அர்த்த விசேஷங்களைச் சுரந்து கொண்டேயிருக்கின்ற ச்லோக ரத்னங்களையுடையது இத் திவ்யக்ரந்தம்.

இதை ஆசார்யமுகமாகக் கேளாதவர்கள் இதில் பல குசோத்யங்களைச் செய்து கொண்டிருப்பார்கள். அத்தகைய துராக்ஷேபங்கள் மலிந்த புத்தகங்கள் பல பாஷைகளிலும் வெளிவந்திருக்கின்றன. சிலர் ராமன் என்றும் ராமஸ்வாமியென்றும் பெயரிடப் பெற்று ஸ்ரீராமாயண தூஷணத்தினுலேயே வயிறு வளர்க்கப் பெறுகிருர்களென்பதும் பலரறிந்ததாகும். அன்னவர்களுக்குத் தக்க மறுப்பு நூல்களும் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன.

ஸ்ரீராமாயணத்தில் பக்திபூண்டவர்களுக்கும் ஆங்காங்குப் பரஸ்பர விரோதம் முதலியன சில தோற்றுவதுண்டு. அவற்றுக்குப் பரிஹாரங்கள் நம் பூருவர்களால் வியாக்கியானங்களிலும் மற்றுஞ் சில நூல்களில் ப்ராஸங்கிகமாகவும் நிரூபிக்கப்பட்டிருக்

கின்றன, அத்தகைய விஷயங்களை ஒழுங்காக வரிசைப்படுத்திவைக்க வேணுமென்கிற ஆவல் எமக்குண்டு. நாமும் பல பல விஷயங்களை இன்னமும் பெரியாரிடம் கேட்டுத் தெளிவுபெற வேண்டியவர்களே. இப்போது ஒரு விஷயத்தை பிரஸ்தாவிக்கிறோம்.

அயோத்யாகாண்டத்தில் ஸ்ரீராமனுக்கு மகுடாபிஷேகஞ் செய்வதாகத் தசரத சக்ரவர்த்தி நிச்சயித்து நியமனம் தந்து அதற்குப் பூர்வாங்கமாக ஆகவேண்டிய சடங்குகளும் முடிவுபெற்று அபிஷேகமாக வேண்டியதாயிருந்த ஸமயத்தில் கைகேயியின் வாக்குக்குக் கட்டுப்பட்ட தசரதன் இராமனைக் காட்டுக்குப் போக விடை தரவேண்டி வந்ததென்கிற கதா ஸந்தர்ப்பம் யாவருமறிந்ததே. மகுடாபிஷேக மஹோத்ஸவம் கொண்டருள ஸித்தனுயிருந்த இராமனுக்கு முடிதவிர்ந்து சடைபுனைந்து மரவுரியுடுத்து நல்லுணவுகளை விட்டுக் காய்கிழங்குகளைப் புசித்துக் கல்லும் முள்ளுமான காட்டு வழிகளிலே திரிந்து பதினுன்கு வருஷகாலம் வனவாஸஞ் செய்ய நேர்ந்ததென்றால், உண்மையில் இது வருத்தமாக இருக்கக்கூடுமா? ஆனந்தமாக இருக்கக்கூடுமா? என்று நாம் ஆலோசிக்குமளவில், தலைவிதியென்று ஒப்புக்கொள்ள வேண்டியதாக நேர்ந்த இவ்விஷயத்தில் ஆனந்தம் எப்படியிருக்கக்கூடும்? உள்ளபடி வருத்தந்தானிருக்கும்—என்றே பலரும் நினைக்கத்தக்கதும் சொல்லத்தக்கதுமாம். ஆனால் இது தவறுதலான அபிப்ராயமேயாகும். ராஜ்யாபிஷேகத்திற் காட்டிலும் வனவாஸத்தில் இராமபிரானுக்கு ஸந்தோஷாதிசயமேயுண்டாயிற்றென்று ஸ்பஷ்டமாகத் தெரிகின்றது.

> *மா ச லக்ஷ்மண! ஸந்தாபம் கார்ஷீர் லக்ஷ்ம்யா விபர்யயே*
> *ராஜ்யம் வா வநவாஸோ வா வநவாஸோ மஹோதய:* — அயோத். 22-29.

என்பது இராமபிரான் சோதிவாய் திறந்தருளிய வாசகம். இளையபெருமாளை நோக்கிக் கூறின இவ்வார்த்தையில், நமக்கு ராஜ்யமானுலென்ன? வநவாஸமானுலென்ன? என்று முதலிற் சொல்லி உடனே 'வநவாஸோ மஹோதய:' என்று வநவாஸந்தான் பேரின்பமென்று கூறின இராமபிரான் கபடமாகக் கூறுமவனல்லனே; நெஞ்சிலுள்ளதை உள்ளபடியுரைப்பவனன்றோ இராமன்.

இவ்விஷயத்தைக் கம்பர் கூறுமிடத்து, வெகு ஆச்சரியமாகக் கூறுகின்றார்:—

> "இப்பொழு தெம்மனோரால் இயம்புதற் கெளிதோ? யாருஞ்
> செப்பருங் குணத்திராமன் திருமுகச்செவ்வி நோக்கின்
> ஒப்பதே முன்பு, பின்பு வாசகமுரைக்கக்கேட்ட
> அப்பொழு தலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா."

என்னுமிச் செய்யுள் குறிக் கொள்ளத்தக்கது. * கலக்கியமா மனத்தனளாய்க் கைகேசி வரம்வேண்ட மலக்கியமாமனத்தனனுய் மன்னவனும் மறுதொழியக் குலக்குமரா! காடுறையப் போவென்று விடை கொடுத்த வளவிலே இராமபிரானுக்குண்டான மனமகிழ்ச்சி இப்பொழுதெம்மனோராலியம்புதற் கெளிதோ? என்றார் (கம்பர்). அந்த ஸந்தோஷத்தைப் பற்றி என்னுற் பேசமுடியாதென்று கையொழிந்தார். அப்போதுண்டான திருமுகச் செவ்வியை நேராக ஸாக்ஷாத்கரித்தறிய வேணுமத்தனை யல்லது அதனைக் கண்ணுற் காணுத நான் எனது புல்லிய சொல்லைக் கொண்டு அறிவிக்கப் பார்ப்பது பேதைமையன்றோவென்றுநின்றார். அந்தத் திருமுகச் செவ்வியை இனி யாரால் கட்கூடாகக் காணமுடியும்? அது அஸம்பாவிதமன்றோ? ஒருவாறு நீர் தெரிவித்தால் தெரிந்து கொள்வோமென்று அருகிலிருந்த சீடர்கள் சொல்ல, அதனை யொருவாறு சொல்லுகின்றேன் கேண்மினென்று பின்னடிகளாற் கூறித் தலைக்கட்டுகின்றார். வனவாஸ நியமனம் பெறுவதற்கு முன்னே இராமபிரானது திருமுகமண்டலம் தாமரையோடொத்ததாக மாத்திரம் சொல்லலாம்படியிருந்ததாம். வனவாஸ நியமனம் பெற்றபின்போ வென்னில், (அப்பொழுதலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா) அப்போதலர்ந்த செந்தாமரைப் பூவின் செவ்வியிற் காட்டிலும் பன்மடங்கு மேம்பட்ட செவ்வியைப் பெற்றதாம் திருமுகம்.

இங்ஙனே அதிசயமாகக் கூறுதற்குக் காரணம் * வநவாஸோ மஹோதய; * என்று இராமபிரானருளிய சொல்லேயாகும். இது வெறுமனே சொன்ன வார்த்தைதானென்றும் மகுடாபிஷேக மங்களம் தவறிப் போயிற்றே யென்கிற துக்கமே அடிவயிற்றில் குடிகொண்டிருந்ததென்றும் கண்டறியும்படியாக வுள்ளது. எங்ஙனேயென்னில்;

“ஸுப்தமத்த ப்ரகுபிதாநாம் ஸ்வபாவஜ்ஞாநம் த்ருஷ்டம்” என்பது அநுபவ ஸித்தமான வொரு நீதி. உலகில் அவரவர்கள் தம் தம் ஸ்வரூப வுண்மையை மறைத்து வைத்துப் பேசுவதுமுண்டு. அப்படி மறைத்துவைத்திட்டாலும் உறக்கவேளையிலும் உந்மாத காலத்திலும் கோப ஸமயத்திலும் இயற்கையான தன்மை வெளிவந்தே தீருமென்பது மேற்குறித்த நீதியின் கருத்து. ஒரு ஸ்த்ரீ பல பாஷைகளையும் பயின்று எல்லாப் பாஷைகளிலும் தாராளமான வியவஹாரம் செய்து கொண்டிருந்தாள். அவளுக்கு இயற்கையான பாஷை எதுவென்று தெரிந்துகொள்ள ஒருவனுக்கு விருப்பமுண்டாயிற்று. அவளை நேரில் கேட்டால் உண்மை வெளிவராதென்று கருதித் தானே ஒரு உபாயம் செய்யலுற்றான்; அதாவது அவள் அயர்ந்து உறங்கிக்கொண்டிருக்குமிடஞ் சென்று அவளது பாதத்தை வடுக்கென்று கிள்ளினான். உடனே அவள் அலறி ‘எவடு ரா லஞ்சா கொடுகு!’ என்று தெலுங்கில் நிந்தித்துக்கொண்டே யெழுந்தாள். அதனால் அவளுடைய இயற்கையான பாஷை தெலுங்கென்று தெரியலாயிற்று, வேறு பாஷையாயிருந்தால் அந்த ஸமயத்தில் அவள் வாயில் அங்ஙனே பேச்சு வந்திராது.

ஒரு ப்ராஹ்மணப் பையனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. பூணூலையுங் கழற்றியெறிந்து சிகையையும் சிரைத்துக் கண்டபடியே திரிந்துகொண்டிருக்கிறான்; இன்ன ஜாதிக்காரனென்று தெரிந்துகொள்ள முடியாதபடி கிடக்கிறான். ஒரு மஹான் அவனது ஜாதியைத் தெரிந்துகொள்ள விரும்பி அவன் வாயைக் கிளறினான்; மாருதமஸி-அஸி மருதாம்—மருதாமோஜ: ⁕ என்று தொடங்கிப் பலபல வேதவாக்கியங்களை ஓதத் தொடங்கினான். அதனால் அவன் பிராமணனென்று வெளியாயிற்று.

ஸ்ரீராகவனே கடலரசனை நோக்கிச் சரணாகதி பண்ணினான். ஆகிஞ்சந்யமும் அநந்ய கதித்வமுமுடையவன் பண்ணவேண்டிய சரணாகதியை ஸர்வலோக சரண்யனான தான் பண்ணினான். அப்போது கடலரசன் முகங் காட்டாதவளவிலே கோபமுண்டாகிப் பேசுகையில் ⁕ அஸமர்த்தம் விஜாநாதி மாமயம் மகராலய: ⁕ என்று உதடு துடிப்பச் சொல்லிக்கொண்டே சீறிச் சிவந்தான் ஸ்ரீராமன். தான் பரம ஸமர்த்தனென்கிற வுண்மை அந்த கோப ஸமயத்தில் வெளிவந்துவிட்டது. ஆகவே ‘ஸுப்த மத்த ப்ரகுபிதாநாம் ஸ்வபாவ ஜ்ஞாநம் த்ருஷ்டம்’ என்கிற நீதியானது சாலவும் பொருத்தமுடைத்து.

இராமன் ஸீதையைப் பிரிந்த வருத்தத்தினால் உந்மத்தனாகிப் புலம்புகையில்,

✠ ராஜ்யாத் ப்ரம்சோ வநே வாஸோ நஷ்டா ஸீதா ஹதோ த்விஜ;
ஈத்ருசீயம் மமாலக்ஷ்மீ: நிர்த்தஹேதபி பாவகம். [ஆரண். 67—25.

என்று சொல்லிப் புலம்பியது ஸ்பஷ்டமாகவுள்ளது. கிடைக்கவேண்டியதாயிருந்த ராஜ்யம் அந்தோ கிடைக்காமற் போயிற்று. ராஜ்யம் கிடைக்காமற் போனாலென்ன? நகரத்திலேயே ஒரு மூலையில் வஸிக்கப் பெற்றிருக்கலாமே; அதுவுமில்லாமே காட்டில் வந்து திண்டாட வேண்டியதாயிற்று. இப்படிப்பட்டதன்றோ என்னுடைய தரித்திரம்! என்று புலம்புகின்ற இப்படியை நோக்கினால் ராஜ்யப்ரம்சமும் வநவாஸமும் துக்கரூபமாகவே பெருமாளுடைய அடிவயிற்றில் உறைந்து கிடக்கிறதென்று தெரியவில்லையா? வநவாஸோ மஹோதய: என்று அப்போது சொன்ன வார்த்தை புறப்பூச்சாக உபசாரமாய்ச் சொன்ன வார்த்தையென்று இப்போது கொள்ள வேண்டியதாகிறதன்றோ.

ஒரு மஹாதனிகர் தம்முடைய தகப்பனருடைய ச்ராத்தத்தில் ஒரு ஸ்வாமியை நிமந்த்ரணம் பண்ணியிருந்தார். அவரும் வெகு பாரிப்புடனே ஸ்நாநாதிகளை முடித்துக்கொண்டு பன்னிரண்டு மணிக்கு ஸஜ்ஜராக எழுந்தருளியாயிற்று. அப்போது கர்த்தா என்ன சொன்னாரென்னில்; ஸ்வாமிந்! அடியேன் எதிர்பார்த்திருந்த வேறொரு ஸ்வாமி இப்போதுதான் எழுந்தருளிவிட்டார்; அவரையே நிமந்த்ரணம் சொல்ல வேண்டியதாக நேர்ந்துவிட்டது. தேவரீருக்கு மற்றொரு ஸமயம் பார்க்கலாம்; இப்போது திருமாளிகைக்கு எழுந்தருள்க. வருத்தப்படவேண்டாம் க்ஷமிக்கவேணும் என்றார். இதைக்கேட்டு அந்த ஸ்வாமி என்ன சொல்லக்கூடும். ‘அடியேனுக்கு வருத்தமொன்றுமில்லை, மிகவும் ஸந்தோஷமே. அடியேனுக்கே உடம்பு கொஞ்சம் அநுகூலமில்லாமலிருந்தது. தேவரீர் நிர்ப்பந்தமாக நியமித்ததேயென்று ஒப்புக்கொண்டேன். இப்போது விடை கொடுத்தது பற்றிப் பரம ஸந்தோஷமே’ என்று சொன்னார். ஆனாலும் அவரது முகத்தில் அசட்டுச் சிரிப்பே

காணக்கூடியதாயிருக்கும். மூன்று நாள் வரையில் அவர்க்கு உணவே வேண்டியிராது. வயிற்றினுள்ளே அவ்வளவு வேதனை செய்யும். அந்தப் பரிதாபத்தை வெளியில் சொல்லிக் கொள்ள முடியுமா? பரம ஸந்தோஷமென்றுதான் மேலுக்குச் சொல்ல வேண்டியிருக்கும் இராமபிரான் * வநவாஸோ மஹோதய: * என்றதும் இந்தக் கணக்கிலே சேர்க்கவேண்டிய தாகின்றது. ஏன்? * ராஜ்யாத் ப்ரம்சோ வநே வாஸ: * என்று எடுத்துக் காட்டிய ஆரண்ய காண்ட ச்லோக முள்ளதே, அதுதான் இந்த நிர்ணயத்தைத் திடமாக விளைவிக்கின்றது. ஆக இவ்வளவும் பூர்வபக்ஷம்.

இனி இங்கு உணர்த்தவேண்டிய ஸமாதானம். 'ராஜ்யாத் ப்ரம்சோ வநே வாஸ:' என்று பரிதபித்துச் சொன்னவிது எந்த ஸமயத்தில்? எதனாலே? என்று நன்கு ஆலோசிக்க வேணும். பிராட்டியைப் பிரிந்து பரமபாகவதோத்தமரான ஜடாயுமஹாராஜரையும் இழந்து பரிதாபம் பொறுக்கொணாதிருந்த ஸமயத்தில் வெளிவந்த வார்த்தை இது. வநவாஸ நியமனம் கிடைத்தபோது 'வநவாஸோ மஹோதய:' என்று சொன்னது என்ன திருவுள்ளத் தாலே யென்னில்; ஜநக சக்ரவர்த்தி ஸீதாபிராட்டியைத் தாரை வார்த்துக் கொடுக்கும் போது * இயம் ஸீதா மம ஸுதா ஸஹதர்மசரீ தவ * என்று சொல்லிக் கொடுத்தார். ஸ்ரீராமபிரான் தான் செய்யக்கடவதான தருமத்திற்கு அவளைத் துணைவியாகக் கைப்பற்றி னான். தான் செய்யக்கடவதான தருமம் எதுவென்னில், சரணாகத பரித்ராணமே யாகும். *விதித: ஸ ஹி தர்மஜ்ஞச் சரணாகத வத்ஸல; என்று இராவணனுக்கு உபதேசித்த பிராட்டியாலும் இது நன்கு காட்டப்பட்டது. தர்மஜ்ஞ: என்று சொல்லி உடனே சரணா கதவத்ஸல: என்கையாலே பெருமாளுடைய தர்மாநுஷ்டானமாவது சரணாகத பரித்ரா ணமே யென்றதாயிற்று. இப்படிப்பட்ட தர்மாநுஷ்டானத்திற்குத் துணைபுரிவதற்காகவே ஸீதையை ஜநக சக்ரவர்த்தி மணம்புரிவித்துக் கொடுத்தார். பெருமாளும் அந்த தர்மாநுஷ் டானத்திற்கென்றே கைப்பற்றினார். அவளுடன் காட்டுக்கெழுந்தருளினது சரணாகத பரித்ராணத்திற்குப் பாங்காகுமென்கிற குதூஹலங் கொண்டேயாயிற்று. காகாஸுர பரித்ராணம் முதலிய பிரகரணங்களில் பிராட்டியின் ஸஹயோகம் பரம ஸந்தோஷகரமாக இருந்ததையும் கண்டவர் பெருமாள். அப்படிப்பட்ட பிராட்டியைப் பிரிந்த துக்கம் ஒன்று. பரம பாகவத சிகாமணியான ஜடாயு மஹாராஜரை இழந்த பரிதாபமொன்று. இவ் விரண்டினாலும் திருவுள்ளம் உடை குலைப்படவே காட்டுக்கு வந்தது விபலமாகவும் விபரீத பலமாகவும் ஆயிற்றேயென்கிற துயரத்தினால் * ராஜ்யாத் ப்ரம்சோ வநே வாஸ: * என்கிற ச்லோகம் ஆவிர்ப்பவித்ததில் பிசகொன்றுமில்லை.

ஒரு பெரியவர், காஞ்சீபுரம் பேரருளாளனுடைய பெரிய திருவடி யுத்ஸவத்தை ஸேவிக்கப் பல வருஷங்களாகப் பாரித்து வெகு குதூஹலத்துடன் காஞ்சிக்கு வருகிறார். அல்லது திருவேங்கடமுடையானுடைய மஹோத்ஸவம் ஸேவிக்க வேணுமென்று வெகு ஆவலுடன் திருமலைக்கு வருகிறார். அல்லது வைகுண்ட ஏகாதசியுத்ஸவம் ஸேவிக்கவேணு மென்று வெகு ஆவலுடன் திருவரங்கம் பெரிய கோயிலுக்கு வருகிறார். வந்தவிடத்தில் ஒரு விதமான ஸௌகரியமும் கிடைக்காமல் மழை முதலான கஷ்டங்களில் சிக்கித் தெருவில் திண்டாடிப் பெருமாள் ஸேவையும் ப்ராப்தமாகாதபடியானால் அப்போது பரிதாப வார்த்தை எவ்விதமாக வெளிவரக்கூடுமென்று பாருங்கள். அந்தோ! நாம் ஊரிலேயே ஸுகமாக வாழ்ந்திருக்கலாமே; ஏதுக்கு இப்படி வந்து வருந்துகிறோம்? இதுவும் ஒரு தலை விதியா நமக்கு! என்றிப்படி பலவாறு சொல்லிக் கதறியழ ப்ராப்தமாகுமன்றோ. அதனால் என்ன குறை? ஊரிலிருந்து புறப்பட்டுவரும்போது இருந்த குதூஹலத்தில் குறைகூற முடியுமோ? எந்த இச்சையினால் முதலில் குதூஹலமுண்டாயிற்றோ அந்த இச்சை முட்டுப் பட்டால், குதூஹலம் மாறுபடுமன்றோ.

இராமபிரானுக்கு வனவாஸகுதூஹலமுண்டானபோது ஆந்தரிகமாகவே தான் உண்டாயிற்று. * வனவாஸோ மஹோதய: * என்ற வார்த்தையில் சிறிதும் பொய்ம்மையில்லை— என்று இவ்வளவால் நிரூபித்தாயிற்று.

———

Q22:1 N47

## ஆசார்யஸூக்தி விசேஷம்

ஆளவந்தார் அருளிச் செய்த ஸ்தோத்ர ரத்நத்தில்—✠தவாம்ருதஸ்யந்திநி பாத பங்கஜே நிவேசிதாத்மா கதம் அந்யதிச்சதி, ஸ்திதேரவிந்தே மகரந்த நிர்ப்பரே மதுவ்ரதோ நேக்ஷுரகம்ஹி வீக்ஷதே * என்பது இருபத்தேழாம் ச்லோகம். எம்பெருமானே! உனது திருவடித் தாமரையில் வைக்கப்பட்ட மனமானது வேறொன்றை எப்படி விரும்பும்? தேன் நிறைந்த தாமரைப்பூ இருக்கும் போது வண்டு முள்ளிப் பூவைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டாதன்றோ? என்பது இந்த ச்லோகத்தின் தாத்பரியம், இதில் மூன்றாவது பாதத்தில் பெரிய விசாரம். "ஸ்திதே அரவிந்தே" என்கிற பாடந்தான் எங்கும் பரவியுள்ளது. பெரிய வாச்சான் பிள்ளையும் தேசிகனும் வியாக்கியானஞ் செய்தருளிய பாடமும் இதுவேதான்.

ஆனால் அலங்கார சாஸ்த்ர பண்டிதன் ஒருவன் இந்த ச்லோகத்தை யெடுத்துக் கொண்டு இதில் பாடம் தவறிவிட்டதாகச் சில நூற்றாண்டுக்கு முன்பு எழுதி வைத்திருக்கிறான். அதாவது—'ஸ்திதே என்று ஸப்தமியான பாடம் இங்குப் பொருந்தாதென்றும், 'ஸ்தித:' என்று ப்ரதமாந்தமான பாடமே ரஸவத்தரம் என்றும், ஆகவே "ஸ்திதோரவிந்தே' என்றிருந்த பாடம் ஒருகால் மாறிவிட்டதென்றும் அந்த பண்டிதனுடைய அபிப்ராயம். "மகரந்த நிர்ப்பரே அரவிந்தே ஸ்தித: மதுவ்ரத: இக்ஷுரகம் நவீக்ஷதே ஹி" என்று அந்வயித்துப் பொருள் கொள்ள வேணுமென்பது அவனுடைய கருத்து. பூர்வார்த்தத்தில் "பாத பங்கஜே நிவேசிதாத்மா' என்று இருப்பதனால் அதற்கு இணங்க உத்தரார்த்தத்தில் "அரவிந்தேஸ்தித:' என்றிருப்பது தான் ஏற்கும் என்கிற இந்த நிரூபணத்தை ஸ்ரீ வைஷ்ணவ பண்டிதர்களும்பலர் ஆமோதிக்கிறார்கள். 'ஸ்திதேரவிந்தே' என்கிற பாடம் அவ்வளவு சுவையுடைத்தன்று என்றும் சொல்லுகிறார்கள்.

இது அரஸிகர்களின் பேச்சே யாகும். அலங்கார பண்டிதர்கள் ரஸிகர்களே யானாலும் ஆளவந்தாருடைய திருவுள்ளக் கருத்தை ஊன்றி நோக்கினார்களல்லர். ஸ்தித: என்று ப்ரதமாந்த மாக்கி அதை வண்டுக்கு விசேஷணமாக்குவதில் சுவையில்லை யென்பதை விவேகிகள் ஊன்றி நோக்கவேணும். வண்டானது தாமரைப்பூவில் இருக்கிற காலத்திலே முள்ளிப் பூவைக் கண்ணெடுத்துப்பாராது என்று சொல்லுகிறதாக வன்றோ ஆகிறது. இதனால் தாமரைப்பூ கிடையாதபோது முள்ளிப் பூவைத் தேடிச் செல்லும் என்பது கிடைத்தே தீருமே. அது அஸ்வரஸமான பொருளல்லவா? வண்டுக்குத் தாமரைப்பூ கிடைக்கவுமாம், கிடைக்காதொழியவுமாம்; அதில் விசாரமில்லை; தாமரைப்பூ இருக்க முள்ளிப் பூவில் நசை கொள்ளமாட்டா தென்பதே ரஸவத்தரம்.

"தவ பாதபங்கஜே நிவேசிதாத்மா" என்றதற்குச் சேர "அரவிந்தே ஸ்தித:' என்றிருக்க வேணுமென நினைப்பதும் தவறு. வண்டு தாமரைப்பூவிலே உட்கார்ந்திருப்பது போல, பக்தன் எம்பெருமானது திருவடியிலே உட்கார்ந்திருக்கிறானல்லனே. பகவத் பாதாரவிந்தத்தில் விருப்பம் கொண்டவன் அந்தத் திருவடியிருக்க வேறொன்றை விரும்ப மாட்டானே என்கிற விதுதான் பூர்வார்த்தத்தில் விஷயம். இதற்குச் சேர த்ருஷ்டாந்தவாக்ய நிர்த்தேசம் அமைய வேணுமானால் 'ஸ்திதேரவிந்தே' என்கிற பாடந்தான் இணங்குமேயல்லது 'ஸ்தித:' என்கிற பாடம் ஒரு வழியாலும் பொருந்த ஔசித்யமில்லை யென்பதை அறிவுடையார் ஆழ்ந்து நோக்கவேணும்.

83265

## ததிபாண்டன் பெற்ற பேறு

ஸ்ரீ க்ருஷ்ணவதாரத்தில் பகவான் செய்த சிறுச் சேவகங்கள் யாவர்க்கும் ஸுப்ரஸித்தமே. ஒருநாள் யசோதை வெளியில் போயிருக்கிற ஸமயம் பார்த்து நவநீதம் முதலானவற்றைத் திருடி அமுது செய்துகொண்டிருந்தான். அப்போது திடீரென்று அங்கே தாய் வந்து சேர்ந்து ஒரு கோலையெடுத்தாள் அடிப்பதற்காக. உடனே ✠ தாயெடுத்த சிறு கோலுக்கு உளைந்தோடி என்று திருமங்கை யாழ்வாரருளிச் செய்தபடியே கண்ணன் அங்

தத் தடியடிக்குப் பயந்து புழக்கடை வழியாய் ஓட ஆரம்பித்தான் எங்கேயாவது போய் ஒளிந்து கொள்ளலாமென்று.

கண்ணன் ஓடுகிறுன், அவனைத் தொடர்ந்துகொண்டு யசோதையும் ஓடி வருகிறுள். இவன் சிறுவனுகையால் கனவேகமாக வோடுகிறுன். அவள் தன் வயதுக்குத் தக்கபடி மெதுவாகவே வருகிறுள். "கண்ணு! நீ எவ்வளவு தூரம் ஓடிப்போனுலும் இன்று நான் உன்னை விடுவதில்லை' என்று சொல்லிக்கொண்டே தொடர்ந்து வருகிறுள் யசோதை

முன்னே ஓடிச்சென்ற கண்ணன் ஒரு மரத்தடியில் ஒரு இடைக்கிழவன் ஒரு பெரிய தயிர்ப்பானையைக் கவிழ்த்து அதில் சாய்ந்துகொண்டு வெகு சிரமத்துடன் தூங்கிக் கொண்டிருக்கக் கண்டான். அந்தத் தயிர்ப்பானையினுள்ளே தான் புகுந்துகொண்டு யசோதையை ஏமாத்திவிட வேணுமென்றும் நினைத்தான்.

உடனே அந்தக் கிழவனைத் தட்டியெழுப்பினுன் கண்ணன். அந்தக் கிழவனுக்கோ வயது தொண்ணூற்றைந்து. அவன் ஒரு சுவடியும் படித்ததில்லை. ஒருவரிடத்தில் ஒரு பகவத் கதையும் கேட்டதில்லை. பகவானெருவன் உண்டு என்கிற ஞானமும் அவனுக்கில்லை. அவன் பத்தாவது வயது முதல் தயிர் மோர் விற்பனை செய்து ஜீவிப்பதையே தொழிலாகக் கொண்டவன். நித்யமும் காலையில் தயிர்ப்பானையைத் தலையில் சுமந்துகொண்டு தன் ஊரிலிருந்து வெளியூர்களுக்குப் போய்த் தயிரை விற்பனைசெய்து உச்சி வெய்யிலில் ஊருக்குத் திரும்பிவருவது அவன் வழக்கம். இது தவிர வேறென்றும் அவனுக்குத் தெரியாது. அன்றைக்கும் அப்படியே தயிரை விற்பனை செய்துவிட்டுத் திரும்புகையில் வெய்யிலின் கொடுமையினுல் இளைத்துப்போய் மரத்தடியில் உறங்கிக் கிடந்தான்.

கண்ணன் தட்டியெழுப்பியதனுல் எழுந்த அவன் கண்ணனது திருமேனியைக் கண்டவாறே அவசமாகவே அவனிடத்தில் ஈடுபட்டுவிட்டான். இவனே பரதேவதையென்று அவன் மனதில் பட்டுவிட்டது. இன்று எப்படியாவது இவனிடத்தில் மோக்ஷம் வேண்டிப் பெறவேணுமென்கிற குதூஹலமும் அவனுக்கு உண்டாய்விட்டது. இதுவரையில், ஒரு தெய்வமுண்டென்கிற ஞானமும் மோக்ஷமுண்டென்கிற ஞானமும் அடியோடில்லாத அவனுக்கு அப்போது சிறிய இடைப்பையனுன கண்ணனைக் கண்டவாறே இவனே பரதெய்வமென்கிற பிரதிபத்தியும், இவனிடத்தில் மோக்ஷமபேக்ஷிக்க வேணுமென்கிற எண்ணமும் எப்படி யுண்டாயிற்றென்று சிலர் சங்கிக்கக்கூடும். ✠ நாயமாத்மாச்ருதிதான் இந்த சங்கையைப் பரிஹரிக்கவேணும். அதாவது,நாயமாத்மா ப்ரவசநேந: லப்யயமேவைஷவ்ருணுதே தேநலப்ய: ✠ என்கிற உபநிஷத்தில் தான் பற்றும் பற்று அகார்யகரமென்றும் அவன் பற்றும் பற்றே கார்யகரமென்றும் சொல்லியிருக்கிறது. பகவான் தானுகவே வந்து பரிக்ரஹிப்பதுதான் அவன் பற்றும்பற்று. அதுவே பரகத ஸ்வீகாரமென்பதும். அது சில பாக்யசாலிகளுக்கே ப்ராப்தமாகும். அது ப்ராப்தமாய்விட்டால் பிறகு அஸம்பாவிதமானது ஒன்றுமில்லை. ✠ கேவலம் ஸ்வேச்சயைவாஹம் ப்ரேக்ஷே கஞ்சித் கதாசந என்று சொல்லுகிற பகவான் இன்று இந்தக் கிழவனைத் தானுகவே வந்து விஷயீகரித்தபடியாலே இவன் உத்தமாதிகாரியாய்விட்டான். உடனே தத்வஹித புருஷார்த்தங்களில் நிர்மலமான ஞானம் பிறந்துவிட்ட திவனுக்கு.

அக்கிழவன் துயிலெழுந்து கண்ணனைப் பார்த்து 'பையா! நீ யார், எங்கு வந்தாய்? எதற்காக வந்தாய்? என்னையேன் எழுப்பினுய்' என்று கேட்டான்: அதற்குக் கண்ணன் உள்ளபடி பதில் சொன்னுன். "நான் வீட்டில் ஏதோ திருடிவிட்டேன்; அதை என் தாய் பார்த்துவிட்டாள்; கோபித்து என்னை யடிக்க ஆரம்பித்தாள். நான் அஞ்சி ஓடிவந்துவிட்டேன்; என்னை விடாமல் அவளும் அதோ பின் தொடர்ந்து மெள்ள வந்துகொண்டிருக்கிறுள். அவள் கையில் நான் அகப்பட்டேனுகில் என்னை மிகவும் துன்பப்படுத்தி விடுவள். கிழவா! உன் காலில் விழுகிறேன் இன்று என்னை நீதான் காக்கவேணும். இந்தத் தயிர்த் தாழிக்குள் நான் புகுந்துகொள்ளும்படி நீ இசைந்திருக்க வேண்டும்; என் தாயார் வந்து என்னைப் பற்றிக் கேட்டால் என்னை நீ காட்டிக் கொடுக்கக்கூடாது. 'பையன் இங்கு வந்தானே அவன் எங்கே?' என்று அவள் உன்னைக் கேட்டாலும் எனக்குத் தெரியாதென்று நீ சொல்லிவிட வேணும். உன்னை வணங்குகிறேன்" என்று பலவும் சொல்லிக் கண்ணன் வேண்டிக் கொண்டான். அப்போது அக்கிழவன் 'நாம் முக்திலாபம் பெறுவதற்கு இது தான் வாய்த்த ஸமயம்' என்று எண்ணி உள்ளத்தில் அபரிமிதமான ஸந்தோஷங்கொண்டு 'பையா! அப்படியே யாகட்டும்' என்று சொல்லி, அந்தத் தயிர்த் தாழிக்குள்ளே கண்

ண்ணேப் புகவிட்டு அதைப் பூமியில் கவிழ்த்துவிட்டு அதன்மேல் சாய்ந்துகொண்டான். மெள்ள கண்ணனைத் தேடி வந்துகொண்டிருந்த யசோதை அக்கிழவனிடம் வந்து 'அப்பா! இப்படி ஒரு பையன் வந்தானே, பார்த்தையா? எப்படி போனுன் தெரியுமா?' என்று கேட்டாள். அதற்கு அவன் 'பையனே அய்யனே, எனக்கென்ன தெரியும்? போ போ' என்று சொல்லிவிட்டான். அவளும் போய்விட்டாள்.

பிறகு ஒரு நாழிகை பொறுத்து கண்ணன் கிழவனை நோக்கி 'தாதா! என் தாயார் வீடு போய்ச் சேர்ந்திருப்பள்; இனி எனக்குப் பயமில்லை; நான் இந்த சட்டிக்குள் எத்தனை நாழிகை பதுங்கிக்கிடப்பேன்? மூச்சு தணறிப்போகிறதப்பா, தயவுசெய்து என்னை வெளிப்படுத்திவிடு' என்று கெஞ்சினுன்.

கிழவனே உன்னை நான் விடமாட்டேனென்கிறுன். கண்ணனே தயிர்த்தாழிக்குள் தணறுகிறுன். 'கிழவா! நீ ஏன் என்னை விடமாட்டேனென்கிருய்: நான் தாயின் கையில் பிடிபட்டிருந்தால் நாலடிபட்டு அவ்வளவோடே எனக்கு தண்டனை முடிந்திருக்கும். அதற்குத் தப்பிப்பிழைக்க வேணுமென்று நான் உன்னை சரணம் பற்றினேன்: என்னை நீ இந்த சட்டிக்குள்ளேயே கொல்லப் பார்க்கிருப்போலிருக்கிறதே. இன்னும் இரண்டு நிமிஷம் போனுல் என் உயிர் போய்விடும்போலிருக்கிறதப்பா: வினைக என்னைக் கொலை செய்யாதே. நீ எழுந்திரு; நான் புறப்பட்டுப் போகிறேன். உனக்கு ஓர் அஞ்ஜலி. உனக்கு மிகவும் புண்யமாகும்'' என்று கெஞ்சுகிருன். கிழவனே அத்தாழியில் சாய்ந்தபடியேயிருக்கிருன். "உன்னை நான் பிடித்தேன் கொள் சிக்கெனவே" என்ற நம்மாழ்வாரைப்போலே 'கண்ணு இன்று நான் உன்னை கெட்டியாகப் பிடித்துக்கொண்டேன், விடமாட்டேன்: நீ எல்லாருக்கும் ஏதோ கொடுக்கிருயாமே அதை எனக்கும் கொடுத்தால் உன்னை விடுவேன். இல்லையேல் உன் தாயிடத்தில் உன்னைக் காட்டிக் கொடுத்தேவிடுவேன்' என்கிறுன். அது கேட்ட கண்ணன் "தாதா! என்னிடம் என்ன இருக்கிறது நான் யாருக்கு என்ன கொடுக்கிறேன்; ஒன்றுமில்லையே, நீ அபேக்ஷிப்பது என்ன? சொல்லு'' என்றுன்.

கிழவன்—கண்ணு! எனக்குத் தெரியுமப்பா; முகுந்தனல்லவா நீ, எல்லாருக்கும் நீயல்லவோ முக்தி கொடுப்பவன்; அது உன் கையில்தானிருக்கிறதென்பது எனக்குத் தெரியாதா? என்னை ஏமாத்தாதே. அது கொடுத்தேன் என்று நீ சொன்னுல்தான் உன்னை விடுவேன் என்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டான்.

அப்போது தாழிக்குள்ளேயே தணறுகிற கண்ணன் நினைக்கிறுன்; என்னவென்றுல், நாம் ராமாவதாரம் பண்ணினேம்; அப்போது பிதாவான தசரதனுக்கு நம்முடைய பெருமையை எத்தனையோ விதமாகத் தெரியும்படி செய்தோம். விச்வாமித்ர முனியைக் கொண்டு ✠அஹம் வேத்மி மஹாத்மாநம் ராமம் ஸத்யபராக்ரமம் ✱ என்று சொல்லச் செய்தோம். தாடகாதாடகேயாதிகளைக் கொன்று அந்த முனியின் யாகத்தை ரக்ஷித்தது, அஹல்யா சாப விமோசனம் செய்தது, ஜனகன் காட்டின சிவதநுஸ்ஸை முறித்தது முதலான அதிமாநுஷ சேஷ்டிதங்களைச் செய்து இவையெல்லாம் அந்த தசரதன் காதிலே விழும்படி செய்தோம். பரசுராமபங்கத்தை அவனே நேரில் கண்ணுல் பார்க்கும்படியாகவும் செய்தோம். இவ்வளவு செய்தும் அவன் நம்மைப் பரம புருஷனென்று அறிந்து கொள்ளவில்லை. கைகேயி வரத்துக்குக் கட்டுப்பட்டு, அஸத்யம் சொன்னுல் நரகம் வருமே யென்று அஞ்சி நம்மைக் கைவிட்டு ஸ்வர்க்கம் போய்ச் சேர்ந்தான். இந்தக் கிழவனுக்கோ ✠அஹம் வேத்மி மஹாத்மாநம் என்று ஒருவருஞ் சொல்லவில்லை. நாமும் இவனிடத்தில் நம்முடைய அதிமாநுஷசக்தி விசேஷமொன்றையும் காட்டவில்லை. நம்முடைய அசக்தியையே காட்டி இவனை சரணம் பற்றினேம். அப்படியிருந்தும் இவன் நம்மை உள்ளபடியறிந்துகொண்டான். 'தாயாரடிப்பதற்கு அஞ்சி ஓடிவந்து நம்மை சரணமடைந்த இவனு நமக்கு முக்தியளிப்பன்' என்று இவன் நினைக்க வேண்டும்படியான காரியம் நாம் செய்திருந்தும் இவன் இதை மாயாமாநுஷசேஷ்டிதமாகவே எப்படியோ தெரிந்துகொண்டுவிட்டான் அஹஹ! இவனே உத்தம பாத்ரம்; ✱ தத்வஜ்ஞாநாத் முக்தி: என்கிற வசனம் இவனிடத்தில் பலிக்காவிட்டால் வேறு யாரிடத்தில் பலிக்கும்? இவனே தத்வஜ்ஞன்; இவனே முக்திப்ரஸாதத்திற்கு அர்ஹன்—என்று எண்ணினுன் கண்ணன். ஆனலும் இன்னமும் இவனைச் சிறிது பரீக்ஷிப்போமென்றெண்ணி, சட்டிக்குள் இருந்தபடியே 'கிழவா! முக்தி கொடு என்கிருய்; முக்தியென்றுல் இன்னதென்றே எனக்குத் தெரியாதே; தாயாருக்கு அஞ்சியோடி வந்து உன்னைப் புகலடைந்து உயிர்தப்பின என்னை நோக்கி முக்தி கொடு என்

கிருயே ; உன்னுடைய அசட்டுத்தனத்தை நான் என்ன சொல்லுவேன் ; ஏதோ நீ என்னைப் பரிஹாஸம் பண்ணுகிருப் போலிருக்கிறது. இந்தத் தாழி நிறைந்த தயிரைக் குடித்துவிட்டுக் கொழுத்திருக்கிற நீ பண்ணும் பரிஹாஸத்திற்கு சிறுவனை நானே இலக்கு? உன் வயதுக்குத் தகுந்தவர்களோடே நீ பரிஹாஸம் பண்ணினுல் ஏற்றிருக்கும். கிழவா ! என்னுயிர் போகிறது ; வீண் தாமதஞ் செய்து என்னைக் கொல்லாதே ; விட்டுவிடு, விட்டுவிடு' என்கிருன் கண்ணன்.

கிழவன்—' கண்ணு ! நீ முடிந்து போனுலும் ஸரி, இடிந்து போனுலும் ஸரி ; கண்டிப்பாகச் சொல்லுகிறேன் கேள். இன்று நானுன்னை விடுவதில்லை. முக்தி கொடுத்தேனென்று சொல்லித்தான் என்னிடம் நீ விடுபடவேண்டும் ; இல்லையேல், தாயாருடைய தண்டனைக்காவது நீ ஆளாகியே தீரவேண்டியதாகும்' என்று ஒரே பேச்சாகச் சொல்லிவிட்டான்.

உடனே கண்ணன், இவ்வளவு உத்தமாதிகாரி கிடைத்தானேயென்கிற மஹத்தான ஸந்தோஷத்தினுல் உள்ளம் பூரித்து தாதா ! அப்படியே உமக்கு முக்தி கொடுத்தேன்' என்ருன். கிழவன்—எனக்கு மாத்திரம் கொடுத்தால் போதாது ; இந்தத் தயிர்ச் சட்டிக்கும் கொடுக்கவேணு மென்ருன். அப்படியே கொடுத்தேனென்ருன் கண்ணபிரான். பிறகு கிழவன்—இவ்வளவும் போராது ; நானிருக்கிறவூரில் இருபது மனைக்காரர்களுண்டு. அவர்களுக்கும் கொடுக்கவேணு மென்ருன். அப்படியே கொடுத்தேனென்ருன் கண்ணன்.

பிறகு கிழவன்—' கண்ணு ! உன்னைவிட்டேன், இனி நீ போகலாம்' என்று சொல்லி யெழுந்தான். அனந்தரம் தயிர்த்தாழியில் நின்று வெளிப்படும் கண்ணபிரான் கையுந்திருவாழியுமான திருக்கோலத்தை அவனுக்குக் காட்டி அந்தர்த்தான மடைந்தான்.

ததிபாண்டத்தினுல் மோக்ஷ மடைந்தவனென்கிற காரணத்தினுல் இவனுக்கு ததிபாண்டனென்றே பெயர் ப்ரஸித்தமாயிற்று, ' சிந்தயந்தீ ' என்பது போல. இந்த இதிஹாஸம ஆசார்யஹ்ருதயம் நாலாம் பிரகரணத்தில் ' இடையன் தயிர்த்தாழி ' என்கிற விடத்து வியாக்கியானத்தில் மணவாளமாமுனிகளால் அதிஸங்க்ரஹமாகக் காட்டப்பட்டுள்ளது.

## ஸ்ரீராமாயண விசேஷம்-திருவடியெனும் திருநாமம்

ஸ்ரீராமாயண ப்ரவசநம் செய்பவர்கள் பலர் அனுமானுடைய திருநாமத்தைப் பேச வேண்டுங்காலத்தில் ஆஞ்சநேய ஸ்வாமி யென்றும் மாருதியென்றும் ஹனுமானென்றும் இப்படிப்பட்ட திருநாமங்களை இட்டு வழங்குவர். ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் படிந்த பெரியார்கள் திருவடி யென்றே வழங்குவர்கள்.

அனுமானுக்குச் சிறிய திருவடியென்றும் கருத்மானுக்குப் பெரிய திருவடி யென்றும் ஸம்ப்ரதாய வழக்கமுள்ளது. 'சிறிய' 'பெரிய' என்கிற இவ்வடை மொழிகளைக் கொடாமலே பொதுவாக இருவரையும் திருவடி யென்றே வழங்குவதுமுண்டு. ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியில் திருவடியென்று வழங்காமல் மாருதியென்ருவது ஆஞ்சநேய ஸ்வாமி யென்ருவது வழங்குவரேல் ஸம்ப்ரதாயம் வல்ல பெரியார்கள் கண் சிவக்கப் பார்ப்பர்கள்.

அனுமானுக்குத் திருவடியென்ற வழக்கத் திருநாமம் அநாதியாகவே யுள்ளதென்பதற்குக் கம்பராமாயணமும் ஸாக்ஷியாகின்றது. அதில் கிஷ்கிந்தாகாண்டத்தில் மகேந்திரப் படலத்தில் இருபத்தாருவது செய்யுள் நோக்குமின்.

"பொருவரு வேலைதாவும் புந்தியான் புவனந்தாய
பெருவடிவுயர்ந்தமாயோன் மேக்குறப் பெயர்ந்த தாள்போல்
உருவறிவடிவினும்ப ரோங்கினனுவமையாலும்
திருவடி யென்னுந்தன்மை யாவர்க்குந் தெரியநின்ருன்."

இச் செய்யுள் அனுமான் பேருருவங் கொள்ளுதலைத் தெரிவிக்கின்றது.

ஒப்பற்ற கடலைக் கடக்க வேண்டுமென்ற எண்ணங் கொண்ட அனுமான், முன்பு மூவுலகங்களையும் தாவியளந்த பெரு வடிவங் கொண்டு உயர்ந்த (அதாவது, த்ரிவிக்ரமாவ

தாரஞ் செய்த) திருமால் உயரவெடுத்த திருவடிபோல வானத்தையளாவ வளர்ந்தான் என்பதை இரண்டரை யடிகளாற் சொல்லிவிட்டு அதன்மேற் சொல்லி யிருப்பதை நோக்குமின் ;—

"உவமையாலும், திருவடியென்னுந்தன்மை
யாவர்க்குந் தெரியநின்றான்."

திருவடி யென்கிற தனது திருநாமத்தின் தன்மை உபமானத்தினாலும் யாவர்க்கும் விளங்கும்படி நின்றான்—என்றபடி. எம்பெருமானுக்குத் திருவடி ஸ்தாநீயனாக (அனுமான்) இருந்ததுபற்றித் திருவடியென்று பெயர் பெற்றிருந்தான். அன்னவன் இப்போது உலகளந்த சேவடிபோலுயர்ந்து காட்டினதாலுர் திருவடியென்கிற தனது திருநாமத்தை ஸார்த்தகமாக்கிக் கொண்டான் என்றதாயிற்று. இதனால் கம்பர் ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தைத் தழுவியவர் என்பதும் அறியலாயிற்று.

## அஷ்டவித புஷ்பங்கள்

ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் எம்பெருமானுக்கு ஸமர்ப்பிக்கும் புஷ்பங்களைப் பற்றிச் சொல்லுமிடங்களில் 'எட்டு மலர்கள்' என்று அருளிச் செய்வதைக் காணுகின்றோம். பெரியாழ்வார் * ஆநிரை மேய்க்க நீ போதியென்னும் பூச்சூடல் பதிகத்தில் *எண்பகர் பூவுங் கொணர்ந்தேன்* என்கிறார். அந்தத் திருமொழியில் செண்பகப்பூ, மல்லிகைப்பூ, பச்சை, தமனகம், பாதிரிப்பூ செங்கழுநீர், புன்னைப்பூ, குருக்கத்திப்பூ இருவாட்சிப்பூ, கருமுகைப்பூ என்று எட்டுக்கு மேற்பட்ட புஷ்பங்களைச் சொல்லி யிருக்கையாலும், இப்படிப்பட்ட இன்னும் பல புஷ்பங்களும் எம்பெருமானுக்கு உரியவை காண்கையாலும் எட்டு புஷ்பங்களென்று ஒரு நியமமாகக்கூற நியாய மில்லை. "எண்பகர் பூவுங்கொணர்ந்தேன்" என்கிற பெரியாழ்வாரது திருவாக்குக்கு வேறுவகையான அர்த்தம் செய்யக் கூடுமானாலும், * இனமலரெட்டுமிட்டிமையோர்கள் * என்றும் * கந்தமாமலரெட்டுமிட்டு நின் காமர் சேவடிக் கைதொழுதெழும் புந்தியேன் * என்றும் திருமங்கை யாழ்வாரருளிச் செய்யுமிடங்களுக்கு 'எட்டு வகையான புஷ்பங்கள்' என்றே அர்த்தம் செய்து தீரவேண்டியிருப்பதால் அந்த எட்டு வகைப் புஷ்பங்கள் எவை யென்று தெரிந்து கொள்ளவேண்டியது அவசியமாகின்றது.

மஹர்ஷிகளின் வாக்குக்களைக் கொண்டு இதைத் தெரிந்து கொள்ள இயலும் எங்ஙனே யென்னில்;

"அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம் புஷ்பமிந்த்ரிய நிக்ரஹ:
ஸர்வபூததயா புஷ்பம் க்ஷமா புஷ்பம் விசேஷத:
ஜ்ஞாநம் புஷ்பம் தப: புஷ்பம் த்யாநம் புஷ்பம் ததைவச
ஸத்யமஷ்டவிதம்புஷபம் விஷ்ணோ: ப்ரீதிகரம் பவேத்'

என்கிறார்கள் மஹர்ஷிகள். இவற்றையே ஆழ்வார்கள் திருவுள்ளம் பற்றியருளிச் செய்ததாக ஆசாரியர்கள் நிரூபித்தருளுகிறார்கள். இந்த அஷ்டவித புஷ்பங்களும் இங்கு அடைவே விவரிக்கப்படுகின்றன.

### அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம்

ஒரு பிராணிக்கும் ஹிம்ஸை புரியாமலிருப்பது தலையான புஷ்பமென்கிறது. சில வகுப்பினர் செய்யும் ஹிம்ஸையானது சாஸ்த்ரங்களினால் அனுமதிக்கப்படுகிறபடியால் அந்த ஹிம்ஸைகள் தவிர மற்ற ஹிம்ஸை கூடாதென்று கொள்ளவேணும். அநுமதிக்கப் படுகிற ஹிம்ஸைகளாவன:—

*ஷட்கர்ம நிரதா விப்ரா* என்றும் அறு தொழிலந்தணர் * என்றும் சொல்லுகிறபடியே ஓதுதல். ஓதுவித்தல், யாகம் செய்தல், யாகம் செய்வித்தல் தானம் கொடுத்தல், தானம் பெறுதல் ஆகிய அறுவகைப்பட்ட கருமங்களில் ஒன்றான யாகஞ் செய்தலில் * "பசுமாலபேத" என்கிற சாஸ்த்ரவிதிக்கு உட்பட்டுச் செய்கிற பசுவத

மானது துஷ்க்ருதமன்றென்றும் ஸுக்ருதமே யென்றும் கொள்ளப்படுகையாலே அது நிஷித்த ஹிம்ஸையாகாது. அரசர்கள் தண்டம் செலுத்துகிற முறையில் குற்றவாளர்களைப் பல வகையாக ஹிம்ஸிக்கக் காண்கிறோம். இது விஹித ஹிம்ஸையே யல்லது நிஷித்த ஹிம்ஸையன்று.

முற்காலத்தில் சங்கர் லிகிதர் என்று இரண்டு மஹர்ஷிகள் இருந்தனர். இருவரும் ஸஹோதரர்கள்; ஸ்ம்ருதிகர்த்தாக்களாகவும் விளங்கினவர்கள். இவர்கள் விபாகம் செய்துகொண்டு தனியே வாழ்ந்து வருங்கால் ஒரு நாள் லிகிதரென்பவர் தமையனாருடைய ஆச்ரமத்துக்கு வந்தார் அவரைக் காண்கைக்காக. அப்போது சங்கர் ஸமித்து தர்ப்பம் முதலியன சேகரிப்பதற்காக வெளியே சென்றிருந்தார். அவருடைய வருகையையெதிர்பார்த்து உட்கார்ந்திருந்த லிகிதர் அவ்விடத்துத் தோட்டத்தினழகை உற்று நோக்கிக் கொண்டிருக்கையில் பழுத்திருந்த வாழைக் குலையொன்றைக் கண்டு விரும்பி அதைப் பறித்துப் புசித்துவிட்டார். பிறகு தமையனார் ஆச்ரமம் வந்து சேர்ந்ததும் இச் செய்தி யறிந்து 'தம்பீ! நாமிருவரும் விபாகம் செய்துகொண்ட பிறகு எனது பொருளை நீ என் அனுமதியில்லாமல் கவர்ந்தது களவேயாகும்; இக்குற்றத்தை அரசனிடம் சென்று நீயே விண்ணப்பஞ் செய்து இக்குற்றத்திற்குரிய தண்டனையைப் பெற்றுக் கொள்வது நலம்' என்றார் அந்தக் கட்டளையைச் சிரமேற் கொண்ட லிகிதர் உடனே அரசனிடஞ் சென்று தன் வரவைத் தெரிவித்தார். இங்ஙனே மஹர்ஷி வந்திருக்கிறாரென்பதை யுணர்ந்த அரசன் அஹோ பாக்யம்! அஹோ பாக்யம்! என்று மகிழ்ந்து உபசாரங்களுடன் எதிர்கொண்டு ஸத்கரிக்கத் தொடங்கினன். அது கண்ட லிகிதர் அரசனை நோக்கி 'மஹாப்ரபோ! இப்போது நான் அபராதியாய் உன்னிடம் தண்டனை பெற்றுக்கொள்ள வந்திருக்கின்றேனேயொழிய மரியாதை பெற்றுக்கொள்ள வந்திலேன்' என்று கூறி, தாம் செய்த களவுச் செய்தியை விஜ்ஞாபித்தார்.

அதைக்கேட்ட அரசன் 'அக் குற்றத்தை நான் மன்னித்தேன்' என்றான். இது மன்னிக்கக் கூடிய குற்றமன்று என்றும் குற்றவாளனுடைய கோரிக்கையின்றிக்கே மன்னிப்பதற்கு மன்னவனுக்கு உரிமையில்லை யென்றும் சாஸ்த்ர முறையைக் கூறி உரிய தண்டனை செய்தே தீரவேண்டுமென்று லிகிதர் வற்புறுத்தவே, அரசன் ராஜ நீதிக்குக் கட்டுப்பட்டு களவுக்குற்றத்திற்குரிய தண்டனையை ஆராய்ந்து அவருடைய இரண்டு கைகளையும் மணிக்கட்டளவும் பேர்த்து விடுமாறு கட்டளை செய்து உள்ளே சென்றனன். ராஜபடர்கள் அப்படியே செய்ய, உதிரமொழுகவொழுகத் தமையனாரிடம் வந்து நின்று தாம் தண்டனை பெற்றமையைக் காட்டிக் கொண்டார். "தம்பீ! நன்று; ஸமீபத்தில் பெருகுகின்ற ஆற்றில் சென்று நீராடித் தர்ப்பணம் செய்து வா' என்று நியமித்தார். தர்ப்பணம் செய்வதற்கு ஸாதனமான கைத்தலம் கழியப்பெற்ற நம்மை நோக்கித் தர்ப்பணம் செய்து வருமாறு நியமித்த விது ஏதோ அனுக்ரஹம் போலும்! என்றெண்ணி அப்படியே ஆற்றில் சென்று நீராடி யெழுந்தவுடனே கைத்தலமும் விரல்களும் தோன்றப்பெற்று வியந்து தர்ப்பணம் நிகழ்த்தி வந்தாரென்றும் அந்த நதிக்கே பாஹுதா நதியென்று பிரஸித்தியாயிற்றென்றும் மஹாபாரதத்தில் கதையுள்ளது. இவ்வாறாக அரசர்கள் செய்யும் ஹிம்ஸையானது பாதகமான ஹிம்ஸையன்று.

மருத்துவர்கள் ரோகிகளுக்குப் பலவகையான ஹிம்ஸைகளைச் செய்யக் காண்கிறோம். அவயவங்களைக் கத்தியால் வெட்டுதல் ஊசியிட்டுக் குத்துதல், சூடு போடுதல் முதலியன செய்து பொறுக்கொணாத ஹிம்ஸைகளை யுண்டுபண்ணுகிறார்கள். இவ்விஷயத்தைக் குலசேகராழ்வார் "வாளாலறுத்துச்சுடினும் மருத்துவன்பால் மாளாத காதல் நோயாளன் போல்' என்ற பாசுரத்தாற் கூறினார். "சஸ்த்ர க்ஷாராக்நி கர்மாணி" இத்யாதி மஹர்ஷி வசனமும் ப்ரஸித்தம்., இந்த ஹிம்ஸையும் பாதகமான ஹிம்ஸையன்று.

உபாத்யாயர்கள் மாணாக்கர்களையும், தந்தைதாயர் மக்களையும் பலவகை ஹிம்ஸைகள் செய்து சிக்ஷிக்கக் காண்கிறோம். இதுவும் ஹிதபுத்தியினால் செய்வதாதலால் பாதகமான ஹிம்ஸையன்று. ஆகவிப்படிப்பட்ட ஹிம்ஸைகள் தவிர மற்ற [காமக்ரோத நிபந்தனமான] ஹிம்ஸைகளை நெஞ்சாலும் நினையாதிருப்பதே அஹிம்ஸையாகும். இதுதான் முதல் புஷ்பமென்றது.

### இரண்டாவது புஷ்பம் இந்த்ரிய நிக்ரஹம்

செவி வாய் கண் முதலானவையும் அவற்றுக்கு ஸஹகாரியான மனமும் விஷயாந்தரங்களிற் செல்லாது பகவத் விஷயத்திலேயே செல்லும்படி ஜாகரூகதையுடன் இருப்பதே இந்த்ரிய நிக்ரஹமெனப்படும். * வாரிசுருக்கி மதக்களிறைந்தினையும் சேரிதிரியாமல் செந்நிறீஇ * என்கிற பொய்கையாழ்வார் பாசுரம் முதலானவை காண்க. "ஜிஹ்வே! கீர்த்தய!" என்கிற முகுந்தமாலை ச்லோகமும் காணலாம். இப்படி ஸகலேந்த்ரிய வ்யாபாரங்களுக்கும் வகுத்த விஷயத்தை இலக்காக்குவதே இந்த்ரிய நிக்ரஹமென்க.

எல்லாவற்றினுள்ளும் மனமே முக்கியமானதால் மனதை அடக்கியாள்வதே இந்த்ரிய நிக்ரஹமாகும். ஜிதேந்த்ரியரில் தலைவனான அர்ஜுநன் பகவத்கீதையில் (ஆறுவது அத்தியாயத்தில்) கண்ணபிரானை நோக்கி "சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண!" என்று மனதை யடக்கியாள்வதென்பது முடியாத காரியமன்றோ என்றான் அதற்கு விடை கூறுகின்ற கண்ணபிரான் * அஸம்சயம் மஹாபாஹோ மனோ துர்நிக்ரஹம் சலம் * என்றருளிச் செய்கிறான். அர்ஜுந! நீ சொன்னது உண்மையே; மனதை யடக்கியாள முடியாது தான் என்று இசைந்து, உடனே * அப்யாஸேந து கௌந்தேய! வைராக்யேண ச க்ருஹ்யதே * என்றருளிச் செய்கிறான். எதுவும் முதலில் முடியாதென்று தோன்றினாலும், முயற்சி செய்து பார்ப்போமென்று முயன்று முடிப்பாருமுளர். இந்த்ரிய நிக்ரஹத்திற்கும் அப்படியே முயற்சிசெய்ய வேண்டியது அவசியமென்றதாயிற்று.

### மூன்றுவது புஷ்பம் ஸர்வபூத தயை

எந்த பிராணியினிடத்தும் இரக்க மிருக்கவேண்டும். பிறர் துயருறக்கண்டால் ஐயோவென்று தானும் துயருறுகையே தயையாகும். பிறர்க்கு ஒரு கஷ்டம் விளைந்தால் அதைக்கண்டு உகப்பாரும், இன்னமும் இப்படிப்பட்ட பல கஷ்டங்கள் உண்டாகவேணும் என்று நோற்பாரும் மலிந்த இவ்வுலகில் ஸர்வபூத தயாளுத்வமென்பது துர்லபமான குணமேயாகும். முற்காலத்தில் ஒரு ஸ்வாமி ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணத்தைப் பற்றிப் பலரிடத்திலும் விசாரித்து வந்தாராம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான லக்ஷணத்தைச் சொன்னார்களாம். நஞ்சீயரைக் கேட்டபோது அவர் ஸாதித்தாராம்; ஒருவன் தனக்கு வைஷ்ணவத்வம் உண்டு, இல்லை யென்பதை தானே யறிந்து கொள்ளலாம். பிறர் நோவு படுவதைக் கண்டு ஐயோ வென்றிருந்தானாகில் நமக்கு வைஷ்ணவத்வமுண்டு என்றுணரலாம்; பிறர் நோவுபடக் கண்டு இன்னமும் நோவுபடவேணுமென்று நினைத்தானாகில் தனக்கு வைஷ்ணவத்வமில்லையென்று தானே யறுதியிட்டுக் கொள்ளலாம் என்றருளிச் செய்தாராம். ஆகவே ஸர்வபூத தயை யென்பது ஸ்ரீவைஷ்ணவலக்ஷணத்தில் தலைமைபெற்றிருக்கும். * ஸர்வபூதாத்மகே தாத! ஜகந்நாதே ஜகந்மயே * என்ற ப்ரஹ்லாதாழ்வானுடைய நிலைமை வாய்ந்த மஹான்களுக்கு உரிய குணம் இது.

### நான்காவது புஷ்பம் க்ஷமை

பிறர் நமக்கு எத்தனை தீங்குகள் செய்தாலும் அதனால் சிறிதும் நெஞ்சு கன்றுமலும் முகம் கோணுமலுமிருக்கையும் ப்ரதீகாரம் செய்ய நினையாமலிருக்கையும் க்ஷமையாகும். இதுவே பொறுமை யெனப்படும். "பொறுத்தவன் பூமியாள்வான்" என்பதோர் சிறந்த பழமொழியை யறியாதாரில்லை. பிறர் நம்மை நிந்தித்தால் உடனே ஒன்றுக்குப் பத்து சொல்லி பதில் நிந்தை செய்யவும், பிறர் நம்மை ஓரடியடித்தால் அதற்குப் பதிலாகப் பல அடிகள் அடிக்கவும் நாம் முயல்கிறோமேயன்றி அவற்றைப் பொறுத்திருக்க ஆற்றல் பெற்றிலோம், அவ்வளவு பொறுமை உண்டாய்விடுமானால் மூவுலகையும் வென்றுவிடலாம். ✠ பரரந்த்ரேஷு ஜாத்யந்தா: பதிராச்ச பரோக்திஷு, பரீவாதேஷு யே மூகா; தைர்ஜிதம் புவநத்ரயம் ✠ என்றார் ஒரு மஹநீயர். பிறரிடத்தில் என்ன தப்பு தவறுகள் கிடைக்குமென்று பார்ப்பதில் பிறவிக்குருடராயிருக்கவேண்டும். பிறர் நம்மைப்பற்றிக் குறை கூறினால் அதைச் செவியேற்கும் விஷயத்தில் செவிடராயிருக்கவேண்டும். பிறரை வசைகூறும் விஷயத்தில் ஊமையராயிருக்கவேண்டும். இப்படி யிருப்பார் யாவரோ அன்னவர் மூவுலகையும் வென்றவரேயாவர் என்பதுமேற்குறித்த ச்லோகத்தின் பொருள்.

ஆனால் இங்கே ஒரு பெரிய பூர்வபக்ஷம் தோன்றும்; *காரண ஸத்பாவே கார்யாவச்யம்பாவ: என்றொரு நியாயமுண்டு. காரணமுண்டானால் காரியமுண்டாகியே தீருமென்றபடி. பிறரை நாம் நிந்திப்பதற்கும் அடிப்பதற்கும் எது காரணமென்றால், பிறர் நமக்குச்

செய்யும் தீங்கே காரணமாகும். அந்தக் காரணம் உண்டாகியிருக்குமளவில் அதற்கு நாம் ப்ரதீகாரம் செய்கையாகிற காரியம் (முன்னே சொன்ன நியாயத்தின்படி) உண்டாகியே தீருமன்றோ; ஆகவே வாளாவிருத்தல் எங்ஙனே ஸாத்யம்? என்று சங்கை பிறக்கும்.

இதற்குப் பெரியார் கூறும் பரிஹாரம் கேண்மின்; காரணமிருந்தால் காரியமுண்டாகியே தீருமென்கிற நிர்ப்பந்தமில்லை' காரண ஸாமக்ரியிருந்தும் ப்ரதிபந்தகஸாமக்ரியினால் காரியம் தடைபட்டொழிவதையும் காணுநின்றோம். நெருப்பு என்கிற காரணவஸ்துவினால் தஹித்தல் என்கிற காரியம் உண்டாகியே தீரக்கடவதாயிருந்தும் மணிமந்த்ரம் முதலிய ப்ரதிபந்தக ஸாமக்ரி யிருக்குமளவில் அக்காரியம் பிறப்பதில்லை யென்று சாஸ்த்ரஜ்ஞர்கள் நிரூபிக்கிறார்கள். கார்யோத்பத்தியைக் குறித்து காரண ஸத்பாவம் மாத்திரம் போராது; ப்ரதிபந்தக ஸாமக்ரியில்லாமையும் சேரவேணுமென்று நிஷ்கர்ஷித்தார்கள். ஆகவே, பிறர் நமக்குத் தீங்கு விளைக்கையாகிற காரணம் இருந்த மாத்திரத்தினால் அவர்களுக்கு நாம் பதில் தீங்கு விளைப்பதாகிற காரியம் உண்டாகியே தீரவேணுமென்ற நிர்ப்பந்தமில்லை. க்ஷமா குணமே இதற்கு ப்ரதிபந்தகமாய் நிற்கக்கடவது. அஃது உண்டானால் பிறருடைய நிந்தனைகளுக்கும் மற்றெவ்வகையான தீங்குகட்கும் ப்ரதீகாரம் செய்ய நேராது.

இந்த ப்ரபஞ்சத்தில் ஜனிப்பவர்கள் யாவரும் தோஷமே நிரம்பியவர்கள் என்றாவது குணமே நிரம்பியவர்கள் என்றாவது யாரும் சொல்ல முடியாது. உயர்ந்த பதவியில் இருக்கின்ற மஹான்கள் முதற் கொண்டு மிகவும் தாழ்ந்திருப்பவர்கள் வரையில் யாரையெடுத்துக் கொண்டாலும் ஒவ்வொருவரிடத்திலும் குணங்களும் தோஷங்களும் கலந்திருக்குமேயல்லது பரிபூர்ண குணசாலியாகவும் பரிபூர்ண தோஷபூயிஷ்டனாகவும் ஒரு மனிதனையும் காட்ட முடியாதென்று நமது நினைவு.

எவரும் பிறரை வஞ்சித்து விடலாமானாலும் தம்முடைய ஆத்மாவைத் தாம் வஞ்சித்துவிட முடியாததாலால் தம் தம்மிடத்திலுள்ள குணதோஷங்களை உள்ளபடியே அவரவர்கள் அவசியம் அறிந்தேயிருப்பார்கள். அப்படியறிந்திருந்தும், உள்ள குணங்களை மிகவும் அதிகப்படுத்திக் காட்டிக் கொள்வதற்கும்; உள்ள தோஷங்களை அடியோடு மறைத்துக் கொள்வதற்குமே பெரும்பாலும் முயற்சி செய்வது உலகவியற்கை. இதில் ஸாமான்ய ஜனங்கள் ஏமாந்து போய் விடுவதும் நிபுணர்கள் உண்மையை யறிந்து கொள்வதுமுண்டு.

பொதுவில் ஒவ்வொருவருடைய நோக்கமும் எப்படிப்பட்டதென்றால், நம்மிடத்தில் எல்லாருக்கும் நல்ல மதிப்பு உண்டாகவேணும், நம்மை நல்ல குணசாலியென்றே எல்லாரும் கொள்ளவேண்டும், நம்மிடத்தில், தீமையிருப்பதாக ஆரும் கருதக்கூடாது' என்றே ஆசை கொண்டு அதற்கு ஏற்றாப் போல் நடந்து கொள்வதிலேயே பெரும்பாலும் ஜனங்களின் நோக்கம் காண்கிறது. ஞானம் செல்வம் அழகு முதலானவை மிகச் சிறிதளவு இருந்தாலும் அவற்றை மிகவும் அதிகமாகவே காட்டிக்கொள்ள விரும்புவாரும் உண்டு. அவை அதிகமாகவேயிருந்தும் அவற்றை டம்பமாகக் காட்டிக் கொள்ள விரும்பாமல் வெகு அடக்கத்தோடு இருப்பவர்களுமுண்டு. சில பேர்கள் தங்களுடைய நிலைமையைத் தெரிந்துகொண்டு நாம் எப்படி குற்றங்களுக்குக் கொள்கலமாக இருக்கிறோமோ; இப்படித்தான் உலகில் பலரும் இருக்க நேரிடும், இவ்வுலகுக்கு இது ஆச்சரியமன்று, ஆதலால் பிறருடைய குற்றங்களைப் பற்றி நாம் கவனிப்பது வேண்டா என்று கொண்டு பிறரது குற்றங்களில் சிறிதும் புத்தியைச் செலுத்தாமல் தங்கள் காரியத்தோடே நிற்பார்கள். இத்தகைய அதிகாரிகள் அதிகமாகத் தேறமாட்டார்கள். நூற்றில் அல்லது ஆயிரத்தில் ஒருவர் தேறினால் விசேஷம். பெரும்பான்மையான உலகப் போக்கு எப்படிப்பட்டதென்றால்; தம்முடைய நிலைமையைத் தாம் அடியோடு மறந்து எப்போதும் பிறரைப் பற்றிய பழிப்புரையே போது போக்காக இருப்பதாம். இந்த இயல்வு நேற்று இன்று ஏற்பட்டதன்று; ஸ்ரீ ராமக்ருஷ்ணாதி அவதார காலங்களிலும் ஸ்ரீமந்நாதயாமுநயதிவராதி ஆசாரியர்களின் காலங்களிலுமே இப்படிப்பட்ட அதிகாரிகள் மிகவும் மலிந்திருந்தார்களென்று அறிகின்றோம். எனவே இக்காலத்திலிருக்கக் கேட்க வேணுமோ? அப்படிப்பட்டவர்களே நம்முடைய க்ஷமாகுணத்தை உஜ்ஜ்வலமாக்கவல்லவர்கள். அன்னவர்கள் திறத்தில் நாம் நமது க்ஷமாகுணத்தை விளக்கிக் காட்டினோமாகில் இதனிற் காட்டில் வேறு க்ஷேமம் நமக்கில்லை.

கூரத்தாழ்வான் திவ்யஸூக்திகளில் *க்ஷாந்திஸ்துதே ஸவிஷயா மம துர்வசோபி:* என்பது மிகச் சிறந்தது. எம்பெருமானே! உன்னுடைய க்ஷமா குணத்தை ஸபலமாக்குவதற்காகவே என் வாக்கிலிருந்து அவத்யம் நிரம்பிய மொழிகள் வெளிவருகின்றன காண் என்கிறார். இது போலவே பிறர்கள் நம்மைப் பற்றித் தீமையாக எது சொன்னாலும் எது செய்தாலும் அதெல்லாம் நம்முடைய க்ஷமாகுணத்தை நிறம் பெறுவிப்பதற்காகவே யென்று உண்மையில் நினைக்க வேண்டும். க்ஷமைக்கு எதிரான குணம் உத்வேகம் அல்லது கோபம். இது உள்ள வரையில் க்ஷமை தலைகாட்ட முடியாது. நம்மைப் பிறர் தூஷிக்கத் தொடங்கினாலும், நம்முடைய கருத்துக்கு எதிரான ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கினாலும், உடனே நாம் அளவுகடந்த உத்வேகம் கொள்ளுகிறோம். "நம்மை யாவரும் பூஷிக்க வேணுமே தவிர ஒருவரும் நம்மை தூஷிக்கக் கூடாது" என்று விரும்பி பூஷணங்களையே ஆவலுடன் எதிர்பார்ப்பதும் தூஷணங்கள் வருங்கால் மிகவும் வருந்துவதுமான பழக்கம் குலையும்படியான அப்யாஸம் பண்ணவேண்டும். நாம் நம்முடைய தோஷங்களையே எப்போதும் அநுஸந்தானம் செய்து கொண்டிருக்க வேணுமென்று பெரியாரிடம் கேட்டு அறிந்திருந்தும் அதை மறந்து (அல்லது அலக்ஷியஞ் செய்து) நம்மிடத்தில் இல்லாத குணங்களையே நாம் வெளியிட்டுக் கொண்டும் குற்றங்களை மறைத்துக் கொண்டும் தவறுதலாகப் போது போக்கி வருகிறோம். இந் நிலைமையில், நமது குற்றங் குறைகளை உண்மையாகச் சிலர் எடுத்து வெளியிட்டால் இதனில் விஞ்சிய மஹோபகாரம் வேறு என்னவுளது? ஐயோ! நம்முடைய தோஷங்கள் பிறர்க்குத் தெரிந்துவிட்டனவே! என்று வருந்தலாமோ? நாம் மறந்தும் மறைத்தும் இருந்த தோஷங்களைத் தைவாதீனமாக வெளிப்படுத்தி நமக்கு நன்மை யுண்டாகும்படி மஹோபகாரம் 'செய்தார்களே' என்று உள்ளூறக் களிக்க வேண்டுமே. அவர்கட்கு உபய விபூதியையும் பரிசளித்தாலும் போதாதே. சிகித்ஸை செய்பவர்கள் தற்காலத்தில் நமக்கு எவ்வளவோ கொடுமையை விளைத்தாலும் அதை நாம் நன்மையாகவேகொண்டு நூறுமாயிரமும் பரிசளிப்பதுபோலவே நம்மைத் தூஷிப்பவர்களுக்கும் நாம் எவ்வளவோ பரிசளிக்க வேண்டுமே. அவ்வளவு ஹ்ருதய பரிபாகம் வாய்க்காவிடினும் நெஞ்சு தளராமலும் ப்ரதிக்ரியை செய்ய நினைக்காமலுமாவது இருக்க வேண்டாவா?

இவ்விடத்தில் மஹர்ஷிகளின் ஒரு சிறந்த ச்லோகத்தை நினைப்பூட்டுகிறோம், "ருக்ஷாக்ஷராணி ச்ருண்வந் வை மஹாபாகவதோக்திஷு, ப்ரணாமபூர்வகம் க்ஷாந்த்யா யோ வதேத் வைஷ்ணவோ ஹி ஸ:" என்பதே. *கேட்பார் செவிசுடு கீழ்மை வசவுகளை வைதாலும் பொறுமை காட்டித் தெண்டனிட்டு அடியேன் குற்றவாளனே என்று இசைந்து நிற்றல் வேண்டுமென்றும், அதுவே முக்கியமான ஸ்ரீ வைஷ்ணவத்வ மென்றும் கூறியவாறு. இது இவ்விருள் தருமாஞாலத்தில் ஒரு படியாலும் ஸம்பவிக்கக் கூடியதன்றாகிலும் இக் குணம் நமக்கு வாய்க்கவேணுமென்று நிச்சலும் நினைப்பது நன்று. இனி மேலேசெல்லுவோம்.

### ஐந்தாவது புஷ்பம் ஜ்ஞானம்

ஞானமாவது அறிவு. நாய், நரி, ஈ, எறும்பு முதலிய ஜீவராசிகளுக்கும் அறிவு இல்லாமற் போகவில்லை. அவையெல்லாம் சேதநப் பொருள்களாகவே பரிகணிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவற்றுக்குள்ள அறிவு எத்தகைத்து? என்று நாம் சிறிது ஆலோசிக்க வேண்டும். நாம் கையில் தடியெடுத்தால் 'நம்மை யடிக்க வருகிறார்கள்' என்று தெரிந்து கொண்டு; அஞ்சியோடுவதற்கும் உணவுகளைத் தேடுவதற்கு முறுப்பான உணர்வு அந்த ஜந்துக்களிடத்தில் காண முடியுமே யன்றி ஆத்மாவைப் பற்றின ஞானம் லவலேசமும் காணக்கிடைக்காது. எம்பெருமான் நம்மைப் பசுவாகவோ பக்ஷிகளாகவோ படைக்காமல் *துர்லபோ மாநுஷோ தேஹ:* என்றும் *மானிடப் பிறவியந்தோ மதிக்கிலர்* என்றும் சிறப்பித்துக் கூறப்பட்ட மநுஷ்ய ஜன்மத்திலே பிறப்பித்தது எதற்காக என்று விமர்சிக்க வேணும். உண்பதும் உறங்குவதும் விஷய போகங்களைச் செய்வதுமான இவை பசுக்களுக்கும் நமக்கும் பொதுவாகவேயுள்ளன. *ந்ருபசு:* என்று ஆளவந்தாரும். *வ்ருத்த்யா பசுர் நரவபு:* என்று மணவாள மாமுனிகளும் நைச்யாநுஸந்தானமாகத் தம் விஷயத்தில் பேசிக் கொண்டாலும் அது அவர்களிடத்தில் அந்வயிப்பதன்று; அஸ்மதாதிகள் அப்படியிருப்பதாகக் காட்டினபடி. ஞானம் என்பதற்கு உண்மையாக எது அர்த்தமோ அது நம்மிடத்தில் தேறாதாகில் நம்மை 'இரண்டு காலுடைய விலங்கு' என்று சொல்லத் தடையுண்டோ? *ஜ்ஞானம் ஹி தேஷாமதிகோ விசேஷ: ஜ்ஞாநேந ஹீந: பசுபிஸ் ஸமாந:* என்பது பெரும்பாலும் பலருமறிந்த ச்லோகம். பசுக்களிற் காட்டில் நாம் வாசி

பெற வேணுமானால் ஞான மொன்றினால் தான் அது பெறலாகுமென்கிறது. பசுக்களுக்கும் ஞான முள்ளதாக நாம் கீழே நிரூபித்தோம். அவற்றுக்கு இருக்க மாட்டாத ஞானமே நமக்கு அஸாதாரணலக்ஷணமாகும். தத்வஹித புருஷார்த்தங்களை உள்ளபடி தெரிந்து கொள்வதே உண்மையான ஞானம். ✠தத்ஜ்ஞானம் அஜ்ஞானமதோந்ய துக்தம். ✠ என்றார் பராசரமஹர்ஷி. ✠ ஒண் தாமரையாள் கேள்வனொருவனையே நோக்கு முணர்வு ✠ என்றார் பொய்கையாழ்வார். எம்பெருமானைத் தெரிந்து கொள்வது தான் ஞானம். அவனை மாத்திரம் தெரிந்து கொண்டால் போதாது. ஸ்வஸ்பரூபம் விரோதி ஸ்வரூபம் புருஷார்த்த ஸ்வரூபம் உபாயஸ்வரூபம் ஆகிய இவற்றையும் தெரிந்துகொள்ளவேண்டும். ஆக அர்த்த பஞ்சக ஜ்ஞானமே ஞானமென்றதாயிற்று.

இது சிலர்க்கு வெறும் அறிவாகவே நிற்கும். அப்படியல்லாமல் அதுவே பக்தியாகப் பரிணமிக்கும்சிலர்க்கு. பக்தியும் ஜ்ஞான விசேஷமேயாகும். "மயர்வற மதிநல மருளினன்" என்றவிடத்து ஆழ்வார்க்கு எம்பெருமான் பக்திரூபாபந்நஜ்ஞானத்தைக் கொடுத்தருளினதாக ஆசாரியர்கள்வியாக்கியானம் செய்தருளுகிறார்கள். ஜ்ஞானத்தை புஷ்பமாகச் சொல்லுகிற இவ்விடத்திலும் பக்திரூபாபந்ந ஜ்ஞானத்தையே கொள்ளத்தகும். ஆழ்வார்கள் தாமான தன்மையை விட்டுப் பிராட்டிமாருடைய தன்மையை யேன்றுகொண்டு வேற்றுவாயாலே பேசியநுபவிக்கின்றார்களே, அதுதான் ஞானங்கனிந்த நலமெனப்படுகிறது. இப்படி ஸ்த்ரீபாவனையை யேறிட்டுக்கொள்வது எதற்காகவென்று சிலர் கேட்பதுண்டு. இது ஏறிட்டுக் கொள்வதன்று; ஞானங்கனிந்த நலம் முற்ற முற்ற, அந்த அவஸ்தைதானே பரவசமாக வந்து சேருகின்றது. புருஷோத்தமனான எம்பெருமானது பேராண்மைக்கு முன்னே உலகமடங்கலும்பெண் தன்மையதாயிருக்கையாலும், ஜீவாத்மாவுக்குஸ்வாதந்த்ரிய நாற்றமேயின்றிப் பாரதந்த்ரியமே வடிவாயிருக்கையாலும் இவ்வகைகளை நன்கு அறியப்பெற்றால் ஸ்த்ரீபாவனை வந்தேறியன்று என்றே தெளியலாம். ப்ரஸங்காத் இதை விரிவாக நிரூபிக்கிறோம்.

பெண்மையென்பது ஆத்மஸ்வரூபத்திலேயே நியதமாகவுள்ளதொன்று. எங்ஙனேயென்னில்; பகவானிடத்தில் என்ன என்ன தன்மைகளிருக்கின்றனவோ அந்நந்தத் தன்மைகளுக்கு எதிர்த்தட்டான தன்மைகள் சேதநர்களிடத்திலிருக்கும்படியை நாம் காணாநின்றோம். அவன் ஸ்வாமியானால் நாம் ஸொத்தாக இருக்கின்றோம்; அவன் உயிரானால் நாம் உடலாக இருக்கின்றோம். அவன் சேஷியானால் நாம் சேஷபூதர்களாக இருக்கின்றோம். இவ்வண்ணமாகவே அவன் புருஷோத்தமனாயிருப்பதற்கேற்ப நாம் ஸ்திரீத்வ சாலிகளாக இருக்கவேண்டியது முறைமையாயிற்று. இவ்வர்த்தத்தை ஒரு ச்லோகம் காட்டுகின்றது; "ஸ்வாமித்வாத்மத்வ சேஷித்வபும்ஸ்த்வாத்யா: ஸ்வாமிநோகுணா:, ஸ்வேப்யோ தாஸத்வ தேஹத்வசேஷத்வஸ்த்ரீத்வதாயிந:" என்பது. ஸ்வாதந்திரியம் பும்ஸ்த்வலக்ஷணமென்றும் பாரதந்த்ரியம் ஸ்த்ரீத்வ லக்ஷணமென்றும் அறுதியிடப்பட்டிருக்கிறது. ஆகவே பாரதந்த்ரியத்தையே நிலை நின்ற ஸ்வரூபமாகவுடைய சேதனன் புருஷோத்தமனுடைய முன்னிலையில் ஸ்த்ரீயாக நிற்றல் ஸ்வரூபப்ராப்தமேயாகும். இவ்விஷயத்தை ஸ்ரீகுலசேகராழ்வார் தமது திருமொழியில் "கண்டாரிகழ்வனவே காதலன்தான் செய்திடினும், கொண்டானையல்லாலறியாக் குல மகள்போல்" என்ற பாசுரத்தினால் நன்கு காட்டியருளினார். எம்பெருமானுக்கும் நமக்கும் ஒன்பதுவிதமான ஸம்பந்தங்கள் இருப்பனவாகத் திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரத்தினால் தேறுகின்றது. அவற்றுள் பதிபத்நீபாவ ஸம்பந்தம் என்பதும் ஒன்றாகும். அது ப்ரணவத்தினுள் நடுவெழுத்தான உகாரத்தினால் தேறுகின்றதென்று ஆசாரியர்கள் நிரூபித்தருளுகிறார்கள். உகாரமானது அவதாரணார்த்தகமாய் அநந்யார்ஹத்வத்தைக் காட்டுகிறதென்றும் அது பதிபத்நீபாவ ஸம்பந்தத்தில் பர்யவஸிக்கிறதென்றும் ஓதலிக்கிறார்கள். ஆகவே ஸ்த்ரீத்வமென்பது ஆத்மாவில் உறைந்து கிடப்பதான வோர் தன்மையேயாகும்.

ஆத்மா நித்யவஸ்துவாகையாலே பிறப்பு இல்லையென்று நூற்கொள்கையானாலும். "அன்று நான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்" என்கிற திருமழிசைப்பிரான் ஸ்ரீஸூக்தியின்படி ஆத்மாவுக்கும் ஒருவகையான பிறப்புண்டு என்று கொள்ளவேண்டியதாகிறது. ஆபஸ்தம்ப மஹர்ஷியும் ✠ ஸ ஹி வித்யாதஸ் தம் ஜநயதி தத் ச்ரேஷ்டம் ஜந்ம" என்கிறார். ஆகவே ஆத்மாவாகிற குழந்தைக்கு ஆசார்யனைத் தந்தையாகவும் (வித்யா என்கிற) அறிவைத் தாயாகவும் கொள்ளவேணும். உலகில் பிறக்குங் குழந்தைகள் பாலும் அமுதுமுண்டு வளரக் காண்கிறோம். அப்படியே இக்குழந்தையும் "தேனும்

பாலுமமுதுமாய திருமால் திருநாமம்'' என்கிற திருமங்கையாழ்வாரருளிச் செயலின் படியே பரமபோக்ய வஸ்துவான பகவந்நாமத்தாலே வளர்ந்துவருகிறது. இங்ஙனே வளர்ந்து வருகையில் விவாஹத்திற்கு ப்ராப்தமான வயது வருகின்றது. அப்போது (ஆத்மாவாகிற இக்குழந்தையானது) ✠ அன்றிப்பின் மற்றொருவர்க்கென்னைப் பேசலொட்டேன் மாலிருஞ்சோலை யெம்மாயற்கல்லால் என்றும் ✠ மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் என்றும் பகவானைத் தவிர மற்றொரு வரனை வரிக்கமாட்டேனென்கிறது. அதனால் "எட்டிழையாய் மூன்று சரடாயிருப்பதொரு மங்கலஸூத்ரம்போலே திருமந்த்ரம்'' (முமுக்ஷுப்படி) என்று திருமங்கலியமாகச் சொல்லப்பட்ட திருமந்த்ரத்தைக் கழுத்திலே கட்டப்பெற்று "பறவை யேறு பரம் புருடா நீ யென்னைக் கைக்கொண்டபின்'' என்கிறபடியே பரமபுருஷனுகிறவரனால் பாணிக்ரஹணம் பண்ணப் பெறுகின்றது,

இக்காலத்து விவாஹம் போலன்றிக்கே இது சாஸ்த்ரீய விவாஹமாகையால் விவாஹமானவுடனே பர்த்தாவோடு சேர்ந்து அநுபவிக்கப்பெறுகிறதில்லை. வயதின் பரிபாகத்தை எதிர்பார்த்துக்கொண்டு ஆசையை வளர்த்துக்கொண்டிருப்பதுபோல ஆத்மாவாகிற இந்தப் பெண்பிள்ளையும் "என்றுகொல் சேர்வதந்தோ'' என்றும் "கூவிக்கொள்ளுங்கால மின்னங் குறுகாதோ'' என்றும், "எவைகொல் அணுகப்பெறுநாள்'' என்றும் ஆர்த்தியோடே புலம்பிக்கொண்டிருந்து காலக்கிரமத்தில் பக்திபரிபாகத்தை யடைந்து பிறந்தகத்தை விட்டுப் புக்ககத்திற்குப் போகப்பெறுகின்றது. (பிறந்தகம்-லீலாவிபூதி. புக்ககம்-நித்யவிபூதி.)

புக்ககம் சென்று சேர்ந்து நன்றாக ஸ்நானம் பண்ணி ஸகல அலங்காரங்களும் பண்ணப்பெற்று மங்கலவாத்ய கோஷத்துடனே பர்த்தாவினுடைய படுக்கையிலேறியிருந்து இன்பமயமான போகங்களை புஜிப்பதுபோல, விரஜா நதியிலே நீராடி ✠ தம் பஞ்ச சதாநி அப்ஸரஸாம் ப்ரதிதாவந்தி; சதம் மாலா ஹஸ்தா:, சதமஞ்ஜந ஹஸ்தா:, சதம் சூர்ண ஹஸ்தா:, சதம் வாஸோ ஹஸ்தா:, சதம் பூஷண ஹஸ்தா: ✠ என்று உபநிஷத்தில் ஓதியுள்ள படியே சிறந்த மாலைகளும் திவ்ய பூஷணங்களும், திவ்ய பீதாம்பரங்களும் முதலியன கையிலேந்திக் கொண்டுவரும் ஐந்நூறு அப்ஸரஸ்ஸுக்களாலே அலங்கரிக்கப்பெற்று பேரிகீதகாஹளசங்க ஆசீஸ்துதி கோலாஹலங்களுடனே கோப்புடைய சீரிய சிங்காசனத்திலே கோட்டுக்கால் கட்டில்மேல் மெத்தென்ற பஞ்சசயனத்தின் மேலேறி "கட்டெழில் வானவர் போகமுண்பாரே'' என்கிறபடியே திவ்யபோகங்களை யநுபவிக்கப்பெறுகின்றது.

ஆக இந்நிகழ்ச்சியை நோக்குமிடத்து, இவ்வாத்மாவானது பரமபுருஷனுக்கு இயற்கையாகவே பத்நியாக அமைந்திருக்கின்றதென்னுமிடம் ஸ்பஷ்டமாயிருத்தலால் ஆழ்வார்கள் ஸ்த்ரீபாவனையிலே பேசுவது வந்தேறியன்று என்பது புலனும். உலகில் தம்பதிகளின் பரிமாற்றம் ச்ருங்கார ரஸப்ரக்ரியையிலே செல்லுகிறுப்போலே இந்த தம்பதிகளின் பரிமாற்றமும் ச்ருங்காரரஸமயமாகச் செல்லுவதும் ஏற்கும். உண்மையில் பக்திரஸமே ச்ருங்காரரஸமாக வடிவெடுத்ததாமென்று உணரக்கடவது. ஆகவே, ஸ்த்ரீபாவனை முற்றிப் பேசும்படியான ஞானநலமே இங்கு ஜ்ஞான புஷ்பமாகச் சொல்லப்பட்டதென்றறிக.

### ஆறுவது புஷ்பம் தபஸ்

தபஸ்ஸாவது காயக்லேசம் மாம்ஸம் வற்றியுலர்ந்து சரீரம் மெலிந்துபோகவேணுமென்று பட்டினி கிடப்பது, கோடைகாலத்தில் வெயில் நிலையிலும் பஞ்சாக்னிமத்தியிலும் நின்றும் மாரிகாலத்தும் பனிகாலத்தும் நீர்நிலையில் பாசியேற நின்றும் இங்ஙனே காயக்லேசங்கள் படுவதைத் தபஸ்ஸென்று சாஸ்த்ரங்கள் கூறும். திருமங்கையாழ்வார் பெரிய திருமடலில் "ஓர் தொன்னெறியை வேண்டுவார் வீழ்கனியுமூழிலையும், என்னுமிவையே நுகர்ந்துடலம் தாம் வருந்தித் துன்னுமிலைக் குரம்பைத் துஞ்சியும், வெஞ்சுடரோன் மன்னுமழல் நுகர்ந்தும் வண்தடத்தினுட்கிடந்தும், இன்னதோர் தன்மையராயீங்குடலம் விட்டெழுந்து, தொன்னெறிக்கட் சென்றார்'' என்றருளியுள்ள ஸ்ரீஸூக்திகளால் தபஸ்ஸின் ப்ரகாரம் காட்டப்பட்டிருப்பதுங் காண்க. ஆனால் இப்படிப்பட்ட தபஸ்ஸை யாரோ சில மஹரிஷிகள் செய்து போருவதாகக் கேட்டிருக்கிறோமேயல்லது நம் ஆழ்வாராசாரியர்களில் யாரும் செய்ததாகக் கேட்டிலோம். திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் (3—2—1) ✠ ஊன்வாட வுண்ணாதுயிர் காவலிட்டு உடலிற் பிரியாப் புலனைந்தும் நொந்து, தாம் வாட

வாடத் தவஞ்செய்யவேண்டா ✠ என்றும் ✠ காயோடு நீடு கனியுண்டு வீசு கடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம், ஐந்து தீயூடு நின்று தவஞ்செய்ய வேண்டா ✠ என்றும் தபஸ்ஸை மறுப்பதாக வும் ஸ்பஷ்டமாகக் காண்கிறது. பிள்ளைப்பெருமாளையங்காரும் திருவரங்கக் கலம்பகத்தில் ✠ காயிலை தின்றுங் கானிலுறைந்துங் கங்கிதேடித் தீயிடைநின்றும் பூவலம் வந்துந் திரிவீர் காள் !, தாயிலுமன்பன் பூமகள் நண்பன் தடநாகப்பாயன் முகுந்தன் கோயிலரங்கம் பணி வீரே ✠ என்று அவ்வாழ்வாரையே பின்பற்றிப் பேசியுள்ளார். ஆகவே பரமபக்தர்களின் கோஷ்டியில் இப்படிப்பட்ட தபஸ்ஸு ஆதரிக்கப்படவில்லை யென்று தெரிகிறது.

ப்ருஹதாரண்யகமென்கிற உபநிஷத்தில் ✠ யஜ்ஞேந தாநேந தபஸா அநாசகேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி ✠ என்று ஓதப்பட்டுள்ளது. பிராமணர்கள் யாகஞ் செய்தும் தானஞ் செய்தும் தவர்புரிந்தும் பட்டினி கிடந்தும் பேறுபெறப் பார்க்கிறார்கள் என்பது மேற் குறித்த உபநிஷத் வாக்யத்தின் பொருள். ஆழ்வார்கள் அர்ச்சாவதார அநுபவப்ராவண் யாதிசயத்தினால் தபஸ்ஸை நிஷேதித்திருந்தாலும் அது சாஸ்திரங்களில் ஒரு ஸாதனமாகக் கொண்டாடப்பட்டதேயாதலால் அந்தத் தபஸ்ஸை இங்கு ஒரு புஷ்பமாகச் சொல்லுகிற தென்று கொள்ளக் குறையில்லை. ஆனால் தைத்திரீயோபநிஷத்தில் ✠ தத்தி, தபஸ் தத்தி தப: ✠ என்று நிஷ்கர்ஷிக்கப்பட்டுள்ள தபஸ்ஸையே இங்கு விவக்ஷிக்கலாம். அதாவது, நாம் பரிக்ரஹிக்கவேண்டிய தருமங்களுள் ஸத்யமே சிறந்ததென்று ''ராதீதரர்'' என்கிறவொரு மஹான் கூறினராம். தபஸ்ஸே சிறந்ததென்று 'பௌருசிஷ்டி' யென்ற மஹான் உரைத்தா ராம். ஸ்வாத்யாயமும் ப்ரவசனமுமே சிறந்ததென்று மௌத்கல்யரான நாகர் நிர்ணயித்தாராம். இப்படிச் சொல்லிவிட்டு உடனே தத்தி தபஸ் தத்தி தப: ✠ என்று வேதபுருஷன் ஸ்வஸித் தாந்தமாகக் கூறித் தலைக்கட்டுகிறான். ஸ்வாத்யாய ப்ரவசனங்களே தபஸ்ஸு, ஸ்வாத் யாய ப்ரவசனங்களே தபஸ்ஸு' என்று இருமுறை கூறி ஸித்தாந்தம் செய்தபடி. ✠ கலை களும் வேதமும் நீதிநூலும் கற்பமும் சொற்பொருள்தானும் மற்றை நிலைகளும் வான வர்க்கும் பிறர்க்கும் நீர்மையினாலருள்செய்து ✠ என்று திருமங்கையாழ்வார் அருளிச் செய்த படியே எம்பெருமான் பரம க்ருபையோடு அருளியுள்ள சாஸ்த்ரங்களைத் தாம் கற்றலும் பிறர்களுக்குக் கற்பித்தலுமே தபஸ்ஸென்று வேதபுருஷனே நிர்ணயித்திருக்கக் காண்கை யாலே அந்த தபஸ்ஸையே இங்கு ஆறுவது புஷ்பமாகக் கொள்ளலாம். "தெரித்தெழுதி வாசித்துங் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது'' என்கிற திரு மழிசையாழ்வார் பாசுரத்திற்கு இது மிகவும் இணங்கும்.

### ஏழாவது புஷ்பம் த்யானம்

''த்யை-சிந்தாயாம்'' என்கிற தாதுவிலிருந்து த்யானம் என்கிற சொல் தேறுவ தனால் 'சிந்திப்பது' என்று பொருள். எதைச் சிந்திப்பது? என்று கேள்வி பிறக்கும். எம்பெருமானுடைய ஸ்வரூபரூப குண விபூதிகளைச் சிந்திப்பதாம். எம்பெருமான் நமக் குக் கரணத்ரயத்தை யுதவியுள்ளான். அவை மநோவாக்காயங்களெனப்படும். மன மொழி மெய்களென்பர் தமிழர் மனமானதுசிந்திப்பதற்காகவும், வாக்கானது பேசுவதற் காகவும், காயமானது அவ்வோ செயல்களைச்செய்வதற்காகவும் ஏற்பட்டவை. இவற்றுள் மனமே முதன்மை பெற்றதாம். மனம் எதை நினைக்கின்றதோ அதை வாக்கு சொல்லு கின்றது; அதை உடல் செய்கின்றது. ஸம்ஸார பந்தத்தைப் பூண்கட்டிக்கொள்வதற் கும் இதில் நின்றும் விடுபட்டு நித்யானந்தம் பெறுவதற்கும் மனமே காரணமென்று சாஸ்த்ரங்கள் முறையிடுகின்றன.

தைத்திரீய யஜுர்வேதத்தில் இரண்டாவது காண்டத்தில் ஐந்தாவது ப்ரச்னத் தில் ஒரு உபாக்கியானம் ஓதப்பட்டுள்ளது. ✠வாக்ச மநச்ச ஆர்த்தியேதாம✠ என்று தொடங்கி ஒருகால் வாக்குக்கும் மநஸ்ஸுக்கும் உத்கர்ஷ விஷயத்தில் பரஸ்பரம் விவாத முண்டாயிற்று. நானே உயர்ந்தவனென்கிறது மனம். நானே உயர்ந்தவனென்கிறது வாக்கு. கடைசியாக இருவரும் ப்ரஜாபதியினிடத்திற் சென்று அறுதியிட்டுரைக்குமாறு கேட்டுக் கொள்ளவே அவர் 'மனம் அரசன் வாக்கு வேலைக்காரன்: மனம் நினைத்ததை வாக்கு சொல்லக் கடமைப்பட்டிருத்தலால்' என்று முடிவு கூறினாராம். உடனேவாக் குக்குக் கோப முண்டாகி 'ப்ரஜாபதே! என்னை நீர் தாழ்த்திக் கூறினபடியாலே உம்மை நான் உச்சரிக்க மாட்டேன்' என்றதாம், ஆனது பற்றியே நாளைக்கும் வைதிக கருமங் களில் ''ப்ரஜாபதிம் மநஸா த்யாயந் ஆகாராவாகாரயதி' என்கிற முறை காண்கிறது— என்பது அந்த உபாக்யானத்தின் ஸாரம், இதனால் மனத்திற்குள்ள பெருமை அறியத்

தக்கது. இப்படிப்பட்ட மனத்தினுல் பகவத்பாகவத தோஷ சிந்தைகளைப் பண்ணுமல் ஸதா தத்குண சிந்தனை செய்து கொண்டிருப்பது எம்பெருமானுக்குப் பரம ப்ரீதிகரமாதலால் இதுவொரு புஷ்பமாகச் சொல்லப்பட்டது.

### எட்டாவது புஷ்பம் ஸத்யம்

ஸத்யமே கடைசியான புஷ்பம். ஸத்யமாவது இன்னதென்பதை நிஷ்கர்ஷிப்பது சாலவுமரிது. உள்ளதை உள்ளபடியே சொல்வது ஸத்யமென்று உலகமெல்லாம் க்ரஹித்திருக்கின்றது. ஆனுலும் இதை சிக்ஷிக்கவேண்டியது மிகவுமுண்டு. உள்ளதை உள்ளபடியே சொல்லுவதனுல் பிறர்க்குத் துன்பம் விளையுமானுல் அது ஸத்யமானுலும் அஸத்யம்போல் பாபமாகக் கொள்ளப்படும். ஆனது பற்றியே "ஸத்யம் ப்ரூயாத் ப்ரியம் ப்ரூயாத் ந ப்ரூயாத் ஸத்யமப்ரியம்' என்று சொல்லிற்று. பிறர்களுக்கு அப்ரியமானது ஸத்யமாயிருந்தாலும் சொல்லத் தகாதது என்றபடி. பகவத்கீதையில் பத்தாவது அத்யாயத்தில் ஸத்யம் என்கிறவிடத்தில் பாஷ்யம் செய்தருளாநின்ற எம்பெருமானுர் கண்டது கண்டபடியே சொல்லுவதும் பிராணிகளுக்கு ஹிதமாயிருப்பதும் ஸத்யம் என்றுர். இங்கு தாத்பர்ய சந்த்ரிகையில் தேசிகன் விவரித்தருளுகிருர்:—கண்டது கண்டபடியே சொல்வது மாத்திரம் போதாது. இவன் காண்பது தவறுதலாக இருக்கவுங்கூடும். உள்ளதை உள்ளபடியே கண்டு சொல்லவேண்டும். ஒன்றை வேருென்ருக இவன் கண்டு சொன்னுல் அது ஸத்யமாகாது என்று அருளிச்செய்து, உடனே அருளிச் செய்கிருர்—உலகத்தில் அவரவர்களுக்கு ப்ரமமுண்டாவது தைவாதீனம். அதற்கு யார் என்ன பண்ண முடியும்? தான் தவருகக் கண்டுவிட்டாலும் கண்டபடியே சொன்னுனுகில் போதும். அதனுல் குற்றமொன்றுமில்லையென்று பாஷ்யகாரர்க்குத் திருவுள்ளம் என்று. இதற்குமேல் அருளிச் செய்வதாவது:—'உள்ளதை உள்ளபடியே சொன்னுலும் அது பிறர்க்கு ஹிதமாயிருந்தாலொழிய ஸத்யமாகாது—என்று. இதுதான் விசேஷித்துக் குறிக் கொள்ளத்தக்கது.

பொய் சொல்லுவதென்கிற பழக்கம் பலர்க்கு இயற்கையாகவுள்ளது. அதனுல் விளையும் கேடுகள் அபாரம். அவை அவரவர்களுடைய அநுபவத்திற்கே தெரியவரும். ஒரு பொய்யை ஸ்தாபிப்பதற்கு ஒன்பது பொய் சொல்லவேண்டும்; கடைசியில் எல்லாம் பொய்யாகவே முடியுமென்பர் பெரியோர். "கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் தெரிந்துவிடும்'' என்பதும் ஓர் பழமொழி. எல்லாம உலகத்தில் அநுபவஸாக்ஷிகம். அஸத்யத்திற்காட்டிலும் கெடுதல் வேருென்றுமில்லை, ஸத்யத்திற் காட்டிலும் மேலான ச்ரேயஸ்ஸாதனம் ஒன்றுமில்லை.

மநுஷ்யபாவனையோடு அவதரித்த இராமபிரான் ஜடாயுமஹாராஜர்க்கு முக்தியளித்தது எப்படி பொருந்தும் என்று விசாரம் வருகையில் "ஸத்யேந லோகாந் ஜயதி'' என்கிற வசனத்தைக்கொண்டு மிக வெளிதாக நிர்வஹித்ததாய் அறிகிருேம். இது எவ்வளவு மநோஹரமான நிர்வாஹம். ஸத்யமுரைப்பார் கையில் ஸகல லோகங்களுமுள்ளனவாகத் தோன்றுகிறது. இதுவே எம்பெருமானுக்குச் சிறந்த ஸமாராதனம்.

## பரதனும் குகனும்

ஸ்ரீராமபிரானது திவ்யசரிதையைக் கூறியுள்ள இதிஹாஸபுராணங்கள் பலவுள்ளன. அவற்றுள் வாஸிஷ்டராமாயணம் போதாயந ராமாயணம் வான்மீகி ராமாயணம் என மூன்று ராமாயணங்கள் ப்ரஸித்தமென்றும், இவற்றுள் வால்மீகி ராமாயணத்தைத் தழுவித் தாம் தமிழ் ராமாயண மியற்றுவதாகக் கம்பர் தமது ராமாயணத்தின் தொடக்கத்தில் கூறியுள்ளார்.

"தேவபாடையினிக்கதை செய்தவர் மூவரானவர் தம்முளு முந்திய
நாவினுருரையின்படி நான் தமிழ்ப் பாவினுலிதுணர்த்திய பண்பரோ.''

என்கிறவிது கம்பர் பாசுரம். ஸம்ஸ்கிருத பாஷையில் ஸ்ரீராம கதையை இயற்றிய மஹர்ஷிகள் மூவருள்ளும் மிகச் சிறப்புவாய்ந்த வான்மீகி முனிவன் செய்தபடியே யான் இக்

நூலைச் செய்தேனென்பது இச்செய்யுளின் பொருள். கம்பர் இரவெல்லாம் வான்மீகி ராமாயணத்தை வடமொழிப் புலவர் பக்கலிற் பாடங்கேட்டுப் பகலில் தமது ராமாயணத்தை இயற்றிவந்தார் என்றும் எழுதியுள்ளார்கள். இங்ஙனம் இயற்றப்பெற்ற கம்பராமாயணத்தில் வான்மீகி ராமாயணத்தில் இல்லாத பல விஷயங்களும் அந்த ராமாயணத்தோடு முரண்படுகின்ற பல விஷயங்களும் காணப்படுகின்றனவென்பது ஆராய்ச்சி வல்லுநர்க்கு விசதமானதே. ஒரு சந்தர்ப்பத்திலுள்ள வேற்றுமையை இப்போது நாம் எடுத்துக்காட்டி ரஸாநுபவஞ் செய்ய விரும்புகிறோம்.

பரதன் தசரத சக்ரவர்த்திக்குச் சரமக்ருத்யங்களைச் செய்து முடித்த பின்னர் வஸிஷ்ட முனிவன் முதலானோர் அவனை அரசனாக்கப் பாரிக்கையில் பரதன் அதற்கு உடன்படாது இராமபிரானை வனத்தினின்று அழைத்துவந்து மூடிசூட்ட முயன்று பெருஞ்சேனையைத் திரட்டிக்கொண்டு பயணமாகித் தன் கோசலநாட்டைக் கடந்து கங்கைக்கரை வந்து சேர்ந்தான். குகனென்னும் வேடர்தலைவன் அதைக்கண்டு அதிசங்கை கொண்டான் என்கிற விஷயத்தைப்பற்றி இங்கு எடுத்துக் கொள்ளுகிறோம்.

வால்மீகி ராமாயணத்தில் அயோத்யாகாண்டத்தில் எண்பத்துநான்காவது ஸர்க்கத்தில் பரதன் விஷயத்தில் குகன்கொண்ட அதிசங்கை வெகு சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. பரதன் பெருஞ்சேனையோடு கங்கைக்கரை வந்து சேர்ந்ததைக்கண்ட குகன் தனது பரிவாரங்களை நோக்கி 'துஷ்டபுத்தியை யுடையனான பரதன் கெட்ட எண்ணத்தோடு வந்திருக்கிறான்' நீங்கள் ஜாகரூகர்களாக இருக்கவேண்டும்; இவன் நல்லெண்ணத்தோடு வந்திருந்தவனாகில் சுகமாகக் கங்கை கடந்து செல்லுகின்றான்' என்று சொல்லிவிட்டு, கையில் பலவகை யுபஹாரங்களைக் கொண்டு பரதனை எதிர்கொண்டு அணுகி உபசாரங்கள் செய்தான் என்று வான்மீகி முனிவரால் சொல்லப்பட்டிருக்கின்றது.

இவ்விஷயத்தைக் கம்பர் கூறுமிடத்துக் குகனுடைய அதிசங்கையை ஒரு பெரிய ராமாயணமாக வளர்த்தியுள்ளார். (கம்பராமாயண - அயோத்தியா காண்டத்தில் குகப் படலத்தில் 14 முதல் 23 வரையிலுள்ள பத்துச்செய்யுள்கள் நோக்கத்தக்கன.)

"அஞ்சனவண்ண னென்னாருயிர்நாயக னாளாமே
வஞ்சனையா லரசெய்திய மன்னரும் வந்தாரே
செஞ்சரமென்பன தீயுமிழ்கின்றன செல்லாவோ?
உஞ்சிவர் போய்விடின் நாய்க்குகனென்றெனை யோதாரோ?"

என்னுயிர்த் தோழனாகிய இராமனை அரசாளவொட்டாமல் தன் தாயின் மூலமாக ராஜ்யத்தைத் தந்திரமாகக் கவர்ந்துகொண்டு அப்பெருமானைக் காட்டுக்கு ஓட்டிய பரதன் அவ்வளவோடும் திருப்திபெறாமல் அப்பிரானுக்கு இங்கும் தீங்கிழைக்கப் பெரும்படையோடு வந்திருக்கிறான்; இவனை முடிக்கவேண்டியது எனது கடமை: இராமனுக்கு உயிர்த்தோழனென்று பேர் சுமக்கின்ற நான் இங்ஙனம் செய்யத் தவறினேனாயின் இதனில் விஞ்சிய பெரும்பழியுண்டோ வெனக்கு?

"ஆழநெடுந்திரை யாறுகடந்திவர் போவாரோ
வேழநெடும்படை கண்டுவிலங்கிடும் வில்லாளோ!
தோழமையென்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன்றோ
ஏழமைவேட னிறந்திலனென்றெனை யேசாரோ?"

பரதன் என்னைத் துணை கொள்ளாமல் இந்த ஆற்றைக் கடந்து செல்வதரிது. இவன் தனது சேனைகளின் பராக்ரமத்தினால் என்னைப் பயமுறுத்தி இவ்வாற்றைக் கடந்து போவதென்பதும் முடியாத காரியம். ஏனென்றால், அவ்வளவு எளிமையாக நான் இவனிடத்தில் பயப்படக்கூடியவனல்லேன். "ஏழையேதலன் கீழ்மகனென்னாதிரங்கி மற்றவற் கின்னருள் சுரந்து மாழைமான் மடநோக்கி யுன்தோழி உம்பி யெம்பி" என்னும்படியாக என்னோடு தோழமைகொண்ட அந்த ஸ்ரீராமனுக்கு இப்பரதனால் யாதொரு தீங்கும் நேராதபடி எனது வில்வலி கொண்டு என் உயிருள்ளவளவும் முயல்வேன். அவ்வாறு செய்யேனாயின் உலகத்தவர்கள் என்னை ஏசார்களோ? நட்புரிமையைப் பாதுகாவாத பிறவியும் ஒரு பிறவியோ?

"முன்னவனென்று நினைந்திலன் மொய்ம்புலியன்னானோர்
பின்னவனின்றன னென்றில னன்னவை பேசானேல்
என்னிவனென்னை யிகழ்ந்ததிவ்வெல்லை கடந்தன்றோ
மன்னவர் நெஞ்சினில் வேடர் விடுஞ்சரம் வாயாவோ?"

"ஜ்யேஷ்ட ப்ராதா பித்ருஸம:" என்ற நியாயப்படி ஸ்ரீராமன் தந்தையோ டொப்ப மதிக்கத்தக்க அண்ணனாயிற்றே என்றாவது இப்பரதன் நினைக்கவேண்டும்; அங்ஙனம் எண்ணவிட்டாலும் 'மஹாவீரதீரனான லக்ஷ்மணன் அந்தரங்க கைங்கரியம்செய்து போருகின்றானே' என்றாவது நினைக்கவேண்டும். இவ்விருவகை நினைவும் இந்தப்பரதனுக்கு இல்லையாயினுமாகுக: இந்தக் கங்கையைக் கடத்தற்கு என்னுடைய உதவி இவனுக்கு இன்றியமையாததன்றோ. இவன் என்னை ஒருபொருளாக மதிப்பதாகவும் தோன்றவில்லையே. இவன் இப்படி அலக்ஷ்யமாக இருப்பது 'இந்த வேடர்களின் அம்பு நம்மை என்ன செய்யக்கூடும்?' என்ற இறுமாப்போ! என்று குகன் சிந்தித்தனன்.

"பாவமுநின்ற பெரும்பழியும் பகைநண்போடும்
ஏவமு மென்பவை மண்ணுலகாள்பவ ரெண்ணாரோ?
ஆவதுபோகவென் னாருயிர்த்தோழமை தந்தான்மேல்
போவது சேனையு மாருயிருங்கொடு போயன்றோ."

மண்ணுலகையாள வேணுமென்கிற விருப்பமுடையார் அந்த ஆசையை முக்கியமாகக் கருதுவரேயன்றிப் பழிபாவம் முதலியவற்றை ஒரு சிறிதும் எண்ணார்போலும்: அதனால்தான் இந்தப் பரதன் இந்தக் கானகத்திலும் ஸ்ரீராமபிரானை யிருக்கவொட்டாது அடித்துத் துரத்த வந்துள்ளான்: இருக்கட்டும்; இராமபிரான் என்னிடத்து இன்னுயிர்த் தோழமை கொண்டுள்ளதனால் யான் இந்தப் பரதனைச் சேனையை உடன்கொண்டு போகுமாறு உயிரோடுவிடேன்.

[மேலுள்ள செய்யுட்களின் கருத்து.]

மூத்தவனாகிய ஸ்ரீராமன் காட்டில் வருந்தித் தவசிபோலக் கிடக்க, அவன் தம்பியாகிய இப்பரதன் அரசுபூண்டொழுகுவது முறைமையோ? இவ்வாறு முறைகேடான தொழிலைச் செய்யும் இந்தப் பரதனால் இராமபிரானுக்கு யாதொரு தீங்கும் நேரவொட்டாது அருமையான எனது உயிர் போவதாயிருந்தாலும் அதனையும் பொருள் செய்யாது துணிந்து தடுத்து நிற்பேன். முன்னமே நான் இராமனோடு கூடச் சித்திரகூடஞ் செல்லாது இங்கு நின்றதற்குத் தெய்வாதீனமான காரணம் இதுவேபோலும். [இவனைத் தடுப்பதற்காகவே யான் இங்கு நிற்க நேர்ந்தது போலும்.]

நம் இனத்தவர்களே! இந்தப் பரதனும் இவனைச் சேர்ந்தாரும் தமது வாள்வலி கொண்டு ராமபிரானுக்குத் துன்பத்தை விளைப்பதென்பது இந்தக் கங்கையைக் கடந்த பின்னரே நிகழக்கூடியதாதலால் இவர்கள் இவ்வாற்றைக் கடந்து அப்பாற் செல்ல முடியாதபடி ஓடத்தை விலக்குங்கள். 'இவர் நம்மினும் வலியராயிருந்து நம்மை எதிர்த்துக் கொன்றிட்டால் என் செய்வது' என்று நீங்கள் அஞ்சவேண்டா: அப்போதும் நமது உயிர் நண்பரான ராமனுக்கு இவர்களால் தீங்கு நேருவதற்கு முன்னே இவர்களோடு போர் செய்து நமது உயிரையாவது மாய்த்துக்கொள்வது நன்றேயாகும்.

இராமபிரானுக்குத் தீங்கிழைப்பதற்காகப் படையொடும் வந்துள்ள இப்பரதனை யன்றி, தேவர்களே சதுரங்க பலங்கொண்டு திரண்டு என்னை யெதிர்த்து நின்றாலும் நான் அவர்களையும் எனது வில்வலியால் வெல்லவல்லேன்.

இராமபிரான் பீதகவாடையுடுத்து முடிசூடி ராஜ்யத்திற் சுகமாக இருந்து அரசு புரியவேண்டியதாயிருக்க, அங்ஙனஞ் செய்ய வொட்டாது அப்பிரான் மரவுரியுடுத்துச் சடைமுடி தரித்துக் காட்டில் வசிக்குமாறு கைகேயி கொடுமை புரிந்தாளன்றோ! அப்படிப்பட்ட கொடிய அவளது புதல்வனான இவனுடைய சேனையெல்லாம் நாசமாகிக் கங்கை வெள்ளத்தால் இழுத்துச் செல்லப் பெற்றுக் கடலிற்சென்று சேருமாறு செய்வேன்.

வேடர்களே! இராமன் தனக்குரிய ராஜ்யத்தைத் தான் ஆள்வது தவிர்ந்து 'எனது தம்பியாகிய பரதனே ராஜ்யத்தையாளுக' என்று சொல்லி அந்நாட்டையே விட்டு நம்போல்வார் வசித்தற்குரிய காட்டில் வந்து வசிக்கையில், இதனையும் பொறுமல் இங்கும் அப்பிரானுக்குத் தீமைபுரியத் தனது பெரும்படையோடு பரதன் வந்துள்ளானுதலால் இப்போது நாம் நமது முழுவலிகொண்டு இவனைச் சேனையோடும் முறியடித்து ஸ்ரீராமபிரானது நாட்டை அப்பிரானே அரசு புரியுமாறு செய்து பெரும்புகழ் பெறுவோமாக.

இங்ஙனம் நாம் பரதனைத் தகர்த்தால் இது ஸ்ரீராமபிரானுக்குத் திருவுள்ளத்தில் சீற்றத்தை யுண்டாக்குமோ வென்கிற அதிசங்கையும் நமக்கு வேண்டா; அப்பிரானுக்கும் இது ப்ரியமேயாகும் என்று இனைய பலவும் குகன் கூறினனுகக் கம்பர் கவிகளியற்றியுள்ளார். இவ்வளவுக்கும் மூலமாக ஆதிகாவியத்தில் உள்ள விஷயம் ஸ்வல்பமே. அதிஸ்வல்பமான அந்த மூலவாசகத்தைக் கொண்டு கம்பர் இவ்வளவு விஸ்தாரப்படுத்த வேண்டிய அவசியம் என்ன? பிறகு குகன் பரதனைக் கண்டு திடுக்கிட்டானென்பதைச் சொல்லுமிடத்துக் கம்பர் தாமே

"வற்கலையினுடையானை மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியென்ன நகையிழந்த முகத்தானைக்
கற்கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்
விற்கையினின் றிடை வீழ விம்முற்று நின்றொழிந்தான்."

என்கிறார். மரவுரி தரித்தலும் உடம்பு மாசு படிந்திருத்தலும் முகவொளி குறைந்து வாட்டமுற்றிருத்தலும் கல்லுங் கரையும்படி பெருந்துயரத்துடனிருத்தலுமாகிய பரதனது செயல் 'இவன் வனவாஸஞ் சென்ற இராமனிடத்துப் பேரன்பு படைத்தவன்' என்பதை விளக்கி நின்றதனால் அவற்றைக் கண்ட குகப்பெருமான் போர் செய்தற்கென்று உறுதியாகத் தன் கைப்பிடித்த வில்லுஞ் சோர்ந்துவிழக் கலங்கிச் செயலற்று நின்றனன் என்றார். பரதனது இப்படிப்பட்ட திருமேனி நிலைமையைக் காணுமலே அவ்வளவு அதிசங்கைகளைக் கொண்டு ஆரவாரஞ் செய்தான் குகன் என்பதில் என்ன சுவை?

இவ்விஷயத்தில் நாம் சொல்லக் கூடியதிவ்வளவே. பரதன் மீது குகனுக்கு அதிசங்கை தோன்றியது வாஸ்தவம். அதைச் சுருங்கச் சொன்னார் ஆதிகவி. கவிச் சக்ரவர்த்தியாகிய கம்பர் தமது கற்பனு சக்தி விசேஷத்தினுல் அவ்விஷயத்தைப் பெருக்கடித்தாரென்ருல் இதிலொரு குற்றமில்லை. இனி இங்கு நாம் ஆராயவேண்டிய விஷயம் ஒன்றே; அதாவது—குகன் ஸ்ரீராமபிரானேடு கலந்திருந்த காலத்தில் அபரிமிதமாக வார்த்தையாடியிருக்கிருனல்லவா? இருவரும் கலந்து பேசின வார்த்தைகள் எவையாயிருக்கும்? *தாமேவ இக்ஷ்வாகுநாதஸ்ய பரதஸ்யகதாம் குரு" என்று இளைய பெருமாளை நோக்கி நியமித்தருள்கின்ற இராமபிரான் குகனேடு தான் வார்த்தையாடின காலத்தில் அப்பரதனது குணகணங்களைப் பேசாமலா இருந்திருப்பர்; வேறு பேச்சு எதுவும் பேசியிருக்கமாட்டார்; அந்தப் பரதகதையொன்றையே தான் திருப்பித் திருப்பிப் பேசியிருப்பர் என்று திண்ணமாகக் கூறலாம். அங்ஙனம் பரதாழ்வானது நற்குண நற்செய்கைகளைக் கேட்டிருக்கக் கூடியவனுன குகன் அப்பரதன் மீது அதிசங்கை கொண்டதற்குக் காரணம் என்ன? என்பதே முக்கியமாக ஆராயத் தக்கது.

விபீஷணுழ்வானை அதிசங்கித்த ஸுக்ரீவாதிகளை நோக்கி இராமபிரான் கூறியவொரு சிறந்த வார்த்தை வான்மீகி ராமாயணத்திலின்றிக்கே கம்பராமாயணத்தில் மாத்திரமே யுள்ளது. அதாவது, "ஆதலான் அபயமென்ற பொழுதத்தே" என்னுஞ் செய்யுளில் "இயம்பினீர் என்பால் வைத்த காதலால், இனிவேறெண்ணக் கடவதென்?" என்பதாம். வானர வீரர்களே! விபீஷணனது நற்குணங்களை நீங்கள் அறியாமையில்லை; அறிந்துவைத்தும் அவனைப் பரிக்ரஹிக்கலாகாது என்று நீங்கள் தடை செய்ததற்குக் காரணம் நான் அறியேனே? என்னிடத்தில் நீங்கள் கொண்ட பரிதான் அன்பனையும் அதிசங்கிக்கச் செய்திட்டது—என்று பெருமாள் கூறியதாகக் கம்பர் வெளியிட்டுள்ளார்.

பரமபதத்தின் நிலைமையைப் பேசுகின்ற பட்டரும்-* ஸ்நேஹாத் அஸ்தாநரக்ஷாவ்யஸநிபிரபயம் சார்ங்க சக்ராஸிமுக்ய." என்றருளிச் செய்கிருர் ஸ்ரீ குணரத்நகோசத்தில். கலங்கவேண்டாதவிடத்திலும் கலங்கச் செய்வது அளவு கடந்த பரிவு. இதுதான் மங்களாசாஸந பீஜமென்னப் படுகிறது. இத்தகைய பரிவுதான் குகனை அறிவழித்துப்

பரமபாகவதோத்தமனுன பரதனையும் அதிசங்கிக்கப் பண்ணிற்று. வேடனுன குகன் கலங்கினது அதிசயமன்று; முனிவர் தலைவனுய் த்ரிகாலஜ்ஞனுன பரத்வாஜ மஹர்ஷியுமன்றே கலங்கிக் கேள்வி கேட்டிருக்கின்ருன்.

## பக்ஷிகளில் விசாரம்

பக்ஷி ஜாதியில் சில பறவைகளைப்பற்றி நாம் ஒருகால் விமர்சிக்க நேர்ந்தது அவை, ஹம்ஸம் சாதகம் சகோரம் முதலியனவாம்.

ஹம்ஸ பக்ஷியைப்பற்றி உலகில் கவிகளெல்லோரும் வருணித்திருக்கக் காண்கிறோம்; "ஹம்ஸோ யதா க்ஷீரமிவாம்புமிச்ரம்" என்பது மஹர்ஷிகளின் வாக்கு. நீரையும் பாலையும் சேர்த்து வைத்தால் இரண்டையும் பிரிப்பதில் ஹம்ஸம் ஸ்மர்த்தமானதென்று இப்படிப் பல தன்மைகள் ஹம்ஸத்திற்குள்ளனவாகப் பேசியுள்ளார்கள். இப்படிப்பட்ட ஹம்ஸஜாதியை நாம் கண்டுகளிக்க வேண்டுமென்கிற ஆவல் நம்மனேர்க்கு இராமலிருக்க நியாயமில்லை. சித்திரத்தில் எழுதியுள்ள ஹம்ஸத்தையும், கோவில்களில் வாஹனமாக வுள்ள ஹம்ஸத்தையுமே நாம் பார்க்கிறோம், ப்ரத்யக்ஷ ஹம்ஸத்தை இங்நிலவுலகத்தில் பார்க்க முடியாதா? இது தேவலோகத்திலுள்ளதே யன்றி இவ்வுலகில் கிடையவே கிடையாதென்று பல பெரியார் மசால்லக் கேட்டதுண்டு. நளமஹாராஜன் முதலானுருடைய கதைகளில் ஹம்ஸம் இங்நிலத்திலிருந்ததாகவே தெரியவருகின்றது. அது பேசினதாகவும் தெரிகிறது. வேதத்தில் "தம் மத்ஸ்ய: ப்ராப்ரவீத்" (மீன் வார்த்தை சொல்லிற்று) என்பது முதலானவற்றை நிர்வஹிப்பதுபோல அதையும் நிர்வஹித்து விடலாமெனினும், அந்த ஜாதியே இவ்வுலகத்தில் கிடையாதென்பது அவ்வளவு பொருத்தமாக இருக்கக் கூடுமாவென்று பலர் சங்கிக்கிருர்கள். திவ்ய தேசங்களை வருணிக்கின்ற ஆழ்வாராசாரியர்களும் அன்னப் பறவையைப்பற்றி மிகமிகப் பேசியுள்ளார்கள்.

இரண்டாவதாக சாதகபக்ஷியை எடுத்துக் கொள்வோம். இதைப்பற்றியும் வருணியாத கவிகள் இல்லை. இப்பறவைக்கு தாஹமுண்டானுல் குளங் குட்டைகளில் வாய் வைத்து நீரருந்துவதில்லையென்றும் மழை பெய்யும்போது அந்த நீர்த்தாரையையே நேராகப் பருகி விடாய் தீருகின்றதென்றும் யாவரும் சொல்லி வருவது ஸுப்ரஸித்தம். உண்மையில் இப்படிப்பட்ட தன்மையோடு கூடிய பக்ஷியொன்று இக்காலத்தில் இங்நிலத்தில் காணக்கிடைக்கின்றதா வென்று பலர் கேட்கிருர்கள்; இதற்கு வான்கோழி யென்று தமிழ்ப்பெயர் கூறுகின்ருர்களாம். வான்கோழியினிடத்தில் இப்படிப்பட்ட தன்மை [அதாவது, 'ஏக: க்ருதீ சகுந்தேஷு யோங்யம் சக்ராத் நயாசதே' என்று கவிகள் கூறியுள்ள தன்மை] உள்ளதாவென்று கேட்டால் இல்லையென்கிருர்கள். ஆகவே சாதகபக்ஷியும் ஹம்ஸபக்ஷிபோலே தேவலோகத்துப் பக்ஷிதானே?

இனி மூன்ருவதாக சகோரபக்ஷியை யெடுத்துக்கொள்வோம். இப்பறவை பசியைத் தீர்த்துக்கொள்ள உணவு ஒன்றையும் கொள்ளுவதில்லை யென்றும் நிலாவையே உண்டு பசி தீருகின்றதென்றும் ஸகல கவிகளும் பேசியுள்ளார்கள். இதற்குத் தமிழ்ப் பாஷையில் என்ன பெயரென்பது தெரியவில்லை. இந்தப் பக்ஷியை இங்நிலத்தில எங்கேனும் பார்த்தவர்கள் உளரா? இதுவும் தேவலோகத்துப் பக்ஷிதானே? என்கிருர்கள். ஆராய்ச்சியில் லல்லவர்கள் இம்மூன்று பக்ஷிகளையும் பற்றின சங்கைகளைத் தீர்க்க முன் வந்தால் நல்லது.

இன்னமும், அன்றில் அசுணமா என்கிற பக்ஷிகளைப்பற்றியும் நமது நூல்களில் வாசிக்கிறோம். அன்றில் பறவை பெரும்பாலும் பனைமரத்தில் வாழ்வதென்றும், எப்பொழுதும் ஆணும் பெண்ணும் இணைபிரியாது நிற்குமென்றும், கணப்பொழுது ஒன்றை ஒன்று விட்டுப்பிரிந்தாலும் அத்துயரத்தைப் பொருமல் ஒன்றை ஒன்று இரண்டு மூன்று தரம் கத்திக்கூவி அதன் பின்பும் தன் துணையைக் கூடாவிடின் உடனே இறந்து படுமென்றும் சொல்லுகின்ருர்கள். இது வடமொழியில் க்ரௌஞ்சமென்றும் குரரி யென்றும் வழங்கப்படுகிறது. இப்பக்ஷியினிடத்தில் மேலே விவரித்ததன்மை இன்றைக்கும் காண்பதுண்டா?

அசுணமா என்கிற பறவை மிகவும் மதுரமான ஸங்கீதத்தைக் கேட்டு நெஞ்சு நீர்ப்பண்டமாய் இளகின நிலைமையிலே கர்ணகடோரமான பறையொலி செவிப்பட்டால் உடனே இறந்து படுகின்றதென்று எழுதியுள்ளார்கள். இதற்குக் கேகய பக்ஷி யென்று வடமொழிப் பெயர் கூறுகின்றார்கள். இத்தன்மை வாய்ந்த பறவை இப்போது காணக் கிடைக்கின்றதா?

## அர்ச்சாவதாரப் பெருமை

ஸகல சாஸ்த்ரங்களிலும் ஸாரமாகச் சொல்லப்படுபவை ஐந்து பொருள்களே யாகும். அவையே அர்த்த பஞ்சகமெனப்படும். திருமந்திரத்திலும் அதற்கு விவரணம் போல் அவதரித்த ஆழ்வாராசார்ய ஸ்ரீஸூக்திகள் பலவற்றிலும் அர்த்த பஞ்சகமே விவரிக்கப்படுகின்றது. அந்த ஐந்து அர்த்தங்களாவன :—

1. பரஸ்வரூபம், 2. ஸ்வஸ்வரூபம், 3. உபாயஸ்வரூபம், 4. விரோதிஸ்வரூபம் 5. புருஷார்த்த ஸ்வரூபம் ஆக இவையாம்.

திருவாய்மொழியாயிரம் பாசுரங்களிலும் இவ்வர்த்த பஞ்சகமே ஓதப்படுகின்றதென்பது,

'மிக்க இறைநிலையும் மெய்யா முயிர்நிலையும் தக்க நெறியும் தடையாகித்-தொக்கியலும் ஊழ்வினையும் வாழ்வினையு மோதுங் குருகையர்கோன் யாழினிசைவேதத்தியல்.''

என்ற தனியனாலும் விசதம்.

மேலே காட்டிய அர்த்த பஞ்சகத்தினுள் ஒவ்வொரு அர்த்தமும் ப்ரத்யேகம் ஐவகைப்பட்டிருக்குமென்று பெரியார் நிரூபித்திருக்கிறார்கள். அவற்றுள் முதலதான பரஸ்வரூபம் இப்போது விவரிக்க எடுத்துக்கொள்ளப்படுகிறது. இது ஐவகைப் பட்டிருக்கும்படி எங்ஙனே யென்னில்.

1. பர, 2. வ்யூஹ், 3. விபவ, 4 அந்தர்யாமி, 5. அர்ச்சாவதாரங்களென பரஸ்வரூபம் ஐவகைப்பட்டதாம். (1) ''வைகுண்டே து பரே லோகே ச்ரியா ஸார்த்தம் ஜகத்பதி:, ஆஸ்தே விஷ்ணு ரசிந்த்யாத்மா பக்தைர் பாகவதைஸ் ஸஹ'' என்கிறபடியே நலமந்தமில்லதோர் நாட்டிலே நித்யர்க்கும் முக்தர்க்கும் ஸேவை ஸாதித்துக் கொண்டிருக்குமிருப்பு-பரத்வநிலை. (2) இவ்விபூதியினுடைய ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களை நிர்வஹிக்கைக்காகவும் ஸம்ஸாரி ஸம்ரக்ஷணார்த்தமாகவும் உபாஸகர்களின் அநுக்ரஹார்த்தமாகவும் வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்த ரூபேண நிற்கும்நிலை வ்யூஹநிலை. (3) இதர ஸஜாதீயமாய்க் கொண்டு ராமக்ருஷ்ணாதி ரூபேண ஆவிர்ப்பவிக்கை விபவரூபம். (4) சேதநருடைய உள்ளே ப்ரவேசித்து ஸகல ப்ரவ்ருத்திகளுக்கும் நியந்தாவாயிருக்கு மிருப்பு அந்தர்யாமித்வம்.

இனி 5. அர்ச்சாவதாரமாவது;—'அடியார்கள் யாதொன்றைத் தனக்குத் திருமேனியாகக் கோலுகிறார்களோ அத்தையே தனக்கு வடிவாகக் கொள்ளும்' என்று சொல்லுகிற ''தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவந்தானே'' என்கிற பொய்கையார் பாசுரப்படியே ஆச்ரிதரான சேதநர்க்கு அபிமதமான ஸ்வர்ண ரஜதாதி சிலாபர்யந்தமான ஏதேனுமொரு த்ரவ்யத்திலே, அயோத்யா மதுராதி தேச நியமமென்ன, பதினோராயிரம் ஸம்வத்ஸரம் நூறு ஸம்வத்ஸரம என்றாற்போலேயுண்டான காலநியமமென்ன, தசரத வஸுதேவாதிகளென்றாற் போலே சில அதிகாரி நியமமென்ன இவற்றையுடைத்தாய்க் கொண்டு ஸந்நிதி பண்ணின ராம க்ருஷ்ணாதி விபவவிசேஷங்கள் போலல்லாமல் ஒரு தேச நியமமில்லாதபடியாகவும், ருசியுடையாரெல்லார்க்கு மாகையாலே இன்னாரென்பதொரு அதிகாரி நியமமில்லாதபடியாகவும் ஸன்னிதி பண்ணி, ''ஸர்வ ஸஹிஷ்ணுவாகையாலே அவரவர்கள் செய்யுமபராதங்களைக் காணக்கண்ணிட்டு அர்ச்சகபரதந்த்ரமான ஸ்நானம் போஜநம் சயனம் முதலான ஸமஸ்த வ்யாபாரங்களையுமுடையனாய்க் கொண்டு எழுந்தருளி நிற்கும் நிலை.

நம்போன்ற சேதநவர்க்கங்கள் யாவும் அவனுக்கு ஸொத்தென்றும், அவன் ஸ்வாமி யென்றும் சகல சாஸ்த்ரங்களிலும் வ்யவஸ்திதமாயிருக்கச் செய்தேயும், நாம் நம்முடைய சொத்துக்களிலே அவனையும் சேர்த்துக் கணக்கிடலாம்படி அவனுடைய ஸ்வாமித்

வம் நம்மிடத்திலேயாய் ஸ்வத்வம் அவனிடத்திலேயாய் இப்படி ஸ்வஸ்வாமி பாவத்தைத் தன் ஸங்கல்பத்தாலே மாறுடிக்கொண்டும், ஸர்வஜ்ஞனுய் ஸர்வசக்தனுய் கேட்பாரற்ற ஸ்வதந்த்ரனுயிருக்கின்ற தான் தன் காரியமும் பிறர் காரியமும் அறியமாட்டாத அறிவிலிகள் போலவும், தன்னைத் தான் ரக்ஷிக்கமாட்டாத அசக்தர்போலவும், தனக்கென்னவொரு முதன்மையில்லாத அஸ்வதந்த்ரர் போலவுமிருக்கிறபடியை அர்ச்சாவதாரத்திலே காண்கிரேம். இப்படி யிருக்கச் செய்தேயும், விமுகரானவர்களையுங்கூட விடமாட்டாதபடி கரை புரண்டு செல்லுகின்ற கருணைக்கு வசப்பட்டவனுகி, கண் கொடுத்தல், மக்கள் கொடுத்தல், செல்வம் கொடுத்தல் முதலாக முக்திப் பெருஞ் செல்வமளித்தல் முடிவாக அதிகாரத்திற்குத் தக்கபடி சேதநருடைய சகலவிதமான அபேக்ஷிதங்களையும் கொடுத்தருளக் காண்கையாலே ஜ்ஞான சக்திகளில் குறையற்றதாகவுங் காண்கிறது இவ்வர்ச்சாவதாரம்.

நம் பூருவர்களான ஆழ்வார்கள் ஆசாரியர்கள் யாவரும் பரவ்யூஹவிபவ அந்தர்யாமி ரூபங்களைத் தவிர்த்து இவ்வர்ச்சாவதாரத்திலேயே மண்டியிருப்பவர்கள். இதற்குக் காரணம், பரவ்யூஹாதிகளிற் காட்டிலும் இவ்விடத்திலேயே கல்யாண குணங்கள் புஷ்கலமாயிருக்கும்படியைக் காண்கையேயாம். ஆச்ரிதர் உகந்த த்ரவ்யங்களே தனக்குத் திருமேனியாகவும் அவர்களிட்ட திருநாமங்களே தனக்குத் திருநாமமாகவும் கொண்டிருக்கிற ஸௌலப்யம் முதன்மைபெற்றது. "அடியோமுக்கே யெம்பெருமானல்லீரே நீர் இந்தளூரீரே" என்கிருர் திருமங்கையாழ்வார். தேசகால கரண விப்ரகர்ஷங்களாலே பரத்வாதிகளில் அணுகமுடியாதே அநந்யகதிகளாயிருக்கிற எங்களுக்கு ருசி பிறந்தபோதே நினைத்தபடியெல்லாம் அநுபவிக்கைக்காகவன்றே தேவரீர் அர்ச்சாவதாரங் கொண்டிருக்கிறது என்பது மேற்குறித்த பாசுரத்தின் கருத்து. "பின்னுனர் வணங்குஞ் சோதி" என்றும் அவ்வாழ்வாரே அருளிச் செய்கிருர். ராமக்ருஷ்ணுதியவதாரங்களுக்குப் பிற்பட்டவர்களான அஸ்மதாதிகளும் அநுபவிக்கக்கூடிய நிலம் இது என்று காட்டினபடி.

வேதமும் அர்ச்சாவதாரத்தைப்பற்றி ஓதும் போதும் "ஸர்வம் பூர்ணம் ஸஹோம்" என்கிறது; பரத்வாதிகள் ஐந்திலும் வைத்துக்கொண்டு ஸௌலப்யம் முதலிய குணங்கள் நிரம்பியிருப்பது அர்ச்சாவதாரத்திலேயே என்றபடி. குணங்கள் இருவகைப்படும்: (1) ஆச்ரயண ஸௌகர்யாபாதகங்கள்: (2) ஆச்ரித கார்யாபாதகங்கள் என்று. (1) உலகில் பல பெரியார்களை நாம் காணவும் முடியாமல் கண்டு பற்றவும் முடியாமல் இருப்பதுண்டன்றே. அப்படியல்லாமல் எளிதாகக் காணவும் பற்றவும் ஸௌகரியம் பண்ணிக் கொடுக்கின்ற தன்மை அவசியமானது. அத்தகைய தன்மைக்கு ஏற்ற திருக்குணங்கள் ஸௌலப்யம் முதலானவை. இவை ஆச்ரயண ஸௌகர்யாபாதகங்கள். (2) உலகில் சில பெரியார்களை நாம் கண்டு விடலாம், கண்டு பற்றியும் விடலாம். ஆனல் அவர்கள் நம் காரியஞ் செய்ய சக்தியற்றவர்களாயிருக்கவுங் கூடும். அப்படியல்லாமல் ஆச்ரிதர்களின் காரியங்களை நிறைவேற்றித்தரவல்ல ஆற்றலும் அவசியமானது. அவ்வாற்றலை நிருபிக்கும்படியான திருக்குணங்கள் ஜ்ஞானம் சக்தி முதலியனவாம். இவையே ஆச்ரித கார்யாபாதகங்களெனப்படும், ஆகிய இத்திருக்குணங்களெல்லாம் அர்ச்சாவதாரத்திலே நிறைந்து விளங்குவனவாம். "ஸர்வம் பூர்ணம் ஸஹோம்" என்ற ச்ருதியின் பொருள் இதுவேயாம்.

பரமபதத்தில் பரவாஸுதேவனுயிருக்கும் நிலையில் இக்குணங்களெல்லாம் உண்டாயிருக்கச்செய்தேயும் அது நித்ய முக்தர்களுக்கே முகங்கொடுத்துக் கொண்டிருக்கிற விடமாகையால் பகல் விளக்குப் போலே பரகாசமற்றிருக்கும். அர்ச்சாவதாரமான விடத்தில் தண்மைக்கு எல்லை நிலமான ஸம்ஸாரிகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கையாலே இருட்டறையில் ஏற்றி வைத்த விளக்குப் போலே மிகமிக விளங்கித் தோன்றுமென்று ஆசாரியர்கள் ஈடுபடுகின்ருர்கள்.

அவாப்த ஸமஸ்த காமத்வமென்பது எம்பெருமானுக்கு அஸாதாரணமானவொரு தன்மை. அதாவது ஒருவர் ஒன்று கொடுத்து ஆக வேண்டாமல் எல்லாவபேக்ஷிதங்களும் இயற்கையாகவே நிரம்பப் பெற்றிருக்கை. இப்படிப்பட்ட தன்மையைக் குலைத்துக் கொண்டு - நாம் இட்டது கொண்டு திருப்திபெற வேண்டும்படி ஸாபேக்ஷனுயிருக்குமிடம் அர்ச்சாவதாரம்.

ஒருவர் கண்ணுக்கு விஷயமாகாத தன்னை அனைவர் கண்ணுக்கும் விஷயமாக்கி நித்யஸன்னிதி பண்ணியிருப்பது மாத்திரமே யல்லாமல், ஸர்வ பரிபூர்ணனுய் நிரங்குச ஸ்வ

தந்த்ர ஞயிருக்கிற தன்னை ஸாபேக்ஷனாகவும் பரதந்த்ரனாகவும் ஆக்கிக்கொண்டு தன்னை அநாதரிக்கிற ஸம்ஸாரிகளைத் தான் ஆதரித்து நிற்குமிடமான அர்ச்சாவதாரத்தில் ஸௌலப்ய குணம் தலையெடுத்திருப்பதாக குணஜ்ஞர்கள் ஈடுபடுவர்கள்.

ஸ்ரீவசந பூஷணத்தில் பிள்ளை யுலகாசிரியர் பரத்வாதிகளினுடைய தௌர்லப்யத்தையும் அர்ச்சாவதாரத்தின் ஸௌலப்யத்தையும் த்ருஷ்டாந்த முகேநகாட்டி அழகாக அருளிச் செய்திருக்கிற வொரு சூர்ணிகை இங்கே அநுசந்தேயம், அதாவது "பூகத ஜலம் போலே அந்தர்யாமித்வம். ஆவரண ஜலம் போலே பரத்வம். பாற்கடல் போலே வ்யூஹம். பெருக்காறு போலே விபவங்கள். அதிலே தேங்கின மடுக்கள் போலே அர்ச்சாவதாரம்.' என்பதாம். இதன் கருத்தாவது—தாஹித்தவன் விடாய் தீரப் பருகுவதற்காக நீரை விரும்புவன்; அது ஐந்து இடங்களிலுண்டு. ஆனால் நான்கு இடங்கள் உபயோகப்படாமல் ஒரு இடந்தான் உபயோகப்படும். (1) தேசாந்தரத்தில் போக வேண்டாதபடி தான் நிற்கிறவிடத்திலேயே பூமிக்குள் நீர் உண்டு, ஆனால் அது உடனே கிடைக்காது. அநேக சாதனங்கள் கொண்டு ச்ரமப்பட்டுக் கல்லினால் கிடைக்கும். இது போன்றதாம் அந்தர்யாமி நிலை. ஏனெனில், கண்டு பற்ற வேணுமென்று ஆசைப்பட்டவனுக்கு ஹ்ருதயத்தினுள்ளே யிருக்கச்செய்தேயும் கண்ணுக்கு விஷயமாகாமல் அஷ்டாங்கயோக ரூபமான ப்ரயத்நத்தாலே காணவேண்டும் படியன்றோ அந்தர்யாமித்வமிருப்பது. (2) அண்டத்துக்கு வெளியில் பெருகிக்கிடக்கிற ஆவரண ஜலம் தாஹித்தவனுக்குப் பயன்படாது. அதுபோலவே யாம் லீலாவிபூதிக்கு அப்பாற்பட்டிருக்கிற பரத்வ நிலை, (3) திருப்பாற்கடலில் ஸம்ருத்தமான பால் இருப்பதாக சாஸ்த்ர முகத்தாலே அறிகிறோம். அது அண்டத்திற்கு உட்பட்டதாயிருக்கச் செய்தேயும் தாஹித்தவனுக்குப் பயன்படாது: அது போலவே யாம் வ்யூஹ நிலை. (4) மழை காலங்களில் ஆறுகளில் வெள்ளம் அளவிறந்து ஓடும். அது அக்காலத்திலுள்ளார்க்குப் பயன்படுமேயல்லது பிற்காலத்தவர்களான தாஹித்தவர்களுக்குப் பயன் படாது. அது போலவே யாம் ஸ்ரீ ராம க்ருஷ்ணாதி விபவாவதாரங்கள் பூமியிலே பண்டு அவதரித்து ஸஞ்சரித்தபோதிருந்த பக்தர்களுக்கு மாத்திரமே யன்றோ அவை உபயோகப்பட்டன. (5) கீழ்ச் சொன்னவை போலல்லாமல், பெருக்காறுகளிலே தேங்கின மடுக்களானவை விடாய்த்தவனுக்கு விடாய் கெடப் பருகலாம்படி எங்கும் எக்காலத்திலும் பயன்படும். அது போலவேயாம் கோயில்களிலும் க்ருஹங்களிலும் எங்குமொக்க எல்லார்க்கும் கண்ணுக்கிலக்காகி நிற்கிற அர்ச்சாவதாரம். எம்பெருமான் அவதரித்தபோது காட்டியருளின ஸௌலப்ய ஸௌசீல்யாதி குணங்களெல்லாம் அர்ச்சாஸ்தலங்களிலே நிரம்பியிருப்பதாலும் விபவாவதாரத்திருமேனிகளையே பல விடங்களிலும் அர்ச்சையாகப் பரிக்ரஹித்துக் கொண்டிருக்கையாலும் (அதிலே தேங்கின மடுக்கள் போலே அர்ச்சாவதாரம்) என்றது மிகவும் பொருந்தும்.

எம்பெருமானை ஒரு அரசன் போலக் கொள்ளவேண்டும். பாஞ்சராத்ர சாஸ்த்ரங்களில் ஆராதனக்ரமங்களைச் சொல்லி வருமிடத்தில் 'எம்பெருமானுக்குச் செய்யும் உபசாரங்களை மஹாராஜர்களுக்குச் செய்யும் உபசாரம் போல் பாவித்துச் செய்யவேணுமென்று சொல்லி யிருக்கையாலும, திருப்பள்ளி யெழுச்சித் தனியனில் "ரங்கேசயம் ராஜவத் அர்ஹணியம்' என்று சொல்லியிருக்கையாலும், 'செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார்'' என்றும் "பாரளந்த பேரரசே"என்றும் அருளிச் செயல்களிலும் ஓதியிருக்கையாலும் எம்பெருமானைச் செங்கோல் செலுத்தும் அரசனாகக் கொள்வது தகும். அரசனுக்கு ஐந்து விதமான நிலைமைகள் இருப்பது போலவே எம்பெருமானுக்குமுள்ளன. அரசனது ஐந்து நிலைமைகளாவன—(1) பகற்போதில் ஸகலபரிஜன ஸேவ்யனாய்க் கொண்டு தன் வீறு தோற்ற நீதிஸ்தானத்திலிருந்து நியாயஞ்செலுத்துதல். (2) ராஜ்யத்திலுள்ளாருடைய குணதோஷங்கள் அறிகைக்காக இரவிலே பிறர் அறியாதபடி கறுப்புடுத்து நகரசோதனம் பண்ணுகை. (3) ராஜ்யத்தில் சிக்ஷை ரக்ஷைகளுக்காகத் தான் தனியிருந்து கார்யங்களை ஆலோசிக்கை. (4) துஷ்டஜந்துக்களை நிரஸிப்பதற்காக வேட்டையாடுகை. (5) வேட்டையாடின விடாய் தீரப் பூந்தோப்புகளிலே அபிமதர்களோடே விளையாடுகை. ஆகிய இவ்வைந்தும் அரசர்க்குரிய நிலைமைகளாம். வானிளவரசான ஸர்வேச்வரனுக்கும் இங்ஙனே ஐந்து நிலைமைகள் உள்ளன வென்பது 'விண்மீதிருப்பாய் மலைமேல் நிற்பாய் கடல் சேர்ப்பாய், மண்மீதுழல்வாய் இவற்றுளெங்கும் மறைந்துறைவாய்'' என்கிற திருவாய்மொழிப் பாசுரத்திற் காணக் கூடியது. கீழ் விவரித்த அரசனது நிலைமைகளுக்கும் எம்பெருமானது நிலைமைகளுக்கும்

எங்ஙனே ஒற்றுமை யென்னில்; (1) அரசன் பகலோலக்க மிருப்பது போல எம்பெருமான் *பகற்கண்டேனென்கிற ஒரு பகலான பரமபதத்திலே நித்ய முக்தர் ஸேவிக்க ஓலக்கமிருக்கை. (2) அரசன் கறுப்புடுத்து நகரசோதனம் பண்ணுவது போல எம்பெருமான் ஒருவரு மறியாதபடி அந்தர்யாமியாயிருக்கை. (3) அரசன் ராஜ்யத்திலே தனியேயிருந்து ஆலோசித்தல் போல எம்பெருமான் * பாற்கடல் யோக நித்திரை செய்து சேதநரக்ஷணோபாயங்களைச் சிந்திக்கை. 4) அரசன் வேட்டையாடுவதுபோல எம்பெருமான் "களிறும் புளளுமுடன் மடிய வேட்டையாடி வருவான்" என்கிறபடியே ஆச்ரித விரோதிகளான துஷ்டர்களைத் தொலைக்க வேண்டி விபவாவதாரங்கள் செய்கை. (5) அரசன் வேட்டையாடின விடாய் தீரப் பூந்தோப்புகளிலே விளையாடுதல் போலே எம்பெருமான் விரோதி நிரஸநச்ரமந்தீரப் பரம போக்யங்களான * ஆராமஞ் சூழ்ந்த அரங்கம் முதலான திவ்ய தேசங்களிலே ஸந்நிதி பண்ணி யின்புற்று வாழ்வதாம்.

அரசனைக் காண விருப்ப முடையார், அவன் பூந்தோப்புகளிலே இனிமையாக விஹரிக்கும்போது காணலாமே யன்றி மற்ற நான்கிடங்களிற் காணமுடியாதவாறு போல, எம்பெருமானைக் காண விரும்புமவர்களும் பரத்வாதிகளான நான்கு நிலைகளிற் காண முடியாது. அர்ச்சையிலேயே கண்ணுரக் கண்டு காதல் கழியப் பெறலாமென்று, அர்ச்சையின் பெருமை ஒருவாறு பேசித் தலைக்கட்டிற்றாயிற்று.

## இதிஹாஸ புராணங்களின் நிலைமை

நம்முடைய பூருவாசாரியர்களால் ஸம்ஸ்க்ருத பாஷையிலும் மணிப்ரவாள பாஷையிலும் ஸ்வதந்த்ரமாகவும் வியாக்கியானங்களாகவும் பலபல திவ்ய க்ரந்தங்கள் அருளிச் செய்யப்பட்டிருக்கின்றனவன்றோ; இவை உபயவேதாந்த க்ரந்தங்களென்று வழங்கப்பெறுகின்றன.

ப்ரஹ்மஸூத்ரம், பகவத்கீதை, உபநிஷத்துக்கள் முதலியவற்றுக்கு வியாக்கியானங்களாகவும் அவற்றின் தாத்பர்ய விசாரபரங்களாகவும் ஸ்ரீபாஷ்யகாரர் முதலான ஆசாரியர்களால் அருளிச் செய்யப்பட்டிருக்கும் க்ரந்தங்கள் ஸம்ஸ்க்ருத வேதாந்த க்ரந்தங்களாகும். நாலாயிர திவ்யப்ரபந்தங்கள் ரஹஸ்யங்கள் முதலியவற்றுக்கு வியாக்யானங்களாக அவதரித்திருக்கின்ற க்ரந்தங்கள் த்ராவிட வேதாந்த க்ரந்தங்களாகும், ஆக இத்தகைய உபயவேதாந்த க்ரந்தங்களிலும், உபநிஷத்துக்கள் ஸ்ரீராமாயணம் பகவத்கீதை ஸ்ரீவிஷ்ணுபுராணம் ஸ்ரீவிஷ்ணுதர்மம் ஸ்ரீபாகவதம் ஹரிவம்சம் ஸ்ரீபாஞ்சராத்ரஸம்ஹிதைகள் ஸ்ம்ருதிகள் ஆசார்ய ஸ்ரீஸூக்திகளான ஸ்தோத்ராதிகள் கவிகளியற்றிய காவ்ய நாடகாதி க்ரந்தங்கள் ஆக இப்படிப்பட்ட பலபல க்ரந்தங்களிலிருந்து அருமருந்தன்ன அநேக ப்ரமாணங்கள் எடுத்தாளப்பட்டிருக்கின்றன வென்பது ஸுப்ரஸித்தம்.

இப்படி உதாஹரிக்கும் ப்ரமாணங்களானவை மொத்தத்தில் பதினாயிரம் தேறுமென்று தெரியவருகிறது.

சில ப்ரமாணங்கள் ஆங்காங்கு பூர்த்தியாகவே உதாஹரிக்கப்பட்டிருந்தாலும் பல ப்ரமாணங்கள் சிறு சிறு துண்டுகளாகவே உதாஹரிக்கப்பட்டுள்ளன, அந்த ப்ரமாணங்கள் எவ்விடத்திலுள்ளவை என்பதைத் தெரிந்து கொள்ளவும், அந்த ப்ரமாணங்களைப் பூர்த்தியாகத் தெரிந்து கொள்ளவும் பலர் விரும்புவார்கள்.

ப்ரமாணத் திரட்டுக்களாகச் சில நூல்கள் சில மஹான்களால் ஏற்கெனவே வெளியிடப்பட்டிருப்பது மஹத்தான லோகோபகாரமேயாகும். ஆனல், ஸ்ரீவசநபூஷண ப்ரமாணத் திரட்டு. தத்வத்ரய ப்ரமாணத் திரட்டு, ரஹஸ்யத்ரய ஸார ப்ரமாணத் திரட்டு என்றிப்படி சிலசில க்ரந்தங்களுக்காக அவை ஏற்பட்டிருக்கின்றனவேயல்லது ஸகல க்ரந்தங்களிலுமுள்ள ப்ரமாணங்களையும் சேர்த்துத் திரட்டியிருக்கின்ற நூல் இது வரையில் ஒன்றும் வெளிவந்திருக்கவில்லை. இது நம்முடைய ஸம்பிரதாயத்திற்கு மிகவும் அவசியமானதொன்றாகும்.

ஸகல ப்ரமாணங்களுக்கும் அகராதி வரிசையில் அட்டவணையிருக்கவேண்டும்: அந்த ப்ரமாணங்களை யெல்லாம் முன்பின் ஸந்தர்ப்பங்களோடு பூர்த்தியாகவும் காட்ட வேண்டும்; அவற்றுக்கு ஆகரங்களும் காட்டவேண்டும். இவ்வளவும் பொருந்திய ஒரு நூல் தொகுதி மிகவும் அவசியமென்பது புநருக்தம். இந்த ப்ரமாணங்களுக் கெல்லாம் பொருள் விளக்கமும் கூடவே யிருக்கவேணுமென்றும் சிலர் விரும்பக்கூடும். உண்மையில் அதுவும் அவசியமேயானாலும் அப்பெரிய காரியம் இரண்டாவதாக நிற்கும் மேலே விவரித்த விதமாக ப்ரமாணத் திரட்டு நூலைச் சேகரிப்பதே முதற்காரியமாக இப்போது கொள்ளப் பட்டது. இந்தத் திரட்டுக்கு உபயவேதாந்த ப்ரமாண ஸங்கிரஹம் என்று பெயர். இது இப்போது அச்சிடப்பெற்றும் வருகின்றது. கூடிய சீக்கிரத்தில் வெளிவந்து உலவும்.

இந்த ப்ரமாணங்களை யெல்லாம் ஆராயும்போது மனதில் தோன்றிய தொன்றை மஹான்களுக்கு விஜ்ஞாபிக்கிறேன். ஸ்மிருதீதிஹாஸ புராணாதிகளெல்லாம் அச்சிடப் பெறாமல் ஓலையேடுகளில் இருந்த காலத்தில் அவற்றிலிருந்து ப்ரமாணங்கள் நம் முன்னோர் களால் எடுத்து உதாஹரிக்கப்பட்டன. அக்காலத்திலேயே ஸ்வல்பம் பாடபேதங்களு மிருந்தனவென்று காண்கிறது. அந்த ஸம்ருதீதிஹாஸபுராணாதிகள் அச்சில் ஏறும்போது எந்த காரணத்தாலோ அளவு கடந்த பாடபேதங்களைக் கொண்டுவிட்டன. ஸர்க்கங்கள் அத்யாயங்கள் இவற்றினுடைய லக்கமும், ச்லோகங்களின் ஆநுபூர்வியும் அனேக விடங் களில் மாறியிருக்கக் காண்கிறோம்.

இதற்கு ஒன்றிரண்டு நிதர்சனமும் காட்டுகிறேன். ஸ்ரீராமாயணத்தில் சக்ர வர்த்தி திருமகன் சபரியின் ஆச்ரமத்துக்கு எழுந்தருளினபோது அவள் உகந்து சொல்லுகிற வார்த்தை *சக்ஷுஷா தவ ஸௌம்யேந பூதாஸ்மி ரகுநந்தந, பாதமூலம் கமிஷ்யாமி யாநஹம் பர்யசாரிஷம் * என்பதாக நம் ஆசார்யர்களால் உதாஹரிக்கப்பட்டிருக்கிறது இதில் உத்தரார்த்தம் ரஸமயமான விசேஷார்த்தமும் பொருந்தியதாகும். பரமபதம் சென்ற வர்களை ஆசாரியன் திருவடியடைந்ததாக வ்யவஹரிப்பது தொன்றுதொட்டு நிகழ்ந்து வரு கின்றது. அதற்கு இந்த சபரியின் வார்த்தை ப்ரமாணம் என்று நம் ஆசாரியர்களின் கொள்கையாகப் பெரியார்கள் உபதேசிப்பது, * பாதமூலம் கமிஷ்யாமி யாநஹம் பர்யசாரிஷம் * என்று ஆசிரியர்கள் கொண்ட பாடத்தில் தான் இவ்வரிய பெரிய பொருள் கிடைக்கும். இந்த ஆச்ரமத்தில் எந்த ஆசாரியர்களுக்கு நான் பணிவிடை செய்து கொண்டிருந்தேனோ அப் பெரியார்கள் திருநாட்டுக்குச் சென்றிருக்கிறார்கள்! அவர்களுடைய திருவடிவாரம் நான் சென்று சேரப்போகிறேன்' என்று சபரி சொல்லுவதாக நன்கு விளங்குகின்றது. ஆனால் அச்சிட்ட புஸ்தகம் ஒன்றிலும் இப் பாடம் காணப்படவில்லை. *கமிஷ்யாம்யக்ஷயாந் லோகாந் த்வத் ப்ரஸாதாத் அரிந்தம * என்று எல்லாப் பதிப்புகளிலும் பாடம் மாறி யிருக்கிறது. (ஆரண்ய காண்டம் 74 ஸர்க்கம் ச்லோ. 13) * சக்ஷுஷா தவ ஸௌம்யேந பூதாஸ்மி ரகு நந்தன * என்கிற பூர்வார்த்தமும் சில பதிப்புகளில்* தவாஹம் சக்ஷுஷா ஸௌம்ய பூதா ஸௌம்யேந மாநத * என்று மாறிக் காண்கிறது. இதில் அவ்வளவு விசாரமில்லை. உத்தரார்த்தம் அடியோடு உருமாறியிருப்பது தான் ஆச்சரியமானது.

ஆசார்யர்களின் காலத்திற்கு மிகவும் பிற்பட்டவரான கோவிந்தராஜர் என்ப வர் பணித்த ஸ்ரீராமாயண வியாக்கியானத்திலும் * பாதமூலம் கமிஷ்யாமி......* என்கிற பூர்வாசார்ய ஸம்மதமான பாடம் வியாக்கியானிக்கப்படவில்லை. இப்போது அச்சுப் பதிப்புகளிற் காணும் பாடமே அவரது வியாக்கியானத்திலுங் காண்கிறது.

இந்த ப்ரகரணத்தில் ஸ்ரீராமாயணத்தின் முன் பின் ஸந்தர்ப்பங்களை உற்று நோக்கினால் நம் ஆசாரியர்கள் கொண்டருளின பாடமே இருக்கத் தக்கதாக விளங்கா நின்றது. சபரி ஆசார்ய பரிசர்யையில் பழுத்தவள் என்பது அங்கு நன்கு அறியக்கிடக் கின்றது. பெருமாள் அவளை நோக்கி வினவும் போது "கச்சித் தே குருசுச்ரூஷா ஸபலா சாரு பாஷினு!" நீ பண்ணின ஆசார்ய பரிசர்யை பயன் பெற்றதா* எற்று கேட்கிறார் அவளும் அதை யொட்டியே விடை கூறியிருக்கின்றாள். ஆகவே * பாதமூலம் காஷ்யாமி யாநஹம் பர்ய சாரிஷம் * என்ற பாடமே பொலியத் தக்கது. இல்லாத பாடத்தை ஆசார் யர்கள் கற்பனை பண்ணி யெழுத ப்ரயக்திவில்லை.

இப்படிப்பட்ட பாடமாறுதல்கள் வாக்கியங்களிலும் பதங்களிலும் அக்ஷரங்களிலும் பல காண்கின்றன. ஸாத்யமானவரையில் நம் பூருவாசாரியர்கள் ஆதரித்த பாடங்களைக் கொண்டே இப்போது நாம் பிரமாணத் திரட்டு சேகரித்து வருகிறோம்.

அன்றியும், ஆசாரியர்கள் ஸ்ரீராமாயணத்திலிருந்து கையாண்ட சில ச்லோகங்கள் இக்காலத்து அச்சுப்பதிப்பில் அடியோடு காணப்படுவதில்லை. "ஹாரோபி நார்ப்பித: கண்டே ஸ்பர்சஸம்ரோதபீருணா, ஆவயோரந்தரே ஜாதா: பர்வதாஸ்ஸரிதோத்ருமா:" ✠ என்கிறவொரு ச்லோகத்தை நிதர்சனமாகக் கொள்ளலாம். இது ஸ்ரீவசந பூஷணத்தில் மூலத்தில் உதாஹரிக்கப்பட்டிருக்கிறது இது அச்சுப் பதிப்பில் ஒன்றிலுங் காணவில்லை. ஸமீபகாலத்தில் ஒரு மஹநீயர் பதிப்பித்த ஸ்ரீராமாயணத்தில் யுத்த காண்டத்தில் ஐந்தாவது ஸர்க்கத்தில இந்த ச்லோகம் பதிப்பிக்கப்பட்டிருப்பதைக் கண்டு மிகமிக மகிழ்ந்தோம்.

## ஸ்தலபுராணங்களின் விமர்சம்

மேன்மைபெற்ற விஷ்ணு க்ஷேத்திரங்களுக்கெல்லாம் பெரும்பாலும் புராணங்கள் விளங்கக் காணுகின்றோம். ஆழ்வார்களின் மங்களாசாஸனம் பெற்ற திவ்யதேசங்களுக்கு மாத்திரமேயல்ல, மற்றும் பல தலங்களுக்கும் புராணங்களுண்டு. அவையே ஸ்தல புராணங்களென்று வழங்கப்படுகின்றன. 'க்ஷேத்ரமாஹாத்மியம்' என்றும் வழங்குவதுண்டு. இந்த புராணங்கள் மஹர்ஷி ப்ரணீதங்களென்று கபடமற்ற பெரியார்களால் பாராட்டப் பெற்று வருகின்றன.

சிலருடைய கொள்கை யாதெனில், கோயில் திருமலை பெருமாள்கோயில் திருநாராயணபுரம் என்று ஸுப்ரஸித்தமாக வழங்கும் திவ்யதேசங்கள் தவிர மற்ற ஸ்தலங்களுக்குக் காணும் புராணங்கள் ப்ராசீனங்களாயிருக்கத் தகுதியில்லையென்றும் சில நூற்றுண்டுகட்கு முன்பு சில பெரியார்களால் அமைக்கப்பட்டிருக்கலாமென்றும்.

இந்த ஸ்தல புராணங்களெல்லாம் மஹர்ஷி ப்ரணீதங்களாய்ப் புராதனங்களாயிருந்தால் அந்தக் கதைகளைத் தழுவியிருப்பர்கள் ஆழ்வார்கள்; அங்ஙனம் காணவில்லை; ஸ்ரீராமாயண ஸ்ரீவிஷ்ணு புராணாதி இதிஹாஸ புராண கதைகளைக் கொண்டே ஆழ்வார்கள்பாசுரங்கள் அவதரித்திருப்பதாலும், வியாக்கியானம் செய்தருளிய பெரியவாச்சான்பிள்ளை முதலான பூருவாசாரியர்களும் ஸ்தல புராணங்களில் ஏக தேசமும் உதாஹரித்திலாமையாலும் இவை விச்வஸநீயங்களாக மாட்டாவென்று சிலர் வாதிக்கின்றார்கள்.

இந்த விஷயத்தில் விசாரம் செய்வது மிகவும் தருமசங்கடம். எதிலும் பூர்வபக்ஷங்களை எளிதாகச் செய்து விடலாம்: தினவடங்க ஸமாதானம் சொல்வதென்பது சில விஷயங்களில் முடியாமற் போகும். அதனால் ப்ராமாணிகமான விஷயங்களுக்கு விபர்யாஸம் நேர்ந்து விடக்கூடும். இது ஆஸ்திகர்களுக்குப் பெரிய குறையாய்த் தலைக்கட்டும். ஆகவே இப்படிப்பட்ட சில விஷயங்களில் விசாரம் எடுத்துக்கொள்ளாமலேயிருப்பது தான் யுக்தம். ஆனாலும் ப்ரக்ருத விஷயத்தில் பிரபலமான விசாரம் பண்டித கோஷ்டியில் ப்ரஸக்தமானபடியால் யாம் இங்கு ஆத்ம ஸாக்ஷிகமாகச் சில எழுத விரும்புகிறோம்.

யாம் பெருமாள் கோயிலென்கிற காஞ்சீபுரத்தில் வஸிப்பவர்களாதலால் இந்த க்ஷேத்திரத்திற்காக ஏற்பட்டிருக்கின்ற ஹஸ்திகிரி மாஹாத்ம்யமென்கிற ஸ்தல புராணத்தைப் பற்றி ஒரு கால் விமர்சிக்க நேர்ந்தது. நான்முகக் கடவுள் செய்த அச்வமேத யாகத்தில் தோன்றியவர் தேவப் பெருமாள் என்பது புராண வரலாறு. இவ்வரலாற்றை ஸ்ரீமத் வேதாந்த தேசிகர் வடமொழித் துதியிலும் தென் மொழிப் பிரபந்தத்திலும் நன்றாகக் கையாண்டிருக்கின்றார். ஆனால் தேசிகற்கு மிக முற்பட்டவரான கூரத்தாழ்வான் தேவப் பெருமாள் விஷயமாக அருளிச் செய்த நூறு ச்லோகங்கள் கொண்ட வரதராஜ ஸ்தவத்தில் இவ்வரலாறு சிறிதும் ப்ரஸ்தாவிக்கப்படவேயில்லை. * பத்மயோநேஸ் துரக ஸவநவேத்யாம் ச்யாமளோ ஹவ்யவாஹ: ✠ என்றும் * ஹைரண்யகர்ப்ப ஹயமேத ஹவிர்ப்புஜம் த்வாம் * என்றும் இங்ஙனே தேசிகன் அருளிச் செய்வதுபோல கூரத்தாழ்வான் ஒரு துணுக்கையாவது விசேஷணமாக அருளிச் செய்திருக்கலாமே. பிரமன் வேள்வி செய்த

தான ப்ரஸ்தாவமே ஆழ்வானுடைய ஸ்தவத்தில் கிடையாது. * யஜ்ஞேச்வர! * என்றொரு ஸாமாந்யமான விளியே உள்ளது. அவர்க்கும் முற்பட்டவரான திருக்கச்சி நம்பிகளின் ஸ்ரீ ஸூக்தியிலும் கிடையாது ஆகவே, கூரத்தாழ்வானுடைய காலத்துக்கும் தேசிகனுடைய காலத்துக்கும் இடையிலே ஸ்தலபுராணம் தோன்றியிருக்கலாம் என்று கூறுவதற்கு இடமேற்படுகின்றது.

அன்றியும், ஸ்தலபுராணங்கள் பலவற்றையும் ஒருங்கே நோக்குமிடத்தில் சில கதைகள் பெரும்பாலும் ஒற்றுமைப்பட்டே யிருக்கக் காணுநின்றோம். தவிர, மஹாபாரதம் ஸ்ரீபாகவதம், அஷ்டாதச புராணங்கள், முதலியவற்றில் காணும் கதைகளுங்கூட ஸ்தல புராணங்களில் சிறிது மாறுபாடுறக் கோக்கப்பட்டிருக்கக் காணுநின்றோம். இப்படிப்பட்ட பல பல ஸந்நிவேசங்களினால் ஸ்தலபுராணங்களில் ஏற்படுகிற சங்கைக்குப் பரிஹாரம் செய்வது அரிதே. ப்ராமாணிகர்களான பெரியார்கள் ஆதரித்துப் போருகின்றபடியால் நாம் இதில் விப்ரதிபத்தி பண்ணுதேயிருக்க ப்ராப்தம்.

திருக்குடந்தை ஸமீபத்திலுள்ள திருவிண்ணகரென்கிற திவ்யதேசம் 'உப்பிலியப்பன் ஸந்நிதி' என்று வழங்கப்பெற்று வருகின்றது.

இத்தலத்து எம்பெருமான் அமுது செய்தருளும் நித்ய நைமித்திக ப்ரஸாதங்களில் உப்பின் ஸம்பந்தம் சிறிதும் கிடையாதென்பது ஸுப்ரஸித்தம். இது நிற்க. திருமங்கையாழ்வார் * ஒருவரையும் நின்னொப்பாரொப்பிலா வென்னப்பா * என்கிறார். நம்மாழ்வார் இத்தலத்துப் பதிகத்தில் * தன்னொப்பாரில்லப்பன் * என்கிறார். இவற்றால் திருவிண்ணகரப்பனுடைய திருநாமம் "ஒப்பிலியப்பன்" என்பதாகத் தேறுகின்றது. தனக்கு ஒப்பில்லாத பெருமான் என்றபடி. இத் திருநாமமே நாளடைவில் 'உப்பிலியப்பன்' என்று விகாரப்பட்டு அதற்கேற்ப உப்பு இல்லாமல் ப்ரஸாதங்கள் நிவேதனமாக வேணுமென்று நிபந்தனை யேற்பட்டிருக்கும். இத் திருப்பதிக்கமைந்த ஸ்தல புராணத்தில் உப்பிலியப்பன் என்கிற திருநாமத்திற்குத் தகுதியான கதை வரையப்பட்டிருக்கின்றது. ஆழ்வாருளிச் செயலின் போக்கையறியாதவர்கள் ஒப்பிலியப்பனை உப்பிலியப்பனுக்கி அதற்கேற்ப ஸ்தலபுராணமொன்றும் அமைத்து உப்பில்லாத அநுஷ்டானத்தையு முண்டாக்கியிருக்கக் கூடும் என்கிற அதிசங்கைகள் சிலர்க்கு இருந்துவருகின்றன.

ஆனால் இத்தலத்தில் யாராவது உப்பு சேர்த்து ப்ரஸாதம் ஸ்வீகரித்தால் அவர்களுக்கு உடனே ஏதேனும் தெய்வதண்டனை நேருவதாகப் பலகால் அநுபவத்திற்கண்ட பெரியார்கள் கூறுவதால் ஸாஹஸமாக இப்படிச் சொல்லி விடுவதற்கும் பாங்கில்லை.

ஸ்தலபுராண ச்லோகங்களை நம் பூருவர்கள் அடியோடு உதாஹரித்தருளவில்லையென்றும் சொல்லப்போகாது. சில ச்லோகங்களை உதாஹரித்தருளியு மிருக்கிறார்கள். ஆழ்வார்களும் ஸ்தலபுராணக் கதைகளிலிருந்து ஒன்றிரண்டு எடுத்து அருளிச் செய்திருக்கக் காண்கிறோம். * மன்னுடைய விபீடணற்கா மதிளிலங்கைத் திசை நோக்கி * என்கிற பெரியாழ்வார் பாசுரம் ஸ்ரீரங்கமாஹாத்மியத்தை யடியொற்றியது. * துளங்கு நீண்முடியரசர் தங்குரிசில் தொண்டைமன்னவன் * என்கிற திருமங்கையாழ்வார் பாசுரம் ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியத்தை யடியொற்றியது. இங்ஙனே மற்றுஞ் சிலவும் காணலாம். ஆழ்வான் ஸுந்தரபாஹுஸ்தவத்திலும், பட்டர் ஸ்ரீரங்க ராஜஸ்தவத்திலும் ஸ்தலபுராணங்களை யநுஸரித்தே சில ச்லோகங்கள் அருளிச் செய்திருக்கவும் காண்கிறோம்.

சில ஸ்தலபுராணங்கள் கால விசேஷங்களில் மஹான்களால் நிருமிக்கப்பட்டுமிருக்கலாம். அதனால் குறையொன்றுமில்லை யென்க.

## நம்மவர்களின் படிப்பு முறைமை

இங்கு நம்மவர்களென்று ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்தை விவக்ஷித்துச் சொன்னபடி. ஆழ்வாராசாரியர்களின் திவ்ய ஸூக்திகளாகிற அமுத வெள்ளம் பெருகிப் பாயும் நிலமான ஸ்ரீவைஷ்ணவ குடும்பத்திலே ஜனிக்குமவர்களுக்கு விலக்ஷணமான படிப்பு முறைமை அமையவேண்டுமென்ற கருத்தினால் இப்போது இந்த வியாஸம் எழுதலாகிறது.

வட இந்தியாவிலுள்ள ஸம்ஸ்க்ருத வித்யாலயங்களில் பாடங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கும் முறைமை ஒருவிதமாக இருக்கின்றது. அதைப்பற்றி இங்கு நமக்கிப்போது

விவக்ஷையில்லை. தென்னிந்தியாவில் பெரும்பாலும் நமக்குத் தெரிந்தவரையில் ஸம்ஸ்க்ருத வித்யாசாலைகளிலோ மற்றும் அவரவர்கள் க்ருஹங்களில் ஸ்வச்சந்தமாக நடத்திவருகிற பாடப்ரவசனங்களிலோ பாடங்கள் ஏற்படுத்தியிருக்கிற முறைமை எப்படியுள்ளதென்றால் முதல் வகுப்பில் சப்தமஞ்ஜரி, ஸ்ரீராமாயண ஸங்க்ரஹம், அல்லது ராமோதந்தம், க்ரியாமாலை, அமரம் என்றிப்படி சிறு க்ரந்தங்களை வைத்து. பிறகு காவ்ய, சம்பூ, நாடக, அலங்கார க்ரந்தங்கள் படிப்படியாக ப்ரவசனம் செய்யப்பட்டுவருகின்றன. மேகஸந்தேசம், மாக காவியம், நைஷத காவியம், காதம்பரி, வாஸவதத்தை, குவலயாநந்தம் என்றிப்படிப்பட்ட க்ரந்தங்கள் பத்து வயது தொடங்கிப் பதினைந்து வயதளவும் வாசிக்கும்படியான ஏற்பாடுகள் எங்கும் ஸமரீதியாக நடந்துவருகின்றன.

இந்த நூல்களில் ஸ்த்ரீகளையும் அவர்களது அவயவங்களையும் ச்ருங்கார கேளிகளையும் மற்றும் பலவகையான விப்ரமங்களையும் பற்றின வர்ணனைகள் மலிந்திருக்கின்றன வென்பது ஸுப்ரஸித்தம். மாககாவியம் கண்ணபிரானுடைய சரிதையைக் கூறப்பிறந்து சிசுபாலவதமென்று பெயர்பெற்றதேயாயினும் அதில் பலவிடங்களில் ஸ்த்ரீ வர்ணனை முதலிய மேற்கூறியவை யாவும் பொருந்தியே யிருக்கின்றன வென்பது மறுக்க முடியாதது. ஆனாலும் மாககாவியத்திற்கு ப்ரத்யேகமான ஒரு சிறப்பு உண்டு; "நவஸர்க்கே க்ருதே மாகே நவசப்தோ ந வித்யதே." என்பதாகப் பண்டிதவுலகர் வழங்குவர். உண்மையில் மாககாவியம் ஸம்ஸ்க்ருத வ்யுத்பத்திக்குச் சிறந்த ஸாதனமாதலாலும் கண்ணபிரானுடைய திவ்ய சரிதையைப் பற்றினதாயிருப்பதாலும் அதைப்பற்றி இங்கு நாம் பேசுவதை நிறுத்திக் கொள்வதும் நலம்.

சம்பூ ராமாயணமென்கிற போஜசம்பூ, பாரதசம்பூ முராரி நாடகம் என்றிப்படிப்பட்ட நூல்கள் வ்யுத்பாதகங்களாயிருப்பதோடு பகவத் கதைகளாகவுமிருப்பதால் இவற்றை வாசிப்பது பற்றியும் விப்ரதிபத்தியில்லை. பகவத்கதை சிறிதும் ஸம்பந்தப்படாமலும் கேவலம் விஷயாந்தரவ்யாஸங்க நிதானங்களாயு மிருக்கிற காவ்ய நாடகாதிகளை இளமையில் வாசிக்கச் செய்வதனால் "பசுமரத்திலடித்த ஆணி" என்னும் ரீதியிலே ச்ருங்காரரஸ ப்ரணாளியே பால்யத்தில் வேரூன்றிப் போகிறதல்லவா? அன்னவர்களுக்கு பகவத்பக்தி ரஸத்தில் நெஞ்சு செல்லுவது மேட்டு மடையாக விருக்குமென்று தோன்றுகிறது.

ஒருஸமயம் ஒரு பாடசாலையில் நாம் சென்று பாடப்ரவசனங்களை கவனிக்க நேர்ந்தது. அப்போது அங்கு குவலயாநந்த பாடம் நடந்து வருகிறது. பாடம் சொல்லுகிற உபாத்யாயர் நைஷ்டிக ப்ரஹ்மசாரி; பரம விரக்தரான பரமைகாந்தி. வாசிக்கிற வித்யார்த்திகள் பதினைந்து வயதுக்குட்பட்ட சிறு பிள்ளைகள். அன்று "ஸங்கதாநி ம்ருகாக்ஷீணாம் தடித்விலஸிதாந்யபி, க்ஷணத்வயம் ந திஷ்டந்தி கநாரப்தாந்யபி ஸ்வயம்' என்கிறவொரு லக்ஷ்யச்லோகம் பாடத்தில் வந்திருக்கின்றது. உபாத்யாயர் பொருளை விவரித்துக் கூறத் தணறுகிறார். பிள்ளைகளோ ஆவலோடு உபாத்யாயர் வாயை எதிர்பார்க்கிறார்கள்; அந்த கஷ்டத்தை என்னவென்று எழுதுவது? நாடகாலங்காரங்களில் இப்படிப்பட்ட ச்லோகங்கள் மலிந்து கிடக்கின்றன, இவற்றையெல்லாம் இளமையில் வாசிக்கச் செய்வது நல்வழிப் பழக்கத்திற்கு ஹேதுவாக வழியில்லையே.

அன்றியும் மாலதீமாதவீயம் ப்ரதாபருத்ரீயம் என்பது போன்ற நூல்கள் பல வகையிலும் வெறுக்கத்தக்கவை, மாலதீ மாதவீயமென்பது பவபூதி இயற்றிய நூல்களிலொன்று. சாகுந்தளம் முதலியன போல் புராணகதையைச் சொல்வதாயிருந்தாலும் குற்றமில்லை. இது ஒரு வெறும் நாவல். மாலதியென்கிற ஒரு நாயகியையும் மாதவனென்கிறவொரு நாயகனையும் கவி தானாகவே கல்பனை செய்துகொண்டு ஒரு கதையைத் தொடுத்துப் பெரிய நூலாக இயற்றிவிட்டார். இதையும் படித்து வருகிறோம். இதைப்பற்றி நமது பகவத் விஷயத்தில் (ஈட்டில்) ஒரு இதிஹாஸமுள்ளது; அது நமக்கிப்போது நினைவுக்கு வருகின்றது. ஆளவந்தார் பகவத் விஷய காலக்ஷேபம் நிர்வஹித்தருளுகையில் நாடகாலங்கார நிஷ்ணாதரான வொரு பண்டிதர் அந்த கோஷ்டியில் சென்று அந்வயித்திருந்தார். ஆளவந்தார் அன்று "கோலமாமென் சென்னிக்கு உன் கமலமன்ன குரைகழலே" என்கிற அருளிச் செயலையும் "அடிச்சியோந்தலைமிசை நீயணியாய் ஆழியங்கண்ணா வுன் கோலப்பாதம்" என்கிற அருளிச் செயலையும் சேரவெடுத்துக் கொண்டு நைந்து நைந்து உள் கரைந்துருகிக் குரல்தழுத்து இப்படிப்பட்ட ஈரச்சொல் மற்றொரு கவி வாக்கில் வெளிவந்ததுண்டோவென்று விம்மல் பொருமலாயிருக்கும் நிலைமையிலே அந்த பண்டிதர் "த்வத்பாத

பங்கஜபரிக்ரஹதன்யஜன்மா பூயாஸமிதி அபிநிவேசகதர்த்ய்மாந:'' என்கிற மாலதீ மாதவீய ச்லோகத்தைச் சொன்னாராம். இதைத் திருச்செவி சாத்தின ஆளவந்தார், 'அந்தோ! ச்லோகத்தின் பரிபாகம் என்ன அழகாக அமைந்திருக்கின்றது! இது வகுத்த விஷயத்திலாகப் பெற்றதில்லையே!' என்று போரவும் திருவுள்ளம் புண்பட்டருளினாராம். பவபூதியின் அந்த ச்லோகமானது உண்மையில் மிக அழகியதே. மாதவனென்கிற தலைமகன் மாலதி யென்னுந் தலைவியைப் பெறுதற்கு உபாய சிந்தைபண்ணிச் சுடுகாட்டில் திரிகிறான். அப்போது அங்கு யாத்ருச்சிகமாக மாலதியைக் கண்டு இங்ஙனே பேசினானாயிற்று. ஆகவே விஷயம் மிக அவிலக்ஷணமாய் முடிந்தது.

ப்ரதாபருத்ரீய மென்கிறவொரு நூலைப்பற்றியுங் கேண்மின். நைஜாம் இலாக்கா வரங்கல் நகரத்தில் பிரதாபருத்ரனென்னும் ஒரு ஜமீன்தாரி கிடந்தான். [முந்நூறுண்டு கட்கு உட்பட்ட காலம்.] நாலு காசுக்காக அவனைப் புகழ்ந்து நாடகாலங்கார லக்ஷ்ய லக்ஷண க்ரந்தமாக இதனை அமைத்தான் ஒரு பண்டிதன். இத்தகைய க்ஷுத்ரமான நூல் ஸம்ஸ்க்ருத வித்யாலயங்களிலெங்கும் புகுந்து பரவிவிட்டது. இதை வாசித்தே சிரோமணி பரீக்ஷைகளில் தேறவேண்டியிருக்கிறது.

இப்படியே அநாலோசித ரமணீயமாகப் பரம்பரையாய் நடந்துபோரும் பாட ப்ரவசந க்ரமங்களில் சுத்த ஸ்ரீவைஷ்ணவ வகுப்பினர் மாத்திரமாவது சிறிது ஆராய்ச்சி செலுத்திப் புதிய பரிஷ்கார ஸரணிகளை நோக்கினால் நலமாயிருக்குமன்றோ?

இப்படிப்பட்ட க்ரந்தங்களில் போதுபோக்கித் திரிகிறோமென்கிற துக்கம் தவிர மற்றொரு துக்கமும் மிகப் பெரிதாகவுள்ளது; நம்முடைய பூருவாசாரியர்கள் அருமருந் தன்ன ஸம்ஸ்க்ருத க்ரந்த ரத்னங்கள் எத்தனையருளிச் செய்திருக்கிறார்கள்! அவை ஸர்வதோமுகமான ஞானத்தையும் உண்டாக்கக் கூடியவை: அளவிறந்த பகவத் பக்தி ஸம்பத்தையும் பெருக்கக் கூடியவை. இவற்றைப் பாடமாகக் கொண்டு வாசித்தால் எத்தனை நலமுண்டு! இவற்றைக் கண்ணெடுத்தும் பார்ப்பாரில்லை. பரீக்ஷைகளில் தேறி வித்வான்களென்று பேர்பெற்ற பிறகுங் கூட அந்த க்ஷுத்ர காவ்ய நாடக நூல்களிலேயே போதைப் போக்கித் திரிவார் பலருளரேயன்றி ஆளவந்தார் ஆழ்வான் பட்டர் போல்வாரான ஆசாரியர்களின் திவ்ய ஸூக்திகள் இருப்பதாகக் கூட அறிவாரில்லையே.

பால்யத்தில் சில ஸ்தோத்ரங்களைத் தலைவிதியாய்க் கற்றுக்கொள்ள வேண்டியதாகச் சிலர்க்கு நேர்ந்துவிடுகிறது. அக்காலத்தில் கற்பிப்பவர்களின் அஜாக்ரத்தையினாலும் கற்பதிலுள்ள அவைசத்யத்தினாலும் சில பல தவறுதலான பாடங்கள் புகுந்து விடுகின்றன. அந்த அபத்த பாடங்களை அந்தோ! பண்டிதர்களான பிறகும் பரிபாலனம்பண்ணி வருகிறார்கள். அர்த்தத்தில் சிறிது நெஞ்சைச் செலுத்தினால் தப்புப் பாடமென்று தாங்களே எளிதிலுணரக் கூடிய ஆற்றலிருந்தும் அர்த்தத்தில் நெஞ்சை விடுவாரில்லை. "ஸம்ஸார மருகாந்தாரே துர்வ்யாதிவ்யாக்ரபீஷணே, விஷயக்ஷுத்ரகுல்மாட்யே த்ருஷா பாதபசாலிநே'' என்று இளமையிற் பாடம் எங்கும் ஏறிவிடுகிறது. இதில் ஒவ்வொரு பாதமும் ஏகாராந்தமாகவே யிருப்பதனால் நான்காவது பாதமும் அப்படித்தானிருக்க வேணுமென்று கருதியோ வேறென்ன கருதியோ ✠ த்ருஷா பாதபசாலிநே ✠ என்று கற்பித்துவிடுகிறார்கள். சிறிது வ்யுத்பத்தி யுண்டான பிறகு இது அஸம்பத்தமென்று தெரிந்து கொள்வதில் என்ன கஷ்டமிருக்கின்றது. ஆனால் அதில் நெஞ்சைச் செலுத்தினாலன்றோ திருத்திக்கொள்ள நேரும். வித்வான்களின் வாக்கிலும் பெரும்பாலும் இத்தகைய அபத்த பாடங்களே கேட்க நேர்கின்றது. 'ஸ்வாமி திருவாக்கிலும் இப்படி வரலாமா?' என்று யாரேனும் கேட்டால், "இவற்றிலும் ஸந்த்யாவந்தந மந்த்ரங்களிலும் தர்ப்பண மந்த்ரங்களிலும் கேள்வி கேட்கலாகாதென்பது உமக்குத் தெரியாதோ?'' என்று கூறிவிடுகிறார்கள். நம் ஆசார்ய ஸ்ரீஸூக்திகளின் கதி இப்படியாயிருக்கிறது.

ச்ருங்காரரஸ ப்ரதானங்களான நூல்களையே மிக மிக வாசித்துப் போந்தும் பகவத் பக்தி தலையெடுத்திருப்பாருமுளர்; அடியோடு இல்லையென்று சொல்லுகின்றிலோம். ஸாமான்ய கவிகளின் க்ரந்தங்களைக் கண்ட பாடம் செய்திருப்பது போலவே நம் பூருவாசாரியர்களின் திவ்ய ஸ்ரீஸூக்திகளையும் கசடறக் கற்றிருப்பாரும் பலருண்டு, அடியோடு இல்லையென்று சொல்லுகின்றிலோம். ஆனால் இத்தகைய ஸம்பவங்கள் ஜந்மாந்தர ஸஹஸ்ர ஸுக்ருதபலமாகச் சில வ்யக்தி விசேஷங்களிடத்து வாய்ப்பனவேயாம். "தஸ்மாத்பால்யே விவேகாத்மா யதேத ச்ரேயஸே ஸதா'' என்றும் ✠ கிளரொளி யிளமை கெடுவதன் முன்

ண்ம் * என்றுமுள்ள பிரமாணங்களை நோக்கி இளமை தொடங்கியே நன்னெறிப் பயிற்சியை மல்குவிக்கக் கருதவேண்டியது ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அவசியமாதலால், ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அஸாதாரணங்களான வித்யாலயங்களில் இதற்கேற்றவாறு பாடப்ரவசநப்ரணாளியைப் பரிஷ்காரஞ் செய்து கொள்வது நலமல்லவா? இதர கவிகளின் க்ரந்தங்களின் ப்ரவசனத்தை வர்ஜிக்க விரும்பாவிடினும் .நம் ஆசாரியர்களின் க்ரந்தங்களையும் கூடவே ப்ரவசனம் செய்து வரவாவது ஏற்பாடு நடந்தால் ஒருவாறு த்ருப்தியாகும்.

அன்றியும் மற்றொரு பெருங்குறையுமுண்டு. நாம் உ. வே. யென்று சிறப்பாக விருது வஹிக்கிறோம். உ. வே. யில்லாமல் யாரேனும் நமக்குக் கடிதமெழுதினால் கண் சிவக்கப் பார்க்கிறோம். உ. வே. யென்றால் இன்னது அர்த்தமென்று தெரிந்துகொள்ளாமலிருப்பாரும் பலருளர், அது நிற்க. உபய வேதாந்தங்களிலும் ஸமமாக வுழைத்து ஞானம் பெறக் கடமைப்பட்டிருக்கிறோமல்லவா? த்ராவிட வேதாந்தத்தை வலக்கண்ணாகக் கொள்ளுங் குடியிலே பிறந்துவைத்தும் அதில் என்ன வுழைக்கிறோம். குறில் நெடில் என்றால் கூட இன்னதென்று அறியாமலிருக்கிறோம். ஒரு ஸ்ரீ வைஷ்ணவ பாடசாலையிலும் இலக்கண இலக்கியப் பாடம் நிகழ்வதாக அறிகின்றிலோம். அஷ்டப்பிரபந்தங்கள் திவ்யப்பிரபந்தங்கள் முதலியவற்றை இலக்கியமாகப் பாடம் வைத்து ப்ரவசனம் செய்யாவிடில் தமிழ் ஞானம் எங்ஙனே யுண்டாகும்? அஃதில்லாது த்ராவிட வேதாந்த ப்ரவர்த்தகத்வம் என்னே! 'தமிழ்பேசுங் குடியிலே பிறந்த நமக்குத் தமிழ்ப்பாஷையிலமைந்த பகவத் விஷயம் சொந்தச் சரக்கல்லவோ?' என்று நினைக்கின்றோம். இது சிறிதும் தகுதியற்றது. ஸம்ஸ்க்ருத வேதாந்த நிர்வாஹத்திற்குப் பூர்வாங்கமாக உழைப்பது போல த்ராவிட வேதாந்த நிர்வாகத்திற்கும் பூர்வரங்கமாக உழைக்கவேண்டியது பெரிதுமுண்டு. இல்லையேல் நிர்வாஹகத்வம் நிலைநிற்க வழியிராது. இதை வைஷ்ணவர்கள் விசேஷித்துக் குறிக்கொள்க.

## அமர கோசம்

உலகில் கோடிக்கணக்கான நூல்களைக் காணாநின்றோம். எனினும் அமரகோசத்திற்கு அமைந்த அதிசயம் வேறு எந்நூலுக்கும் அமைந்திலது என்றால் மிகையாகாது. 'அமரம் அறியாதவன் மரம்' என்று எமது ஆசிரியர் நிச்சலும் மொழிவர். எந்த நாட்டிற் சென்றாலும் இதற்குள்ள பரிக்ரஹாதிசயம் மிகவும் பாராட்டத்தக்கதாகவே யிராநின்றது.

வடமொழியில் மற்றும் பல நிகண்டுகள் உள்ளனவெனினும் இந்த கோசம் போல் எதுவும் எடுபடவில்லை. இதனை இயற்றியவர் புறச் சமயத்தவரேயானாலும் ப்ரமப்ரமாத விப்ரலம்பம் முதலிய தோஷங்களில் ஒன்றுக்கும் ஆட்படாமல் ப்ராமாணிகமாகவும் நிஷ்பக்ஷபாதமாகவும் அமைத்திருக்கிற அழகு அழகே.

இந்த நூலைப்பற்றி ஒரு இதிஹாஸம் கர்ணபரம்பரையாகக் கேள்விப்படுவதுண்டு. அதாவது—எம்பெருமானார் காலத்திலே உபயோகமற்ற ஓலைச்சுவடிகள் பல கந்தைக் கூளங்கள் மடத்திலிருந்தனவாம். அவையெல்லாம் அவைதிகச் சுவடிகளாயிருப்பது கண்டு 'இவற்றையெல்லாம் திருக்காவிரிப் பெருக்கிலே எறிந்துவாரும்' என்று ஒருயர் கையிலே அவற்றையெல்லாம் கட்டாகக் கட்டிக் கொடுத்தனுப்பினராம். அவரும் கொண்டுபோய் எறிந்தவளவிலே அச் சுவடிகளின் திரளில் நின்றும் ஒரு சிறு சுவடி மாத்திரம் பிரிந்து எதிர் நீச்சலாக மிதந்து வந்தபடியைக் கண்டு அதிசயப்பட்டு அதையெடுத்து வந்து எம்பெருமானார் திருவடிகளிலே வைத்துச் செய்தியை விண்ணப்பஞ் செய்தாராம். ஸ்வாமியும் அச் சுவடியை யவிழ்த்துக் கடாக்ஷித்தருளுகையில், அது அமரகோசமாயிருந்தது. அது அமைந்திருக்கு மழகுக்கு மிகவும் திருவுள்ளமுவந்து, வக்த்ரு வைலக்ஷண்யமொன்று மாத்திரமில்லையே! என்று திருவுள்ளம் நொந்து "இதனை ஏகாதசி தவிர்ந்த மற்ற நாட்களிலே அத்யயநம் பண்ணுங்கள்" என்று சிஷ்ய மண்டலிகளுக்கு நியமித்தருளினாரென்று.

இந்த ஐதிஹ்யம் ப்ரஸித்தமாக இல்லாமையினாலே ஏகாதசியன்று அமரகோச பாடத்திற்கு அநத்யயநநியமம் வழங்கிற்றில்லை போலும்.

இந்த கோசத்தில் சொல்லிற்றெல்லாம் வேத வாக்காகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஒரு காலத்தில் புண்டரீகம் என்னும் பதத்தைப் பற்றி வித்வத் கோஷ்டியில்

விசாரம் விளைந்தது. செந்தாமரைக் கண்ணனை எம்பெருமானைப் புண்டரீகாக்ஷனென்று போற்றியிருப்பதனால் புண்டரீக பதத்திற்குச் செந்தாமரை மலரே பொருளாகத் தகுமென்றும் ✠புண்டரீகம் ஸிதாம்போஜம்✠ என்று அமரன் சொன்னது பிசகு என்றும் ஒரு வித்வான் கூறினராம். 'வேதத்தைப் பிசகென்று பழிக்கவுமாம்; அமரத்தையா பிசகென்பது!' என்று மற்றுமுள்ள வித்வான்கள் ஹாஹாகாரம் செய்தார்களாம்.

இவ்வளவு பெருமை வாய்ந்த இந்த கோசம் ஸம்ஸ்க்ருதவுலகுக்கு ஓர் அணிவிளக்காக விளங்கா நின்றது.

## மடாதிபதிகளும் தர்மபரிபாலனங்களும்

துறவறம்பூண்டு ஸந்ந்யாஸிகளென்று பேர்பெற்றவர்கள் இன்றிருந்தவூரில் நாளையிராமே நாடோறும் நாடோடிகளாய்ச்செல்ல வேணுமென்றும், வருஷத்தில் நான்கு மாதங்கள் அல்லது இரண்டு மாதங்களே ஸங்கல்ப பூர்வமாக ஓரேயூரில் தங்கியிருக்கவேணுமென்றும் நூற்கட்டளையிருப்பதாகக் கூறுகின்றார்கள். இவ்விஷயத்தை திருவாய்மொழி வியாக்கியானமான ஈடு முப்பத்தாறாயிரப்படியில் (4 8—4) ✠ கறையினர் துவருடுக்கை கடையாவின் கழிகோற்கை ✠ என்றவிடத்து நம்பிள்ளை தாமும் ப்ராஸங்கிகமாக அருளிச்செய்துள்ளார். அவ்விடத்து ஸ்ரீஸூக்தி வருமாறு:—

“ஸந்ந்யாஸிகள் தந்தாமுக்கென்ன ஓரிருப்பிடமில்லாமையாலே மாத்ரைதொடக்கமானவற்றைக் கையிலே கூடக்கொண்டு திரிவர்களாயிற்று, அது போலவே.” என்று.

யதிகளின் கமண்டலு சிக்கம் முதலிய வஸ்துக்களுக்கு மாத்ரை என்று ஸம்ஜ்ஞை.

யதிகளின் நியமம் இங்ஙனேயிருக்கச் செய்தேயும் இவர்களுக்கு விசாலமான மடங்களும் ஏராளமான க்ராம பூமிகளும் ஏற்பட்டு மடாதிபதிகளென்கிற விருதுவிளைந்து பூலோக குபேரர்களாக ஆட்சிபுரியுந்தன்மை எப்படி யுண்டாயிற்றென்று சிலர் விமர்சிக்கிறார்கள். ✠ மாடபத்யம் யதி: குர்யாத் விஷ்ணு பூஜாபிவ்ருத்தயே” என்று ப்ரமாணமிருப்பதாகப் பெரியார் கூறுகின்றார்கள்.

இவ்வுலகில் எத்தனை மடங்கள் உள்ளனவோ அவற்றிலெல்லாம் பெரும்பாலும் மடாதிபதிகள் ப்ரதிஷ்டிதர்களாயிருப்பதைக் காணா நின்றோம். மடங்கள் இன்று நேற்று ஏற்பட்டவையல்ல நூற்றுக் கணக்கான வருஷங்களுக்கு முன்தோன்றின மடங்கள் பல. ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன் தோன்றின மடங்கள் பல. ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் வானமாமலை மடம் திருக்குறுங்குடி மடம் அஹோபிலமடம் என்றிப்படி ப்ரஸித்தி பெற்றுள்ள மடங்கள் பல. அத்வைத ஸம்ப்ரதாயத்தில் சங்கராசார்ய மடம் என்கிற பெயரினால் பல விடங்களில் பல சாகைகளாக ஏற்பட்டிருக்கின்றன. த்வைத ஸம்ப்ரதாயத்தில் வியாசராயர் மடம் உத்தராதி மடம் உடுபி மடம் என்றிப்படி பல சாகைகள் காண்கின்றன. ப்ராஹ்மணரல்லாத வகுப்புகளில் செல்வம் மிகுந்த பலபல மடங்கள், ஆதீனங்கள். சன்னிதானங்கள் ஏற்பட்டுள்ளன.

வட இந்தியாவிலும் இப்படிப்பட்ட மடங்கள் எண்ணிறந்தவையுள்ளன. ஜகன்னாத க்ஷேத்திரத்தில் அபரிமிதமான செல்வச் சிறப்புவாய்ந்த மடங்கள் பத்திருபதும் ஸாமான்ய மடங்கள் பலபலவுமுள்ளன. யதிகள் மாத்திரமேயல்லாமல் ப்ரஹ்மசாரிகளும் க்ருஹஸ்தர்களுங்கூட மடாதிபதிகளாக ஆங்காங்கு அமைந்துள்ளார்கள். இங்ஙனே எல்லா மதங்களிலும் தொன்று தொட்டே மடங்கள் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறபடியால் 'ஸந்ந்யாஸிகள் மடங்களைக் கட்டிக்கொண்டு செல்வச் சிறப்புடன் மடாதிபதிகளாக வாழ்வது எப்படி கூடும்? என்கிற கேள்வி ஏற்கத்தக்கதன்று. பலபல தரும காரியங்களை நிர்வஹிப்பதற்காகவே மடாதிபதிகள் முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்டார்கள்.

ஸுப்ரஸித்தர்களான நிகண்டுகாரர்களில் தலைவனான அமரஸிம்மன் “மடச் சாத்ராதிநிலய:” என்று கூறியிருப்பது அனைவருமறிந்தது. மாணாக்கர்களுக்கு சாத்ரர்களென்று பெயர். அவர்களையும் மற்றும் வித்வான்களையும் ஆதரித்துவைத்துக் கொண்டிருக்குமிடம் மடம் என்று இதனால் தெரிகின்றது. இதற்கிணங்க நாளைக்கும் பலபல மடங்களில் வித்

யார்த்திகளும் வித்வான்களும் போஷிக்கப்பட்டு வருவதைக் கண்கூடாகக் காணுகின்றோம். சில மடங்கள் பகவத் ஸன்னிதிகளின் கைங்கர்ய நிர்வாகத்திற்கென்றே ஏற்பட்டவையாகக் காண்கின்றன. திருமலை திருப்பதியிலுள்ள இரண்டு மடங்களும் ஸ்ரீரங்கத்திலுள்ள ஸ்ரீரங்கநாராயண ஜீயர் மடமும் போன்ற மடங்கள் இவ்வகுப்பிற் சேர்ந்தனவாம்.

பொதுவாக மடாதிபதிகள் யாவரும் அதர்மம் தலையெடுக்கவொட்டாமலும் தருமம் தலையோங்கி நிற்கவும் செய்துபோரக் கடமைப் பட்டவர்கள். தாங்கள் ஸாக்ஷாத்தாக உபதேசங்களைச் செய்தும், தங்கள் நியமனம் பெற்ற வித்வான்களைக்கொண்டு உபதேசங்கள் செய்வித்தும், ஆங்காங்கு தர்மப்ரசாரங்களைப் பலமுகமாக நடத்தியும், வைதிகவித்யாபிவிருத்திகளை விசேஷமாக வளர்த்தியும் நாஸ்திகமதங்களை வேரறுக்கவல்ல உபந்யாஸங்களைச் செய்தும் செய்வித்தும் இப்படி பஹுமுகமாக பகவந்முகோல்லாஸகரர்களாக விளங்கவேண்டுவது மடாதிபதிகளின் இயல்பு. இக்காரியங்களுக்காகவே இவர்களுக்குச் செல்வச்சிறப்பும் சேமிக்கப்பட்டது.

இக்காலத்தில் சங்கர ஸ்வாமிகள் வானமாமலை மடம் ஸ்வாமிகள் திருக்குறுங்குடி மடம் ஸ்வாமிகள் மைஸூர்பரகாலமடம் ஸ்வாமிகள் அஹோபிலமடம் ஸ்வாமிகள் மத்வாசார்ய ஸ்வாமிகள் என்னுமிவர்கள் பொதுவாக லோகக்ஷேமத்திற்கும் தர்மபரிபாலனத்திற்கும் தீக்ஷிதர்களாய்ச் செய்துபோருகின்ற செயல்கள் உலகமறிந்தவையே. உண்மையில் இந்த மடாதிபதிகள் தோன்றியிராவிடில் தருமங்கள் நிலைகுலைந்தே போயிருக்குமென்பதில் சந்தேகமில்லை. ஒவ்வொருவர் ஒவ்வொருவிதமான ஸன்மார்க்கத்திலே யூன்றி தர்மதேவதைக்குக் கைகொடுத்துவரவே தான் இக்கலிகாலத்திலும் ஆங்காங்கு நன்மைகள் சிறிதேனும் தலைகாட்டி நிற்கின்றன.

இப்பெரியார்கள் செய்து வருவதுபோலவே சிறிய சிறிய மடாதிபதிகளும் தம் தம் ஸ்திதிகளுக்குத் தக்கவாறு பொதுநலத்திற்குப் பாடுபட்டு வரவேண்டியது மிக அவசியம். அசநாச்சாதநபோகங்களைத் தாங்கள் சிரமமில்லாமல் அநுபவித்துக்கொண்டு காலங்கழிப்பதற்காகவே தங்களுக்கு மடாதிபத்யம் கிடைத்ததாகச் சிலர் கருதுகின்றார்கள். நம்மிடம் வந்தவர்களுக்கு போஜனமளிப்பதே நமக்குக் கர்த்தவ்யமென்று சில மடாதிபதிகள் நினைத்து அவ்வொன்றிலேயே ஊன்றியிருக்கின்றார்கள். சிலர் தாங்களும் பட்டினி கிடந்து, பிறர் வந்து தங்க இடமுமளிக்காமல் மடத்து வருமானங்களை மேன்மேலும் வட்டிக்குக் கொடுப்பது வாங்குவது பாங்குகளில் சேமித்துவைப்பது இவ்வளவோடே த்ருப்தியடைகிறார்கள்.

இப்படிப்பட்டவர்களுக்கு தர்ம பரிபாலனங்களில் ஊக்கம் விளைக்க யாராலாகும்? தர்ம ச்ரத்தையென்பது ஜன்மாந்தர ஸுக்ருதவிசேஷத்தால் இயற்கையாகவே ஜனிக்க வேண்டிய தர்மவிசேஷம். பிறருடைய போதனையினாலும் மற்று எக்காரணத்தினாலும் இது உண்டாகக்கூடியதன்று. ஸங்கல்பஸூர்யோதயத்தில் ஐந்தாவது அங்கத்தில் (27) "பிக்ஷேதி சிஷ்யஜநரக்ஷண தக்ஷிணேதி" என்றுள்ள ச்லோகரத்னத்திற்கு லக்ஷ்யமாகிவிளங்கும் மகான்கள் பலருளர். அன்னவர்களைப்பற்றி நமக்கென்ன விசாரம். மேற்குறித்த ச்லோகத்திற்கு முன்னே ஒரு வாக்கியம் காண்கிறது. அதாவது- 'அஹோ நு'கலு காஷாய தண்ட மாத்ரசரணாநாம் கலியுகஸம்ந்யாஸிநாம் நைரபேக்ஷ்யம் என்று. அறுநூறு வருஷங்களுக்கு முன்னமே இங்ஙனம் பேசத்தக்க மஹாநுபாவர்கள் இருந்தார்களென்றால் இப்போதைக்கு என்ன வியப்பு! இது நிற்க,

இயற்கையான ருசியுடன் உலகுக்குப் பலவகையான நன்மைகளைச் செய்து போருகின்ற மடாதிபதிகளை நாம் இன்னமும் பிரார்த்திக்கவேண்டியதுண்டு. அவர்கள் தம் சிஷ்யர்களுக்கும் மற்றும் பொதுஜனங்களுக்கும் உதவியாக நாடோறும் அல்லது சமயவிசேஷங்களில் என்ன வுபதேசங்களை யளித்து வருகிறார்களோ அந்த வுபதேசங்கள் எக்காலத்தவர்க்கும் எந்நாட்டினர்க்கும் உபஜீவ்யமாம்படி பத்ரிகா ரூபமாகவும் பிரசுரமாகும்படி அருள்புரியவேணும். இதனால் உலகுக்கு ஏற்படக்கூடிய நன்மை வாசாமகோசரமேயாகும்.

இது தவிர மற்றொரு காரியமும் முக்கியமானது. அவரவர்களுக்கு எந்த எந்த ஊர்களில் பிரபல மடங்கள் இருக்கின்றனவோ அவ்விடத்து மடங்களில் பப்ளிக் லைப்ரெரிகள் வைத்து அபேக்ஷகர்கள் ஸௌகரியமாகப் புத்தகங்களைப் பார்க்க அநுகூலம் செய்தல் வேண்டும். பல வித்வான்கள் ஏழைமையினால் புஸ்தகங்கள் காணப் பெறாமல் துவள்கின்றனர். இந்த சிரமம் நீங்கவேண்டியது அவசியம்.

## எம்பெருமானுர் வைபவாநுபவம்

### ஆதிசேஷன் ஸ்ரீ ராமாநுஜராக அவதரித்தல்

ஆளவந்தார் திருவடிகளில் ஆச்ரயித்த முதலிகளில் பெரிய திருமலைநம்பி யென்னு மாசிரியர் திருமலை திருப்பதியிலே திருவேங்கடமுடையானடிக்கீழ்க் கைங்கரியஞ் செய்து கொண்டு வாழ்ந்து வருகின்றார். அவருடன் பிறந்த பெண்பிள்ளைகள் இருவர். அவர்களுள் ஸ்ரீ பூமிப்பிராட்டியாரென்கிற மூத்தவள் ஸ்ரீபெரும்பூதூரில் ஆஸுரி கேசவப் பெருமாளுக்கு வாழ்க்கைப்பட்டிருந்தாள். பெரிய பிராட்டியாரென்கிற இளையவள் மழலை மங்கலத்தில் கமலநயந பட்டரைத் திருமணம் புணர்ந்தாள். இவ்விருவரும் தம்தம் புக்ககங்களிலே வாழுங்காலையில் ஆதிசேஷன் இவ்விருள்தருமா ஞாலத்தைத் தெருள் தருமா ஞாலமாக்குவதற்காக இந்நிலவுலகத்திலே அவதரிக்கவேண்டி ஸ்ரீபெரும்பூதூரில் ஸ்ரீ பூமிப் பிராட்டியாருடைய திருமருவு கருவிலே புகுந்து * கலியுங்கெடுங் கண்டு கொண்மின் என்ற ஆழ்வார் பாசுரத்தை ஸார்த்தகமாக்குவான் சித்திரையில் செய்ய திருவாதிரை நன்னாளில் திருவவதரித்தனன். * அறுசமயச் செடியதனை யடியறுக்கவும், அடர்ந்துவரும் குதிட்டிகளை அறத்துறக்கவும் செறுகலியைச் சிறிதுமறத் தீர்த்துவிடவும், தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தி வைக்கவும் மறையதனில் பொருளனைத்தும் வாய் மொழியவும் மாறனுரைசெய்த தமிழ் மறை வளர்க்கவும் அழகாரு மனந்தாழ்வான் அறமிகுநற் பெரும்பூதூரில் இங்ஙனே ஏழ்பாருமுய்ய வுதித்தருளின நன்னாளானது * ஆழ்வார்கள் தாங்களவதரித்த நாட்களிலும் வாழ்வானநாள் நமக்கென்று நாற்றிசையும் கொண்டாட நின்றது. இத்திருநன்னாளின் சிறப்பை மணவாள மாமுனிகள் ஒரு சீரிய செய்யுளினால் வெளியிட்டருளியுள்ளார்; அதாவது:—

"சங்கரபாக்கரயாதவபாட்டப்ரபாகரர் தங்கள் மதம்
சாய்வுறவாதியர் மாய்குவரென்று சதுமறை வாழ்ந்திடுநாள்
வெங்கலியிங்கினி வீறு நமக்கிலை யென்று மிகத் தளர்நாள்
மேதினி நஞ்சுமையாறு மெனத்துயர் விட்டு விளங்கிய நாள்
மங்கையராளி பராங்குச முன்னவர் வாழ்வு முளைத்திடு நாள்
மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்று முவந்திடு நாள்
செங்கயல் வாவிகள் சூழ்வயல் நாளுஞ்சிறந்த பெரும்பூதூர்ச்
சீமானிளையாழ்வார் வந்தருளிய நாள் திருவாதிரை நாளே." என்பதாம்.

### அவதாரரஹஸ்ய சிந்தனம்.

இங்ஙனம் தோன்றிய பேராசிரியர் ஆதிசேஷனுடைய அபராவதாரமென்றும் பஞ்சாயுதாழ்வார்களின் ப்ராதுர்ப்பாவமென்றும் விஷ்வக்ஸேநருடைய தோற்றமென்றும் இப்படி பலவாருகப் பெரியோர் பணிப்பர். நூற்றந்தாதியில் * அடையார் கமலத்தலர் மகள் கேள்வன் கையாழி யென்னும் படையோடு நாந்தகமும் படர்தண்டும் ஒண் சார்ங்க வில்லும் புடையார் புரிசங்கமுமிந்தப் பூதலங் காப்பதற்கென்றிடையே யிராமாநுச முனியாயினவிந்நிலத்தே * என்னும் பாசுரத்திலும், * ப்ரதயங் விமதேஷு..... வவ்ருதே பஞ்சபிராயுதைர் முராரே:. என்ற யதிராஜஸப்ததி ஸூக்தியிலும் ஸ்வாமி பஞ்சாயுதாழ்வார்களின் திருவவதாரமென்னும் விஷயம் காட்டப்பட்டுள்ளது. * விஷ்வக்ஸேநோ யதிபதிரபூத் * என்கிற யதிராஜ ஸப்ததி ஸூக்தியொன்றில் விஷ்வக்ஸேநாவதாரமென்னும் விஷயம் கூறப்பட்டுள்ளது. திருவனந்தாழ்வானுடைய திருவவதார மென்னும் விஷயத்தைப் பற்பல ஆசிரியர்கள் பேசியுள்ளார்கள். ஸ்வாமியின் அந்தரங்க சிஷ்யர்களில் ஒருவரான திருமலை அனந்தாழ்வான் தாமருளிய 'வேங்கடாசல இதிஹாஸமாலா' என்னும் திவ்யக்ரந்தத்தில் திருவனந்தாழ்வானே ஸ்ரீராமாநுஜராகத் திருவவதரித்தானென்பதை மிக விரிவாக அருளியுள்ளார். * ஸ்ரீமத்யாம் பூதபுர்யாம் அதிதரணிதலம் சேஷ ஆவிர்பபூவ * இத்யாதிகள் காண்க. எம்பெருமான் தனது அத்தாணிச் சேவகனும் படுக்கையுமான திருவனந்தாழ்வானை நோக்கி நீ நிலவுலகத்திற்சென்று பிறந்து எவ்வுயிரையும் ஸம்ரக்ஷிக்கக் கடவை என்று நியமித்தருள அந்த நியமனத்தைச் சிரமேற்கொண்ட ஆதிசேஷன் சித்திரைமாதத் திருவாதிரையன்று ஸ்ரீகேசவஸோமயாஜிகளுக்குப் புதல்வராகப் பிறந்தானென்பது அவ்விடத்து ஸ்ரீஸூக்திகளின் பொருள். இப்படியே மற்றொரு சிஷ்யரான வடுக நம்பியருளிச்செய்த ச்லோகரூபமான யதிராஜவைபவ க்ரந்தத்தில் * சேஷாம்சக: கேசவ யஜ்வதேவ்

யாம் ✠ என்றுள்ளது. வேதாந்த தத்துவப்பொருள்களை நிலைநாட்டுதற்காகவும் துர்மதங்களைத் தொலைப்பதற்காகவும் திருவனந்தாழ்வானுடைய அம்சபூதராய்த் தேஜோநிதியாகு ஒரு மஹான் கேசவஸோமயாஜிகளின் தேவியாரிடத்தில் அவதரித்தார் என்பது இந்த ச்லோகத்தின் பொருள். இவ்வடுகநம்பிகள் தாமே அருளிச்செய்த ஸ்ரீராமாநுஜ அஷ்டோத்தர சதநாம ஸ்தோத்ரத்தில் ❋ பௌந்தத்வாந்த ஸஹஸ்ராம்சு:! சேஷரூபப்ரதர்சக: ✠ என்பது இருபத்து மூன்றும் ச்லோகம். எம்பெருமானாருடைய பூர்ணகடாக்ஷ பாத்ரபூதராய் அவர் திறத்துத் தேவுமற்றறியாதே யீடுபட்டிருந்த மஹாப்ராஜ்ஞரான கருடவாஹந பண்டிதர் பணித்த திவ்யஸூரிசரித மென்னும் மஹா காவ்யத்தில் பதினேழாவது ஸர்க்கத்தில் ஸ்ரீராமாநுஜவைபவம் சொல்லுமிடத்து ✠ பௌஜங்கம் வபுரபஹாய சேஷபோகீ யத்ரூபம் த்ரிபுவநவந்திதம் ஜகாம ✠ [திருவனந்தாழ்வான் தனது உரகவுடலை விட்டொழிந்து இராமாநுச முனியாந் திருவுருவத்தை யடைந்தான்] என்றும், மேலே யாதவப்ரகாசனை நோக்கி ப்ரஹ்மரக்ஷஸ்ஸு கூறினதைக் கூறுமிடத்து "உமது பக்கத்திலிருப்பவரும் லோக ஸம்ரக்ஷணார்த்தமாகத் திருவனந்தாழ்வானுடைய அம்சமாக வந்து திருவவதரித்தவநமான [ராமாநுஜனென்கிற] இந்த மஹானிடத்தில் நான் அஞ்சுகின்றேன்' என்றும் சொல்லப்பட்டது. தேசிகருடைய திருவடியான ப்ரஹ்மதந்த்ர ஸ்வாமி பணித்த திவ்யஸூரி ஸ்தோத்ரத்தில் சைத்ரார்த்ராஸம்பவம் விஷ்ணோ: தர்சநஸ்தாபநோத்ஸுகம்; துண்டீரமண்டலே சேஷமூர்த்திம் ராமாநுஜம் பஜே ✠ [எம்பெருமானுடைய தர்சனத்தை ஸ்தாபித்தருளச் சித்திரை மாதத் திருவாதிரையில் தொண்டைநாட்டில் அவதரித்த ஆதிசேஷமூர்த்தியாகிய ஸ்ரீராமாநுஜரைத் தொழுகின்றேன்] என்று சொல்லிற்று. இராமாநுச நூற்றந்தாதியில் ✠ நல்லார் பரவுமிராமாநுசன் ❋ என்ற எண்பதாம் பாசுரத்தின் வியாக்கியானத்தில் ❋ அநந்த: ப்ரதமம் ரூபம் லக்ஷ்மணஸ் து தத:பரம், பலபத்ரஸ் த்ருதீயஸ் து கலௌ ராமாநுஜ: ஸ்ம்ருத: ❋ என்கிற ஆர்ஷவசனம் உதாஹ்ருதமாகக் காண்கிறது.

இங்ஙனே பல ஆசிரியர்கள் ஸ்வாமியை ஆதிசேஷாவதாரமாக அருளிச்செய்திருக்க, நூற்றந்தாதியிலும் யதிராஜஸப்ததியிலும் பஞ்சாயுதாவதாரம் விஷ்வக்ஸேனாவதாரம் என்றிப்படி அருளிச்செய்தது ஏன்? என்று சங்கை தோன்றும். இதற்குப் பெரியார் பகரும் ஸமாதானமாவது—சரித்திர நூல் என்பது வேறு, ஸ்தோத்ர நூல் என்பது வேறு. சரித்திர நூல்களில் அவதாரரஹஸ்யம் உள்ளது உள்ளபடி உரைக்கப்படும். ஸ்தோத்ர நூல்களிலோவென்னில் கவிகளின் புத்திசமத்காரத்திற்குத் தக்கபடியும் ஆசிரியரின் ப்ரபாவ விசேஷங்களுக்கு ஏற்றபடியும் பலவகையான வர்ணனைகள் இருக்கக் கூடும். சரித்திர நூல்களால் அறுதியிடப்படுகிற அவதார ரஹஸ்யதத்துவங்களை ஸ்தோத்ர நூல்களிலுள்ள உக்திகள் உபமர்த்திக்கமாட்டாவென்று.

### நாமகரணமும் சாஸ்த்ராப்யாஸமும் க்ருஹஸ்தாச்ரமப்ரவேசமும்

ஆஸூரி கேசவப்பெருமாள் இங்ஙனே தமக்குத் தோன்றிய திருக்குமாரர்க்கு யதாவிதி ஜாதகர்மம் செய்தருளினார். இச்செய்தியைப் பெரியதிருமலைநம்பி கேட்டருளிப் பரமஸந்தோஷத்துடனே திருமலையில் நின்றும் ஸ்ரீபெரும்பூதூரேற வெழுந்தருளி ஸர்வலக்ஷணஸம்பந்நமான திவ்யசிசுவின் முகவொளியைக் கண்டு வியந்து உள்ளம்பூரித்துப் பன்னிரண்டாம்நாளில் 'ஸ்ரீ ராமாநுஜன்—இளையாழ்வான்' என்று நாமகரணம் செய்தருளினர். மற்றும் அந்நப்ராசன சௌளோபநயநாதி ஸம்ஸ்காரங்களுமெல்லாம் காலகாலங்களிலே நடைபெற்று "சொல்லார் தமிழொரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லா வறநெறியாவுந்தெரிந்தவன்' என்று அமுதனார் நூற்றந்தாதியிலருளிச் செய்கிறபடியே ஸாங்கோபாங்க ஸகல வித்யாபாரங்கதராய் ப்ராப்த காலத்திலே க்ருஹஸ்தாச்ரமத்தையும் ஸ்வீகரித்து, பெருமாள்கோயிலுக்கருகான திருப்புட்குழியிலே யாதவப்ரகாசனென்பானொரு ஏகதண்டி ஸம்ந்யாஸி பூர்வபக்ஷ வேதாந்த க்ரந்த ப்ரவசனம் செய்துபோருகிறானென்று கேட்டு இளையாழ்வார் தாமும் அங்கே யெழுந்தருளி அவன்பக்கல் ச்ரோதாவாய் அந்வயித்திருந்தார்.

### கோவிந்தபட்டருடைய வரலாறு

இப்படி யாதவப்ரகாசரிடத்தில் ஸ்வாமி வேதாந்தச்ரவணம் செய்துகொண்டிருக்கையில் மழலைமங்கலத்திலிருந்து ஸ்ரீகோவிந்த பட்டரென்கிற ஆசிரியரும் ஸஹாத்யாயியாக ஸ்வாமியோடே வந்து சேர்ந்தார். இவரே எம்பார் என்று ப்ரஸித்திபெற்றவர். ஸ்வாமியின் மாதுலரான திருமலைநம்பிக்கு இரண்டு ஸஹோதரிகளென்றும் ஒரு ஸஹோ

தரி மதுரமங்கலமென்னும் அக்ரஹாரத்தில் வாழ்க்கைப்பட்டிருந்தாளென்றும் கீழே சொன்னோம். தைமாதத்துப் புனர்வஸு நக்ஷத்திரத்தில் இப்பிராட்டியீன்ற புதல்வரே எம்பாரென்கிற கோவிந்தபட்டர். இவர் ப்ராப்தகாலங்களிலே உபநயநாதி ஸம்ஸ்காரங்கள் பெற்று வேதவேதாங்கங்களை யதிகரித்து மஹாவித்வானாயிருந்தார். ஸ்வாமிக்குச் சிறியதாயார் திருக்குமாரரானவிவர், திருப்புட்குழியில் தமையனார் யாதவப்ரகாசரிடத்தில் வேதாந்தமதிகரிக்கிறாரென்று கேட்டுத் தாமுங்கூட அதிகரிக்க விரும்பி அவ்விடம் வந்து சேர்ந்தாராயிற்று.

### யாதவப்ரகாசர் அபார்த்தங்கள் கூறுதல்

யாதவப்ரகாசர் மாயாவாதிமதஸ்தராகையாலே வேதாந்த வாக்கியங்களுக்குப் பலவிடங்களில் பொருந்தாத பொருள்களை ப்ரவசனம் செய்துகொண்டிருந்தார். அவற்றைக் கேட்கும்போது ஸ்வாமிக்குப் பரிதாபம் பொறுக்க முடியாததாயிருக்கும். 'பொருந்தும் பொருள் இதுவன்றோ' என்று தாம் எடுத்துரைப்பதுண்டு. அப்போது ஹூங்காரம் பண்ணிநிற்பர்யாதவர். இப்படியிருக்கையில் ஒருநாள் * கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ * என்கிற ச்ருதி வாக்யத்திற்குப் பொருள்கூறுநின்ற யாதவர் "குரங்கின ப்ருஷ்டம்போல் சிவந்த கண்கள்" என்று இழிவான பொருளைச் சொல்ல, அது கேட்டுச் சிறிதும் பொறுக்கவில்லாத ஸ்வாமி மிக வுஷ்ணமான கண்ணீர் பெருகநின்று '* கப்யாஸ மென்பதற்கு இப்படியோ பொருள் கூறுவது? கம்பீராம்பஸ்ஸமுத்பூத-ஸும்ருஷ்டநாள-ரவிகர விகஸிதமானதோர் செந்தாமரைப் பூப்போன்ற திருக்கண்கள் படைத்தவன் என்றன்றோ பொருள்' என்று வ்யுத்பத்திகளை விசதமாகக்கூறி உபபாதிக்க, அதுகேட்ட யாதவர் மிகச்சினந்து 'நாம் சொன்னபடியே கேட்டுக்கொண்டிருக்க முடியுமானால் வாசித்திரும்; இல்லையாகில் விட்டுப்போம்' என்ன, ஸ்வாமியும் சிந்தை கலங்கி விலகியிருந்தார்.

### ஸ்வாமியை மாய்க்கும் விரகுபார்த்தல்

இப்படியிருக்கையில் அந்த யாதவப்ரகாசருக்கு ஓர் எண்ணம் தோன்றியது அதாவது—இந்த ராமாநுஜன் விலக்ஷணமான மேதையும் அந்யாத்ருசமான ப்ரதிபையும் பொலிய நின்றான்; இவனால் அத்வைத தர்சநம் குன்றும்போலும்; ஆகவே இவன் முடியும் விரகு செய்வது நன்று—என்று. இதைப்பற்றிப் பலவாறு ஆலோசிக்கையில், இவ்விளையாழ்வானைக் கங்கையில் மணிகர்ணிகையிலே தள்ளி ம்ருத்யுவசமாக்குவதே பாதகமற்ற பணியென்று அறுதியிட்டு ஒருநாள் ராமாநுஜனை வரவழைத்து 'நீர் இல்லாமல் எங்களுக்கு அருமையானதாயிருந்தது முன்போல வந்திருந்து மனமொத்து வாசித்து க்ரந்தத்தை அவிச்சிந்நமாக நடத்திப்போரும்' என்று ஸதுபாயமாகச் சொல்லி ஸ்வகோஷ்டியிலே சேரவிட்டுக் கொண்டு பாடப்ரவசநம் நடத்திவந்தார் யாதவர். ஏற்கெனவே தாம் எண்ணியிருந்தபடி நிறைவேற்றிக்கொள்ளுவதற்காக ஒருநாள் கோஷ்டியிலே கங்காயாத்திரைப் புறப்பாட்டை ப்ரஸ்தாவித்து ஸ்வாமியுட்பட எல்லாருமிசைந்தவாறே ஸபரிவாரராய்ப் புறப்பட்டார் யாதவர். இளையாழ்வாரும் கோவிந்தபட்டரும் கூடவே செல்லாநின்றார்கள். கடுகவே யாத்திரை நடவாநிற்கையில் விந்த்ய ப்ரதேசத்திலே போம்போது சில இங்கிதங்களாலே இந்த யாத்திரையின் நிமித்தமின்னதென்றுணர்ந்த கோவிந்தபட்டர் ஓரிடத்திலே இளையாழ்வாரும் தாமுமாய்ப் பின்தங்கி நின்று செய்தியை ரஹஸ்யமாக ஸ்வாமிக்குத் தெரிவித்து அகன்று போம்படி ஸூசிப்பிக்க ஸ்வாமியும் அங்குநின்றும் அப்போதே தனியே மீண்டெழுந்தருளினார். [யாதவப்ரகாசர் செய்தியைப் பிறகு சொல்வோம்.]

### ஸ்வாமி ஓரிரவிலே கச்சிப்பதி சேர்தல்

நிர்ஜனமும் நிர்ஜலமுமான நீள் காட்டிலே பிரிந்து திரும்பின ஸ்வாமி அவ்வழியை விட்டுக் குறுக்கே நெடுந்தூரஞ்சென்று ஒரு மரத்தடியிலே நின்றுபார்க்க, கண்ணுக்கெட்டினவளவு * அங்கோர் நிழலில்லை நீருமில்லை * என்னும்படியான நிலைமையாய் ஒருவரும் துணையின்றிக்கே * ஆவாரார் துணையென்று அலைநீர்க்கடலுள் அழுந்தும் நாவாய்போல் துளங்கி நின்று வழி திகைத்து நிற்கையிலே, எம்பெருமான் இப்படிப்பட்ட பரமஸாத்விகர்களை விட்டுக்கொடுக்க மாட்டாதானொருவனாகையாலே இவர்க்குத்துணைசெய்ய விரும்பி ஒரு வில்லியின் வேடம்பூண்டு வாளும் வில்லுங்கொண்டு மனைவியுடனே முன்னே வந்து தோன்ற, ஸ்வாமியும் அந்த தம்பதிகளைக்கண்டு கலக்கந்தீர்ந்து உள்ளம் தேறி நின்று

'நீங்கள் எங்கு நின்றும் வருகிறீர்கள்? எங்கே போகிறீர்கள்?' என்று கேட்டார். அதற்கு அவர்கள் விடைகூறினதாவது—நாங்கள் உத்தரதேசத்து ஸித்தாச்ரமத்தில் நின்றும் வருகிறோம்: ஸத்யவ்ரத க்ஷேத்ரத்தை நோக்கிச் செல்கின்றோம்--என்று. அது கேட்டு மகிழ்ந்த ஸ்வாமி 'ஆகில் நானும் உங்களுடனே அவ்விடத்திற்கு வர நினைக்கிறேன்; எனக்குத் துணையாயிருக்கமுடியுமோ?' என்று கேட்க, நல்லது, அப்படியேயாகலாம் என்று அவர்கள் சொல்லி முன்னடியிட ஸ்வாமியும் அவர்களைப் பின் செல்ல, விந்த்யாடவி நீங்கி மாலைப்பொழுதாயிற்று. அப்போது ஓரிடத்திலே தங்கி அநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு நெடுந்தூரம் நடந்துசென்று. பின்பு நள்ளிருளாயிருந்ததனால் மேலே வழி நடந்து செல்ல மாட்டாமல் அங்கே அவர்களோடு கூடவே உபவாஸமாகத் தங்கியிருந்தார் ஓர் மரத்தடியின் கீழ்.

அப்போது வில்லியின் மனைவி தாஹம் மேலீட்டுத் தண்ணீர் தண்ணீரென்று கணவனிடம் கூற, அவனும் "இப்போது தண்ணீர் கிடைக்கவில்லையே; சிறிது போது ஆறியிரு: விடிந்தவாறே நல்ல மதுரமான தீர்த்தம் கிடைக்கும்" என்று சொல்லித் தேற்றினன். அப்போது ஸ்வாமியின் திருவுள்ளம் மிகவும் வருத்தமுற்றது. ஐயோ! நமக்கு மஹோபகாரிகளான இவர்களுக்கு நாம் விடாய் தீர்க்கும்படியான தேசமாக இல்லையே! என்கிற நிர்வேதத்தோடேயே சிறிது போது திருக்கண் வளர்ந்திருந்தார். பின்பு கனவிருளகன்று கீழ்வானம் வெள்ளென்று காலையம்பொழுதானவாறே மூவருமெழுந்து வழி நடக்கத்தொடங்க, அந்தத் தம்பதிகளிருவரும் அருகே ஒரு கிணற்றங்கரையிலே அழைத்துக் கொண்டு போய்விட்டு இவரைப் பார்த்து 'அருள்முகிலே! மிகவும் விடாய்த்திருக்கின்றோம்: இக்கிணற்றிலேயிறங்கி ஒருகை அள்ளித்தீர்த்தம்தருவீராக என்ன, அவரும் உடனே கிணற்றிலிறங்கி இரண்டு திருக்கையாலும் தீர்த்தம் வாரியெடுத்து மூன்றுதரம் கொடுக்க, அவர்களும் வாங்கி விடாய்தீரப் பருகி உருக்காட்டாதேயொளிக்க, இவரும் கரையேறி வந்து பார்த்தவாறே எங்குந்தேடியும் அவர்களைக் காணமல் சுற்றிலுங் கூப்பிட்டுத் திசைகளையுற்றுப் பார்க்கையில் மாடமாளிகைகளும் கோபுரங்களும் விசேஷஜன ஸஞ்சாரங்களும் காணப்பட, முன்னே தோற்றின சிலரை நோக்கி இவ்விட மெவ்வூரென்று கேட்க, 'புண்யகோடி விமானம் முன்னே தோற்றுநிற்க எவ்வூரென்று கேட்பதென்கொல்? இது சாலைக்கிணறன்றோ கச்சிப்பதியன்றோ' என்று அவர்கள் சொல்ல, ஸ்வாமி மிகவுமாச்சரியப்பட்டு வழித்துணையான வில்லிகளைப் பெருமாளும் பிராட்டியுமாக ப்ரதிபத்திபண்ணி என்கொலம்மான் திருவருள்கள்! என்று தலைசீய்த்து ✠ உருக்காட்டாதே யொளிப்பாயோ? என்று பலவாறு கூறிப் புலம்பி ஒருவாறு உள்ளந்தேறியெழுந்துசென்று தென்னத்தியூரர் கழலிணைக்கீழ் ஸேவித்து அப்பெருமானது திருவுள்ளத்திற்குப் பாங்காக நித்தியமும் சாலைக்கிணற்றில் நின்றுப் திருவாராதனத்திற்குத் தீர்த்தங்கொணர்ந்து ஸமர்ப்பித்து வாரா நின்றார்.

### யாதவப்ரகாசரது மேற் செய்தி

இளையாழ்வார்செய்தி இங்ஙனேயிருக்க, இனி யாதவப்ரகாசனுடைய செய்தி கேண்மின். நடுவழியிற் பிரிந்துபோன இளையாழ்வாரும் கோவிந்த பட்டரும் வரக்காணேமேயென்று யாதவர் திரளுடனே ஓரிடத்திலே தங்கி யெதிர் பார்த்திருக்க, சிறிதுபோது கழித்து கோவிந்த பட்டர் வந்துசேர, 'வந்தீரோ? இளையாழ்வார் எங்கே?' என்று அவரைக்கேட்க 'அவரை நான் காணவில்லையே' என்று கூற யாதவர் சிலசிஷ்யர்களை இங்குமங்கும் போகவிட்டுத் தேடிப் பார்க்கச்சொல்ல, அவர்களும் தேடிப்பார்த்துக் காணமல் ஐயோ! காட்டிலே என்ன தீங்கு வந்ததோவென்று அனைவரும் வியாகுலராய், பகவத் ஸங்கல்பப்படி யாகிறதென்று சொல்லிக் கொண்டே மேலே நடந்து சென்று வழியடைவே கங்கைக்கரை சேர்ந்தார்கள்,

### கோவிந்தபட்டர் லிங்கங் கொணர்தல்

ஒரு நாள் கோவிந்த பட்டர் கங்கையில் நீராடுகையில், அவரது கையிலே ஒரு லிங்கம் வந்துசேர, வியப்படைந்து இஃது என்னென்று யாதவர்க்குக் காட்ட, அதற்கு அவர் பரமஸந்தோஷத்துடனே 'நீர் தைவஜ்ஞராகையாலே கங்காஸ்நாநபலன் கைசேர்ந்தாற்போலே கங்காதரக் கடவுளே கைபுகுந்தபடி காணும்' என்று சொல்லி இவரிடத்

திலே விசேஷ ப்ரதிபத்தியுடனிருந்தார். அன்று முதல் எல்லாரும் கோவிந்தபட்டரை உள்ளங்கை கொணர்ந்த நாயனார் என்று பேரிட்டழைக்கத் தொடங்கினார்கள். [உள்ளங்கை குளிர்ந்த நாயனார் என்பாருமுளர்.]

யாதவரும் கங்காஸ்நாநம் பண்ணி யாத்திரையை முடித்து மீண்டு ஸ்ரீ ஜகந்நாதம் அஹோபிலம்வழியாக வர கோவிந்தர் இந்த லிங்கத்தை ஒரு உசித ஸ்தலத்திலே பிரதிஷ்டை செய்வித்து வருகிறேன் என்ன, அவரும் அப்படியே செய்யுமென்று விடைகொடுத்தனுப்பிவிட்டுத் தாம் பரிவாரங்களுடனே பெருமாள் கோயிலேற வந்து சேர்ந்தார். கோவிந்தரும் தம்முடைய ஜன்மபூமியான மழலை மங்கலஞ்சென்று சேர்ந்து அந்த லிங்கத்தை அங்கே பிரதிஷ்டிப்பித்து, பிறகு காளஹஸ்தியென்கிற சிவஸ்தலத்திலே சென்று அவ்விடத்திலே சிவபிரானுடையவும் சைவர்களுடையவும் பஹுமானங்களைப் பெற்று அங்கே ஆலய வழிபாட்டினருள் மூலவராய் நின்றார்.

### யாதவப்ரகாசரும் ராமாநுஜரும்

ஸ்ரீ காஞ்சீபுரியிலே யாதவர் இளையாழ்வாரைக்கண்டு வியந்து மகிழ்ந்து 'வாரீர்! விந்த்யாடவியிலே உம்மைக் காணாமையாலே பலவாறு அதிசங்கித்துக் கனக்க க்லேசித்திருந்தோம்; எப்படியோ சுகமாக வந்து சேர்ந்தீரே! இவ்வளவு காணப்பெற்றோமே!' என்று குரல் தழுத்துக்கூற, இவரும் வந்து சேர்ந்த வரலாற்றை [வில்லிகளின் செய்தியை] உள்ளபடியேயுரைக்க, யாதவருங்கேட்டு இவருடையபடி லோக விலக்ஷணமாயிருந்ததென்று உகந்து அவ்விராமானுசனை மீண்டும் ஸ்வகோஷ்டியிலே கூட்டிக்கொண்டு க்ரந்த ப்ரவசநம் நடத்தி வாரா நின்றார்.

### ஆளவந்தார் கச்சிக் கெழுந்தருளி மீளுதல்

யாத்திரை யடைவாகக் காஞ்சீபுரியில் நின்றும் நம்பெருமாள் ஸன்னிதிக்கு இரண்டு ஸ்ரீ வைஷ்ணவர்கள் சென்று பெருமாளைத் தொழுது ஆளவந்தார் திருவடிகளிலே ஸேவித்து நிற்க, அவரும் வார்த்தா ப்ரஸங்கத்திலே பெருமாள் கோயிலில் விசேஷங்கள் என்னென்று கேட்க, அவர்களும் இளையாழ்வாருடைய ஞானப்பெருமை முதலிய வைபவங்களையும், * கப்யாஸச்ருதி முதலானவற்றிலே யாதவப்ரகாசரை மேலிட்டுப் பொருள் பணித்த வகைகளையும் எடுத்துரைக்க, ஆளவந்தார் உள்ளம்பூரித்து, இந்தளத்திலே தாமரைபூத்தாற்போலே இவ்விருள் தருமாஞாலத்திலும் இப்படியொரு மஹாநுபாவர் தோன்றப் பெறுவதே! என்று வியந்து அப்பொழுதே அவரைக் காணவேணுமென்னும் ஆவலுடனே திவ்ய தேசங்களை மங்களாசாஸனஞ் செய்துகொண்டே கச்சிப் பேரருளாளன் ஸன்னிதிக்கெழுந்தருளித் திருமலையிலே மங்களாசாஸனஞ் செய்து கீழே திருப்புற்றினருகே திருவனந்தாழ்வானையும் கரியமாணிக்கப் பெருமாளையும் ஸேவியா நிற்க, அங்கே யாதவப்ரகாசர் தம் திரளுடனே பெருமாளை ஸேவித்து அவ்விடத்தே ப்ரதக்ஷிணமாக வாரா நிற்க, ஆளவந்தார் தம் அருகேயிருந்த திருக்கச்சி நம்பியை நோக்கி 'இத்திரளிலே இளையாழ்வார் யாவர்? என்று கேட்க, அவரும் 'அதோ சிவந்துநெடுகி ஆஜாநுபாஹுவாய் வருகிறவர் என்று காட்ட, ஆளவந்தாரும் திருவுள்ளம் பூரிப்பக் குளிர நோக்கியருளி * ஆம் முதல்வனிவன் * என்று விசேஷ கடாக்ஷம் செய்தருளி, பேரருளாளப் பெருமாளை நோக்கி * யஸ்ய ப்ரஸாதகலயா * என்றொரு ச்லோகத்தால் இளையாழ்வார் நம்தர்சநஸ்தாபகராம்படி அருள்புரிகைக்காகச் சரணாகதிசெய்து அப்போது இளையாழ்வார்க்கு ஒரு நல்வார்த்தை சொல்ல அவஸரம் காணாமையாலே மீண்டும் முதலிகளும் தாமுமாகக் கோயிலேற வெழுந்தருளினார்.

### ப்ரஹ்மரக்ஷஸ்ஸு காட்டின ராமாநுஜர் பெருமை

அக்காலத்தில் கச்சி நகர்மன்னனுடைய பெண்பிள்ளையை ப்ரஹ்மரக்ஷஸ்ஸு பிடிக்க, அதற்கு ஒருபடியாலும் பரிஹாரம் காணாமல் யாதவப்ரகாசர் சிறந்த மந்த்ரவாதியென்று கேட்டு ராஜபுருஷர்கள் இவரிடம்வந்து செய்திகூற, இவரும் அந்த ப்ரஹ்மரக்ஷஸ்ஸை நான் போகச் சொன்னதாகச் சொல்லுங்கோளென்று நியமிக்க அவர்களுஞ் சென்று அப்படியே சொல்ல, நான்தான் அவனைப் போகச்சொன்னதாகச் சொல்லுங்கோளென்று ப்ரஹ்மரக்ஷஸ்ஸு திரஸ்காரமாகச் சொல்லிவிட அஃதுணர்ந்த யாதவர் சீற்றங்கொண்டு தம் திரளுடனே அரசன் மனையிலேவந்து மஹாமந்த்ரத்தை ஜபித்துக்கொண்டு ப்ரஹ்மரக்ஷஸ்ஸருகில் நின்று முஷ்டிபிடிக்க, ப்ரஹ்மரக்ஷஸ்ஸும் முடக்கினகாலை நீட்டி, 'அடா யாதவா! நீ ஜபிக்கிற மந்த்ரம் நானறியேனோ? என்று அந்த மந்த்ரத்தையுஞ்சொல்லி

'அப்பா உன் பிறப்பு வரலாறு நான் சொல்லுகிறேன் கேளாய்; நீ மதுராந்தகத்து ஏரிக் கரையிலே யிருப்பதொரு புற்றிலே ஓர் உடும்பாயிருந்தாய்; கோயில் ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமலைக்கெழுந்தருளும்போது அங்கே நீரரடி யமுதுசெய்கிறவிடத்திலே சிந்தின ப்ரஸாதத்தையும் தீர்த்தத்தையும் நீ உட்கொள்ளப்பெற்றாய்; அதனால் வித்வானான ஜன்மம் பெற்றனை. நானோ முற்பிறப்பில் அந்தணனாயிருந்து அரிய பெரிய வேள்வி நிகழ்த்தினவன்; உன் மந்திரத்திற்கா நான் போவேன்? உன் பக்கலில் வீற்றிருக்கின்ற ஆதிசேஷாம்சமான இளையாழ்வார் போகச் சொன்னால் போவேனத்தனை என்று சொல்லிற்று. அதுகேட்ட யாதவர் முகத்தில் தேசுகுன்றி இளையாழ்வாரை நீர்தாம் போகச் சொல்லும் என்றுகூற, அப்படியே ஸ்வாமி நியமிக்க, 'உமது திருவடித் தாமரைகளை என் தலைமீது வைத்தாலொழியப் போவேனல்லேன்' என்று சொல்லி அப்படியே ஸ்வாமி திருவடிகளைச் சிரமேற்கொண்டு மகிழ்ச்சியெய்தி தெண்டனிட்டு இதோ போகிறேனென்று சொல்லிக்கொண்டே, போனமைக்கு ஓரடையாளங்காட்டிப் போயற்றது. யாதவரும் இளையாழ்வாரை மிகவும் புகழ்ந்து கொண்டாடிக்கொண்டே மடம் சென்று சேர்ந்தார்.

### ஸ்ரீரங்கத்தில் ஆளவந்தாருடைய சிந்தனை

நம்பெருமாள் ஸன்னிதியில் ஆளவந்தார் திருவாய்மொழி காலக்ஷேபம் நிர்வஹித்தருளா நிற்கையில் *ஒன்றுந்தேவிலே* இலிங்கத்திட்ட புராணத்தீருமென்கிற பாசுரம் நடவா நிற்க, 'நமக்குப் பின்பு இத்தர்சனம் நிர்வஹிப்பாரொருவரையும் காணப் பெற்றிலோமே!' என்கிற விசாரம் அப்போது அதிகமாகி இளையாழ்வாரிடத்திலே திருவுள்ளஞ் சென்று 'இவரை யாதவப்ரகாசனோடே உறவறுத்து நம்மோடே சேர்க்கும் உபாயமொன்றில்லையே!' என்று கோஷ்டியிலே நிர்வேதத்தோடே யருளிச் செய்து பின்னையும் பேரருளாளனைக் குறித்து திக்கு நோக்கி அஞ்ஜலி செய்து 'ஏற்கெனவே அடியேன் பண்ணின ப்ரபத்தியை ஸபலமாக்கியருளவேணும்'' என்று மிகவும் வேண்டினர்,

### ராமாநுஜர் யாதவரை விட்டு விலகித் திருக்கச்சிநம்பிக்கு அணுக்கராயிருத்தல்

ஆளவந்தாருடைய அந்தரங்க ப்ரபத்தி விரைவில் பலிக்கவேண்டிய காலம் வந்து விட்டபடியால் ஒருநாள் யாதவப்ரகாசருக்கும் இளையாழ்வார்க்கும் உபநிஷதர்த்த விசாரத்தில் போராட்டம் வலுத்தது. அன்று விசிஷ்டாத்வைத ஸித்தாந்தக் கோட்பாட்டை ஸ்வாமி வெகு அற்புதமாக எடுத்து உபந்யஸிக்க வாய்த்தது. அப்போது யாதவர் ப்ரத்யாக்க்யான மொன்றும் பண்ண முடியாத தன்மையினால் அளவிறந்த சீற்றங்கொண்டு 'இன்று தொடங்கி நீர் என்னிடம் வாசிக்க வேண்டா; உம்முடைய புத்திக்குத் தகுதியான விடத்தே சென்று வாசித்துக் கொள்ளும்' என்று மறுத்து விடவே, இதையே சுப நிமித்தமாகத் திருவுள்ளம் பற்றி உவந்தவுள்ளத்தரான இளையாழ்வார் தமது திருத்தாயார் பக்கலிலே இச் செய்தியைத் தெரிவிக்க, அவரும் நெஞ்சு கனிந்து 'பிள்ளாய்! இதுகாறும் வாசித்தது போதும்; திருக்கச்சி நம்பிகள் பேரருளாளப் பெருமாளுக்குஅணுக்கராயிரா நின்றார்; அவரை யநுவர்த்தித்துக் கொண்டு அவர் சொல் வழுவாது ஒழுகுவது பாங்கு' என்று நியமிக்க. ஸ்வாமியும் அப்படியே நம்பிகளை யடிபணிந்து அவருடைய நியமனத்தினால் பண்டுபோல சாலக்கிணற்றில் நின்றும் நாடோறும் ஒரு குடம் திருமஞ்சனம் கொணர்ந்து தேவப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்துவருபவராயிருந்தார்.

### ராமாநுஜரை ஸ்ரீரங்கத்திற்கழைத்துச் செல்லப் பெரியநம்பி வருதல்

கோயிலில் ஆளவந்தார் திருமேனி நோவு சாத்தி ''சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான் இனியுனது வாயலகிலின்னடிசில் வைப்பாரை நாடாயே'' என்னவேண்டும் படியான நிலைமை யெய்தியிருந்தார். அப்போது ஸ்ரீ காஞ்சீபுரியில் நின்றும் யாத்திரையடைவே அவ்விடத்திற்கு வந்த இரண்டு ஸ்ரீ வைஷ்ணவர்களை நோக்கி இளையாழ்வாருடைய செய்தி யென்னவென்று விசாரிக்க, ஸ்ரீ ராமாநுஜர் சில நாளாக யாதவப்ரகாசரை வெறுத்து விட்டிட்டுத் திருக்கச்சி நம்பி பக்கலிலே ப்ரவணராய்த் தேவப்பெருமாளுடைய கைங்கரியத்திலே ஊன்றியிருக்கிறாரென்று அவர்கள் சொல்லக்கேட்டு, ஆளவந்தார் மிகவும் திருவுள்ளமுகந்து தம்முடைய அந்தரங்கப்ரபத்தியைப் பேரருளாளன் விரைவிலேயே ஸபலமாக்கியருளின படிக்குஉவந்து தமது அந்தரங்க சிஷ்யரான பெரிய நம்பியையழைத்து இச் செய்தியைச் சொல்லி நீர் சடக்கெனத் தென்னத்தியூரர் கழலிணைக் கீழே சென்று எப்படியாவது இளையாழ்வாரையிங்கே யழைத்து வரவேணும்' என்று நியமித்து,

ஸ்தோத்ர ரத்நத்தின் அநுஸந்தானத்தைத் துணை கொள்ளும்படிக்கும் ஸூசிப்பித்துப் பெருமாள் கோயிலுக்குப் போகவிட்டார். பெரிய நம்பியும் ஸ்வாசார்ய நியமனத்தை சிரஸா வஹித்து உடனே புறப்பட்டுக் காஞ்சீபுரி வந்து சேர்ந்தார்.

## பெரிய நம்பியும் ராமாநுஜரும்

தமக்கு ஸப்ரஹ்மசாரியான திருக்கச்சி நம்பி அவ்விடத்திலெழுந்தருளியிருக்கின்றமை யறிந்து அவர்பக்கலிலே சென்று சேர்ந்து தாம் வந்த காரணத்தைத் தெரிவித்து அவரை முன்னிட்டுக்கொண்டு பேரருளாளன் ஸந்நிதிக்குச்சென்று மங்களாசாஸனம் செய்து, அப்போது இளையாழ்வார் சாலக்கிணற்றுக்குச் சென்றிருப்பதாகவும் தீர்த்த கும்பத்துடனே திரும்பி வருகிற ஸமயமணித்தென்றும் தெரிந்துகொண்டு அபிமுகமாக வெழுந்தருளி அவர் வரும் வழியிலே ஓரிடத்திலிருந்துகொண்டு செவிக்கினிய கம்பீர மதுர ஸ்வரத்துடனே ஸ்தோத்ரரத்நத்தை அநுஸந்தித்துக் கொண்டிருக்கையில், இளையாழ்வாரும் திருமுடிமேல் திருநீர்க்குடத்துடன் வருபவராய் அப்போது பெரியநம்பியின் அநுஸந்தானத்திலிருந்த ✠ ப்ரஹ்மா சிவச் சதமக: பரமஸ்வராடிதி ஏதேபி யஸ்ய மஹிமார்ணவ விப்ருஷஸ்தே ✠ என்கிற ச்லோகத்தைத் திருச்செவிசாத்தி 'இது யாருடைய திவ்யஸூக்தி'? என்று நம்பியை நோக்கிக் கேட்க, அவரும் 'இது ஆளவந்தாருடைய திவ்ய ஸூக்தி' யென்றுரைக்க, 'ஆகில் அவரை அடியேன் ஸேவிக்கவேணுமே' என்று இளையாழ்வார் கூற, 'ஆகலாம்; நம்மோடே வந்து ஸேவிக்கலாம்' என்று பெரிய நம்பி பணிக்க, இருவரும் தொல்லையின்பத்திறுதி கண்டவர்களாய் வார்த்தையாடிக்கொண்டே ஸந்நிதியிற்சென்று சேர்ந்தார்கள். இளையாழ்வார் திருமஞ்சனத்தைப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்துவிட்டு நியமனமும் பெற்றுக்கொண்டு திருக்கச்சிநம்பியின் அநுமதியையும் பெற்றுப் பெரிய நம்பியுடனே புறப்பட்டுத் திருவரங்கப் பெரிய கோயிலேறச் செல்லா நின்றார்.

## ஆளவந்தார் திருநாட்டுக்கெழுந்தருளுதல்

பெரியநம்பியைப் பெருமாள் கோயிலுக்குப் போகவிட்ட பிறகு சில நாளளவிலே ஆளவந்தார் திருமேனியிலே அநாரோக்ய மதிகரித்துத் திருநாட்டுக்கெழுந்தருளும் ஸந்நிவேசமாயிற்று. மிக்க தளர்ச்சியோடே ஸந்நிதிக்கெழுந்தருளி ✠ அமலனாதிபிரானநுஸந்தானத்துடனே பெரிய பெருமாளைத் திருவடி தொழுது வரிசைகளும் பெற்று ✠ நலமந்தமில்லதோர் நாடுபுக நியமனமும் பெற்று மடமேற வெழுந்தருளி உபநிஷத்துக்களையும் அருளிச் செயல்களையும் முதலிகள் ஸேவிக்கத் திருச்செவி சாத்திக்கொண்டேயிருந்து ✠ அந்தமில்பேரின்பத்தடியரோடிருந்து களிக்கவேண்டி மணக்கால் நம்பிகளின் திருவடிகளைச் சிந்தித்துக்கொண்டே ப்ரஹ்மரந்த்ரத்தாலே திருநாட்டுக்கெழுந்தருளினார். திருவரங்கப் பெருமாளரையர் முதலான எல்லாரும் வேரற்ற மரம்போலே விழுந்து துடிக்க, அங்குள்ளார் இவர்களைத் தேற்றி ஆளவந்தார்குமாரரான பிள்ளைக்கரசுநம்பியைநோக்கி மேல் நடைபெறவேண்டிய கைங்கர்யங்களுக்கு உத்யோகிப்பிக்க, ஆளவந்தார்படி யென்று இன்றைக்கும் வழங்கி வருகிற விலக்ஷண ப்ரக்ரியையிலே சடங்குகளையெல்லாம் நடத்தி, திருக்கரம்பன் துறையிலே திருப்பள்ளி படுத்துவதாக திவ்ய மங்கள விக்ரஹத்தை ப்ரஹ்மரதத்திலே யெழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்தாயிற்று. பெரிய நம்பி இளையாழ்வாருடனே திருக்காவிரியின் ஸமீபமாக எழுந்தருளுகிற ஸமயமும் மேலே குறித்த ஸந்தர்ப்பமும் ஒத்திருந்தது.

## ராமாநுஜர் ஆளவந்தாருடைய சரமத் திருமேனியை ஸேவித்தல்

பெரியநம்பி திருக்கரம்பன் துறையிலே பெரிய திரளைக்கண்டு எதிரே வருகிறவர்களை நோக்கி என்ன விசேஷமென்று கேட்க, அவர்களும் ஆளவந்தார் திருநாட்டுக் கெழுந்தருளினாரென்ன, அதுகேட்ட இருவரும் மூர்ச்சித்து க்லேசித்து, விமலசரம விக்ரஹத்தையாகிலும் ஸேவிக்கப் பெற்றோமேயென்று தேறியெழுந்து அருகே வந்து சேர்ந்து கண்பனிசோர நின்று ஸேவிக்கையில், இளையாழ்வார் அந்த சரமத் திருமேனியை ஆபாதசூடமாக ஸேவித்து வருபவர், திருக்கையில் மூன்று திருவிரல்கள் முடங்கியிருக்கக் கண்டு 'முன்னும் இப்படியுண்டோ? இப்போதுதானோ?' என்று முதலிகளைக் கேட்க, அவர்களும் 'முன்பில்லை; இப்போது கண்டதித்தனை' என்ன; இளையாழ்வாரும் இவர் திருவுள்ளத்திலே ஏதேனும் குறைகளுண்டாயிருக்கவேணுமென்று கருதி முதலிகளைப் பார்த்து முன்பு வியாக்கியான ஸமயங்களிலே அபிமத ஸல்லாபங்களைக் கேட்டிருப்பீர்களே; திருவுள்ளத்தி

லோடியிருப்பன சில அறியப்பெற்றதுண்டோ?' என்று கேட்க; அவர்களும் மூன்று விஷயங்களைத் தெரிவித்தார்கள்-1. ப்ரஹ்ம ஸூத்ரத்திற்கு விசிஷ்டாத்வைதமதாநுஸாரியான பாஷ்யம் அவதரிக்கவேணுமென்கிற விருப்பமும் 2. நம்மாழ்வாருடைய திருவாய்மொழிக்கொரு வியாக்கியானமவதரிக்க வேணுமென்கிற விருப்பமும் 3. வ்யாஸபராசரர்களிடத்திலே க்ருதஜ்ஞதாநுஸந்தானம் நெடுகச் செல்லும்படியான காரியமொன்று நடைபெற வேணுமென்கிற விருப்பமும் ஆக இம்மூன்று வாஞ்சைகளே திருவுள்ளத்தில் குடிகொண்டிருந்தனவாக அறிவோம்; வேறொன்றுமறியோம் என்றார்கள்.

### ராமாநுஜர் காஞ்சீபுரம் சேர்ந்து வாழ்தல்

ஸ்வாமி இதைக் கேட்டதும் தெண்டனிட்டுக் கைகூப்பி நின்று 'இவ்வுடல் திடமாய் ஆசார்யக்ருபையும் அடியேனிடத்தில் பரிபூர்ணமாயிருந்து ஸர்வேச்வரன் அடியேன் நினைத்தபடி கூட்டுவானாகில் இம் மூன்றையும் நிறைவேற்றக்கடவேன் என்ன; முடங்கியிருந்த மூன்று திருவிரல்களும் உடனே நிமிர, இதனை அனைவருங்கண்டு ஆச்சரியப்பட்டு "இளையாழ்வீர்! இவ்வாசார்ய க்ருபையும் உம்மிடத்திலே கூடும்; நீரே இந்த தர்சனத்திற்கு நிர்வாஹகராவீர்" என்று மங்களாசாசனம் செய்து கூறினார்கள். ஸ்வாமியும் அந்த திவ்ய மங்கள விக்ரஹத்தைக் கண்ணிலும் நெஞ்சிலும் தேக்கிக்கொண்டு திருவடிகளை ஸேவிக்கப் பெற்றமையாலே ஸகலார்த்தங்களும் தமக்குச் சேம நிதியாக லபித்தனவாகக் கொண்டு ஆகிலும் இரண்டொரு நாளாவது கூடியிருந்து திவ்ய ஸூக்திகளைச் செவியாரப் பருகப் பெற்றிலோமேயென்கிற க்லேசம் மேலிட்டு ஸ்ரீ மணவாளரவணைப் பற்பல காலமும் பள்ளிகொள் 'மணவாளர் நம்மைவைத்த பரிசிது காண்மின்'' என்று கூறிக் கொண்டே அவப்ருதஸ்நாநம் செய்தருளிப் பெரிய நம்பியிடம் விடைபெற்றுக் கொண்டு பெருமாளையும் திருவடி தொழாதே அவரை வெறுத்து மீண்டும் பெருமாள் கோயிலேற வெழுந்தருளினர். 'ஆளவந்தாரோடே நான் கூடியிருந்து குளிரப்பெற்றிருப்பேனாகில் பரமபதத்திற்குப் படி கட்டியிருப்பேனே' என்று அப் போது பலகாலும் இளையாழ்வார் பணித்தபடி,

பிறகு ஆளவந்தாருடைய சரம கைங்கரியங்கள் குறையற நடந்தேறின. இளையாழ்வாரும் பெருமாள் கோயில் சேர்ந்து திருக்கச்சி நம்பிக்குச் செய்தியறிவிக்க, அவரும் க்லேசித்து ஸ்ரீ சூர்ண பரிபாலனாதிகள் நடத்தினர். ஸ்வாமி முன்பு போலவே பேருளாளனுடைய திருமஞ்சன கைங்கரியத்தில் நிரதராயிராநின்றார்.

### திருக்கச்சிநம்பியிடம் ராமாநுஜருடைய ப்ரதிபத்திவிசேஷம்

திருக்கச்சி நம்பிகளிடத்திலே மிகவும் பக்திகொண்டு அவர் திருவடிகளிலே ஆச்ரயிக்க வேணுமென்று கருதி அக்கருத்தை அவரிடத்திலே விஜ்ஞாபிக்க, இது வர்ணாச்ரமத்துக்கடுத்த வைதிக மர்யாதைக்குப் போந்திராது' என்று அவர் மறுத்திட்டார். ஆச்ரயிக்கும் பாக்கியந்தான் இல்லையானாலும் *போனகஞ்செய்த சேடமாவது பெற்றுப் புனிதராவோமென்றெண்ணி ஒருநாள் நம்பியிடம் சென்று, இன்று அடியேனது குடிசையிலே அமுது செய்ய எழுந்தருளவேணும்' என்று வேண்ட, அவரும் இசைந்தருள, ஸ்வாமி மிக்க மகிழ்ச்சிகொண்டு தம் திருமாளிகைக்கெழுந்தருளி இச் செய்தியைத் தேவியாரிடம் தெரிவித்து அறுசுவையடிசிலும் அதிமதுர பக்ஷ்யவர்க்கங்களும் செய்யும்படி நியமித்து தமது நித்யகைங்கர்யமான திருமஞ்சனத் திருப்பணியையும் விரைவாகத் தலைக்கட்டித் திருமாளிகையிற்போந்து திருவாராதனமும் கண்டருளப்பண்ணி, அவ்வளவிலும் திருக்கச்சிநம்பியெழுந்தருளக் காணாமையாலே அவரை யழைத்து வருவதற்குத் தெற்குத் திருவீதியாலே மேற்கே யெழுந்தருளினர். அத்தருணத்திலேயே நம்பிகள் வடக்குத் திருவீதியாலே ஸ்வாமி திருமாளிகைக்கெழுந்தருளி, திருவாலவட்டத்திருப்பணிக்காகவிரைந்து செல்லவேண்டியிருப்பதை யறிவித்துநின்றவளவிலே ஸ்வாமிதேவிகள் இவரை ஒருமூலையிலே உட்காரவைத்து அமுது செய்யப்பண்ணுவித்து அனுப்பிவிட்டு அமுது செய்த இடத்தைக் கோமயத்தாலே சுத்திபண்ணித் தெளித்துத் தாமும் தீர்த்தமாடி நிற்கிறவளவிலே நம்பியை யழைத்துவரச் சென்றிருந்த இளையாழ்வார் அவர் இங்கே போந்தமையறிந்து மீண்டுவந்து நம்பியைக் காணமல், மனைவி நீராடியிருந்தபடியைக்கண்டு இதுவென்? என்று கேட்க; 'அந்த ஸ்ரீவைஷ்ணவர் வந்து கைங்கரியத்திற்கு விரைந்து செல்லவேண்டியிருப்பதைத் தெரிவித்தார்; உடனே அவரை அமுது செய்யப்பண்ணுவித்தனுப்பினேன்; அவர் நிஹீநவர்ணஸ்தராகையாலே இலையைக் கோலாலே தள்ளிக் கோமயத்தாலே மெழுகினேன்,

அதனால் சரீரம் அலம்பவேண்டிற்று' என்றருள். அதுகேட்டு ஸ்வாமி மிகவும் வெறுத்து வருந்தி எம்பெருமான் திருவுள்ளமிருந்தபடிக்கு நாமென் செய்வதென்று மனம் தளர்ந்திருந்தார்.

திருக்கச்சிநம்பி ஆறுவார்த்தை

மறுநாள் திருக்கச்சிநம்பி பக்கலிற்சென்று 'அடியேன் சில நினைவுகள் நினைத்திருந்தேன்; அவை விஷயமான நிர்ணயத்தை தேவரீர் பேரருளாளன்பாடே தெரிந்துகொண்டு அடியேனுக்கு நியமித்தருளவேணும்' என்று ஸ்வாமி ப்ரார்த்திக்க, நம்பியும் அப்படியேயாகுக வென்றிசைந்து அன்றிரவு பெருமாளிடத்திலே விண்ணப்பஞ்செய்து மறுமாற்றம் பெற்று மறுநாள் இளையாழ்வார்க்கு அறிவித்த ஆறுவார்த்தைகள்,—1. பரதத்வம் நாமே. 2. சித்சித்ஈச்வரபேதமே தர்சனம். 3. ப்ரபத்தியே தஞ்சம். 4. அந்திம ஸ்ம்ருதி வேண்டா. 5. சரீராவஸானத்திலே மோக்ஷம். 6. பெரியநம்பி திருவடிகளிலே ஆச்ரயிப்பது - என்பன. இங்ஙனே ஆறு வார்த்தைகளை அருளிச்செய்யக்கேட்ட இளையாழ்வார் இவ்விஷயமான நிர்ணயமே தாம் அறிய விரும்பியிருந்தமையால் இவற்றைத் தெளியவறியப்பெற்றதற்கு உவந்து, பெரியநம்பி திருவடிகளிலே ஆச்ரயித்து உஜ்ஜீவிப்பதாக அறுதியிட்டுத் திருவரங்கம் பெரிய கோயிலுக்குப் புறப்பட்டருளினர்.

ராமானுஜர் மதுராந்தகத்தில் பெரிய நம்பிகளை யாச்ரயித்தல்

அக்காலத்திலே கோயிலில் தர்சந நிர்வாஹத்திற்காக இளையாழ்வாரை அங்கே வரவழைத்து நிலைநிறுத்தவேணுமென்று ஆவல்கொண்ட முதலிகள் பெரியநம்பியை நோக்கி இது உம்மாலாகக்கூடிய காரியமாதலால் நீரே காஞ்சிபுரிக்குச்சென்று காரியம் பார்க்கக்கடவீரென்று நியமிக்க அவரும் அப்போதே ஸகுடும்பமாகப் புறப்பட்டு நம்பெருமாளிடம் விடைபெற்றுக்கொண்டு தேவப்பெருமாள் ஸன்னிதியை நோக்கி எழுந்தருளா நிற்கையில் இடையில் மதுராந்தக க்ஷேத்திரத்திலே ஏரிகாத்தராமன் ஸன்னிதியிற் சேர்ந்து நின்றார். இளையாழ்வாரும் (திருக்கச்சிநம்பிகளின் திருவாக்குப்படியே பெரியநம்பி திருவடிகளிலே ஆச்ரயிப்பதாகப் புறப்பட்டுத்) திருவரங்கம் பெரியகோயிலை நோக்கிச் செல்லாநின்று மதுராந்தகத்திலேசேர்ந்தவாறே அங்குப் பெரியநம்பியை யாத்ருச்சிகமாக ஸேவிக்க நேர்ந்து ஆச்சரியப்பட்டு எண்ணின பலன் எதிரே வந்து வாய்த்ததுபோல இப்படி நமது பாக்கியம் பரிபக்குவமாவதே! என்று உகந்து இனி காலவிளம்பம் பொறுக்கலாகாதென்று அப்போதே திருவிலச்சினை ஸாதித்துத் தம்மைஉய்விக்குமாறு வேண்ட, அவரும் இவருடைய ஆர்த்தியின் கனத்தைக்கண்டு அப்போதேஅவ்விடத்திலேயே பஞ்சஸம்ஸ்காரங்களை ப்ரஸாதித்தருளி ஆளவந்தார் திருவடிகளே தஞ்சமென்று கொண்டிருக்கும் படி நியமித்தருளினர். பிறகு அங்கு நின்றும் புறப்பட்டுப் பெருமாள் கோயிலிலே வந்து சேர்ந்தார்கள். இளையாழ்வார் தம்முடைய திருமாளிகையிலேயே மேல்பாதியிலே பெரிய நம்பி ஸகுடும்பமாக வஸிக்க இடமளித்துத் தளிகைக்கு வேண்டும் பதார்த்தங்களும் ஸமர்ப்பித்து ஆராதித்துக் கொண்டு அவர் ஸந்நிதியிலே அருளிச் செயல்களைக் கற்பதும் தர்சந ரஹஸ்யார்த்த விசேஷங்களைக் கேட்பதுமாயிருந்து வந்தார்.

பெரியநம்பி கோயிலுக்கெழுந்தருளல்

இங்ஙனேயிருந்து வருகையில் பெரியநம்பிதேவிகளுக்கும் இளையாழ்வாருடைய தேவிகளுக்கும் மனப்பொருத்தமின்றிக்கே வைரஸ்யமுண்டாகத் தொடங்கிற்று. இருவர்க்கும் கிணற்றின் கரையிலே தாம்புவிஷயமான விவாதமுண்டாகி வார்த்தைகளும் விஞ்சின. இதைப் பெரியநம்பி யுணர்ந்து தமது தேவிகளைக் கோபித்து, இனி நாம் இங்கு வாழ்வது தகுதியற்றதென்றெண்ணி உடனே கோயிலுக்குப் புறப்படத் திருவுள்ளமாய் இளையாழ்வார் பக்கலிலும் அறிவியாமல் அவர் அனுஷ்டானத்திற்குச் சென்றிருந்த ஸமயம் பார்த்து ஸகுடும்பமாக மீண்டு கோயிலுக்கெழுந்தருளினர். ஸ்வாமி அனுஷ்டானம் பண்ணியெழுந்தருளிப் பெரியநம்பியை ஸேவிக்கப்பெறுமல் விசாரித்துச் செய்தியறிந்து திருவுள்ளம் மிகவும் உடைகுலைப்பட்டு நின்றார்.

ஸ்வாமி ஆச்ரமஸ்வீகாரம் செய்தருளுதல்

நம்மாழ்வார் ஒரு திருவாய்மொழிக்குப் பல ச்ருதியருளிச் செய்யாநின்றவர் * நல்ல பதத்தால் மனைவாழ்வர் கொண்ட பெண்டிர்மக்களே * என்று க்ருஹஸ்தாச்ரம வாழ்ச்சி

யையும் பலனாக அருளிச்செய்தார். ஸர்வோபகாரக்ஷமமான இந்தஆச்ரமவாழ்க்கை நன்றே யாயினும் "நல்ல பதத்தால் மனைவாழ்வர்* என்றபடிக்குப் பாங்காகஇராவிடில்பரித்யாஜ்ய மேயாதலால் ஸஹதர்மசாரிணியான தேவியாருடைய மனம் அநுகூலமாயிராதபோது இவ் வாச்ரம வாழ்க்கையில் ஜிஹாஸையுண்டாக ப்ராப்தம். ஸ்வாமி தமது தேவியாரிடத்தில் மூன்று அபசரிதங்கள் கண்டார். 1. திருக்கச்சிநம்பி பக்கலிலே தமது திருவுள்ளத்திற்கு மாறாக நடந்துகொண்டது. 2. ஒருநாள் ஒரு ஸ்ரீவைஷ்ணவருக்கு ப்ரஸாதமிடும்படி நிய மிக்க, உள்ளே ப்ரஸாதமிருந்தும் இல்லையென்று சொல்லி மறுத்தொழித்தது, 3. ஆசார்ய தேவிகளோடே ஸ்பர்த்தித்து அபசாரப்பட்டது. ஆக இம்மூன்று செய்கைகளும் அஸஹ்யாபசாரமாக ஸ்வாமிக்குத் தோன்றினபடியால் * உடனே ஸம்ந்யாஸாச்ரமம் ஸ்வீகரிக்கத் திருவுள்ளமாய் அன்றே தேவிகளைப் பிறந்தகத்துக்குப் போகவிட்டுப் பேரரு ளாளன் திருமுன்பே திருவனந்தஸரஸ்தீரத்தில் தண்ட காஷாயங்களைப் பரிக்ரஹித்து ராமாநுஜமுநியென்றும் யதிராஜரென்றும் உலகமெலாம்போற்ற நின்று உலகேத்துமாழி யானத்தியூரானுடைய அந்தரங்க வுகப்புக்குக்கொள்கலமாய் மடத்தே வாழ்ந்துகொண்டு அத்தாணிச் சேவகம் புரிந்துவந்தார்.

### ஆழ்வானும் ஆண்டானும் வந்து பணிதல்

ஸ்வாமி இங்ஙனே ஆச்ரமஸ்வீகாரம் செய்தருளிநின்றபடியை முதலியாண்டானும் கூரத்தாழ்வானும் கேள்விப்பட்டு ஸ்வாமி திருவடிகளிலே வந்து ஆச்ரயித்துப் பஞ்சஸம்ஸ் காரங்களும் பெற்று மீமாம்ஸா சாஸ்த்ரயுக்மச்ரமஞ் செய்துகொண்டு வாழ்ந்திருந்தார் கள். இந்த கோஷ்டியிலே அந்வயித்து வாழவேண்டிய கோவிந்தபட்டர் காளஹஸ்தியிலே விபரீத வ்ருத்தராயிரா நின்றாரே யென்று திருவுள்ளம் நொந்து இக்குறையைத் திருமலை நம்பி பக்கலிலே தெரிவித்து அவனைத் திருத்திப் பணிகொள்ளவேண்டியது உம்முடைய பாரமென்று விஜ்ஞாபித்திருந்தார் ஸ்வாமி.

### யாதவப்ரகாசன் ஸ்வாமியை யாச்ரயித்து வாழ்தல்

ஸ்வாமியினுடைய ப்ரபாவம் நாள்தோறும் வளர்ந்து செல்லாநின்றது. அதனைக் கண்டு யாதவப்ரகாசனது தாயார் 'நம்முடைய குமாரனும் இவரை யடிபணிந்து வாழ லாமே என்று நினைத்து இந்த மநோரதத்தை மகனிடம் பலகாலும் தெரிவித்துவந்தாள். அவன் ஏற்கெனவே ஸ்வாமியின் விலக்ஷண மேதாப்ரதிபாவிலாஸங்களைக் கண்டவனாதலா லும் ப்ரஹ்மரக்ஷஸ்ஸின் மூலமாக வைபவத்தை விசேஷித்து அறிந்தவனாதலாலும் தான் நிர்வஹித்துப்போருகிற தர்சனத்திலே மிகவும் அருசி தோன்ற நின்றதனாலும் பகவத்கடா க்ஷம் பலிக்க ப்ராப்தகாலமானதனாலும் தாயாருடைய நல்வார்த்தையில் அன்பு தோன்றி அப்படியே யென்றிசைந்து, இதுவரையில் சிகாயஜ்ஞோபவீத த்யாகம் பண்ணியிருந்த பாபத்திற்கு ப்ராயச்சித்தமாக பூப்ரதக்ஷிணம் பண்ணவேண்டி யிருந்ததனால் வயது முதிர்ச்சி காரணமாக அது செய்ய முடியாமைக்கு வருந்தியிருக்கையிலே தேவப்பெருமாள் கனவிலே காட்சி தந்து 'நம்மிராமாநுசனை ஒரு ப்ரதக்ஷிணம் பண்ணுவது பூப்ரதக்ஷிணத் திலும் மேம்பட்டது. ஆகவே அது செய்து உள்ளம் தேறுவாயாக' என்று நியமிக்க, திருக் கச்சிநம்பி மூலமாகவும் இந்த நியமனத்தைத் திடமாக விச்வஸித்து ஸ்வாமி திருவடிகளிலே வந்து வேரற்றமரம் போலே விழுந்து கண்ணுங் கண்ணீருமாய் நின்று * பழுதே பல பகலும் போனமைக்கு அநுதபித்துப்பேசி இனியாகிலும் இவ்வாத்மா உஜ்ஜீவிக்கும் நல் விரகு பார்த்தருள வேணுமென்று கனக்க ப்ரார்த்தித்து ஸ்வாமி திருவருளுக்கிலக் காகி ஸ்ரீவைஷ்ணவ யதிவேஷம் பூண்டு விளங்கி வாழ்ந்துபோனன். இவ்விஷயத்தை வேதாந்த தேசிகனும் யதிராஜ ஸப்ததியில் * ஸ்வபலாத் உத்தருதயாதவப்ரகாச: * என்றருளினர்.

### திருவரங்கப்பெருமாளரையரும் தேவப்பெருமாளும்

ஸ்வாமி காஞ்சீபுரியிலே ஆழ்வான் ஆண்டான் முதலான சிஷ்யவர்க்கங்களுக்கு உபய வேதாந்த க்ரந்த ப்ரவசனம் செய்து போரா நிற்கையில், நம்பெருமாள் ஸந்நிதியில் தர்சந நிர்வாஹகர் ஒருவருமில்லாத குறைதீர இவரை அவ்விடத்திற்கெழுந்தருளச் செய்ய வேணுமென்று பாரிப்புக்கொண்ட கோயில் முதலிகள் ஓர் ஸதுபாயம் கண்டனர்; பேரரு

ளாளப் பெருமாள் ஆழ்வாரருளிச் செயல்களிலே போரவும் பித்தராயிருப்பராகையாலே நம் அரையரைக் கொண்டு பாட்டுக் கேட்பித்து உகப்பித்து வரப்ரஸாதமாக ஸ்ரீராமா நுஜரைப் பெற்று இங்கே யெழுந்தருளப் பண்ணிக் கொண்டு வரலாமென்று.

அக்காலத்து, இசைபாடி விண்ணப்பஞ் செய்வதில் மிகவல்லவராயிருந்த ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையரைப் பேரருளாளப் பெருமாள் ஸன்னிதிக்கு விடைகொண்டு இக்காரியத்தைச் செவ்வனே தலைக்கட்டிக் கொண்டு வரும்படி பெரியபெருமாள் நியமித் தருள. அந்த நியமனத்தை சிரஸாவஹித்த அரையர் பேரருளாளன் ஸன்னிதிக்கு வந்து சேர்ந்து அங்குள்ள வரந்தரும் பெருமாளரையரையும் திருக்கச்சிநம்பியையும்முன்னிட்டுக் கொண்டு தேவப்பெருமாளைத் திருவடி தொழுது ✲ அத்தியூரான் புள்ளையூர்வான் ✲ என் னெஞ்சமேயான்✠ துணிவினியுனக்குச் சொல்லுவன்✠ உரந்தருமெல்லணைப் பள்ளி கொண் டான் முதலான பாசுரங்களைத் தேவ கானத்திலேயிட்டுத் தேவப்பெருமாள் திருவுள்ளம் நீர்ப்பண்டமாயுருகும்படி செவிக்கினிதாகப் பாடிக்கொண்டிருக்கையில் தேவபிரானும் திருவுள்ளம் பூரித்து, வாரீர் அரையரே! உம்முடைய பாட்டுக்குப் போரவுகந்தோம்; நீர் எது கேட்டாலும் தரக்கடவோம்' என்று ஒருகாலைக்கிருகால் உறுத்தியருளிச் செய்ய, அரையரும் அருகேயிருந்த இளையாழ்வாரைக் காட்டி நம் இராமாநுசனை நம்பெருமாளுக் குத் தந்தருளவேணும்' என்று பிரார்த்திக்க, அதுகேட்டுத் தேவப்பெருமாள், திடுக்கிட்டு ஒன்றுந்தோன்றுமே நிற்க, சொன்னசொல் தவறாதே தந்தருளவேணுமென்று அரையர் வேண்ட, "நம்பிராமாநுசனைத் தவிர மற்றதைக் கேளுமென்று நாம் முதலிலேயே சொல் லத் தவறினோம்; சொற்படியே இராமாநுசனைப் போகவிட வேண்டியதே" என்று துணிந்து, "அரையரே! நம்மை இங்ஙனே வஞ்சித்து ஸர்வஸ்வமும் கொள்ளைகொள்ள வந்தீர் போலும்; நாமும் உமது வஞ்சனையிலே அகப்பட்டோம்; இனி என் செய்வது? விரும்பினபடியே கொண்டுபோகக் கடவீர்" என்று தேவப்பெருமாள் விடை கொடுத் தருள, அன்றே அப்போதே ஸ்வாமி ஆழ்வானுண்டான் முதலான சிஷ்ய வர்க்கங்களுடனே புறப்பட்டு அரையரை முன்னிட்டுக் கொண்டு நம்பெருமாள் ஸன்னிதிக்கு வந்து சேர்ந்து ✠ தெண்ணீர்ப் பொன்னியிலே தீர்த்தமாடி ஆஹ்னிகங்களை முடித்துக்கொண்டு அரவணை மேல் பள்ளிகொண்ட முகில்வண்ணனைக் கண்ணாரக்கண்டு 'அடியேன்மீது இப்படியும் அருள்வெள்ளம் பெருகுவதே!' என்று ஈடுபட்டு நிற்கையில், பெரியபெருமாள் தமது திருப் பொலிந்த சேவடியை இவரது சென்னிமேல் பொறித்து "இளையாழ்வீர்! ✠ பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகு மென்கிற உபயவிபூதிச் செல்வத்தையும் உமக்கும் உம்முடையார்க்கும் தந்தோம். இனி நம்முடைய கோயிலைத் திருத்திப் பணிகொள்ளக் கடவீர்" என்று நியமித்தருளியாயிற்று. அன்று முதலாக ஸ்வாமிக்கு உடையவர் என்கிற திருநாமம் வழங்கி வந்தது [உடையவர்—உபய விபூதியையும் தம் கையிலேயுடையவர் என்ற படி.] இங்ஙனே பெரியபெருமாளுடைய பேரருளைப் பெற்றதும் அருகேயிருந்த பெரிய நம்பியை நோக்கி ✠ பெரியார்க்கு ஆட்பட்டக்கால் பெறுத பயன்பெறுமாறு வரிவாள்வாயர வணைமேல் நம்பெருமாள் காட்டினரேயென்று பாசுரஞ் சொல்லி, தேவரீருடைய திருவடி ஸம்பந்தம் பெற்ற கோயின்மையாலே பெரியபெருமாள் அடியேனை யிப்படி விஷயீகரித் தருளினர் என்று ஆனந்தக்கண்ணீர் பெருகநின்று விண்ணப்பஞ் செய்ய, பெரியநம்பியும் "✠ கலியுங் கெடுங் கண்டு கொண்மினென்று அன்று ஆழ்வாரருளிச் செய்த எதிர்காலச் செய்தி இன்று பலிக்கக் கண்டோம்; நல்லது; இனி பெருமாள் நியமனப்படியே இவ்விடத் துப் பணிகளெல்லாம் பாங்காகப் பார்த்தருளீர்" என்றருளிச் செய்ய, அன்று முதலாகவே "தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்திவைத்தான் வாழியே' என்கிற வாழ்த்து அந்வர்த்தமாம்படி அனைத்தும் ஆராய்ந்தருளி நித்யோத்ஸவ பக்ஷோத்ஸவ மாஸோத்ஸவ ஸம்வத்ஸரோத்ஸவங்களெல்லாம் குறையற நடைபெறுமாறு சேமஞ் செய்தருளி வந்தார். அப்போது அகளங்க நாட்டாழ்வானும் ஸ்வாமிக்கு அணுக்கனன அடியவனாகிக் கைங்கரியங்களுக்குத் துணைபுரிந்து வந்தான்.

## திருவரங்கத்தமுதனாரைத் திருத்திப் பணிகொள்ளுதல்

திருவரங்கத் தமுதனாரென்பவர் கோயில் கொத்திலுள்ளவர்கட்குத் தலைவரா யிருந்தவர். அவர் ஒரு நாள் உடையவரை வந்து பணிந்து 'பாவங்கள் கூடுபூரித்துக்கிடக்கிற அடியேனைத் திருத்தி ஸ்வாமிக்கு சேஷமாக்கும்படி தேவரீர் திருவடிவாரத்திலுள்ளாரில் ஒருவர்க்கு நியமித்தருளவேணும்' என்று விண்ணப்பம் செய்ய, உடனே ஸ்வாமி ஆழ் வானையழைத்து அமுதனாரைக் காட்டி 'இவர் நம்முடைய வாழ்முதலான நம்பெருமாளு

டைய ஸ்ரீகார்யத்துக்குப் பரிவராயிருப்பவர்; இவரது தாழ்வுகளைப் பாராமல் இவரை அநுவர்த்தித்து அநுகூலராக்கி நம்பக்கலிலே கொண்டுவந்து சேரும் என்று நியமித்தருள, ஆழ்வானும் ஆறுமாதம் அவரை அநுவர்த்தித்துப் பரிபக்குவராக்கி உடையவர் திருவடிகளிலே கொண்டுவந்து காட்டிக் கொடுக்க உடையவரும் அவ்வமுதனுரை ஆழ்வான் திருவடிகளிலே ஆச்ரயிப்பித்தருளினுர்.

அமுதனுர் க்ருஹத்திலே ஏகாஹமமுதுசெய்ய ஆழ்வானைப் போகவிடுதல்

இப்படி அமுதனுர் ஆழ்வான் திருவடிகளில் அந்தரங்கராய்க் காலக்ஷேபஞ் செய்து வருகிற நாளிலே அவருடைய தாயார் ஆசாரியன் திருவடியடைந்தாள். தசாஹம் கடந்த பின்பு 'ஏகாஹத்துக்கு நிமந்த்ரண ஸ்வாமியாக ஒருவரை நியமித்தருள வேணும்' என்று உடையவர் பக்கலிலே வந்து விண்ணப்பஞ் செய்தாரமுதனுர். அப்போது உடையவர் ஆழ்வானை நோக்கி 'நீர் போய்வாரும்' என்ன, ஆழ்வானும் சிறிதும் முகம் குன்ருமல் ஸ்வாமியின் அந்தரங்கக் கருத்தை க்ரஹித்துக்கொண்டு எழுந்தருளி ஏகாஹத்திலே ஸ்தானம் வஹித்து அமுது செய்தருளினுர். முடிவில் 'ஸகலம் ஸம்பூர்ணம்' என்று சொல்லவேண்டிய தருணத்தில் அமுதனுருடைய ஆதீனத்திலிருந்த நம்பெருமாள் ஸன்னிதித் திறவுகோலைப் பெற்றுக்கொண்டு பிறகு புக்த்த்ருப்தி சொல்லி ச்ராத்த பூர்த்திசெய்து, அந்தத் திறவுகோலை ஸ்வாமி திருவடிகளிலே கொணர்ந்து ஸமர்ப்பித்தார். அன்று முதல் ✠ ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம் ✱ என்று கடல் சூழ்ந்த மண்ணுலக முற்றும் போற்றும்படி எம்பெருமானுர் நம்பெருமாள் ஸன்னிதி கைங்கரியங்களைப் பரிஷ்கரித்தருளினுர்– என்பார்கள்.

எம்பார் திருந்தின செய்தி கேட்டு மகிழ்தல்

பண்டு யாதவப்ரகாசருடைய கங்கா யாத்ரையிலே கோவிந்தபட்டர் [எம்பார்] லிங்கங் கொணர்ந்து சிவபக்தராகி ஸ்ரீவைஷ்ணவ ஸஹவாஸத்தையிழந்து காளஹஸ்தியிலே சிவபூஜாநிரதராயிருந்தாரென்று சொன்னேம். அவரைத் திருத்திப் பணிகொள்ளும்படி ஸ்வாமி தம் மாதுலரான திருமலை நம்பியை வேண்டிக் கொண்டிருந்தார் முன்னமே. அவரும் திருமலையில் நின்றும் காளஹஸ்திக் கெழுந்தருளி கோவிந்தரைத் திருத்தப் பார்த்தவளவிலே இரண்டு பர்யாயங்களில் ஸமீஹித ஸித்தியாகாமல் மூன்ருவது பர்யாயத்தில் மநோரதம் நிறைவேறி மகிழப் பெற்றபடியை ஒரு ஸ்ரீவைஷ்ணவர் வந்து ஸ்வாமி திருவடிகளிலே விண்ணப்பம் செய்ய, அதுகேட்டு ஸ்வாமி மிகவுகந்தருளினுர். அந்தச் செய்தி வருமாறு:—

திருமலைநம்பி சில சிஷ்யர்களுடனே காளஹஸ்திக் கெழுந்தருளி, நாடோறும் கோவிந்தபட்டர் சிவபிரானுக்குப் பூப்பறிக்க வருமிடத்திற்கு அருகேயிருந்து, திருவாய்மொழியில் ✠ திருமால்பரத்துவத்தைநன்குரைத்த ✠திண்ணன் வீடு பதிகத்தைத் தொடங்கி வியாக்கியானித்தருளாநின்ருர்; கோவிந்தர் அங்கு ஒரு பாதிரி மரத்தின்மீதேறிப்பூப்பறியா நின்றவர், மூன்றுபாட்டளவும் பூப்பறிக்கை தவிர்ந்து கேட்டுக்கொண்டிருந்து நாலாம்பாட்டிலே ✠ தேவனெம்பெருமானுக்கல்லால் பூவும் பூசனையும் தகுமே✠என்றவிடத்திற்கு கங்காப்ரவாஹ நிர்விசேஷமாகவருளிச் செய்த வியாக்கியானம் செவியிற் புகுந்தவாறே கோவிந்தர் அந்த மரத்தினின்றும் திடுக்கெனக் குதித்துக் கையிலிருந்த பூக்குடலையைச் சுழற்றியெறிந்து, தரித்திருந்த ருத்ராக்ஷத்தையும் கழற்றியெறிந்து, ✱ பூவும் பூசனையும் தகுமே ✱ என்ற சந்தைக்குச் சேர 'தகாது தகாது தகாது' என்று சொல்லிக்கொண்டே நம்பி திருவடிகளிலே வேரற்ற மரம் போலே விழுந்து,

'உபயவிபூதிநாதனிருக்க விரிதலையானை விரும்பினேனே!
புதுக்கணிப்புடைய புண்டரீகாக்ஷனிருக்கப் பொறிபறக்குங்கண்ணனைப் பூசித்தேனே!
கடல்மண்ணுண்ட கண்டனிருக்கக் கறைகொண்ட கண்டனைக் காமித்தேனே!
கல்லெடுத்துக் கன்மாரிகாத்த கற்பகமிருக்கக் கையார் கபாலியைக் காதலித்தேனே
திருவிருந்த மார்பன் ஸ்ரீதரனிருக்கத் திருவில்லாத்தேவனைத் தொழுதுநின்றேனே!
பீதகவாடைப்பிரானுரிருக்கப் புலியுரியானைப் பின்தொடர்ந்தேனே!
சதிரானகங்கையடியானிருக்கச் சுடுகாடுகாவலனைச் சுற்றி வலம் வந்தேனே!
பெருந்துழாய் வனமிருக்கப் பெருங்கையாற் பேய்ச் சுரைக்கு வார்த்தேனே!

என்றிணைய பலவும் சொல்லிப் புலம்பி 'இனியாகிலும் இவ்வாத்மாவை உய்விக்கவேணும்' என்று தெண்டனிட்டு எழுந்திராமலிருக்க, நம்பியும் முடிபிடித் தெடுத்து உடம்பைத் தடவிக்கொடுத்துக் குளிரப்பேசி யருளாநிற்கையில் இச்செய்தியை அங்குள்ள சிவபக்தர்கள் கேள்விப்பட்டு வந்து இப்படி நீர் செய்யத் தகுமாவென்று நம்பியோடே போராடிப் பிறகு ஸமாதானமடைந்து திரும்பிப்போக, கோவிந்தபட்டரும் தம் வசத்திலிருந்த கருவூலத் திறவுகோல் இலச்சினை மோதிரம் முதலானவற்றைப் பொகட்டு 'இனி உங்களுக்கும் நமக்கும் பணியில்லை' என்று ஒட்டறுத்துக் கொண்டு நம்பியோடே திருப்பதிக்கு வந்து சேர்ந்து ப்ராயச்சித்த புரஸ்ஸரமாக ஸம்ஸ்காரங்களைப் பெற்று திவ்யப்ரபந்தங்களையோதி அர்த்த பஞ்சக ஜ்ஞானத்தையும் பெற்றுத் தேவுமற்றறியாதே அவர் திருவடிகளே தஞ்சமென்றிருந்து போருகின்றார்—என்னுமிச் செய்தியை அந்த ஸ்ரீவைஷ்ணவர் விண்ணப்பஞ் செய்யக்கேட்டுப் பேரின்பவெள்ளத்தே மூழ்கி நின்றனருடையவர்.

### உடையவருடைய பஞ்சாசார்ய பதாச்ரிதத்வம்

ஸ்வாமி, ஐந்து ஆசாரியர்களை யடிபணிந்து அர்த்தவிசேஷங்களைக் கேட்டவராதலால் பஞ்சாசார்ய பதாச்ரிதரென்று ப்ரஸித்தராயிருப்பர். பெரியநம்பி திருக்கோட்டியூர் நம்பி திருமாலையாண்டான் திருமலைநம்பி ஆழ்வார்திருவரங்கப்பெருமாளரையர் ஆக இவ்வைவர் அவ்வாசிரியர்களாவர். பெரியநம்பி பஞ்சஸம்ஸ்காரமிட்டருளினவராதலால் தலைமையாசிரியர். திருக்கோட்டியூர் நம்பி ரஹஸ்யார்த்தங்கள் சிக்ஷித்துக் கொடுத்தவர். திருமாலையாண்டான் திருவாய்மொழிப் பொருள் உபதேசித்தவர். திருமலைநம்பி ஸ்ரீராமாயணார்த்தங்கள் ஸாதித்தவர். ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர் திவ்யப்ரபந்தங்கள் ஸ்தோத்ரங்கள் நல்வார்த்தைகள் அளித்தவர். தேசிகர் பணித்த குரு பரம்பரா ஸாரத்தில்,

> "எம்பெருமானார் திருக்கோட்டியூர்நம்பி ஸ்ரீபாதத்திலே ரஹஸ்யார்த்தங்கள் சிக்ஷித்தார்: திருமாலையாண்டான் ஸ்ரீபாதத்திலே திருவாய்மொழிக்கு அர்த்தம் கேட்டருளினார். ஆளவந்தாராழ்வார் ஸ்ரீபாதத்திலே திருவாய்மொழியுமோதி ஸ்தோத்ராதிகள் அருளிச்செய்யும் நல்வார்த்தைகளும் கேட்டருளினார். திருமலைநம்பி ஸ்ரீபாதத்திலே ஸ்ரீமத்ராமாயணம் கேட்டருளினார்."

என்றுள்ளது இங்கே அறியத்தக்கது. ஆளவந்தாராழ்வார் என்பவரே ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர்.'

### ஸ்வாமியும் திருக்கோட்டியூர் நம்பியும்

பெரியநம்பி பரமப்ரீதியோடே உடையவர்க்கு ரஹஸ்யார்த்தங்களை யருளிச் செய்து போருகையில், "திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே சில அர்த்த விசேஷங்களுண்டு; ஆளவந்தாருடைய விசேஷாபிமானத்திற்கு அவர் இலக்காயிருந்தபடியாலே அவரிடத்திலே நிதி போல நின்றிருக்குமர்த்த விசேஷங்களையும் கேட்டு உய்யக் கடவீர்" என்று அருளிச்செய்ய, ஸ்வாமி அதுகேட்க ஊற்றமுடையராய்த் திருக்கோட்டியூர்க் கெழுந்தருளி அங்குள்ளாரை நோக்கி 'நம்பி திருமாளிகை எங்கே? என்ன: அவர்களும் 'அதோ காண்கிறகூரை' என்று காட்ட அவ்விடந் தொடங்கி நம்பி திருமாளிகையளவும் தெண்டன் ஸமர்ப்பித்துக் கொண்டே யெழுந்தருளி நம்பி திருமாளிகை சேர்ந்தார். அவ்வூரிலுள்ளார்க்கு அப்போது தான் நம்பியின் ப்ரபாவம் தெரியவந்தது. பிறகு ஸ்வாமி நம்பி திருவடிகளிலே தெண்டனிட்டு 'தேவரீர் அடியேனுக்கு ரஹஸ்யார்த்த விசேஷங்களை ப்ரஸாதித்தருள வேணும்' என்று கூப்பிய கையராய்ப் பிரார்த்திக்க, அவரும் இவருடைய அத்யவஸாய விசேஷமறியாமல் உபதேசிக்கலாகாதென்றெண்ணி வாளாவிருக்க, ஸ்வாமி சில நாள் காத்திருந்தும் மனோரதம் நிறைவேறப் பெறாதே மீண்டு கோயிலுக்கெழுந்தருளினார். இங்ஙனே பதினெட்டு பர்யாயம் கோயிலில் நின்றும் திருக்கோட்டியூர்க்கு எழுந்தருளியும் பிரார்த்தித்தும் பயன் படவில்லையாக, பிறகு ஸ்வாமியின் அளவு கடந்த ஆர்த்தியையும் அபிநிவேசாதிசயத்தையும் தெரிந்துகொண்ட திருக்கோட்டியூர் நம்பிகள் எம்பெருமானுடைய நியமனத்தையும் பெற்று இனி அவர்க்கு உபதேசிப்பதென்று தேறி ஒரு ஸ்ரீவைஷ்ணவரைக் கோயிலுக்குப் போகவிட்டார்; 'தண்டும் பவித்ரமுமாகத் தாம் ஒருவரே வந்து கேட்டுப் போகும்படி' சொல்லியனுப்பினார், அவரும் வந்து அப்படியே சொல்ல ஸ்வாமி மிகவுகந்து கூரத்தாழ்வானையும் முதலியாண்டானையும் கூட்டிக்கொண்டு மிக விரைந்து திருக்கோட்டியூரேறச் சென்று நம்பி திருவடிகளிலே தெண்டனிட்டு நிற்க, 'தனித்தன்றோ உம்மை நாம் வரச் சொன்னோம்; கூட இருவரைக் கூட்டி வந்தது ஏன்?' என்று நம்பி கேட்க. 'தண்டும் பவித்ரமுமாகவன்றோ தேவரீர் வரச்சொல்லி யருளிற்று; இவர்களைத் தண்டும்

பவித்ரமுமென்றே கூட்டிவந்தேன்' என்று சொல்லி ஆண்டானைத் தண்டாகவும் ஆழ்வானைப் பவித்திரமாகவும் காட்டி நிற்க 'ஆகில் இவ்வர்த்தம் உங்கள் மூவரளவிலே நிற்கக் கடவது, மற்றொருவர்க்கும் சொல்லாதே கொள்ளும்' என்று நம்பிகள் நியமித்தருளி அங்ஙனே சபதமும் பெற்று சரமச்லோகத்தின் பரமரஹஸ்யார்த்த விசேஷங்களைப் பேரருள் கொண்டு உபதேசித்தருளினர்.

[இங்கே ஒரு ஆராய்ச்சி. உடையவர்க்குத் திருக்கோட்டியூர் நம்பி உபதேசித்தது திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரத்தின் பொருளென்று ஆறயிரப்படி குரு பரம்பராப்ரபாவத்தில் காண்கிறது. மணவாள மாமுனிகள் முமுக்ஷுப்படி வியாக்கியானத்தில் சரமச்லோக ப்ரகரணத்தின் அவதாரிகையில்—"இதினர்த்தம் கேட்கைக்காகவிறே எம்பெருமானுர் பதினெட்டு பர்யாயம் திருக்கோட்டியூர் நம்பி பக்கல் எழுந்தருளிற்று. நம்பி தாமும் இதில் அர்த்தத்தினுடைய கௌரவத்தையும் இதுக்கு அதிகாரிகளில்லாமையையும் பார்த்திறே இவருடைய ஆஸ்திக்யாதர பரீக்ஷார்த்தமாகவும் பலகால் நடந்து துவளப்பண்ணிச் சூளுறவு கொண்டு மாஸோபவாஸங்கொண்டு அருமைப்படுத்தி அருளிச் செய்தருளிற்று......அதிகாரி துர்லபத்வத்தாலும் அர்த்தகௌரவத்தாலும் இத்தை வெளியிடாதே மறைத்துக் கொண்டு போந்தார்கள் எம்பெருமானுர்க்கு முன்புள்ளார். ஸம்ஸாரிகளின் துர்க்கதி கண்டு பொறுக்கமாட்டாதபடி க்ருபை கரை புரண்டிருக்கையாலே அர்த்தத்தின் சீர்மை பாராதே அநர்த்தத்தையே பார்த்து வெளியிட்டருளினர் எம்பெருமானுர்' என்றருளிச் செய்துள்ள ஸ்ரீஸூக்திகள் ப்ரஸித்தம். ஆகவே சரமச்லோகார்த்தம் கேட்டருளினரென்பதே யுக்தமாயிருக்க வடுப்பது. முதலில் திருமந்த்ரார்த்தத்தை யருளிச்செய்து பிறகு மற்றொருகால் சரமச்லோகார்த்தத்தையுமருளிச் செய்ததாக குருபரம்பரா ப்ரபாவத்தில் காண்கையாலே அப்படியே கொள்ளலாகாதோ வென்னில், மேலே எடுத்துக்காட்டியுள்ள மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகளின் ஸ்வாரஸ்யத்தை நோக்குமளவில் சரமச்லோகார்த்தம் கேட்கைக்காகவே ஸ்வாமி பதினெட்டு பர்யாயம் திருக்கோட்டியூர்க்கு நடந்ததாகவும்; கேட்ட அதனையே அங்கு ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு வெளியிட்டதாகவும் ஸ்பஷ்டமாக விளங்குகையாலே மற்றைப்படி சொல்லுகை மாண்புடைத்தாகத் தோன்றவில்லை. ஸம்பிரதாயம்வல்ல பெரியார்வாய்க் கேட்டுத் தெளிவது.]

திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே ரஹஸ்யார்த்த விசேஷங்கள் கேட்டருளி ஸ்வாமி க்ருதார்த்தராய் அப்போதே மறு நாளில் அவ்வூர்ப் பெருமாள் ஸன்னிதியில் ச்ரத்தாளுக்களான பல ஸ்ரீவைஷ்ணவர்களை ஓலக்கமாக விருத்தி அப்பரமரஹஸ்யார்த்தத்தை உபதேசித்தருளினர்.

### ஸ்வாமி எம்பெருமானர் என்கிற விருது பெறுதல்

திருக்கோட்டியூர் நம்பி, தம்மிடத்திலே சபதம் செய்ததைக் கடந்து ஸ்வாமி இங்ஙனே ஸன்னிதியில் அர்த்தங்களை வர்ஷித்து விட்டாரென்று உடனே கேள்விப் பட்டு அவரை யழைத்து 'இப்படியும் செய்யத் தகுமோ? எதற்காக இப்படி நியமநோல்லங்கனம் செய்தீர்? இதன் பலன் என்னுகுமென்று அறிவீரோ? என்று கேட்க, உடையவரும் 'ஆசார்ய நியமனத்தை அதிலங்கனம் செய்த பாவியேனுக்கு நரகமேயாயிற்று பலன்; இதனையறிந்தும் அடியேன் அர்த்தங்களை வெளியிட்டது அடியேனொருவன் நரகம் புகுந்தாலும் இவ்வாத்ம கோடிகளெல்லாம் தேவரீர் திருவருளாலே உஜ்ஜீவித்துப் போவர்களென்கிற கருத்தினுல்' என்று விண்ணப்பஞ் செய்ய, நம்பியும் இதைக்கேட்டு 'இப்படி பரஸம்ருத்தியே பேறான நிலை நமக்குக் கூடிற்றில்லையே! இவர்க்கு இது கூடினபடி என்னே!' என்று மிக வியந்து உவந்து அவ்வுகப்பின் பரீவாஹரூபமாக எம்பெருமானுர் என்று அவர்க்கு விருது சாத்தினர். எம்பெருமான் கருணைக்கடலென்று கேட்டிருந்தோமத்தனை, அதை இவர் பக்கலிலே இன்று ஸாக்ஷாத்கரிக்கப் பெற்றோமாதலால் இவர்க்கு இந்த விருது ஏற்கும் என்று திருவோலக்கத்திலே விவரணமும் செய்தருளினர்.

'எமக்கெல்லார்க்கும் தலைவர்' என்கிற பொருளையுடைய எம்பெருமானுரென்கிற சொல் ஸ்வாமிக்கே ஏற்குமது. பரம கருணை பொருந்தியவரே தலைவராயிருக்கத் தகுமாதலாலும் அந்தப் பரம கருணை இராமாநுசர் திறத்திலேயே ஸகலருமறிய ஸாக்ஷாத்க்ருதமாதலாலும்.

### ஆழ்வானையும் ஆண்டானையும் பற்றின இதிஹாஸம்

[ஸ்வாமி திருக்கோட்டியூர் நம்பி திருவடிகளிலே சரமச்லோகார்த்தம் கேட்டபோது ஆழ்வானுமாண்டானும் தண்டும் பவித்ரமுமாக உடனிருந்து கேட்டதாகவே கீழ்

அறிவிக்கப்பட்டது. ஆனால் இவ்விடத்து வரலாறு குருபரம்பரா ப்ரபாவத்தோடு சிறிது மாறுபடுதலால் அதில் காண்கிறபடியாகவும் இங்கு எழுதப்படுகிறது. ஸ்வாமி தண்டும் பவித்ரமுமான இவ்விருவருடனேயிருந்து நம்பிபக்கலிலே கேட்டது திருமந்திரப்பொருள் என்று வைத்துக்கொள்வது. பிறகு அவர்க்கு சரமச்லோகார்த்தத்தையும் உபதேசித்தருளத் திருவுள்ளங்கொண்ட நம்பிகள் 'எம்பெருமானாரே! உமக்கு இன்னமுமொரு சரம ரஹஸ்யார்த்தவிசேஷம் சொல்லுவதாக எண்ணியிருக்கிறோம்; இப்போது கோயிலுக்குச் சென்று பின்பு ஏகாந்தமாக நீர் ஒருவருமே வாரும் என்றருளிச்செய்ய, அப்படியே ஸ்வாமி அப்போது கோயிலேற வெழுந்தருளி மீண்டுமொருகால் தனித்து நம்பிகளின் ஸ்ரீபாதத்திலே சென்று தெண்டனிட்டு நிற்க, நம்பி இவர் கையைப் பிடித்துக்கொண்டுபோய் ஏகாந்தமாக மேல்தளத்திலேயேறிப் படிக்கதவை மூடி யெழுந்தருளியிருந்து ஒருவர்க்குஞ் சொல்லாதபடி தம் திருவடிகளைத் தொடுவித்துச் சூளுறவு கொண்டு நிர்ஹேதுக க்ருபையாலே பரம ரஹஸ்யமான சரமச்லோகப் பொருளை யருளிச் செய்து, இதை அநதிகாரிகளுக்கு இடாதபடி பேணிக்கொண்டு போரும் என்று நியமித்தருள, எம்பெருமானார் 'அடியேன் அப்படிப்பட்டவர்களுக்குச் சொல்லேன், கூரத்தாழ்வானொருவர்க்குச் சொல்லாதிருக்க வொண்ணாதேயென்ன, 'ஆகில் ஒரு ஸம்வத்ஸரம் சுச்ரூஷை கொண்டு சொல்லும்' என்று நியமித்தருள, ஸ்வாமியும் விடைபெற்றுக் கோயிலேறவெழுந்தருளினார். அப்போது ஆழ்வான் அவர் திருவடிகளிலே தெண்டனிட்டு நிற்க, உடையவரும் வாராய் ஆழ்வான்! சரமச்லோக பரம ரஹஸ்யார்த்தத்தை நம்பிகள் எனக்கு உபதேசித்தருளி இவ்வர்த்தவிசேஷத்தை ஒருவர்க்கும் செவிப்படாதபடி பேணிக் கொண்டிருக்குமாறு நியமித்தருளின போது ஆழ்வானொருவர்க்கு மாத்திரம் அடியேன் இதனை வெளியிடாதிருக்க முடியாதேயென்று நான் விண்ணப்பஞ் செய்ய, ஆழ்வானுக்கு இவ்வர்த்தம் கேட்க அதிகாரமுண்டேயாகிலும் பல்வகையாலும் அவருடைய அத்யவஸாயத்தைப் பரீக்ஷித்தறிந்து ஒரு ஸம்வத்ஸரம் சுச்ரூஷை கொண்டு சொல்லும் என்று நியமித்தருளினார் என்று ஆழ்வானை நோக்கியருளிச் செய்ய, அதுகேட்ட ஆழ்வானும் * மின்னின்னிலையிலமன்னுயிராக்கைகள் * என்ற பாசுரத்தைத் திருவுள்ளம் பற்றி ஒரு ஸம்வத்ஸரம் இவ்வுடலுக்கு நிலையுண்டோ இல்லையோவென்று வியாகுலப்பட்டு ஆலோசித்து இவ்வர்த்த விசேஷத்தைப் பெற்றாலல்லது தரித்திருக்க முடியாத தன்மையாலே ஆசார்யனது திருமாளிகை வாசலிலே ஒரு மாஸம் பட்டினி கிடக்கை ஸம்வத்ஸர சுச்ரூஷையோடொக்குமென்று சாஸ்த்ரமுண்டென்றறிந்து அங்ஙனமே மாஸோபவாஸம் கிடந்து அவ்வர்த்த விசேஷத்தைப் பெற்றார்.

பிறகு முதலியாண்டானும் வந்து தொழுது பிரார்த்திக்க, நான் ஆழ்வானொருவர்க்கே சொல்ல நியமனம் பெற்று வந்தேன். நீர் நம்பிபக்கலில் சென்று கேளுமென்று விடை கொடுத்தருள, அவரும் திருக்கோட்டியூரேறச் சென்று ஆறு மாஸம் காத்திருந்தும் அருள் பெறாமலிருந்து ஒரு நாள் கனக்க ப்ரார்த்திக்கையில் 'முக்குறும்பும் போனால் எம்பெருமானார் தாமே ப்ரஸாதிப்பர், போய்க்கேளும்' என்று விடை தந்தனுப்பிவிட, ஆண்டானும் கனத்த ஆர்த்தியோடே உடையவர் திருவடிகளிலே வந்து விழ, மிகவும் உகப்போடே ஆண்டானுக்கும் அதை யுபதேசித்தருளினார்.

### திருமாலையாண்டானிடத்துத் திருவாய்மொழி கேட்டல்

சிலநாளைக்குப் பின்பு திருக்கோட்டியூர் நம்பி கோயிலுக்கெழுந்தருளித் தம்முடைய ஸப்ரஹ்மசாரியான திருமாலையாண்டானை எம்பெருமானாரிடத்தே கொண்டு நிறுத்தி இவர் பக்கலிலே திருவாய்மொழிக்கு அர்த்தம் கேளுமென்று ஸ்வாமிக்கு நியமித்துத் தாம் புறப்பட்டெழுந்தருளினார். அன்று தொடங்கித் திருவாய்மொழி காலக்ஷேபம் நடந்துவாராநின்றது. ஆண்டான் ஆளவந்தார்திருவடிகளிலே கேட்ட அர்த்தங்களை யருளிச்செய்து வருகையில் எம்பெருமானார் ஆங்காங்குச் சில அர்த்தவிசேஷங்களையும் யோஜநா விசேஷங்களையும் பணித்துவர, இவர் விச்வாமித்ர ஸ்ருஷ்டியாக ஸ்வச்சந்தமாய் ஏதோ சொல்லி வருகின்றாரென்று திருவுள்ளம் புண்பட்ட ஆண்டான் இடையிலே காலக்ஷேபத்தை நிறுத்திவிட, இதையறிந்த திருக்கோட்டியூர் நம்பி கோயிலேற வந்து ஆண்டானை விசாரிக்கையில் உடையவர் சொன்ன சில மாறு பொருள்களை யெடுத்துரைத்து மநஸ்தாபஹேதுவை விளக்க, அப்போது நம்பி அருளிச்செய்தபடி—'இவ்வர்த்தமும் ஆளவந்தாரருளிச்செய்ய நாம் கேட்டிருக்கிறோம்; ஸாந்தீபநி பக்கலிலே க்ருஷ்ணன் வேதமோதினாற்போலே காணும்

உம்மிடத்திலே உடையவர் திருவாய்மொழி கேட்கிறதும்; ஆளவந்தார் திருவுள்ளத்தி லுள்ள அர்த்தமொழிய இவர்க்கு வேறொன்றும் தோன்றாதுகாணும். இவர்க்கு நீர் அஜ்ஞாத ஜ்ஞாபநம் பண்ணுவதாக நினையாதேயிருக்க ப்ராப்தம்' என்று.

பிறகு நம்பி அவ்வாண்டானையும் பெரிய நம்பியையும் கூட்டிக்கொண்டு உடையவர் மடத்தேற வெழுந்தருள, ஸ்வாமியும் உள்ளம் பூரித்துத் தொழுதுநிற்க, பெரிய நம்பியும் திருக்கோட்டியூர்நம்பியும் திருமாலையாண்டானை நோக்கி 'திருவாய்மொழி விட்ட விடம் தொடங்கி நீரே பலகால் அநுவர்த்தித்தாகிலும் ப்ரபந்தத்தைத் தலைக்கட்டும்' என்று நியமித்தருள, அன்று தொடங்கி அப்படியே நடந்து போந்தது. "ஆளவந்தார்க்கு நான் ஏகலவ்யன் காணும்" என்று இடையிடையே ஆண்டானை நோக்கி உடையவர் அருளிச்செய்யும் படியாயிருந்தது. ஆளவந்தார் பக்கலில் கேளாத அர்த்தங்களும் இங்கே கேட்கப் பெற்றோமென்று ஆண்டானும் போர உகக்கும்படியாயிற்று.

### ஸ்வாமி மாதுகரத்தை நிறுத்திக் கிடாம்பியாச்சானைப் பணிகொள்ளுதல்

"தென்னரங்கர் செல்வம் முற்றுந் திருத்தி வைத்தான் வாழியே' என்கிறபடியே ஸ்ரீரங்கநாத திவ்யாலய ஸாம்ராஜ்ய நிர்வாஹதுரந்தரராய் ஸ்வாமி வாழ்ந்தருளுங் காலத்திலே கோயில் கைங்கர்யபரர்கள் ஸதாசாரமில்லாமலிருக்கக்கண்டு அவர்களைத் திருத்திப் பணி கொள்ளத் திருவுள்ளம்பற்றி நெருக்கிக் கொண்டு போராநிற்கையில், அவர்களிலே சிலர் 'இவர் கோற்கீழே நம்மால் கூடிவாழ முடியாது; இவரை மாய்ப்பதே நலம்' என்று கொண்டு ஸ்வாமி மாதுகரத்திற் கெழுந்தருளுமிடத்து விஷங்கலந்த ப்ரஸாதமிடும்படி ப்ரபல நிர்ப்பந்தத்தாலே செய்விக்க, அப்படியே ஒருநாள் கிடைத்த ப்ரஸாதத்தின் தீமையை யறிந்து அதைத் திருக்காவேரியிலே கரைத்திட்டு அன்று தொடங்கிச் சிலநாள் வரையில் உபவாஸமாகவே யெழுந்தருளியிருக்க, இதைத்திருக்கோட்டியூர்நம்பி கேட்டருளி அப்போதே புறப்பட்டுக் கோயிலுக்கெழுந்தருளி, ஸ்வாமியினுடைய சிஷ்யவர்க்கங்களிலே கிடாம்பியாச்சானொருவரே திருமேனிக்கு மிகவும் பரிவரான கிங்கரர் என்றறிந்து அவரைத் திருமடைப்பள்ளிக் கைங்கர்யத்திலே நியமித்து, ஸ்வாமி தமக்கும் மடத்திலேயே ப்ரஸாத ஸ்வீகாரம் கொண்டருளும்படி நியமித்து மீண்டெழுந்தருளினர். அன்றுமுதலாக ஆச்சானே ஸ்வாமி திருவுள்ளத்திற்குப் பாங்கான பரிசாரகராக இருந்துவந்தார். வேதாந்த தேசிகர் "எதிவரனார் மடைப்பள்ளி வந்த மணமெங்கள் வார்த்தையுள் மன்னியதே' என்ற பாசுரத்திலும் ✠ இதி யதிராஜமஹாநஸ பரிமளபரிவாஹவாஸிதாம் ✠ என்ற ச்லோகத்திலும் இவ்வரலாற்றை ஸூசிப்பித்தருளினர்.

### யஜ்ஞமூர்த்தியைத் திருத்தி அருளாளப்பெருமாளெம்பெருமானராக ஆட்கொள்ளுதல்

யஜ்ஞமூர்த்தி யென்னுமொரு மாயாவாதி ஸந்ந்யாஸி எம்பெருமானருடைய வைபவங்களைக்கேட்டு அவரோடே தர்க்கித்துவெற்றிபெறவேணுமென்று விரும்பிக் கோயிலிலே ஸ்வாமி மடத்திலே வந்து ஸேவித்து 'நான் கேட்கிற கேள்விகளுக்கெல்லாம் நீர் விடை கூறவேணும்; த்ருப்திகரமாக விடைபெற்றேனாகில் உமக்கு சிஷ்யனாகக்கடவேன்' என்று சொல்ல, ஸ்வாமியும் இசைந்தருள, பதினேழு நாள் வரையில் வெற்றி தோல்வி யின்றியே வினவிடை செல்லாநிற்க, முடிவில் உத்தரமருளிச் செய்யவேண்டிய பொறுப்பு, ஸ்வாமிபக்கலிலே வந்துநின்று விஷயம் தோன்றாமேயிருக்கையில் 'நாளைக்கு ஆகிறது என்று சொல்லி ஸபாவிஸர்ஜநமாயிற்று. பிறகு ஸ்வாமியின் திருவுள்ளம் மிகவும் வியாகுலப்பட்டு, தம் திருவாராதனமான பேரருளாளரைத் திருவடி விளக்கி அமுது செய்யப்பண்ணி 'ஆழ்வார் தொடங்கி ஆளவந்தாரளவாக இத்தனை காலம் ஒரு குறையுமின்றியே விளங்கிவந்த இந்த தரிசநம் இன்று அடியேனால் பங்கமடையக்கடவதோ? இப்படியும் ஒரு லீலை கொண்டாடத் திருவுள்ளமாயிற்றோ? என்று விண்ணப்பஞ்செய்து தாம் அமுது செய்யாமலே கண்வளர்ந்தருள, அன்றிரவு பேரருளாளர் கனவிலே யெழுந்தருளிக் காட்சி தந்து மாயாவாதியின் வாயடங்கும்படியான சில அர்த்தவிசேஷங்களை ஸ்புரிக்கச்செய்து மறைய, ஸ்வாமியும் சிற்றஞ்சிறுகாலையெழுந்து பரமஸந்துஷ்டராய் நித்யாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு ப்ரஸந்நகம்பீரராய் விசாரகோஷ்டிக்கு எழுந்தருள, அவ்வளவிலேயே யஜ்ஞமூர்த்தி இன்று நமக்குத் தோல்வியே திண்ணமென்று நிச்சயித்து அப்போதே யெழுந்து ஸ்வாமி திருவடிகளிலே ஸாஷ்டாங்க ப்ரணாமம் பண்ணி நின்று 'அடியேனை அங்கீகரித்தருளவேணும்' என்று கைகூப்பி ப்ரார்த்திக்க, 'மேலே விஷய

விசாரம் நடைபெறவேண்டியிருக்க இதுவென்?' என்று ஸ்வாமி கேட்க; அதற்கு யஜ்ஞமூர்த்தி 'ஸ்வாமிந்! தேவரீருக்குப் பெரியபெருமாள் ப்ரத்யக்ஷமானபின்பு தேவரீரென்றும் பெருமாளென்றும் வாசியுண்டோ? இனி அடியேன் தேவரீர் ஸந்நிதியில் வாய்திறந்து ஒரு வார்த்தை சொல்ல ப்ராப்தியில்லை; இந்த ஆத்மா இதுவரையில் அநர்த்தப்பட்டதுபோதும்; இனியும் அநர்த்தப்படாதபடி நோக்கியருளவேணும்' என்று கனக்க ப்ரார்த்தித்து ஸ்வாமியின் இசைவும் பெற்று அப்போதே ஏகதண்டத்தை முறித்தெறிந்து ப்ராயச்சித்த பூர்வகமாய் சிகாயஜ்ஞோபவீதங்களையும் பஞ்சஸம்ஸ்காரங்களையும் பெற்றுமுக்கோல் பிடித்த முனியாகி சாஸ்த்ரப்படி ஆசார்யனுடைய நாமத்தையே வஹிக்க விரும்பி ப்ரார்த்திக்க, ஸ்வாமியும் பேரருளாளனுடைய ப்ரஸாதமடியாகவே இவர் ஆட்பட்டாரென்கிற உபகார ஸ்ம்ருதி உலகப்ரஸித்தமாம்படி அருளாளப் பெருமாளெம் பெருமானர் என்று திருநாமம் சாத்தியருளினார். உடனே அவரை யழைத்துக்கொண்டு போய்ப் பெரிய பெருமாளை ஸேவிக்கப்பண்ணிச் சிறப்புகளும் பெறுவித்து, அன்று முதலாகவே திருப்பல்லாண்டு தொடங்கி நாலாயிரமும் ஓதுவித்து, மற்றும் தத்வசிக்ஷைகளும் செய்தருளினார்.

அக்காலத்திலே, அனந்தாழ்வான் எச்சான் தொண்டனூர் நம்பி மருதூர் நம்பி என்னுமிவர்கள் எம்பெருமானார் திருவடிகளிலே ஆச்ரயிக்க வேணுமென்று வர, ஸ்வாமி அவர்களை அருளாளப் பெருமாளெம் பெருமானார் திருவடிகளிலே ஆச்ரயிப்பித்தருளினார். அப்போது அவர் அஞ்சி நடுங்கி அவ்வடியார்களை நோக்கி "குருவியின் கழுத்திலே பனங்காயைக் கட்டினாற் போலே ஸ்வாமி செய்தருளினாராகிலும், நீங்கள் ஸ்வாமி திருவடிகளே சரண மென்றிருங்கள்' என்று நியமித்தருளினார்.

### அனந்தாழ்வான் திருமலையில் வழுவிலாவடிமைக்கு நியமனம் பெறுதல்

எம்பெருமானார் பகவத் விஷய காலக்ஷேபம் நடத்தியருளுகையில் * ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி யென்கிற திருவாய் மொழி நடவா நிற்க, கோஷ்டியில் திருமுன்பேயிருந்த சிஷ்யர்களை நோக்கி 'ஆழ்வார் ✠ திருவேங்கடத் தெழில்கொள் சோதியெந்தை தந்தை தந்தைக்கு ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டும் நாம் * என்று பாரித்த குறைதீரத் திருவேங்கடமுடையான் பரிஸரத்திலே யிருந்து நித்ய கைங்கரியம் பண்ண விருப்பமுடையார் ஆரேனுமுளரோ?' என்று வினவியருள, ✠ குளிரருவி வேங்கடமாகையாலே எல்லாரும் குளிர்க்கு அஞ்சி விடை கூறுதிருக்க, அனந்தாழ்வான் எழுந்து அடியேனுக்கு நியமித்தருளவேணும்' என்றார், அது கேட்டு உகந்த எம்பெருமானார் நீரொருவரே ஆண் பிள்ளை என்று போரவும் கொண்டாடித் தழுவியருளி விடை கொடுத்தருளினார், அது முதலாக அனந்தான் பிள்ளை என்று அவர்க்கு ப்ரஸித்தியாயிற்று. அன்றே அவர் திருமலைக்கு விடைகொண்டு திருவேங்கடமுடையானைத் திருவடி தொழுது திருநந்தவனஞ் செய்து அதற்கு இராமாநுசன் என்று திருநாமஞ் சாத்தி அனேக விதமான கைங்கரியங்களை அற்புதமாக நடத்திக் கொண்டிருக்கையில் அதை நேரில் கண்டு மகிழவேணு மென்கிற திருவுள்ளம் எம்பெருமானார்க் குண்டாகி. பகவத் விஷய காலக்ஷேபத்தை விரைவாக நடத்திச் சாத்தியருளினார்.

### உடையவர் திருமலை யாத்திரையும் திருமலை நம்பியிடம் ஸ்ரீராமாயணம் கேட்டலும்

பெருமாள் கோயில் திருமலை முதலான சில திருப்பதிகளை ஸேவித்துவரப் பெரிய பெருமாளிடத்தில் விடைபெற்றுக்கொண்டு சிஷ்யவர்க்கங்களுடனே புறப்பட்ட எம்பெருமானார் வழியடைவே திருப்பதிகளை யெல்லாம் தொழுது கொண்டு திருமலையடிவாரத்தே திருப்பதியிற் சேர்ந்து, திருமலையை மிதித்தேறத் திருவுள்ளம் பற்றாமல் கீழேயேயிருந்து விடுவதாகத் திருவுள்ளப்பற்றி யிருக்கையில் அனந்தாழ்வான் முதலானோர் இதையறிந்து வந்து 'இப்படியும் திருவுள்ளம் பற்றலாமோ? நாங்களும் இனித் திருமலையைவிட்டு இங்கேதான் படுகாடு கிடக்கவேண்டும் போலும்' என்ன; அதையே திருமலையப்பனுடைய நியமனமாகக்கொண்டு புறப்பட்டுத் திருமலைமேலெழுந்தருளிக் கோனேரியிலே நீராடி அப்பனைக் கண்களாரளவும் நின்று ஸேவித்து அனந்தாழ்வானுடைய திருப்பணிகளையும் கடாக்ஷித்து உள்ளம்பூரித்து * வளர்த்ததனால் பயன்பெற்றேன் வருகவென்று அவரை மிக வுகந்து மூன்றுநாள் அவ்விடத்தில் அமுது செய்யாமலே யெழுந்தருளியிருந்து விடைபெற்றுக்கொண்டு கீழேயிறங்கி மாதுலரான திருமலை நம்பி திருமாளிகையிலே ஒரு ஸம்வத்ஸரமிருந்து இதிஹாஸச்ரேஷ்டமான ஸ்ரீராமாயணத்தின் விசேஷார்த்தங்களை அதிகரித்தார்.

8A
10

உடையவர் எம்பாரைப் பெற்றுக்கொண்டு காஞ்சீபுரி வருதல்

உடையவர் ஸ்ரீராமாயண காலக்ஷேபம் முடித்துப் புறப்படுகையில் மாதுலரான திருமலை நம்பி உவப்பின் மிகுதியினால் இவர்க்கு ஏதாவது கொடுக்க வேணுமென்கிற பாரிப்புத் தோற்ற இருக்கையில் அதனை யறிந்த வுடையவர் "ஸ்வாமிக்கு அடியேன் ஸமர்ப்பிக்க வேண்டியது போக, அடியேனுக்கு ஸ்வாமி கொடுப்பதென்று ஒன்றுண்டோ? அப்படி ஒன்று கொடுக்கத் திருவுள்ளமாகில் நம் கோவிந்தப் பெருமாளைத் தந்தருள வேணும்" என்று விண்ணப்பஞ் செய்ய; நம்பியும் அதற்கிசைந்து உடனே கோவிந்தப் பெருமாளை [எம்பாரை] அழைத்து 'கோவிந்தா! இனி நம்முடையவரை அநுவர்த்தித் திருப்பாயாக' என்று சொல்லி உதக தாரா பூர்வமாகக் கொடுத்தளினர். வெகு ஆனந்தத்துடன் உடையவர் அவரைக் கூட்டிக்கொண்டு திருக்கடிகை முதலான திவ்ய தேசங்களை ஸேவித்துக் கொண்டு கச்சிப் பேரருளாளன் திருவடி வாரத்தில் வந்து சேர்ந்தார்.

எம்பார் திரும்பவும் திருப்பதிக்குச் சென்று மீளுதல்

கோவிந்தப் பெருமாளுடன் கச்சியில் வாழ்ந்திருக்கையில், ஸ்வாசார்யரான நம்பியைப் பிரிந்த கிலேசத்தினால் உடம்பு வெளுத்து முகம் உருவியிருந்தார் கோவிந்தர். அது கண்ட வுடையவர் அவருடைய கருத்தை யறிந்து 'கோவிந்தரே! திருப்பதிக்குச் சென்று நம்பியை ஸேவித்து வாரும்' என்று இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்களைக் கூட்டி யனுப்பிவிட்டுத் தாம் திருக்கச்சி நம்பியுடனே பேரருளாளனை ஸேவித்துக்கொண்டிருந்தார். திருப்பதிக்குச் சென்ற எம்பார் அங்குத் திருமலை நம்பி திருமாளிகை வாசலிலே தெண்டன் ஸமர்ப்பித்து நிற்க, அங்குள்ளார் அவரைக் கண்டு உள்ளே சென்று நம்பிக்கு அறிவிக்க, அவரும் திருவுள்ளங் கலங்கி 'பித்தனைப் போகச் சொல்லுங்கோள்' என்ன; 'இத்தனை தூரம் சிரமப்பட்டு வந்தவரை யழைத்து ஸேவையும் ஸ்ரீபாத தீர்த்தமும் தளிகைப் ப்ரஸாதமும் தந்தருள வேண்டாவோ?' என்று தேவிகள் சொல்லவும் 'விற்ற பசுவுக்குப் புல்லிடுவாருண்டோ?' என்று சொல்லி விமுகராயேயிருந்து விட்டார் நம்பிகள். இப்படியாகவே கோவிந்தப் பெருமாள் அங்கு நசையற்றுத் திருவாசலிலே தெண்டனிட்டு அந்த ஸ்ரீவைஷ்ணவர்களிருவரோடு கூடவே பெருமாள் கோயிலில் உடையவரிடம் வந்துசேர நாளடைவில் எல்லாருமாய்த் தென்னரங்கம் சென்று சேர்ந்தனர். கோவிந்தப் பெருமாள் வைராக்யம் முற்றி ஸந்யாஸாச்ரமத்தை ஸ்வீகரித்து ஆசார்யருடைய நாமைக தேசமாக எம்பார் என்று திருநாமம் பெற்று உபய வேதாந்த க்ரந்த பரிச்ரமத்திலே தலை சிறந்து வாழா நின்றார்.

ஸ்ரீ பாஷ்ய மருளிச்செய்ய முயலுதல்

எம்பெருமானர் ப்ரஹ்மஸூத்ரத்திற்கு ஸ்ரீ பாஷ்யம் செய்தருளி ஆளவந்தார் திருவுள்ளக் குறையை நீக்கக்கருதி அதற்காக பகவத் போதாயந மஹர்ஷியின் வ்ருத்தி க்ரந்தத்தைக் கடாக்ஷிக்கத் திருவுள்ளமாய் அந்த ஸ்ரீ கோசம் காச்மீர மண்டலத்தில் சாரதா பீடத்திலுள்ள தென்றுணர்ந்து ஆழ்வான் முதலானாரையும் கூட்டிக்கொண்டு யாத்திரை யடைவிலே அங்கேற எழுந்தருளித் தம்முடைய வைபவங்களைக் காட்டி வசீகரிக்கப்பட்ட ஸரஸ்வதீ பாண்டாரத் தலைவரிடத்தில்நின்றும் அந்த போதாயந வ்ருத்திக்ரந்தத்தை வாங்கி அங்கேயே யிருந்து கடாக்ஷித்துக்கொண்டிருந்தார். மஹாமேதாவியான ஆழ்வானும் தாம் ஒரு பக்கத்தில் வீற்றிருந்து இரண்டாவது அத்யாயம் முதலாக மேலுள்ள பகுதியை யெல்லாம் கடாக்ஷித்து நெஞ்சில் தேக்கிக் கொண்டார். உடையவர் முதலத்யாயம் கடாக்ஷித்துத் தலைக்கட்டினவுடனே அங்குள்ள புறமதத்து வித்வான்களின் துர்ப்போதனையினாலே மனம் மாறின ஸரஸ்வதி பாண்டாரத் தலைவர் அந்த ஸ்ரீ கோசத்தை நிர்ப்பந்தித்து வாங்கி உள்ளே வைத்திட, குறையும் காணப் பெற்றிலோமே! என்று உடையவர் சிந்தித்திருக்க, அது கண்ட ஆழ்வான் மேற் பகுதிகளைத் தாம் பார்த்துத் தரித்துக் கொண்டிருக்கிறபடியை விஜ்ஞாபித்து ஸ்வாமியைத் தேற்றினர். பிறகு பயணகதியிலே தென்னரங்கத்திருப்பதி சேர்ந்து ஆழ்வானை உசாத் துணையாகக் கொண்டு ஸ்ரீ பாஷ்யமிட்டருளித் தலைக்கட்டினர். இதற்கு ஸங்க்ரஹமாக வேதாந்த தீபம், வேதாந்த ஸாரம் என்னுமிரண்டு க்ரந்தங்களையுமருளிச் செய்தார்.

சோழ ராஜனுடைய உபப்லவத்திற்கு அஞ்சி ஸ்வாமி மேல்நாட்டுக்கெழுந்தருளல்

ஆழ்வான் உடையவர்க்கு உசாத் துணையாயிருந்து தர்சந நிர்வாஹம் பண்ணியருளுகிற காலத்திலே, ராஜேந்த்ர சோழ புரத்தில் அரசாண்டு வந்த குலோத்துங்க

சோழ ராஜன் துஷ்ட சைவனுகையாலே கள்ளப் பொய்ந் நூல்களை மெய்ந் நூலாகக் கொண்டு தானும் தன் புரோஹிதனுமாக நாட்டிலுள்ள வித்வான்களை யெல்லாம் திரட்டி "சிவாத் பரதரம் நாஸ்தி' என்று எழுத்திடச் சொல்லி நிர்ப்பந்திக்க, சிலர் அவனுக்கு அஞ்சியும் சிலர் பொருட்கும் பூமிக்குமாசைப்பட்டும் அப்படியே யெழுத்திட்டார்கள். அப்போது அவ்வரசனிடத்துச் சிறிது மேன்மை பெற்றிருந்த நாலூரான் என்னுமொரு வைஷ்ணவன் அவ்வசரனை நோக்கி 'எங்களிராமானுசன் எழுத்திட்டாலன்றோ 'எழுத்திட்டதாவது; மற்றையோர் இட்டாலென்ன? இடாவிடிலென்ன?' என்று கூற, அது கேட்ட அரசனும் அப்போதே இராமானுசனை யழைத்து வரும்படி ஆள்களை யனுப்ப, அவர்களும் உடைய வர் மடத்தேறச் சென்ற வளவிலே இந்தச் செய்தியை யுணர்ந்து ஆழ்வான் 'ஸ்வாமி ராஜ ஸபைக்கு எழுந்தருள்வராகில் அவர்க்கு அங்கு ஏதாவது அபாயம் விளையக்கூடும்; உலகுக் கெல்லாம் உயிரான அவரைக் காட்டிக் கொடுக்கத் தகாது: நாமே அவருடைய கோலம் பூண்டு ஸபைக்குச் செல்வோம்; கெடுதல் ஏதாவது நேர்ந்தாலும் நம் மோடே போகட்டும்' என்று கருதி, அப்போது எம்பெருமானுர் நீராட்டத்திற்கெழுந்தருளியிருப்பதறிந்து அவருடைய காஷாயத்தையும் த்ரிதண்டத்தையும் தரித்துக்கொண்டு அந்த ராஜ புருஷர் களுடனே போகப் புறப்படும் போது பெரிய நம்பியும் சில முதலிகளும் தாமுங் கூட வரு வதாகப் புறப்பட, அவர்களுடன் ஆழ்வான் ராஜ ஸபைக்கெழுந்தளினர். பிறகு உடைய வர் நீராட்டஞ் செய்தெழுந்தருளி த்ரிதண்ட காஷாயாதிகளைத் தேடின வளவிலே 'கூரத் தாழ்வான் தரித்துக் கொண்டு ராஜ புருஷர்களுடனே யெழுந்தருளினர்' என்று முதலி யாண்டான் விண்ணப்பஞ் செய்ய, 'ஆகில் அவருடைய வெள்ளையைத் தாருங்கள்' என்று ஆழ்வானுடைய திருப்பரிவட்டத்தை வாங்கித் தாம் சாத்திக் கொண்டு ஆழ்வானுக்கும் பெரிய நம்பிக்கும் என்ன தீங்கு நேருமோவென்று சிந்தித்துத் துவண்டிருக்க, இனிஸ்வாமி இவ்விடத்திலெழுந்தருளியிருக்கை உசிதமன்று' என்று அனைவரும் விஜ்ஞாபிக்க, உடை யவரும் உடனே புறப்பட்டெழுந்தருளித் திருநாராயணபுரம் சேர்ந்தார்.

[எம்பெருமானுர் காலத்திலேயே யெழுந்தருளியிருந்த ப்ராமாணிக பண்டித சிகா மணியான கருடவாஹந பண்டிதர் செய்தருளின திவ்யஸூரி சரிதத்தில் பதினெட் டாம் ஸர்க்கத்திலும், எம்பெருமானுர்க்கு அத்தாணிச் சேவகராயிருந்த வடுகநம்பி பணித்த யதிராஜ வைபவத்தின் தொண்ணூற்றைந்தாம் ச்லோகத்திலும் இக்கதை விளக்கமாக வுரைக்கப்பட்டிருத்தலால் இதில் யார்க்கும் விப்ரதிபத்தியுண்டாகக் காரணமில்லை, உடையவர்க்குத் தெரிவியாமலே ஆழ்வான் ஸ்வபுத்தியாலே த்ரிதண்ட காஷாயங்களைத் தரித்து ஸபைக்கெழுந்தருளினதாகவும், சோழ ராஜனிடத்தில் நின்றும் ஆட்கள் வந்தவுடனே எம்பெருமானுர் ஆழ்வான் ஆண்டான் முதலானுர் பலருமாகக் கூடிக் கலந்து யோசித்து உடையவர் வெள்ளை சாத்திக்கொண்டு வெளி யேறிவிட வேண்டியதென்றும் ஆழ்வான் யதிராஜ வேஷம்பூண்டு ஸபைக் கெழுந் தருள வேண்டியதென்றும் நிஷ்கர்ஷிக்கப்பட்டு அப்படி நடந்ததாகவும்—இங்ஙனே இரண்டு வகையாக நூல்களிற் காணப்படுவதுண்டு. இவ்விரண்டு வகையும் ஸம்பா விதமேயாகையால் இவற்றில் விப்ரதிபத்திக் கிடமில்லையென்க.]

### ராஜ ஸபையில் நடந்த செய்திகளும் பின்னடந்த செய்திகளும்

ஆழ்வானும் பெரியநம்பியும் சோழராஜன் ஸதஸ்ஸிலே யெழுந்தருளின பிறகு அங்கு விசேஷமாக சாஸ்த்ர விசாரங்கள் நடைபெற்று 'சிவாத்பரதரம் நாஸ்தி' என்ற ராஜ வாக்யத்தின்மீது இகழ்ந்துரைக்கப்பட, சோழன் கடுஞ்சினத்தனுய் 'இவ்விருவருடைய கண்ணையும் கீண்டு விடுங்கள்' என்று சேவகர்கட்குக் கட்டளையிட, ஆழ்வான் சோழனைக் குறித்து 'நீ மஹாபாதகியாகையால் உன்னைப் பார்த்த கண்கள் எனக்கு ஆகாது' என்று சொல்லித் தாமே தமது திருவுகிர்களாலே கீறிக் கண்ணை வாங்கியெறிய, பின்பு ராஜஸேவ கர்கள் பெரியநம்பியைப் பிடித்துக் கொண்டுபோய்ச் சோழன் சொற்படி செய்து ராஜத்வா ரத்தில் நின்றும் புறப்பட விட, ஆழ்வான் 'தர்சநத்துக்காக தர்சனம் கொடுக்கப் பெற் ருேமே!' என்று மகிழ்ந்திருக்க, பெரியநம்பி வ்ருத்தராகையாலே அவ் வேதனை பொறுக்க மாட்டாமல் அங்கேயொரு கொல்லைத் தலைமாட்டிலே ஆழ்வான் மடியிலே திருமுடியும் தம் திருமகளான அத்துழாய் மடியிலே திருவடிகளுமாய் இளைத்துக் கண்வளர்ந்தருளி

ஆளவந்தார் திருவடிகளை த்யானித்துக் கொண்டு அங்கே திருநாட்டுக் கெழுந்தருளினார், பின்பு ஸ்ரீ பராந்தகபுரமென்னும் அக்ரஹாரத்தில் நின்றும் வந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் பெரியநம்பியை அங்கே ஸம்ஸ்கரித்துத் திருப்பள்ளிபடுத்து ஆழ்வானை எழுந்தருள்வித்துக் கொண்டுபோய்த் தங்கள் ஊரிலே யிருத்தித் திருக்கண் வேதனை தீருமாறு சில காலம் உபசரித்துப் பிறகு திருவரங்கம் பெரிய கோயிலிலே கொண்டு சேர்த்தார்கள். * தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்திவைத்த எம்பெருமானாரைப் பிரிந்து அங்கே வாழகில்லாமல் கோயில் வாஸத்தை விட்டிட்டுத் திருமாலிருஞ் சோலையில் வாஸத்தை விரும்பி பயணகதியாகப் புறப்பட்டெழுந்தருளினார். வழியிடையே எழுந்தருளும்போது தம்முடைய மனத் துயரங்கள் நினைவுக்கு வாராதிருக்கும்படி எம்பெருமானுடைய ஸ்வரூப ரூபகுண விபூதிகளை நினைந்து நெஞ்சு கனிந்திருக்கக் கருதி ஸ்ரீவைகுண்டஸ்தவம் அதிமாநுஷஸ்தவம் என்ற அற்புதமான இரண்டு ஸ்தோத்ரங்களை யருளிச்செய்துகொண்டே திருமாலிருஞ் சோலைக் கெழுந்தருளி அங்கே பல வாண்டுகளெழுந்தருளியிருந்து ஸுந்தரபாஹுஸ்தவமும் அருளிச்செய்தார். அவ்வளவிலே அந்த மஹாபாதகியான சோழன் கழுத்திலே புண்ணாகிப் புழுத்து மாண்டானென்ற செய்தி கேள்விப்பட்டு ஆழ்வான் அழகர் ஸன்னிதியிலே விடைபெற்று மீண்டும் கோயிலேற வெழுந்தருளினார்,

### எம்பெருமானார் மேல்நாட்டில் நின்று கோயிலுக்கெழுந்தருளி ஆழ்வானை உசாவுதல்

சோழனுடைய உபப்லவங்களுக்கு அஞ்சி மேல்நாட்டுக் கெழுந்தருளியிருந்த எம்பெருமானார், கோயிலில் நின்றும் அங்கு வந்த ஒரு ஸ்ரீவைஷ்ணவராலே-சோழராஜ ஸதஸ்ஸில் ஆழ்வானுக்கும் பெரியநம்பிக்கும் நேர்ந்த ஆபத்தைக் கேள்விப்பட்டுச் சாலவும் திருவுள்ளம் நொந்து 'ஆழ்வானாகிலும் உயிர்வாழ்ந்திருக்கப் பெற்றோமே' என்று திருவுள்ளம் தேறி, அப்போது தம்மிடத்தில் கைங்கரியம செய்துகொண்டிருந்த மாறொன்றில்லா மாருதிச் சிறியாண்டானை 'மிகவும் விரைவாகக் கோயிலுக்குச் சென்று ஆழ்வானையும் ஆராய்ந்து அங்குள்ள விசேஷங்களையும் அறிந்து வாரும்' என்று நியமித்தருள, அவரும் மிக விரைந்து கோயிலுக்கு வந்து சோழன் புழுத்து மாண்ட செய்தியுட்பட எல்லாவற்றையும் ஆழ்வான் ஸன்னிதியிலே அறிந்து கொண்டு மீண்டு திருநாராயணபுரம் போய் எம்பெருமானார் திருவடிகளிலே இவற்றை விண்ணப்பஞ் செய்ய, அதுகேட்டு அவர் பெருமகிழ்ச்சி கொண்டு உடனே அங்கு நின்றும் புறப்பட்டுக் கோயிலுக் கெழுந்தருளி முதலிகளுடன் ஆழ்வான் திருமாளிகைக் கெழுந்தருள, ஆழ்வானும் எதிரே யெழுந்தருளி உடையவர் திருவடிவாரத்திலே வேரற்ற மரம்போலே விழுந்து ஸேவித்துத் திருவடிகளைப் பிடித்துக் கொண்டு கிடக்க, உடையவரும் ஆழ்வானை யெடுத்தணைத்துக் கொண்டு சோக வேகத்தாலே ஒரு வார்த்தையும் அருளிச் செய்யமாட்டாமல் உள்ளெலாமுருகிக் குரல் தழுத்து 'வாரீர் ஆழ்வான்! இத்தர்சநத்துக்கு த்ருஷ்டிபூதரான உமக்கு இப்படி கண்போவதே! இது என்னுடைய தீவினையின் பயனன்றோ?' என்றிப்படி பலவாறாக அருளிச்செய்து ஆழ்வானைத் தேற்றி, பண்டுபோலே திருவரங்கச்செல்வத்தை வளர்த்துக் கொண்டு வந்தார்.

### திருமலையப்பனுக்குத் திருவாழி திருச்சங்கு அளித்தது

பண்டொருகாலத்தில் திருவேங்கடமுடையான் தன் பக்கல் பரமபக்த சிகாமணியாயிருந்த தொண்டைமான் சக்ரவர்த்திக்கு ஒரு காரணார்த்தமாகத் தன் திருவாழி திருச்சங்குகளைத் தந்தருளி, இப்படி ஆச்ரித பக்ஷபாதத்தாலே தனது திவ்யாயுதங்களையும் தந்து உபகரிக்கும் ஔதார்யகுணம் உலகில் பரவுவதற்காகச் சிறிதுகாலம் ஸுதர்சநபாஞ்சஜந்ய சூந்யனாகவே இருந்திட்டான். அக்காலம் கலியின் கொடுமையால் வர்ணாச்ரம தர்மங்கள் குலைந்து தேவாலயங்களும் சீர்கெட்டுப் பாஷண்டிகள் தலையெடுக்கும் காலமாயிருந்தது. திருமலையில் அர்ச்சகர்களாயிருந்த வைகாநஸர்கள் எம்பெருமானுக்கு முறைப்படி உபசாரங்கள் பண்ணாமல் அச்ரத்தை காட்டியிருந்த காரணத்தினால் தேசாதிபதியான யாதவராஜனால் அடிக்கடி தண்டிக்கப்பட்டு அங்கு வாழகில்லாமல் வெளிநாடு சென்றனர்; வ்ருத்தர்களாயிருந்த அர்ச்சகர்கள் இங்ஙனம் ஒருவரொருவராக வெளியேற, ப்ரபலர்களான ஸ்ரீவைஷ்ணவர்களும் இங்கு இலராக, விரல் நுழைக்க இடம் தேடிக்கொண்டிருந்த சைவர்கள் சிலர் இதுவே நல்ல சமயமென்று கொண்டு அந்த யாதவமன்னன் பக்கல்சென்று அவனுடைய ப்ரீதியைச் சிறிது சிறிதாக ஸம்பாதித்து ஒருநாள் அவனிடம் சொன்னார்கள்- திருமலையில் ஸ்வாமி புஷ்கரிணியின் தென்கரையில் திகழும் தேவன் முருகக் கடவுள்தான்; அவர்க்குக் குமாரஸ்வாமியென்றும் பெயர் வழங்குவதுண்டாகையால் அந்த நாமைக

தேசத்தையிட்டு ஸ்வாமி புஷ்கரிணியென்று அத்தடாகம் வழங்கப்பெற்றது, ஸ்ரீ வேங்கடாசல மாஹாத்மியம் கூறவந்த வாமந புராணப் பகுதியில் இரண்டாவது அத்யாயத்தில்-ஸுப்ரஹ்மண்யன் வேங்கடமலையில் ஒரு குளத்தின் கரையில் தவம் புரிந்து கொண்டிருந்தானென்று சொல்லப்பட்டிருத்தலாலும் அப்பெருமான் முருகக்கடவுளே. அவர்க்கு அஸாதாரண ஆயுதங்களான பாசமும் அங்குசமும் தவநிலைக்கு உரியவை யல்லாமையால் தரிக்கப்படவில்லை. இன்னும் பல ஹேதுக்களாலும் அம்மலை சைவ க்ஷேத்ரமேயாம். இப்போது தான் சிறிது காலமாகச் சில வைணவர்கள் கூடிப் புராணார்த்தங்களை மனம்போனபடி சொல்லி அப்பெருமான் விஷ்ணுவேயென்றுரைத்து ராஜாவை வசப்படுத்திக்கொண்டு சில வைஷ்ணவ விக்ரஹங்களையும் கோவிலில் ஸ்தாபித்து உத்ஸவங்களை நடத்தத் தொடங்கினார்கள். உண்மையில் இது சைவக்ஷேத்ரமாகையால் சைவ விதிப்படி இனி இக்கோவிற் காரியங்கள் நடைபெறுமாறு மஹாப்ரபு செங்கோல் செலுத்தவேணும் - என்றார்கள்.

இதைக்கேட்ட அவ்வரசன் இந்த சைவர்கள் சொல்லுவதெல்லாம் அநுபவ விருத்தமாயிருக்கின்றதே; ஆராயாமல் நாம் எதையும் ஸாஹஸமாகச் செய்துவிடக்கூடாது; தக்கபடி ஆராய்ச்சி செய்யவேணும் என்றெண்ணியிருந்தான். அக்காலத்தில் அங்கு நிபுணர்களான ஸ்ரீ வைஷ்ணவர்கள் யாருமில்லாமையால் ஸாமாந்யராயிருந்த சிலர் திருவரங்கம் பெரியகோயிலில் மிக்க சிஷ்யஸம்பத்துடனே எழுந்தருளியிருந்த எம்பெருமானார்க்கு இச்செய்தியை அறிவித்தனர். இச்செய்தியையறிந்த உடையவர் கடுநடையாகத் திருப்பதிக்கெழுந்தருளி ஸம்சயாக்ராந்தனாயிருந்த அரசனை நோக்கி, "சைவர்களால் உனது நெஞ்சில் உண்டாக்கப்பட்ட சங்காகளங்கத்தை நீக்கி உன்னைத் தெளிவிப்பதற்காகவே நெடுந் தூரத்தில் நின்றும் இங்கே வந்தோம்; உனக்குப் பரிபூர்ண த்ருப்தி உண்டாகும்படி யாம் தெளிவாகச் சொல்லவல்லோம்; கேளாய் கொற்றவனே!' என்று தொடங்கினவாறே அவ்வரசன், முன்பு கொக்கரித்த சைவர்களையும் வரவழைத்துப் பெரிய ஸபையாக்கி சைவ வைஷ்ணவர்களுக்கு வாதயுத்தம் நடக்குமாறு நியமித்துத் தான் தடஸ்தனாயிருக்க, வெகு காலம்வரை வாதப்போர் நடந்ததில் சைவர்களுடைய துர்வாதங்களையெல்லாம் எம்பெருமானார் ப்ராமாணிகமாகக் கண்டித்து வெற்றிபெற்று விளங்கினார். [இந்த வாதப்ரதிவாதங்களின் விவரணம் திருமலையனந்தாழ்வான் பணித்த ஸ்ரீ வேங்கடாசல இதிஹாஸமாலையில் அறுபத்தைந்து பக்கம் நிறையப் பெரிய வாக்யார்த்த ஸரணியில் குறிப்பிடப்பட்டுள்ளன; அங்கே கண்டு கொள்வது.) எம்பெருமானாருடைய அற்புதமான உபபாதநங்களைக் கேட்ட மன்னவன் கலக்கம் நீங்கி மிக்க தெளிவுபெற்று, திருவேங்கடமலை விஷ்ணுக்ஷேத்ரமேயென்றும் அங்குள்ள பெருமான் திருமாலே யென்றும் அறுதியிட்டு "இந்த ஸ்ரீராமாநுஜர் ஸாமாந்ய புருஷரல்லர்; அவதார புருஷரேயாவர்; இவர் மனம் வைத்தால் அதிமாநுஷமான காரியங்களையும் செய்து ஸர்வஜனங்களுக்கும் திண்ணிய நம்பிக்கை உண்டாகும்படி செய்யவும் வல்லர்; அங்ஙன் செய்ய இவரை வேண்டிக்கொள்வோம்' என்றெண்ணி, ஸ்வாமிந்! யோகீச்வரரே!! தேவரீர் நிரூபித்துக்காட்டிய சாஸ்த்ரார்த்தங்களைக் கேட்டுப் பரமாநந்தமடைந்தேன்; திருமாலே திருமலைக்கு இறைவர் என்று நன்கு துணிந்தேன்; ஸம்சயலேசமுமில்லாமல் சிக்கனத் தெளிவுபெற்றேன்; ஆயினும், மஹா புருஷராயும் அதிமாநுஷ சேஷ்டிதராயுமிராநின்ற தேவரீர், பண்டிதரோடு பாமரரோடு வாசியற எல்லாரும் தெளியுமாறு ஸமாதாநோபாயம் ஏதாவது செய்தருளக்கூடுமேல் நன்று" என்று கைகூப்பி விண்ணப்பஞ் செய்ய, அதனைக்கேட்ட எம்பெருமானார் 'புராணப் பொருள்களைப் பலவாறுக எடுத்து உபந்யஸித்துக் காட்டினவளவிலும் இவ்வரசனுடைய மனம் பரிபூர்ண த்ருப்தியை அடையவில்லை போலும்; அதிமாநுஷமானதொரு கார்யம்செய்து காட்டவேணுமென்கிறான்; ஆயிடுக; இங்ஙனேசெய்வோம்;—ப்ரஹ்மாண்ட புராணத்தில் பதினேராவது அத்யாயத்தில் எம்பெருமான்தானே சோதிவாய் திறந்து ப்ரதிஜ்ஞை செய்தருளியிருக்கிறபடியே கலியுகத்தில் விமாந மண்டபாதிகளைப்போல் சங்கு சக்கரங்களையும் பக்தர்கள் செய்து ஸமர்ப்பித்தால் ஸ்வீகரித்தே தீருவனாதலால், நாம் செய்து ஸமர்ப்பிக்கும் திவ்யாயுதங்களையும் எம்பெருமான் ஸ்வீகரிக்கக்கூடுமே; ப்ரார்த்தித்தாகிலும் ஸ்வீகரிக்கச் செய்திடுவோம்: இல்லையேல் மஹத்தான அநர்த்தம் நேரிடும் போலிருக்கிறதே! இவ்வரிய செய

லினால்தான் அனைவரும் விச்வஸிக்கவேணும் என்று திருவுள்ளத்திற் சிந்தித்து, அப்படியே செய்திடுவதென்று அறுதியிட்டு, மன்னவனை நோக்கி, "நான் எம்பெருமானுக்கு அஸாதாரண சிஹ்நங்களான திருவாழி திருச் சங்குகளைச் செய்வித்துக் கொணர்ந்து பகவத்ஸந்நிதியிலே வைத்திடுகிறேன்; இந்த சைவர்கள் தாமும் தங்கள் தெய்வத்துக்குரிய பாசம் அங்குசம் முதலிய ஆயுதங்களைச் செய்வித்துக் கொணர்ந்து வைத்திடுக: எந்த ஆயுதங்களை எம்பெருமான் எடுத்து அணிந்து கொள்கிறானோ பார்ப்போம்" என்றருளிச் செய்தார்.

இதைக்கேட்ட அரசன் மகிழ்ச்சிகொண்டு 'இப்படியாகில் இது சிறந்த உபாயமே; பிறகு ஒருவர்க்கும் ஆக்ஷேபம் இருக்க ப்ரஸக்தியில்லையன்றோ; நல்லது; அப்படியே இரு வகுப்பினரும் செய்யக்கடவது' என்று சொல்ல; உபயவாதிகளும் தங்கள் தங்கள் தெய்வத்தின் அஸாதாரண ஆயுதங்களைச் செய்வித்துக் கொணர்ந்து ஒருநாள் அவ்வரசனுடனே திருமலைக்குவந்து இரவில் திருவேங்கடமுடையானுடைய ஸந்நிதி கர்ப்பக்ருஹத்தினுள்ளே அவற்றை வைத்துவிட்டுக் கதவுகளைப்பூட்டி மன்னவன் கையால் அரக்கிலச்சினை செய்வித்துக் காலையளவும் கோவிலைச் சுற்றிக் காவலிருந்துகொண்டு தங்களுக்கே வெற்றியுண்டாம்படி தங்கள் தங்கள் தெய்வத்தைச் சிந்தைசெய்து கொண்டிருந்தனர்.

எம்பெருமானார் தமது யோகமஹிமையினால் உள்ளேபுக்கு எம்பெருமானை ஸாக்ஷாத்கரித்து "பரமபுருஷ! முன்பு நீ வாயோலைசெய்து கொடுத்த ப்ரதிஜ்ஞையின்படியே உனது அஸாதாரணசிஹ்நங்களைப் பேணி அணிந்துகொண்டு அடியோங்களைக் காத்தருளவேணும்" என்று பிரார்த்தித்து அப்படியே திருவாழி திருச்சங்குகளை அணிந்து கொள்வித்து க்ருதக்ருத்யராயினர். பிறகு பொழுது விடிந்தவாறே யாதவ மன்னவன் நித்யாநுஷ்டாநங்களை முடித்துக்கொண்டு உபயவாதிகளுடனும் ஸந்நிதிக்குச்சென்று திருக்காப்பு நீக்குவித்துப் பெருமாளை ஸேவிக்குமளவில் பாச அங்குசாதி ஆயுதங்களை அப்பால் தள்ளிவிட்டுத் திருவாழி திருச்சங்குகளை யணிந்துகொண்டு பரமபோக்யமாக ஸேவை ஸாதிக்கக்கண்டு மிகவும் ஆச்சர்யப்பட்டு எம்பெருமானார்பக்கல் அளவுகடந்த ப்ரதிபத்தியை வஹித்து அவரையே சரணமடைந்து க்ருதார்த்தனாகி, குத்ஸிதவாதம் பண்ணிக் கொக்கரித்துக் கிடந்த சைவர்களையும் த்ருணீகரித்து ராஜ்யத்தில் நின்றும் துரத்திவிட்டு இனிது வாழ்ந்தான்.

எம்பெருமானாரும் சிறப்புடனே சிஷ்ய வர்க்கங்களுடன் தென்னரங்கம் சென்று சேர்ந்து *வையம் மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணூடே* என்கிறபடியே நித்ய விபூதிச் செல்வத்தையும் இங்கிருந்தே ஆண்டுகொண்டு 'தமிழ்மறைகளாயிரமும் ஈன்ற முதல் தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமானுசன்" என்றபடியே அருளிச் செயல்களைப் பல வகைகளாலும் வளர்த்துக் கொண்டு வாழ்ந்தருளா நின்றார்.

## நிகமனம்

எம்பெருமான் வைபவம் போலே எம்பெருமானார் வைபவமும் பேசியும் எழுதியும் தலைக்கட்ட வொண்ணாதது, அன்பர்கள் அநுதினமும் அநுஸந்திக்கப் பாங்காக இது சுருக்கமாக வரைந்தபடி. ஸ்வாமியருளிச்செய்த திவ்ய க்ரந்தங்கள், நவநிதிகள் போலவும் நவரத்னங்கள் போலவும் ஒன்பதாம்; ஸ்ரீ பாஷ்யம், வேதாந்த தீபம், வேதாந்த ஸாரம், வேதார்த்த ஸங்க்ரஹம், கீதாபாஷ்யம், சரணாகதி கத்யம், ஸ்ரீரங்ககத்யம், ஸ்ரீவைகுண்ட கத்யம், நித்யம்—என்பவை.

ஸ்வாமியின் பெருமைகளில் ஸாரமானவற்றை யெடுத்துரைத்துத் திருவரங்கத்தமுதனார் பணித்த இராமாநுச நூற்றந்தாதி ப்ரபந்ந காயத்ரீ யென்று அன்று தொட்டே ப்ரஸித்தி பெற்றிருப்பதனால் அதை நாடோறும் அநுஸந்திப்பதே நமக்குற்ற பெருஞ்செல்வம்.

## நம்பிள்ளை வைபவாநுபவம்

கூரத்தாழ்வான் திருக்குமாரரான பட்டராலே திருத்திப் பணிகொள்ளப்பட்டு அவரையல்லதறியாதே அவர்தம்மையே பரதெய்வமாகக் கொண்டிருந்தவர்களில் தலைவர் நஞ்சீயர். அவருடைய திருவடிகளிலே ஆச்ரயித்தவர்களில் தலைவர் நம்பிள்ளை. இவர்க்கு இயற்கையான திருநாமம் 'நம்பூர் வரதராஜார்யர்' என்பது. ஸ்வாசார்யரான நஞ்சீயர் உகந்து சாத்தின திருநாமம் நம்பிள்ளையென்பது. அந்தத் திருநாமம் சாத்துகைக்கு அடியென்னென்னில்; நஞ்சீயர் பட்டருடைய நியமனப்படி திருவாய்மொழியின் திவ்யார்த்தங்களை ப்ரவசனஞ் செய்வதையே போதுபோக்காகக் கொண்டு வாழ்ந்துவந்தார் திருவரங்கம் பெரியகோயிலில். அவருடைய காலக்ஷேப கோஷ்டியில் அந்வயித்திருந்தவர்களில் நம்பூர் வரதராஜாசார்யரும் ஒருவராயிருந்து வந்தார். இவர் நீறுபூத்த நெருப்புப்போல இருந்துவந்தபடியாலே இவருடைய ஞான வைபவம் முதலிய பெருமைகளை விசேஷித்து யாரும் அறியாதிருந்தனர்.

இப்படியிருக்கையில், நஞ்சீயர் திருவாய்மொழிக்குத் திருக்குருகைப்பிரான் பிள்ளானுடைய ஆறாயிரப்படியிற் காட்டிலும் சிறிது விரிவாகவொரு வியாக்கியானமிடும்படி பட்டருடைய நியமனம் பெற்றிருந்ததனால் ஒன்பதினாயிரப்படி யென்றொரு வியாக்கியானம் இட்டருளியிருந்தார். அதைச் செவ்வையாகப் பட்டோலைகொள்ள வல்லாரிடம் கொடுத்து எழுதுவிக்க வேணுமென்று கருதி இதற்குத் தகுந்தவர்கள் யாரேனு முளரோவென்று அந்தரங்கர்களை விசாரிக்கையில் 'நம்பூர் வரதராஜாசார்யரென்றொருவர் ஸ்வாமியின் காலக்ஷேப கோஷ்டிக்குத் தவறாது வருகின்றாரே; அவர் நல்ல விரகர்: எழுத்திலும் வல்லவர்; அவரைக் கொண்டு இப்பணியை நிறைவேற்றிக் கொள்ளலாம்' என்று கூறினார்கள். பிறகு அவரை அருகே வரவழைத்து ஆராய்ந்து பார்க்கையில் அவருடைய யோக்யதை ஒப்புயர்வற்றதென்று தெரியவந்தது; அதனால் உள்ளம்பூரித்து அவர்பால் விசேஷ கடாக்ஷம் செய்தருளித் தம்முடைய ஒன்பதினாயிரப்படியை வரியடைவே அவர்க்கு ப்ரவசனமும் செய்து அதை யெழுதித் தரும்படி ஸ்ரீகோசத்தை அவரிடம் கொடுத்தார். அதைப் பெற்றுக் கொண்டவவர் தம்மூருக்குச் சென்று எழுதிக்கொண்டு வருவதாகச் சொல்லிப் போகையில் திருக்காவேரியில் நீஞ்சிச் செல்ல நேர்ந்தது; அப்போது திருமுடியில் கட்டிக்கொண்ட அந்த ஸ்ரீகோசம் நெகிழ்ந்து விழுந்து வெள்ளத்திற் போய்விடவே இப்படி அபசாரமாய்த் தலைக்கட்டிற்றே யென்று வருந்த நேர்ந்தது. ஆனாலும் இவர்தாம் அந்த வியாக்கியானத்தை ஸ்வாசார்யர் திருவடிகளிலே வரியடைவே கற்றிருந்தபடியாலும் அவருடைய கருணைகடாக்ஷத்தை விசேஷித்துப் பெற்றிருந்தபடியாலும் அவருடைய திருவடிகளைச் சிந்தித்துக் கொண்டே பட்டோலை கொள்ளத் தொடங்கி விரைவில் எழுதி முடித்து ஸ்ரீகோசத்தை நஞ்சீயர் திருவடிகளிலே கொண்டு வைத்தார். 'நாம் கொடுத்த ஏடு எங்கே?' என்று அவர் கேட்கவே நடந்தது நடந்தபடியே விண்ணப்பஞ் செய்ய வேண்டியதாயிற்று. பிறகு நஞ்சீயர் ஸ்ரீகோசத்தை அவிழ்த்துக் கடாக்ஷிக்கையில், தாமருளிச் செய்த ஸ்ரீஸூக்திகள் விடாமலும் தம்மிடம் அவர் கேட்டிருந்த சில அர்த்த விசேஷங்களும் பொருத்தமாக அமைந்தும் விரிவுமில்லாமல் இருந்த அழகுக்கு மிகவுகந்து 'வாரீர் நம்முடைய பிள்ளையே!' என்று எடுத்தணைத்துக் கொண்டார் அது முதலாக நம்பிள்ளை யென்றே இவர் வழங்கப் பெற்று வந்தார். திருக்கலிகன்றி தாஸர் என்பதும் இவர்க்கு நஞ்சீயர் சாத்தின திருநாமம்.

இவருடைய ஞானவைபவத்தைப் பற்றி நாம் விரிவாக எழுத வேண்டுமோ? பெரிய திருமொழி வியாக்கியானத்தில் (5-8-7) * ஓதுவாய்மையு முவனியப் பிறப்பு

முனக்கு முன் தந்த அந்தணனொருவன் ஃ என்ற விடத்து. "முற்பட த்வயத்தைக் கேட்டு இதிஹாஸபுராணங்களையும் அதிகரித்துப் பரபக்ஷ ப்ரதிக்ஷேபத்துக்குடலாக ந்யாயமீமாம் ஸைகளுமதிகரித்து, போதுபோக்கும் அருளிச் செயலிலேயாம் நம்பிள்ளையைப் போலே" என்று பெரிய வாச்சான் பிள்ளை யருளிச் செய்துள்ள ஸ்ரீஸூக்தி யொன்றே இவருடைய ஞானப் பெருமையை விளக்கக் கூடியது. திவ்யப்ரபந்தங்களுக்கும் இதிஹாஸ புராணாதிக ளுக்கும் ஆழ்ந்து இன்சுவையே வடிவெடுத்த அர்த்தங்களை யருளிச் செய்வதில் இவர்க்கு ஒத்தாரும் மிக்காருமில்லை.

லோகாசார்யரென்கிற திருநாமமும் இவர்க்கு உண்டு. அது நிகழ்ந்த வரலாறு கேண்மின்: இவர் கோயிலில் வாழ்ந்த காலத்தில் ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களும் இவர் திரு வடிகளிலேயே ஆச்ரயித்து ஸகலார்த்தங்களும் கேட்டு வந்தார்கள். 'நம்பெருமாள் கோஷ்டியோ நம்பிள்ளை கோஷ்டியோ' என்னும்படி மிகப் பெரிய சிஷ்ய கோஷ்டி ஸம்பத் துடன் வாழ்ந்து வந்தார். அப்போது, முதலியாண்டான் திருப்பேரனாரான கந்தாடைத் தோழப்பரும் அங்கு வாழ்ந்து வந்தார். அவரும் வித்வானாயிருக்கச் செய்தேயும் அவரிடத் தில் ஒருவரும் ஆச்ரயியாதிருக்கவே அவர்க்குப் பொறாமை யுண்டாகி ஒருநாள் நம்பிள்ளை யைப் பெருமாள் கோஷ்டியிலே திரஸ்காரமான வார்த்தைகளைச் சொல்லிப் பரிபவித்துவிட் டுத் திருமாளிகைக்கெழுந்தருளினார். அவருடைய தேவிகள் இந்த அஸஹ்யாபசாரத்தை யறிந்து கண்ணுங் கண்ணீருமாக வந்து 'அந்தோ' இப்படியும் பரமாசார்யர் திருவடிகளிலே அபசாரப் படுவீரோ? உமக்கு உய்யும் விரகுண்டோ?' என் செய்தீர்! என் செய்தீர்! ஐயோ! என்று பலவுஞ் சொல்லி அநுதாபத்தை யுண்டாக்க, தோழப்பரும் அநுதபித்து நம்பிள்ளை திருவடிகளிலே சென்று க்ஷமைவேண்ட வேணுமென்று பாரித்திருந்தார். அதற் குள்ளே நம்பிள்ளை தாமே தோழப்பர்திருமாளிகையேற வந்து வேரற்ற மரம் போலே விழுந்து தெண்டனிட்டு, தேவரீருடைய திருவுள்ளம் கன்றும்படி வர்த்தித்த வடியேனுக்கு தேவரீருடைய க்ஷமையல்லது புகலில்லை யென்று பலவுமருளிச் செய்து தாம் க்ஷாமணம் பண்ணிக்கொண்டார். அப்போது தோழப்பர் அந்த மஹா குணத்திற்கு வியந்து 'ஸ்வா மிந்! தேவரீரை இத்தனை நாளும் சிறிது பேர்களுக்கு ஆசார்யராக எண்ணியிருந்தேன்' இப்போது, லோகத்துக்கெல்லாம் ஆசார்யர் தேவரீர் என்று திண்ணமாகக் கொண்டேன்' என்றார். அது முதலாக நம்பிள்ளைக்கு லோகாசார்யரென்று திருநாமம் வழங்கி வந்தது. "துன்னுபுகழ்க் கந்தாடைத் தோழப்பர் தம்முகப்பால், என்னவுலகாரியனோவென்றுரைக்க, பின்னை யுலகாரியனென்னும் பேர் நம்பிள்ளைக் கோங்கி, விலகாமல் நின்றதென்றும் மேல்." என்ற உபதேசரத்தின மாலைப் பாசுரம் இங்கே அநுஸந்திக்கத்தகும்.

நம்பிள்ளை திருவடிகளில் பலர் ஆச்ரயித்திருந்தாலும் பின்பழகிய பெருமாள் ஜீயர்க்கு இருந்த ஆசார்ய பக்தி ஒப்பற்றதென்று தெரிகிறது, உபதேச ரத்தின மாலையில் "பின்பழகராம் பெருமாள்சீயர் பெருந்திவத்திலன்பதுவுமற்று மிக்க வாசையினால் நம்பிள் ளைக்கான வடிமைகள் செய் அந்நிலையை நன்னெஞ்சே! ஊனமற வெப்பொழுது மோர்': என்று விசேஷித்து அருளிச் செய்கையாலே.

இப்பேராசிரியரின் திருவடிகளில் பணிந்து அல்லும் பகலும் ஸகலார்த்தங்களை யுங் கேட்டுத் தரித்த வடக்குத் திருவீதிப் பிள்ளையும் பெரியவாச்சான் பிள்ளையும உலகுக் குச் செய்திருக்குமுபகாரம் கைம்மாறற்றது.

பட்டருடைய ஸந்ததியில் தோன்றி மஹா வித்வானாயிருந்த நடுவில் திரு வீதிப் பிள்ளை பட்டரும் கந்தாடைத் தோழப்பர் போலவே நம்பிள்ளை யிடத்தில் பொறாமை கொண்டிருந்தவர். அவர் ஒருநாள் ராஜஸபைக்குச் சென்றிருந் தார். அந்த ராஜா மஹா விவேகியுமாய், தன்னிடம் வருகிற பண்டிதர்களையெல்லாம் ஸ்ரீராமாயணாதி க்ரந்தங்களில் கேள்வி கேட்பவனுமாயிருந்தபடியால் இந்த பட்டரையும்

ஸ்ரீராமாயணத்தில் ஒரு கேள்வி கேட்டான். அதாவது: ஸ்ரீராமபிரான் நாராயணத்வ ப்ரயுக்தமான பரத்வத்தை மறைத்துக் கொண்டு அஜ்ஞனைப் போலவும் அசக்தனைப்போலவும் அவதரித்திருக்கையில் “மயா த்வம் ஸமநுஞ்ஜாதோ கச்ச லோகாந் அநுத்தமாந்” என்று ஜடாயுவுக்கு முக்தியளித்தது எங்ஙனே பொருந்தும்?—என்று. இக்கேள்விக்கு த்ருப்திகரமான விடையளிக்க பட்டருக்கு ஸ்புரியாமையாலே ஆலோசிக்க வேண்டியதாயிற்று. அப்போது ராஜாவும் அந்யபரனாயிருக்க, இவருடைய பாக்ய வசத்தாலே அங்கு ஒரு ஸ்வாமி தென்பட்டார். அவர் நம்பிள்ளை திருவடிகளில் அர்த்த விசேஷங்கள் கேட்டவர். இந்த பட்டர் அவரை ஏகாந்தமாக நோக்கி ‘இவ்வரசன் கேட்ட கேள்விக்கு நம்பிள்ளை எப்படி நிர்வஹிப்பது?’ என்று கேட்டார். அவர் ✠ ஸத்யேந லோகாந் ஜயதி ✳ என்கிற ச்லோகத்தைக் கொண்டு நிர்வஹிப்பர் என்று சொல்ல, அதை இவர் தமது மனதில் நன்றாக வாங்கிக் கொண்டு பிறகு ராஜாவிடம் உபந்யஸித்தார். அரசனும் பிறகு உகந்து விசேஷ ஸத்காரங்கள் செய்தான். அந்த ஸத்காரங்களை ப்ராமாணிகரான விவர் நம்பிள்ளை திருவடிகளிலே கொண்டு ஸமர்ப்பித்து தேவரீருடைய ஸ்ரீஸூக்திகளில் சிந்திப் போனவொரு சொல்லுக்குப் பெற்ற ஸத்காரமிது: இனி அடியேனை அங்கீகரித்தருளி வாழ்விக்க வேணுமென்று வேரற்ற மரம் போலே விழுந்து ப்ரார்த்திக்க அவரையும் சேர்த்துக்கொண்டு உய்வித்தார். நம்பிள்ளையின் பகவத் விஷயோபந்யாஸங்களை அவரும் ஏடுபடுத்தி ஸபாத லக்ஷம் க்ரந்தமாக்கியிருந்தார். அதைநம்பிள்ளை ப்ரசாரத்திற்கு நியமித்தருளவில்லை.

நம்பிள்ளையின் வைபவம் அர்த்த விசேஷங்களைப் பொறுத்ததேயாதலால் அவ்வர்த்த விசேஷங்கள் திவ்யப்ரபந்த வியாக்கியானங்களிலும் வார்த்தா மாலை முதலியவற்றிலும் பாக்கியசாலிகளால் உய்த்து உணரத்தக்கன.

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியரின்
உபந்யாஸங்களினுடையவும் வியாஸங்களினுடையவும் தொகுதியான
**பக்தாம்ருதம் முற்றிற்று.**

Q22-4196w
NA7
83265

# முகவுரை

(ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்ப்பு)

## ப்ரஹ்மஸ்ரீ, T. S. நடேச சாஸ்த்ரியார், B.A., B.L., அட்வொகேட்

(சென்னை பகவத்கதாப்ரஸங்க ஸபையின் உப அக்ராஸநாதிபதி;)

சென்னைமாநகரத்தில் பகவத்கதாப்ரஸங்க ஸபையென்று ப்ரஸித்திபெற்ற ஸபையொன்று ஏற்பட்டு 50 வருஷங்களுக்கு மேலாகிறது. என்னுடைய தமையனுரான ப்ரஹ்மஸ்ரீ, பஞ்சாபகேச சாஸ்த்ரியாரவர்கள், பண்டிட். லக்ஷ்மணசார் அவர்கள் முதலான அனேக வித்வான்களுடைய உபன்யாஸங்களும் ஹரிகதைகளும் இந்த ஸபையின் மூலமாகத் தொண்டமண்டலம் ஸ்கூல் ஹாலில் நடந்திருக்கின்றன. அது 30 வருஷங்களுக்கு முந்தின ஸங்கதி. நமது ஸ்வாமிகளான ஸ்ரீகாஞ்சீ. P. B. அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகளை 1931 ஜூலை மாதத்தில் ஷை ஸபைக்கு வரவழைத்துச் சில உபந்யாஸங்கள் செய்யும்படி கோரினேம். ஸ்வாமிகளும் அந்த கோரிக்கையை அன்போடு ஏற்றுக்கொண்டு முதலில் ஸ்ரீராமாநுஜர் வைபவம் விஷயமாக 6 உபந்யாஸங்கள் செய்தார்கள். அவைகளை யநுபவித்த அன்பர்கள் யாவரும் அளவுகடந்த ஆனந்தமடைந்து இந்த ஸ்வாமிகளின் உபந்யாஸங்கள் இந்த ஸபையில் சனி ஞாயிறுதோறும் நீண்டகாலம் நடந்துவருமாறு பிரார்த்திக்க வேண்டுமென்றும் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்றும் விரும்பினுர்கள். பகவானுடைய ஸங்கல்பமும் அதற்கு ஒத்திருந்தபடியால் அன்று முதல் இன்று வரையில் அப்படியே நடந்துவருகிறது.

1931ஆ ஜூலைமீ முதற்கொண்டு இதுவரையில் நமது ஸ்வாமிகளால் ஷை ஸபையில் [தொண்டமண்டலம் ஹைஸ்கூல் ஹாலில்] நடத்தப்பட்ட வுபந்யாஸங்களின் விவரணம் பின்வருமாறு:—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீராமாநுஜர் வைபவம் விஷயமான உபந்யாஸங்கள் | 6 | 9. | திருமந்திரார்த்தம் (முமுக்ஷுப்படி) | 42 |
| 2. | சிறிய திருமடல் ,, | 11 | 10. | ஸ்ரீபாகவதம் தசமஸ்கந்தம் | 74 |
| 3. | ஸ்ரீராமாயணம் (முதல் தடவை) ,, | 265 | 11. | மஹாபாரதஸாரம் | 34 |
| 4. | ஆளவந்தார் ஸ்தோத்ரரத்னம் ,, | 39 | 12. | பகவத்கீதையின் ஸாரம் | 37 |
| 5. | ஷை சதுச்லோகீ ,, | 5 | 13. | அஷ்டச்லோகீ | 9 |
| 6. | திருப்பல்லாண்டு ,, | 13 | 14. | பகவத் விஷயம் (இதுவரையில்) | 409 |
| 7. | அமலனுதிபிரான் ,, | 11 | 15. | திருப்பாவை உபந்யாஸங்கள் வருஷந்தோறும் மார்கழி மாதத்தில் நடந்துவருவது | |
| 8. | கண்ணிநுண் சிறுத்தாம்பு ,, | 13 | | | |

மேற்கண்ட வுபந்யாஸங்கள் தவிர சில சில ஸமய விசேஷங்களில் தேவப்பெருமாள் வைபவம், திருவேங்கடமுடையான் வைபவம், ஸ்ரீரங்கநாதர் வைபவம்; ஆளவந்தார் வைபவம், கூரத்தாழ்வான் வைபவம், பட்டர் வைபவம், நம்பிள்ளை வைபவம், தேசிகர் வைபவம், மணவாளமாமுனிகள் வைபவம், ஹம்ஸ ஸந்தேச ஸாரம், பாதுகாஸஹஸ்ர ஸாரம்—என்றிப்படிப்பட்ட உபந்யாஸங்களும் பல நடந்திருக்கின்றன. முதலில் ஸ்ரீராமாயண வுபந்யாஸங்கள் நடந்துவந்து 1935-வது வருஷத்தில் பட்டாபிஷேகம் நடந்து முடிந்தது. மறுபடியும் அதையனுபவிக்க வேணுமென்று பக்தர்கள் விரும்பினபடியால் சென்ற வருடத்திலிருந்து சனிக்கிழமைதோறும் இது நடந்துவருகின்றது, இப்போது ஆரணியகாண்ட வுபந்யாஸம் நடைபெறுகிறது. ஞாயிற்றுக்கிழமைகளில் பகவத்விஷய வுபந்யாஸம் நடக்கிறது இதுவரையில் 470 பாசுரங்கள் உபந்யாஸமாகியிருக்கிறது. இந்த வுபந்யாஸங்களைத் தவருமல் அனுபவிப்பவர்கள் தவிர அடிக்கடி பல பெரியார்கள் உள்ளூரிலிருந்தும் பல வெளியூர்களிலிருந்தும் வந்து அநுபவிப்பதுண்டு. அநுபவிப்பவர்கள் யாவரும் ஸ்ரீ ஸ்வாமிகளின் இவ்வரிய பெரிய உபந்யாஸங்கள் பிற் காலத்தவர்களுக்கும் உபயோகப்படும் படியாகவும், இவ்வுபந்யாஸங்களை நேரில் ச்ரவணம் செய்ய ஸௌகரியமில்லாத இதரவூர்களிலுள்ளவர்களுக்கும் பயன்படும்படியாகவும் செய்ய வேண்டியதவசியமென்று அபிப்ராயம் கொடுப்பது பெரும்பாலுமுண்டு.

ஸ்ரீஸ்வாமிகளால் நமது ஸபையில் உபந்யாஸம் செய்யப்பட்ட க்ரந்தங்களுக்கெல்லாம் அனேகமாக ஸ்வாமிகளே வியாக்கியானங்கள் செய்து தமிழிலும் தெலுங்கிலும் ஹிந்தியிலும் வெளியிட்டிருந்தாலுங்கூட உபந்யாஸங்களில் வருகிற விஷயங்களெல்லாம் அந்த வியாக்கியானங்களில் காணமுடியாதாகையாலும், உபந்யாஸங்களினிடையில் ப்ரஸங்கவசாத் சொல்லப்படுகிற பல்வேறு விஷயங்களைத்தனியாகவே வெளியிட்டாகவேண்டியிருப்பதாலும் இதற்கென்று தனியே சில புத்தகங்கள் வெளி வந்தால் நலமாயிருக்குமென்று பல பக்தர்களும் பல பண்டிதர்களும் பலகால் சொல்லுவதுண்டு. காலஞ் சென்ற

மஹா மஹோபாத்யாய. தாக்ஷிணாத்ய கலாநிதி, சாமிநாதையரவர்கள் நமது ஸ்வாமிகளின் உபந்யாஸங்களுக்கு அடிக்கடி வந்திருந்ததுண்டு; அந்த ஸமயங்களிலெல்லாம் மேற்குறித்த அபிப்ராயத்தையே அவர் ஸபையில் வெளியிட்டிருந்தார். ஸர். எஸ். வரதாசார்ய ஸ்வாமிகளும் ஜஸ்டிஸ். பதஞ்சலி சாஸ்த்ரியவர்களும் மற்றும் பல பிரமுகர்களும் நமது ஸபைக்கு வரும் போதுகளில் இவ்வபிப்ராயத்தையே வெளியிடுவதுண்டு. ஏற்கெனவே ஸ்வாமிகள் வெளியிட்டிருக்கிற புத்தகங்களில் விசேஷார்த்தரத்ன நிதி ஸவாபதேசார்த்த ஸாகரம் முதலிய சில நூல்கள் மேற்குறித்த அபிப்ராயத்திற்கிணங்கவே வெளிவந்திருக்கின்றன. அவைபோல. பெரிய வுணவாக பக்தர்களுக்கு அளிக்கவேணுமென்று எனக்குத் தோன்றிற்று ஸ்வாமிகளின் உபந்யாஸங்களை நான் வெகுகாலம் விடாமல் அநுபவித்து ஆனந்தித்தவன். ஒருவருஷகாலமாய் நான் ஆரோக்யக் குறைவினால் அந்த ஆனந்தத்தை யிழந்து க்ருஹத்திலேயேயிருந்து குணாநுபவம் செய்துவருகிறேன். என்னுடைய ஸொந்த அநுபவத்திற்கும் ஏனைய பக்தர்களின் அநுபவத்திற்குமாகவே பம்தாம்ருதமென்கிற இப்புத்தகம் தயார்செய்யப்பட்டது,

நமது ஸ்வாமி ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் தோன்றி அந்த ஸம்பிரதாயத்தையே பிரவசனம் செய்பவரானாலும் இதர ஸம்பிரதாயங்களில் பகையோ பழிப்போ சிறிதும் உடையவரன்று. எல்லா மதத்தினர்களும் விரும்பி ஆவலோடு கேட்கும்படியான உபந்யாஸங்களையே ஸ்வாமிசெய்வதுவழக்கம். ஸ்ரீவைஷ்ணவஸம்பிரதாயத்திலுள்ள மருமமான தத்துவங்களை யுணருவதற்கு இப்புத்தகம் மிகவும் உபயோகமானதென்று என்னுடைய நம்பிக்கை. ஸ்வாமிகளின் உபந்யாஸங்கள் இப்படி எத்தனை புத்தகங்கள் வெளியிட்டாலும் முடியாதவையென்பது பக்தர்களுக்குத் தெரியும். பகவத் க்ருபையினால் இப்படிய அனேக புஸ்தகங்களும் மேன்மேலும் வெளிவரவேணும். ஸ்வாமிகளும தீர்க்காயுள் வாய்ந்து நீண்டகாலம் நமது சபையைச் சிறப்பிக்கவேணும். உலகில் பகவத்பக்தியும் பாகவத பக்தியும் ஓங்கி தருமமும் நிலைபெறவேணும். இதுவே எனது பிரார்த்தனை.

---

# விஷய சூசிகை

இந்நூலிலுள்ள விஷயங்களுக்கு அகராதி வரிசையில் அட்டவணை


| | |
|---|---|
| அமர கோசம் | 77 |
| அர்ச்சாவதாரப் பெருமை | 68 |
| அஷ்டவித புஷ்பங்கள் | 55, 63 |
| ஆசார்ய ஸூக்தி விசேஷம் "ஸ்திதேரவிந்தே மகரந்த" | 51 |
| ஆசார்ய ஹ்ருதய ஆராய்ச்சி | 34 |
| ஆசார்ய ஹ்ருதயப் பெருமை | 28 |
| ஆண்டாள் பெருமையநுபவம் | 23 |
| ஆழ்வாரருளிச் செயற் பெருமை | 1 |
| ஆளவந்தார் பெருமையநுபவம் | 22 |
| இதிஹாஸ புராண நிலைமை | 71 |
| எம்பார் குணாநுபவம் | 10 |
| எம்பெருமானார் வைபவம் | 80 |
| ஏழை கடுக்காய் | 32 |
| ஒரு விநோதப் பேச்சு | 46 |
| கஜேந்திர மோக்ஷம் | 44 |
| கூரத்தாழ்வான் குணாநுபவம் | 12 |
| ஸ்ரீமந்நாதமுனிகளின் ஆச்ரமம் | 30 |
| ஸ்ரீராமாயணத்தில் சில விரோத பரிஹாரங்கள் | 47 |
| ஸ்ரீவைஷ்ணவஸம்பிரதாயத்தில் முக்கியமாக அறிய வேண்டிவை | 35 |
| ததிபாண்டன் பெற்ற பேறு | 51 |
| ஸ்ரீராமாயண விசேஷம் திருவடியெனும் திருநாமம் | 54 |
| திருக்கச்சி நம்பியாறு வார்த்தை | 13 |
| திருமழிசைப்பிரான் குணாநுபவம் | 9 |
| தென் மொழியும் வட மொழியும் | 43 |
| நஞ்சீயர் குணாநுபவம் | 19 |
| நம்பிள்ளை வைபவாநுபவம் | 102 |
| நம்மவர்களின் படிப்பு முறைமை | 74 |
| நாஸ்திகனுக்கும் ஆஸ்திகத்வம் | 45 |
| பட்டர் குணாநுபவம் | 16 |
| பாதனும் குகனும் | 63 |
| பக்ஷிகளில் விசாரம் | 67 |
| பிள்ளை லோகாசார்யரும் மணவாள மாமுனிகளும் | 25 |
| பூர்வாசார்ய ஸ்ரீ ஸூக்தி விமர்சம் "ஸம்ஸ்ப்ருசந் ஆஸநம்" | 41 |
| மடாதிபதிகளும் தர்ம ரக்ஷணமும் | 78 |
| மதுரகவிகளின் குணாநுபவம் | 6 |
| முதலாழ்வார்களைப் பற்றி | 4 |
| முன்னோர்களும் நாமும் | 31 |
| வேதாந்த தேசிகவைபவாநுபவம் | 40 |
| ஸ்தல புராணங்களின் விமர்சம் | 73 |